# விருதுகள்

# என்றும்

# அமுதம்

ஆனி 2023 6

# விருதுகள் என்னும் அபத்தம்

பொன்னாடை போர்த்துதல் என்பது...

அந்தப்புரத்தில் எக்கச்சமான ஆசைநாயகிகளை வைத்திருந்தோ, அனாவசியமாக எதிரி நாடுகளின் மீது போர் தொடுத்தோ வங்குரோத்து ஆகி, அள்ளிக் கொடுத்த மானத்தை, மயிலுக்கு கொடுத்ததை இலக்கிய மயிருகளுக்குக் கிள்ளிக் கொடுத்தாவது, காப்பாற்ற முயன்ற பொற்கிழி வளவன் எவனாவதோ...

அல்லது, புடவைக்கடை வைத்திருந்து, வேறெதற்காவது பயன்பட்டு, தன் பிழைப்பிற்கு மண் போடாமல், எதற்கும் பயன்படாமல், ஒரு தடவை மட்டுமே பயன்பட்டுப் பெருமை கொள்வதற்கான குறியீடான ஒரு disposable best seller ஐ அறிமுகம் செய்த இலக்கியப் புரவலருடையதோ மணியான ஐடியாவாகத் இருக்க முடியும்.

(சு.ரா புடைவைக் கடை வைத்திருந்தாலும், பொன்னாடை அதற்கு முந்திய வரலாறு கொண்டது!)

இப்படி, பழந்தமிழ் இலக்கியம் முதல் பின்நவீனத்துவ இலக்கியம் வரைக்கும், தமிழ் இலக்கியவாதிகளின் மனநிலையை சரியாகத் தெரிந்து வைத்துக் கொண்டு, அந்த புத்திஜீவிகளிற்கே காதில் பூவும், தலையில் மிளகாயுமாக, மணியாக வேலையைக் கொடுக்கும் இந்த சுத்திஜீவிகளின் புத்திசாதுரியத்தை என்னால் வியக்க முடியாமல் இருக்க முடியவில்லை.

கஞ்சனைக் கொடை வள்ளல் என்றும், கொடுங்கோலனை நீதி வழுவா நெறிமுறையினன் எனப் பாடிப் பொற்கிழிப் பரிசில் பெற்ற பொற்காசுப் புலவர்கள் மாதிரியே, இன்றைய இலக்கியவாதிகளும் ஒரு துண்டைப் போர்த்தும் போது அடையும் புளகாங்கிதம் சொல்லி மாளாது.

தற்போது இலக்கிய வாதிகளாக வலம் வரும் என் சக பயணிகள் பலரைப் பார்க்கும் போது, ஊரில் வட்டிக்குப் பணம் கொடுத்த கிழவி ஒருத்திக்கு உயிர் போகாமல் அந்தரித்ததைப் பார்த்து, செப்புக்காசை செம்பில் உரசித் தண்ணீர் கொடுத்து உயிர் போக வைத்தது மாதிரி, இவர்களையும் மேடையில் இருத்தி ஒரு துண்டைப் போர்த்தி விட்டால், இவர்களின் ஆன்மாவும் சாந்தியடையக் கூடும் என்ற எண்ணம் எனக்கு அடிக்கடி வருவதுண்டு.

இல்லாவிட்டால் இரவு நேரங்களில் தனியே போகும் போது விசிலடித்துக் கொண்டு போக வேண்டியிருக்கும்... ஆவியாய் அலையும் இந்த சக பயணிகளால்!

இந்தப் போலி வெற்றுப் பெருமிதங்களை அங்கீகாரமாகக் கருதும் இந்த இலக்கியவாதிகளைப் பார்க்கும் போது, ஒரு இலக்கியவாதிக்கு இருக்க வேண்டிய தன்மானமும், தன்னம்பிக்கையும், தலை வணங்காத் தன்மையும் போய், கூனிக் குறுகி நிற்பதைப் பார்க்க எனக்கே வெட்கமாக இருக்கிறது.

***

**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**

என்னுடைய மனைவி முன்பு வேலை செய்த இடத்தில் கிறிஸ்மஸ் காலத்தில் பார்ட்டி நடத்துவார்கள்.

தமிழ் மகன் நிர்வாக நிறுவனம்.

அங்கே ஒரு தடவை வேலை செய்தவர்களின் பிள்ளைகளுக்கு நடனப் போட்டி நிகழ்ந்தது. அதற்கு நடுவராக அங்கு வேலை செய்த பெண் ஒருவரின் தாய் வந்ததால் அவரை நியமித்திருந்தார்கள்.

எந்த கூச்சமும் இல்லாமல் அவர் செய்தது, சிறந்த நடனத்திற்கான பரிசை தனது பேத்திக்கு வழங்கியது தான்.

முன்பு தாயகம் வெளிவந்த காலத்தில், நான் 'அநீதியைத் தட்டிக் கேட்பேன்' என்ற நினைப்போடு ஒருவர் தொடர்பு கொண்டிருந்தார். புலிகள் நடத்திய தமிழ்ச் சங்கம் ஒன்றில் நடந்த பேச்சுப்போட்டியில் தனது மகனுக்குப் பரிசு தரப்படவில்லை என்பதே அவரது குற்றச்சாட்டு.

இதைப் போல, கனடிய தமிழ் அழகுராணிப் போட்டி ஒன்று நடந்தது. அழகுராணிக்கான பரிசு நிகழ்வுக்கு ஸ்பொன்சர் செய்தவருடைய உறவினருக்குத் தான் வழங்கப்பட்டது.

என்னுடைய நிலைப்பாடு, நீங்கள் கலந்து கொள்ளும்போதே, அவர்களுடைய நடுநிலையிலும், உண்மையாகவே திறமையை அங்கீகரிப்பார்கள் என்றும் நம்பிக்கை வைத்துத் தான் கலந்து கொள்கிறீர்கள். அது பிழைத்தவுடன் கோபம் கொள்ளுகிறீர்கள். என்னைக் கேட்டால், இந்த அயோக்கியர்கள் பற்றி எனக்கு ஏற்கனவே தெரியும் என்பதால், இவ்வாறான போட்டிகளில் நான் ஒருபோதும் கலந்து கொள்ளப் போவதில்லை.

அயோக்கியர்களோடு சகவாசம் வைத்தால் எஞ்சுவது, அனாவசியமான மன உழைச்சல்கள் தான்.

சிறுவயதில், கிறிஸ்மஸ் காலத்தை ஒட்டி, எங்கள் கோயிலில் பேச்சுப் போட்டி நடத்தினார்கள். அதற்கு நடுவர்களாக எங்கள் ஊர் ஆசிரியர்கள் மூவர் இருந்தார்கள். அதில் ஒருவர் என்னை வளர்த்த அப்பா.

“
தமிழர்கள் என்று வரும்போதே, அவர்களின் நடுநிலை பற்றியோ, அறம், நீதி பற்றியோ எனக்கு எந்த நம்பிக்கைகளும் இருந்ததில்லை. சுயசாதிப் பற்றும் வெறியும், பொறாமையுணர்வும், யாழ்ப்பாணிகளின் புலிவால் தொங்கலும் துரோகிப் பட்டங்களும் என்னுடைய அந்தக் கருத்துக்களை இன்று வரைக்கும் உறுதி செய்தபடியே உள்ளன.
ஒன்றில் தன்னுடைய ஆளுக்கோ, அல்லது தனது லாபம் கருதியோ தான் நான் கருதுகிற அளவில் தமிழர்களின் இந்த விருது வழங்கல்கள், பொன்னாடை போர்த்தல்கள் உள்ளன.
”

நான் சிறப்பாக பேசியிருந்தாலும், எனக்கு பரிசு தருவதை அப்பா விரும்பவில்லை. காரணம், conflict of interest.

எனக்குப் பரிசு தந்தால், தன் நடுநிலைமை பற்றி சந்தேகம் வரும் என்ற எண்ணம் மட்டும் தான். ஆனாலும், மற்ற ஆசிரியர்கள் இருவரும் வற்புறுத்தித் தான் எனக்குப் பரிசு கிடைத்தது.

சுபமங்களா நடத்திய ஈழக்குறுநாவல் போட்டிக்கு நானும் ஒரு குறுநாவலை அனுப்பியிருந்தேன். அதற்கு பரிசு கிடைக்காதது பற்றி எனக்கு எந்த மனக்குறையும் இல்லை. அவ்வாறான ஒரு போட்டி நடந்ததால் தான் நான் அதை எழுதினேன், இல்லாவிட்டால் அதை எழுதியிருக்கச் சந்தர்ப்பமே இல்லை என்பது மட்டுமே என்னுடைய கருத்தாக இருந்தது.

கிடைத்தால் நல்லது, கிடைக்காவிட்டால் குறையொன்றும் இல்லை.

அத்தோடு 'சுபமங்களா ஈழக்குறுநாவல் போட்டிக்கு அனுப்பி, பரிசு பெறாத கதை' என்ற குறிப்போடு தான் அது இன்றைக்கும் அமசோனில் கிண்டில் பதிப்பாக இருக்கிறது.



facebook: George RC

ஆனால், அந்த சுபமங்களா போட்டியில் தன்னுடைய நாவலுக்குத் தான் பரிசு கொடுக்க இருந்ததாகவும், பின்னர் சில காரணங்களுக்காகத் தனக்குத் தரப்படவில்லை என்று தனக்கு இருந்த தொடர்புகள் மூலமாகத் தெரியப்படுத்தப்பட்டதாகவும் அருண் அம்பலவாணர் சொல்லியிருக்கிறார்.

நான் அப்படி எதுவும் உரிமை கோரவில்லை.

தமிழர்கள் என்று வரும்போதே, அவர்களின் நடுநிலை பற்றியோ, அறம், நீதி பற்றியோ எனக்கு எந்த நம்பிக்கைகளும் இருந்ததில்லை. சுயசாதிப் பற்றும் வெறியும், பொறாமையுணர்வும், யாழ்ப்பாணிகளின் புலிவால் தொங்கலும் துரோகிப் பட்டங்களும் என்னுடைய அந்தக் கருத்துக்களை இன்று வரைக்கும் உறுதி செய்தபடியே உள்ளன.

ஒன்றில் தன்னுடைய ஆளுக்கோ, அல்லது தனது லாபம் கருதியோ தான் நான் கருதுகிற அளவில் தமிழர்களின் இந்த விருது வழங்கல்கள், பொன்னாடை போர்த்தல்கள் உள்ளன.

அதை திறமைக்காக மட்டுமே வழங்கப்படுகிறது என்று நம்புகிறவர்கள், அவை கிடைப்பவர்கள் மட்டுமே...
அந்தப் பாட்டி கொடுத்த விருதை தனது திறமைக்கானது என்று நம்பிக் கொண்டிருக்கக் கூடிய அந்தக் குழந்தை மாதிரி!
(கிடைக்காதவர்களும் தங்களுக்குக் கிடைக்காதவரைக்கும் என்னுடைய கருத்தையேகொண்டிருக்கிறவர்கள்.)

எந்த விருது வழங்கப்பட்டாலும் இது ஒரு சம்பிரதாயமாகவே தொடர்ந்து வருகிறது.

விருது கொடுத்தவர், பெற்றவர் சார்ந்தோர் அதை திறமைக்குக் கொடுத்ததாக விதந்தோதுவதும், கிடைக்காதவர்கள் கழுவி ஊற்றுவதுமாக!

கழுவி ஊற்றுகிற எவரும் தனக்குத் தரப்பட்டால், மூஞ்சியில் திருப்பி எறிவேன் என்று ஒரு போதும் சொன்னதில்லை.

பிரச்சனை தனக்குத் தரப்படவில்லையே என்பது மட்டுமேயன்றி, திறமைக்குக் கொடுக்கப்படவில்லை என்ற அறச்சீற்றம் அல்ல.

எந்த விருதும் 'இது உண்மையில் திறமைக்குத் தான் கொடுக்கப்பட்டது' என்று ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கண்டதாக நினைவில்லை.

***

இந்தச் சமூகம் படித்துப் பெயரின் பின்னால்பதிவு செய்யும்பட்டங்களை விட, பெயருக்கு முன்னால் வரும் பட்டங்களில் பெருமை கொள்ளும் சமூகம்.

சீமானின் மாமா காளிமுத்து கூட டாக்டர் பட்டம் பெற்றவர் என்றாலும், இன்றைக்கும் இணையத்தில்உள்ள லெட்டர்ஹெட் பல்கலைக்கழங்களிற்கு பணம் செலுத்தி டாக்டர் பட்டம் வாங்கி அதற்கு சொந்தச் செலவில் விழா எடுக்கும் தமிழர்கள் சென்னை முதல் றொறன்ரோ வரைக்கும் இருக்கிறார்கள். பணம் கொடுத்து வாங்குகிறவர்கள் அதை திறமைக்காகக் கிடைப்பதாக நம்புகிறார்களோ இல்லையோ, அதைப் பெறுவதால் தங்களுக்கு இந்தச் சமூகத்தில் மதிப்பு உயரும் என்று நிச்சயமாகவே நம்புகிறார்கள்.

சமூகத்தின் இலட்சணம் அப்படி!

ஓபிஎஸ், ஈபிஎஸ் எல்லாம் தற்போதைய மார்க்கட் நிலவரப்படி டாக்டர்கள் ஆகாவிட்டாலும், அந்தப் பட்டங்களை வழங்கக் கூடிய கல்லூரிகளுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கக் கூடிய அளவில் தான் தமிழ் சமூகம் இருக்கிறது.

புரட்சித் தலைவர், சுப்பர் ஸ்டார், தல, தளபதி என்ற பட்டங்களையே பெருமையோடு முன்னால் போடுவதும் அதைக் கொண்டே பெருமை பேசுவதும் சாதாரணமாக உள்ள சமூகம்.

போதாக்குறைக்கு புலன் பெயர் தமிழ் வானொலி ஊளையிடலாளர்கள் தொல்லை வேறு. 'என்றும் உங்கள்', 'உங்கள் அன்பின்' என்றெல்லாம் எந்தக் கூச்சமும் இல்லாமல் பெயருக்கு முன்னாலேயே பகிரங்கமாகப் போட்டுத் தான் தங்களை அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள்.

பட்டம் வழங்குதலும் பெறுதலும் என்பது அர்த்தமில்லாத, ஆனால் ஏதோ தெய்வாதீனமாக ஐயர்களைச் சம்பளத்திற்கு அமர்த்தாத, சடங்காகவும் சம்பிரதாயமுமாக மாறிய சமூகத்தில் இருந்து வந்தவர்கள் தானே இந்த இலக்கியவாதிகள்.

கவியரசு என்பது கம்பன் காலத்தில் தொடங்கி கண்ணதாசன் வரைக்கும் காலம் கடந்தும் வந்து கொண்டு தானே இருக்கிறது.

வைரமுத்து கவிப்பேரரசு என்று தனக்குத் தானே திருநாமம் சூட்டிக் கொண்டதும் அந்த இலக்கியப் பாரம்பரியத்தின் வழி தானே!?

பின்நவீனத்துவ இலக்கியவாதிகள் மட்டும் என்னவாம்?

நாஞ்சில் பி.டி.சாமியின் மர்மக்கதை மன்னன் பட்டம் மாதிரி, தன்னை ஆசான் என்று அழைத்துக் கொள்வதிலேயே பெருமை கொள்கிறவரைக் கண்டு கொண்டு தானே இருக்கிறோம்.

Awards are the new பொன்னாடை!

விருதுகள் தான் தற்போதைய புதிய பொன்னாடை!

இன்றைய இலக்கிய உலகில் விருதுகள் என்பன பேஸ்புக்கில் ஒரு வார ஆயுட்காலம் கொண்ட சர்ச்சைகளாக அடிக்கடி வரும் அளவுக்கு, அளவு கணக்கில்லாமல் ஆளுக்காள் விருதுகள் கொடுத்தபடியும், கிடைத்தபடியும் இருக்கின்றன.

இந்தச் சமூகம் படித்துப் பெயரின் பின்னால் பதிவு செய்யும் பட்டங்களை விட, பெயருக்கு முன்னால் வரும் பட்டங்களில் பெருமை கொள்ளும் சமூகம்.

சீமானின் மாமா காளிமுத்து கூட டாக்டர் பட்டம் பெற்றவர் என்றாலும், இன்றைக்கும் இணையத்தில் உள்ள லெட்டர்ஹெட் பல்கலைக்கழங்களிற்கு பணம் செலுத்தி டாக்டர் பட்டம் வாங்கி அதற்கு சொந்தச் செலவில் விழா எடுக்கும் தமிழர்கள் சென்னை முதல் றொறன்ரோ வரைக்கும் இருக்கிறார்கள்.

பணம் கொடுத்து வாங்குகிறவர்கள் அதை திறமைக்காகக் கிடைப்பதாக நம்புகிறார்களோ இல்லையோ, அதைப் பெறுவதால் தங்களுக்கு இந்தச் சமூகத்தில் மதிப்பு உயரும் என்று நிச்சயமாகவே நம்புகிறார்கள். சமூகத்தின் இலட்சணம் அப்படி!

ஓபிஎஸ், ஈபிஎஸ் எல்லாம் தற்போதைய மார்க்கட் நிலவரப்படி டாக்டர்கள் ஆகாவிட்டாலும், அந்தப் பட்டங்களை வழங்கக் கூடிய கல்லூரிகளுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கக் கூடிய அளவில் தான் தமிழ் சமூகம் இருக்கிறது.

> இந்தப் பொன்னாடை மயக்கம் தான் இயல் விருதை, மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்ட போது ‘ஒரு விருதின் மரணம்’ என்ற வர்ணித்த ஆசான், இனிப்புக்காக மண்ணில் புரண்டு அழும் குழந்தை போல, தனக்குக் கிடைத்தவுடன் பல் இளித்த பெருமிதத்தோடு வந்து பேருரை நிகழ்த்திச் செல்ல வைத்தது.
>
> தன்னை கேவலமாகத் திட்டிய ஆசான் தந்த விருதை
> மானம் ரோஷம், வெட்கம், சூடு, சுரணை எதுவும் இல்லாமல்,
> சாரு போய் பெற்றுக் கொண்டதும் இந்த மயக்கத்தில் தான்.
>
> தன்னைப் புலி எதிர்ப்பாளராக அடையாளம் காட்டி இலக்கியவாதியான சோபா சக்தி,
> புலிவால்கள் நடத்தும் சங்கம் கொடுத்த காரண காரியம் இல்லாத விருதுக்கு விமானம் ஏறி வந்து,
> ரொறன்ரோவில் புல்லரித்துப் போனதும் அதே மயக்கத்தில் தான்.
>
> மூன்று தமிழும் ஓரிடம் நின்று பாடிய காவியச் சிந்து அது!
> மூன்று கங்கைகளும் கலந்த இடம்!
>
> எனக்குத் தர உனக்கெல்லாம் என்ன தகுதியிருக்கிறது என்று இவர்கள் யாரும் கேட்டதில்லை.

இந்தப் பொன்னாடை மயக்கம் தான் இயல் விருதை, மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்ட போது ‘ஒரு விருதின் மரணம்’ என்ற வர்ணித்த ஆசான், இனிப்புக்காக மண்ணில் புரண்டு அழும் குழந்தை போல, தனக்குக் கிடைத்தவுடன் பல் இளித்த பெருமிதத்தோடு வந்து பேருரை நிகழ்த்திச் செல்ல வைத்தது.

தன்னை கேவலமாகத் திட்டிய ஆசான் தந்த விருதை மானம் ரோஷம், வெட்கம், சூடு, சுரணை எதுவும் இல்லாமல், சாரு போய் பெற்றுக் கொண்டதும் இந்த மயக்கத்தில் தான்.

தன்னைப் புலி எதிர்ப்பாளராக அடையாளம் காட்டி இலக்கியவாதியான சோபா சக்தி, புலிவால்கள் நடத்தும் சங்கம் கொடுத்த காரண காரியம் இல்லாத விருதுக்கு விமானம் ஏறி வந்து, ரொறன்ரோவில் புல்லரித்துப் போனதும் அதே மயக்கத்தில் தான்.

மூன்று தமிழும் ஓரிடம் நின்று பாடிய காவியச் சிந்து அது!

மூன்று கங்கைகளும் கலந்த இடம்!

எனக்குத் தர உனக்கெல்லாம் என்ன தகுதியிருக்கிறது என்று இவர்கள் யாரும் கேட்டதில்லை.

இலக்கிய உலகின் மேதகுக்களும் இமயங்களுக்கும் கூட, கூழாங்கற்கள் கொடுக்கும் விருதுகள் கூட பெருமைக்குரியனவாகத் தான் இருக்கின்றன. Another feather in the cap அளவுக்கு வேற லெவல்!

ஆனாலும், இயல் விருது வழங்கும்போதான வித்தியாசம், தகுதிக்கு கொடுக்கப்படவில்லை என்ற ‘அறச்சீற்றக்’ கூச்சல் எழாமல் இருப்பது மட்டும் தான்.

அதற்காக ஏதோ ஏகமனதாக தமிழ்கூறு நல் இலக்கிய உலகம் இந்த விருதின் தீர்ப்பை அறுதியும் இறுதியுமானதாகக் கொண்டாடுகிறது என்று நீங்கள் புல்லரிக்கத் தேவையில்லை.

அங்கே இருக்கிற எல்லா இலக்கியவாதியுமே அந்த விருது தனக்குக் கிடைக்கும் என்று வடக்கு நோக்கி வாணீர் ஊற்றியபடி தவம் இருப்பது மட்டுமே அதற்கான காரணம்.

லொட்டரி சீட்டு வாங்கும் எல்லாருமே அடுத்த முதல் பரிசு குரோர்பதி தான் தானே என்று நம்புவது போல, எல்லா இலக்கியவாதிகளும் தனக்குத் தான் அடுத்த விருது என்ற நம்பிக்கையோடு தான் வாணீர் ஊற்றும் வாயை மூடிக் கொண்டிருக்கிறார்கள்.

விருதுகள் திறமைக்குக் கொடுக்கப்படுவதான பிரமை வாங்குகிறவர்களுக்கு எப்போதுமே உண்டு.

தற்போதைய உலகில் அது அவ்வாறானதும் இல்லை. கிட்டத்தட்ட எல்லா விருதுகளுமே எவ்வாறான அடிப்படையில் கொடுக்கப்படுகின்றன என்பது ஆதாரங்களுடன் வெளிவந்து கொண்டு தான் இருக்கிறது. ஒபாமாவுக்கும், மலாலாவுக்கும் சமாதான நோபல் பரிசு கொடுக்கப்பட்டதன் பின்னணி என்ன? ஒபாமா மீது அந்த நேரம் இருந்த பெரும் காதலும், மலாலாவுக்கான விருது இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு எதிரான குறியீடாகவும் தானே இருக்க முடியும்?

விருதுகள் என்ன? போப் ஆண்டவர் தெரிவில் முதன் முதலாக வெளியாரான போலந்துக்காரர் தெரிவு செய்யப்பட்டதற்கும், கம்யூனிஸ எதிர்ப்பில் போலந்து தொழிற்சங்கப் போராட்டத்திற்குமான தொடர்பு என்ன? கம்யூனிஸ உலகை தகர்ப்பதற்கான ஆரம்பப் படியாகத் தானே அது நிகழ்ந்தது.

ஒஸ்கார் விருதுகளின் ஊழல் பற்றி அபத்தத்தில் எழுதியிருக்கிறேன். கான் திரைப்பட விழா விருது கூட, அந்த முறைக்கு நடுவர்களாகத் தெரிவு செய்யப்படும் சிலரின் தெரிவு மட்டுமே. அதனால் தான் அங்கு தெரிவு செய்யப்படுகின்ற

படங்கள் பொதுவெளியில் வெற்றி பெறுவதில்லை.

புக்கர் பரிசுகளுக்கும் அதே கதை தான். நடுவர்கள் கூட, நெடும்பட்டியல் புத்தகங்கள் முழுவதையும் வாசிப்பதில்லை.

இப்படியாக தெரிவாகும் படைப்புகளைத் திறமைக்கானதாக பொதுவெளியில் பிரமையை உண்டாக்குவது அந்த விருது வழங்குநர்களும் வாங்குவோரும், அதைப் பரபரப்பாக்கும் ஊடகங்களும், அந்தப் பரிசுகளால் அதிகரிக்கும் விற்பனையால் பயன்பெறுவோரும் தான்.

ஆனாலும், இந்த விருதுகள் வழங்கப்படும்போது, ஆங்காங்கே எழும் எதிர்ப்புக் குரல்கள் தவிர்ந்து, எல்லாரும் கடந்து போகிறார்கள். அதை வைத்து புத்தகங்களையும் திரைப்படங்களையும் சந்தைப்படுத்தி பணம் சம்பாதிக்கிறவர்கள் தங்கள் வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

எங்களுடைய சூழல் அவ்வாறானதில்லை.

விஜய் டிவியும், விகடனும் கொடுக்கும் விருதுகள் குறித்து யாரும் அலட்டிக் கொள்வதில்லைத் தான். யூடியூபர்கள் பணம் சம்பாதிக்க அது உதவக்கூடும்.

ஆனால், இலக்கிய உலகின் விருதுகளின் கதை வேறு.

அது ஒரு சமயச் சடங்கு மாதிரியாகவே, ritual ஆகவே மாறிவிடுகிறது.

எந்த விருது வழங்கப் பட்டாலும், எவருக்குமே முழுமனதுடன், இது தகுதியானவருக்குத் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லும் நிலைமையை நான் கண்டதில்லை.

உடனடியாகவே எதிர்ப்புக் குரல்கள் எழுந்து விடுகின்றன.

அதற்கான காரணம், தாங்கள் படைப்பதை விட, அங்கீகரிக்கப்பட்ட வேண்டும் என்பதில் அக்கறையாக இருக்கும் நம் இலக்கியப் போர்வழிகள் தான்.

கொடுக்கப்பட்ட விருது தகுதியானவருக்குத் கொடுக்கப் படவில்லை என்பதன் அர்த்தமே, தகுதியுள்ள தனக்குத் தரப்படவில்லை என்ற கோபமும் புலம்பலும் தான்.

தகுதியற்றவருக்கு கொடுக்கப் பட்டதாக குற்றம் சாட்டும் எந்த விருதையும் எந்த இலக்கியவாதியும், எனக்குத் தந்தால் நிராகரிப்பேன் என்று சொன்னதாக நான் கண்டதில்லை.

தனக்குத் தரப்படும் போது மட்டும் அது தகுதிக்கானதாகக் கொடுக்கப்பட்டது என்று சொல்வதற்கு இவர்கள் தயங்கவும் போவதில்லை.

அகில இந்திய அளவில் இலக்கியத்திற்கு கொடுக்கப்படும் விருதுகள் பெரும்பாலும் ‘நம்மாளுக்குத் தான்!’.

நம்ம ஆளின் அறமும் நீதியும் அவ்வளவு தான். கொடுத்தலுக்கும் நிராகரித்தலுக்குமான காரணங்கள் திறமை பற்றியதாக இருப்பதில்லை.

உண்மையிலேயே இயல் விருது தனது திறமைக்குத் தான் கொடுக்கப்பட்டது என்று ஆசான் நம்பியிருந்தால், தான் இலக்கியவாதிகள் இல்லை என்று நிராகரிக்கிறவர்களுக்குக் கொடுக்கும் போது, ‘கண்டவன், நிண்டவனுக்கு எல்லாம் கொடுக்கும் விருது எனக்குத் தேவையில்லை, அவர்களோடு சரிநிகர் சமானமாக என்னைக் கருதுவது அவமானம்’ என்று மூஞ்சியில் தூக்கி எறிந்தல்லவா இருக்க வேண்டும்?

கொடுத்தவருக்கும் தெரியும் ஏன் கொடுக்கிறேன் என்று.

வாங்கியவருக்கும் தெரியும் ஏன் தரப்படுகின்றது என்று.

வெளியே நீங்கள் காண்பதெல்லாம் வெறும் computer simulation மட்டும் தான்.

எங்களுடைய வாழ்க்கையே குவான்டம் உலகில் simulated hologram என்று விஞ்ஞானிகள் சொல்வதெல்லாம் இந்தத் திருக்கூத்தைப் பார்த்த பின்னாலாகத் தான் இருக்கும்.

எங்களுடைய விருதுகள் பெரும்பாலும் உள்நோக்கங்களோடு தான் வழங்கப்படுகின்றன.

அது வாயை அடைப்பதற்காகவும் இருக்கலாம்.

எஸ்பொவிற்கு கொடுத்த மாதிரி!

வேறு யாருக்கோ கடுப்பு ஏற்றுவதற்காகவும் இருக்கலாம்.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது என்று கடந்து போவதற்கு நடுவர்களின் அறம் ஒரு போதும் இடம் அளிப்பதில்லை.

இதையெல்லாம் தெரிந்து கொண்டும் ஒவ்வொரு வருடப் பட்டியல் அறிவிப்பின் போதும் தன்னுடைய பெயரும் இருக்கிறதா என்பதை, லொத்தர் சீட்டுப் போல, கவனமாகப் படித்து ஒற்றுநோக்குவதையும் நமது இலக்கியவாதிகள் நிறுத்திக் கொள்ளப் போவதுமில்லை.

என்னைப் பொறுத்தவரையில், ஒரு படைப்பாளியின் திறமைக்கானதும் பங்களிப்பிற்குமான அங்கீகாரம்

> என்னைப் பொறுத்தவரையில், ஒரு படைப்பாளியின் திறமைக்கானதும் பங்களிப்பிற்குமான அங்கீகாரம் என்பதை விட, அந்தப் படைப்பாளியின் கருத்துச் சுதந்திரத்திற்காக சேர்ந்து நிற்பது என்பது மிகவும் முக்கியமானது. நான் வந்த சூழல் அப்படி. கருத்துச் சுதந்திரம் எனக்கு ஆடம்பரப் பொருளாக இருந்ததில்லை.
>
> உயிர்ப்பிரச்சனையாகவே இருந்தது.
>
> ஆனால், தாங்கள் விருது கொடுத்த படைப்பாளிகளின் கருத்துச் சுதந்திரத்திற்கான அச்சுறுத்தல் வந்த போது,
> இந்த விருது வழங்குநர்கள் மௌனம் காக்கிறார்களே தவிர,
> அதற்காக குரல் எழுப்பியதைக் கண்டதில்லை.

என்பதை விட, அந்தப் படைப்பாளியின் கருத்துச் சுதந்திரத்திற்காக சேர்ந்து நிற்பது என்பது மிகவும் முக்கியமானது. நான் வந்த சூழல் அப்படி. கருத்துச் சுதந்திரம் எனக்கு ஆடம்பரப் பொருளாக இருந்ததில்லை.

உயிர்ப் பிரச்சனையாகவே இருந்தது.

ஆனால், தாங்கள் விருது கொடுத்த படைப்பாளிகளின் கருத்துச் சுதந்திரத்திற்கான அச்சுறுத்தல் வந்த போது, இந்த விருது வழங்குநர்கள் மௌனம் காக்கிறார்களே தவிர, அதற்காக குரல் எழுப்பியதைக் கண்டதில்லை.

பெருமாள் முருகனின் உயிருக்கு அச்சுறுத்தல் வந்த போது, அவருக்கு வாழ்நாள் சாதனை விருது கொடுத்த இயல் விருதுக் கும்பல் வாயே திறக்கவில்லை.

வாழ்க்கையே முடிவுக்கு வர இருந்த நிலையில்,
வாழ்நாள் சாதனையும் சிகையும்!

ஒரு படைப்பாளியின் அடிப்படை மனித உரிமைக்கும், உயிருக்கும் அச்சுறுத்தல் வரும் போது குரல் கொடுக்காமல், வெறும் விருதை வழங்குவதில் மட்டும் பெருமை கொள்வது எவ்வளவு அயோக்கியத்தனம்?

இதன் நோக்கம் பிழைப்பாக இல்லாமல் வேறு எதுவாக இருக்க முடியும்?

எங்கள் தமிழ்ச் சூழல் வழமை போல, விருது வழங்கலைக் கேலிக்கூத்து ஆக்கியிருக்கிறது.

எனக்குத் தெரிந்து, என்னுடைய இத்தனை வருட வட அமெரிக்க வாழ்விலும் வாசிப்பிலும், எந்த விருதாக இருந்தாலும், அது ஒரு நிறுவன மயப்பட்ட அமைப்பினாலேயே வழங்கப்படுகிறது. இந்த விருதுகளை வழங்குகின்றவை எல்லாம் ஏதோ வகையில் பொதுநிறுவனங்களாக உள்ளவை தான். தனியார் நிறுவனங்களாக இருந்தாலும், நேரடியாக இல்லாமல் கை நீட்டிய எல்லையில் உருவாக்கிய நிறுவனங்கள் மூலமாகத் தான் கொடுக்கின்றன. அல்லது இவ்வாறான நிகழ்வுகளை ஸ்பொன்சர் செய்கின்றன.

எங்கள் தமிழ்ச் சூழலில் தான் தனி மனிதர்கள் விருதுகளைக் கொடுக்கிறார்கள்.

அதைவிடக் கேவலம்,

அதைக் கொடுப்பவர்கள் விருது வாங்குகின்ற, விருதுகள் பெற வேண்டும் என்று விரும்புகிற படைப்பாளிகளாக இருக்கிறார்கள் என்பது தான்.

இதுவரையும் இவ்வாறான ஒரு கேலிக்கூத்தை நான் எங்குமே கண்டதில்லை.

அதிலும் மற்ற விருதுகள் போல, கனடாவில் புத்தகங்களுக்கு வழங்கப்படும் கில்லர் பரிசு கூட, கனடியர்களுக்கே உரித்தான பாணியில் சர்ச்சைகளுக்குள் அகப்படுவதும் இல்லை.

சரியான நடுவர்களும், திறமைக்குப் பரிசு வழங்க வேண்டும் என்ற எண்ணமும், பெரும்பாலான தெரிவுகள் குறித்து எதிர்ப்புகளை எழுப்புவதில்லை. கடும் போட்டி என்றால் கூட, நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது என்று பெருந் தன்மையோடு கடந்து போகும் அளவுக்கு அதற்கான integrity இருக்கிறது.

அவர்களைப் பொறுத்த வரைக்கும் இது படைப்பாளிகளைக் கொண்டாடுதலே. இதில் தாங்கள் லாபமோ, பெருமையோ பெறுவது நோக்கம் இல்லை.

இப்படி நிறுவனங்கள் தான் தங்கள் நடுநிலைத் தன்மையைப் பேண திறமை வாய்ந்தவர்களை நடுவர்களாகவும், சரியான படைப்புகளுக்கு பரிசில் கிடைக்க வேண்டும் என்பதில் அக்கறையாகவும் இருக்கின்றன.

ஆனால் எங்கள் தமிழ்ச் சூழலில் தான் தனி மனிதர்கள் விருதுகளைக் கொடுக்கிறார்கள்.

அதைவிடக் கேவலம், அதைக் கொடுப்பவர்கள் விருது வாங்குகின்ற, விருதுகள் பெற வேண்டும் என்று விரும்புகிற படைப்பாளிகளாக இருக்கிறார்கள் என்பது தான்.

இதுவரையும் இவ்வாறான ஒரு கேலிக்கூத்தை நான் எங்குமே கண்டதில்லை.

சமீபத்தில் கூட, சல்மான் ருஷ்டி எழுதிய புதிய நாவல் ஒன்று பற்றிய அறிமுகக் கருத்தரங்கு ஒன்றில் கனடியப் பிரபல எழுத்தாளரான மார்கரட் அற்வூட் கலந்து கொண்டிருந்தார்.

இது கூட கறாரான விமர்சனமாகக் கூட இல்லாமல், அந்தப் படைப்பு பற்றிய அறிமுகமும் கொண்டாடுதலுமாகத் தான் இருந்ததே தவிர, பொறாமை உணர்வை வெளிப்படுத்தி, கடித்துக் குதறுவதாகவோ, தன்னைப் பற்றிய பெருமையை மட்டுமே பேசுவதாகவோ இருந்ததாக இல்லை.

எங்கள் இலக்கிய மேதகுக்களின் இவ்வாறான நிகழ்வில் இவ்வாறான நடத்தையை எதிர்பார்க்க முடியுமா?

மணமோ, பிணமோ எல்லாப் புகழும் என் ஒருவனுக்கே!

இப்படி உலகப் புகழ் பெற்ற இவர்கள் கூட, தங்களைப் பெரிய விருதுப் புரவலர்களாக நினைத்து விருதுகள் வழங்குவதில்லை.

ஒரு துறையில் வெற்றி பெற்று பிரபலமானவர்கள் அந்தத் துறையில் வளர்ந்து வருவோரை ஊக்குவிக்கக் கொடுப்பதாக இருந்தால் கூட அதை வரவேற்கலாம்.

ஆனால், நம்ம ஊரில் மட்டும் இருநூறு பிரதிகள் கூட விற்க முடியவில்லையே என்று புலம்பும் இலக்கிய மேதகுக்கள் கூட விருது கொடுக்க தங்களுக்குத் தகுதி இருக்கிறது என்று நினைத்து விடுகிறார்கள். அதையும், மற்ற இலக்கிய மேதகுக்களுக்கு மட்டும் கொடுத்து, தங்களுக்கும் பெருமை சேர்க்கத் தான் நினைக்கிறார்கள்.

இந்த வியாதியின் வைரஸ் எந்த பரிசோதனைச் சாலையில் உருவானது?

இயல் விருது வழங்கும்

புரவலரின் மூளையில் உதித்த குழந்தை இது என்று நீங்கள் பிரமிக்கத் தேவையில்லை. அவருக்கே அப்பனுக்கு அப்பன் ஒருவர் இங்கே இருக்கிறார்.

கனடாவில் ஒரு இடத்தில் ஐந்து யாழ்ப்பாணி ஆண்களைச் சந்தித்தால், அதில் மூவர் விருது பெற்ற வீடு விற்பனையாளர்களாக இருப்பார்கள். மற்றவர் விருது வழங்கும் ஊடகவியலாளராக இருப்பார். அடுத்தவர் முதற் பிரதி வாங்க இலக்கியவாதிகளால் விருந்தோம்பப்படும் தொழில் அதிபராக இருப்பார். (நடிகையைத் திருமணம் செய்யும் ரேஞ்சில் இல்லாமல் கல்லாப்பெட்டி யாவாரம் தான்!). அந்த தொழில் அதிபருக்கும் தனது ஊடகத்தில் விளம்பரம் செய்ததற்காக அந்த ஊடகவியலாளர் விருது வழங்கியிருப்பார்.

இதுதான் இங்கு ரொறன்ரோவின் நிலை.

விருது பெறாத தமிழனை நீங்கள் கண்டுபிடிப்பது என்பது pdf கிடைக்குமா? என்று கேட்காத இலக்கிய ஆர்வலரைக் கண்டுபிடிப்பது மாதிரித் தான்.

இங்கே ஒரு மாத சஞ்சிகை நடத்திய ஒரு ஆசிரியர் வருடாந்தம் சாதனை விருது கொடுக்கிறார். தனது சஞ்சிகையில் எழுதுவோர், விளம்பரம் கொடுப்போர் என்று வஞ்சகம் பண்ணாமல் பிரதியுபகாரம் பண்ணுவதற்கான வழியாகத் தான் இந்த விருது வழங்கல் ஆரம்பிக்கிறது.

அதற்கு கனடிய நகர சபை மட்ட அரசியல்வாதிகள் கலந்து சிறப்பிக்கிறார்கள்.

விருது பெற்ற பெரியோர் அதில் பெருமை காண்கிறார்கள். பெறாத பெரியோர் பெறுவதற்கு முண்டியடிக்கிறார்கள்.

அங்கே ஆரம்பித்த வைரஸ் தொற்றிய விருதுக் கொரோணா வியாதி.

இதை வைத்து தமிழ்நாட்டில் தங்கள் இலக்கியப் profile ஐ உயர்த்தலாம் என்ற லாப நட்டக் கணக்குடன் கொப்பியடிக்கப்பட்டது தான் இந்த விருதுப் புரவலராகும் திட்டம்.

ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராக இருந்த தமிழர் ஒருவரின் அனுசரணையுடன், ரொறன்ரோ பல்கலைக்கழகத்திற்கும் இந்த விருதுக்கும் தொடர்பு இருப்பது போன்ற பிரமையை உருவாக்க அங்குள்ள மண்டபம் ஒன்றில் ஆரம்பித்து சுந்தர ராமசாமிக்கு கொடுத்ததில் ஆரம்பித்தது.

இதில் இயல் விருதுக்காரர் தன்னுடைய படைப்புகளால் அறியப்பட்டதை விட, தன்னுடைய விருதினால் தான் அறியப்பட்டிருக்கிறார். அவர் முக்கியத்துவமானவராகியதால் விருதை வழங்காமல், விருதை வழங்கியதாலேயே முக்கியத்துவம் பெற்றவர்.

இவ்வாறான ஒரு விருதைக் கொடுக்காவிட்டாலும் அவரை நாங்கள் ஒரு இலக்கிய மேதகு என்று தான் சொல்வோம் என்று எந்த தமிழ்நாட்டு இலக்கியக்காரரும் சொல்லத் தயாரா?

ஆக, தமிழ்நாட்டு இலக்கியப் பிரகிருதிகளை வாணீர் ஊற்ற வைத்ததால் தான் இன்றைக்கும் அவருக்கு தமிழ்நாட்டில் இத்தனை வரவேற்பு.

இலக்கியத் தோட்டம் என்ற பெயரை வைத்துக் கொண்டாலும், அதில் சில ஒப்புக்கு சப்பாணிகளை வைத்துக் கொண்டு, முழுக்க முழுக்க யார் தெரிவு செய்யப்படுகிறார் என்பதை ஒரு தனிமனிதரே தீர்மானிக்கிறார். அந்தத் தீர்மானமும் தனக்கான லாபநட்டம் கருதியாகவே இருக்கிறது.

மொழிபெயர்ப்புக்கான விருது கொடுத்தால் அதன் நோக்கம் தன்னுடைய படைப்புகளை மொழி பெயர்ப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு இல்லாமல் இருக்கும் என்று யாராவது சொல்லத் தயாரா?

பிறகென்ன? ஆசான் அழுது குளறி தனக்கும் அந்தக் கொறோனாவைப் பெற்றுக் கொண்டு, அவரும் விஷ்ணுபுரம் விருது கொடுக்கிறார். அதை விழாவாகக் கொண்டாடுகிறார்.

இதில் அவர் இலக்கிய உலகின் படைப்புகளைக் கொண்டாடுகிறாரா? இல்லை, தன்னைக் கொண்டாடுகிறாரா? என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளலாம்.

இப்போது சாரு சம்பந்தப்பட்ட சீரோ டிகிரி விருது.

இப்படி ஆளாளுக்கு, தங்களுக்கு விருது கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தாங்களும் கொடுத்துக் கொண்டு இருக்கும் கேலிக்கூத்தாகத் தான் இந்த விருது வழங்கல்கள் வந்து முடிந்திருக்கின்றன.

ஆக, விருது வழங்கும் புரவலர்களே விருதுகளுக்கான பிச்சைக்கார யாசகர்களாகவும் இருக்கிறார்கள். கள்ளக்கடத்தல்காரர்கள் போல, பரஸ்பர லாபநோக்குடன் தங்களுக்குள்ளேயே விருதுக் கொடுக்கல், வாங்கல்களை நிறுத்திக் கொள்கிறார்கள்.

எஸ்.ராவுக்கு இயல் விருது கொடுத்தால், அவர் காலம் சஞ்சிகைக்கு விகடன் விருதை வாங்கிக் கொடுத்துக் கடனைக் கழித்துக் கொள்கிறார்.

இதையெல்லாம் கிண்டல் பண்ணும் எந்த படைப்பாளியும் அது தனக்கு வழங்கப்பட்டால், பல்லிளித்துக் கொண்டு போய் கூனிக் குறுகி வாங்கக் கூடியவர் தான்.

இல்லை, இவ்வாறானதொரு விருது என்பது இலக்கிய உலகுக்கே அவமானம் என்று யாராவது ஒரு இலக்கியவாதி சொல்வாராகில், அபத்தம் சார்பில் அவருக்கு ஒரு விருது வழங்கக் காத்திருக்கிறோம்.

கோவணம் கட்டக் கூடப் பயன்படாத பொன்னாடையைக் கொண்டாடி முடிந்து, அடுப்பு எரிக்கும் விறகாகக் கூடப் பயன்படாத விருதுகளைக் கொண்டாடுகின்ற இலக்கிய உலகம் இன்றைக்கு.

கலியாண வீட்டில் எந்தப் பயன்பாடும் இல்லாத, பிரேம் போட்டு வழங்கப்படும் வாழ்த்துப் பத்திரம், டாக்டர் பட்டம் மாதிரி, வீட்டில் தொங்க வைத்துப்...

பெருமை கொள், தமிழா! அ

அபத்தம்
ஆனி 2023




எழுதிய, எழுதப்பட்ட ஆளுமைகள் குறித்து மேலும் அறிந்து கொள்ளவும், அவர்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் அவர்களின் பேஸ்புக் அடையாளங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

எழுத விரும்புவோர் Read the fine print ஐ வாசிக்க..

ஆக்கங்களுக்கு ஆக்கியோர்களே பொறுப்பு. ஆயினும் அதைப் பிரசுரிப்பதற்கான பொறுப்புகளில் இருந்து அபத்தம் விலக மாட்டாது.

email: apaththam@gmail.com
www.thayagam/apaththam
www.facebook.com/apaththam

ஆசிரியர், வடிவமைப்பு
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
Editor/Design
George R. Ckrhushchev

# அபத்தம்

## சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு மட்டும்!

அறை சைஸில் Main Frames களாகவும் மேசை சைஸிலும் Mini Computer களாகவும் இருந்த கணினிகள் Desktop micro computer களாக மேசைக்கு தாவிய காலம்.

புதிய கணினிகளுக்கு மென்பொருட்கள் பெரிதாக பரவலாக இருந்ததில்லை. ஆனால், இவற்றில் ஆர்வம் கொண்ட பதின்ம வயதுத் தலைமுறை கணினி மொழிகளை உடனடியாகவே கற்றுக் கொண்டு, வீடியோ விளையாட்டு மென்பொருட்களையும் பயன்பாட்டு மென்பொருட்களையும் எழுதி வடிவமைத்து, விற்பனை செய்ய ஆரம்பித்தனர்.

இதெல்லாம் அபூர்வமாகவே இருந்ததால் பலரும் இவற்றை விலை கொடுத்து வாங்கினர்.

பதின்ம வயதிலேயே Ferrari அதிவேகக் காரர்களை வாங்கும் அளவுக்கு அவர்களில் பலர் பணக்காரர்களாகவும் உருவாகினர். பில்கேட்ஸ்பில்லியனரானதே இப்படித் தான்.

தங்கள் மென்பொருட்களை இவ்வாறு விலைக்கு விற்காமல், தங்கள் ஆர்வம் காரணமாக எழுதிய மென்பொருட்களை பொதுவெளியில் யாரும் பயன்படுத்தக்கூடியதாக இலவசமாக பலர் வினியோகித்தனர். இது public domain software எனப்பட்டது. அவர்கள் பொருளாதார ரீதியாக எந்த எதிர்பார்ப்பையும் கொண்டிருந்ததில்லை. அவர்களின் ஆர்வமும் பொதுநலனும் தான் அதன் அடிப்படை.

இதை விட, தாங்கள் எழுதிய மென்பொருட்களுக்கு எல்லோரும் வாங்கக் கூடிய மலிவான விலையைப் போட்டு, விரும்பியவர்கள் அதை பதிவிறக்கம் செய்து பயன்படுத்தவும், அதன் பயனை உணர்ந்து தொடர்ந்து பயன்படுத்துவோர் விரும்பினால் அதற்கான விலையைச் செலுத்தவும் செய்திருந்தனர்.

இது Sharewhere எனப்பட்டது.

தற்போது சமூக வலைத்தளங்கள் உருவாகி, யூடியூப் போன்றவற்றில் நிகழ்ச்சிகள் நடத்துவோர் தங்களது விளம்பரங்களை விடவும், தொடர்ந்து நிகழ்வைப் பார்க்க விரும்புவோர் விரும்பினால் சந்தாதாரராகக் கூடியவாறும், உற்சாகமூட்டுவதற்காக கோப்பி வாங்குவதற்கு பணம் கொடுக்கவும் Parteon, PayPal போன்ற தளங்கள் மூலமாக வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். இந்த நிகழ்வுகளால் தங்களுக்குப் பயன் கிடைக்கிறது என்று கருதுவோர், அதில் சந்தாதாரராக விரும்புவோர், விரும்பினால் எந்தத் தொகையையும் செலுத்த முடியும்.

அபத்தத்தை ஆரம்பித்த போது, ஆர்வத்தைத் தவிர வேறு எதுவும் எனக்கு இருந்ததில்லை. பணம் சம்பாதிக்கும் எண்ணமோ, இதனால் எதோ வழியில் பணம் பெறலாம் என்ற நினைப்போ எனக்கு இருந்ததில்லை.

நான் ஆர்வத்தோடு செய்யும் எல்லாமே இப்படி கோயில் கணக்குத் தான்.

அதற்குக் காரணம், நான் எப்போதுமே, வாரப் பத்திரிகை நடத்திய நேரத்தில் கூட, முழுநேரமாக வேறெங்கோ வேலை செய்து கொண்டு தான் இருப்பேன். எனவே, எழுத்து எனக்குச் சோறு போடும் என்று நம்பியதும் இல்லை, நான் ஒரு பெரும் எழுத்தாளன், எனக்கு இந்தச் சமூகம் சோறு போட வேண்டும் என்று நான் எதிர்பார்த்ததுமில்லை.

பத்திரிகையைக் கூட, அச்சிட்டு, விலை போட்டுக்

கடைகளில் வைத்து விற்பனை செய்தேனே அன்றி, சஞ்சிகை வெளியிட்டு, ஆட்களைத் துரத்திப் பிடித்து கைகளுக்குள் திணித்து இலக்கிய யாசகம் செய்யும் தேவை எனக்கு ஒரு போதும் இருந்ததில்லை.

புரவலர்களை யாசிக்கும் பிச்சைக்காரப் புலவன் நிலையில் இருக்கக் கூடாது என்ற திமிர் எனக்கு எப்போதும் உண்டு.

***

கனடாவில் ஊடகம் தொடங்க நினைப்போர்கள் எல்லோருமே அதற்குக் கிடைக்கக் கூடிய விளம்பரப் பணத்தைக் கண்டு வாயூறியே ஆரம்பிக்கிறார்கள்.

ஊடகம் ஒன்றை நடத்துவது என்பது ஒரு சமூகப் பொறுப்பு வாய்ந்த வேலை, அதற்கான பெரும் உழைப்பை வேண்டி நிற்பது என்பதை விட, தமிழரைத் தமிழர் சுத்த ஆரம்பிக்கப்பட்ட யாவாரங்களின் விளம்பரமும், உழைப்பை ஒட்டுண்ணி போல உறுஞ்சக் கூடிய வகையில் மலிவாகக் கிடைக்கும் அடிமைத் தமிழ்க்கூலிகளும் என இரண்டையும் நம்பியே
இந்த முயற்சிகள் ஆரம்பிக்கின்றன.

எந்தப் பணமும் கிடைக்காமலேயே வானொலி அறிவிப்பாளர்களாக உள்ளோரும் உண்டு.

பத்திரிகை அலுவலத்திற்கு ஆள் தேவை என்று ஒவ்வொரு வாரமும் விளம்பரம் வரும் பத்திரிகைகள் உண்டு.

மேசைக்கு கீழான கைக்காசுக்கு கூட பத்திரிகை அலுவலத்தில் வேலை செய்வதை விட, தமிழ் மகன் நிர்வாக யாவார நிலையங்களில் வேலை செய்வதை தன்மானத்துடன் கூடியதாக அந்தக் கொத்தடிமைக்கூலிகள் விரும்பியிருக்கக் கூடும்.

ஆக, இந்த பத்திரிகை வெளியீடு, வானொலி, தொலைக்காட்சி எல்லாம் தமிழ் மகன் நிர்வாகத்தினால் ஆன வியாபார முயற்சிகளே,

கோயில் மாதிரி.

***

விளம்பரம் தேடச் செலவிடும் நேரத்திற்கான அளவுக்குக் கூட வருமானம் கிடைக்க முடியாத அளவுக்கு தமிழ் தொழில் அதிபர்கள் கொடுக்கல் வாங்கல்களில் நேர்மை யானவர்களாக இருக்கிறார்கள்.

சும்மா குடுக்கிற பேப்பரில வெறுமையாக் கிடக்கிற இடம் தானே என்ற நினைப்பு.

முப்பது வருடம் வெளிவரும் பத்திரிகை 'விளம்பரத்திற்குப் பணம் தராதவர்களின் பெயர்கள் வெளியிடப்படும்' என்ற மிரட்டுவதும் நடப்பதுண்டு.

பணம் கிடைக்காவிட்டாலும், பத்திரிகையில் அதிகம் விளம்பரம் போடுகிறார்கள் என்ற பிரமையை ஏற்படுத்தவும், வேறு பத்திரிகைகளுக்குத் தாவாத படியும் அவர்களைக் கொண்டிழுக்கும் நிலைமை உண்டு.

ஒரு பத்திரிகையில் விளம்பரம் போட்டு, பணம் கொடுக்காமல் இழுத்தடித்தாலும், அதைத் தெரிந்து கொண்டு கூட தங்கள் பத்திரிகையில் விளம்பரம் போட வரும் போது மகிழ்ச்சியோடு வரவேற்போர் உண்டு...

தங்களுக்கு மட்டும் நேர்மையாகப் பணம் தருவார்கள் என்ற நம்பிக்கையில்.

யாவாரிகளுக்கு என்ன?

ஒரு சுற்று சுத்தி வரலாம்!

பத்திரிகையில் போட்ட விளம்பரத்தைப் பார்த்து யாராவது போன் அடித்தார்களா? என்று கேட்ட போது, 'ஓம், ஐந்து பேர் அடித்தார்கள். தங்கட பேப்பர் தான் கனக்க விக்கிறது, தங்களிட்ட விளம்பரம் போடச் சொல்லி அடிச்சவை' என்னும் அளவுக்கு இங்கே பத்திரிகைகள் நிறைய உண்டு.

இதனால், விளம்பரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை, அதில் தங்கியிருப்பதில்லை, கிடைத்தால் ஆட்சேபனை இல்லை என்ற நினைப்போடு தான் அபத்தம் ஆரம்பம் ஆனது.

விளம்பரங்களுக்கு நடுவில் இடம் நிரப்ப, வாட்சப் செய்திகளையும் இணையப் புரட்டுகளையும் போடும் எண்ணம் இல்லாமல், 'அச்சில வந்தால் உண்மையாத் தானே இருக்கும்' என்று நம்புகின்ற பொதுமக்களாக இல்லாமல், எங்களைக் கூட சந்தேகத்தோடும் கேள்வியோடும் பார்க்கக் கூடிய, 'சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு மட்டும்' சஞ்சிகை ஒன்றை வெளியிட வேண்டும் என்ற எண்ணம் மட்டும் தான் இருந்தது...

தாயகம் இதழ் மாதிரி!

இதனால் தான் இதுவரைக்கும் பணம் செலுத்தும் விளம்பரம் எதுவும் இங்கே இடம் பெறவில்லை.

PDF கிடைக்குமா, பிளீஸ்? வாசகர்கள் யுகத்தில், அச்சுச் செலவுகளால் அனாவசியமாக இலக்கிய, சமூக சேவை செய்யாமல், இணையப் பதிவாக வெளியிடுவதற்கு எந்தச் செலவும் இல்லையே!?

நேரத்தைத் தவிர!

ஆனால், இலவசம் என்பதால் அதன் பெறுமதி குறைந்து விடுமா?

பக்கத்துக்கு இலைக்குப் பாயாசம் கேட்கும் இனம் தானே!?

அன்னதானத்தை வீட்டுக்கும் கட்டி எடுத்துப் போகலாம்,

சில நேரம் சாப்பிடலாம்.

இல்லாவிட்டால் எறியலாம்.

ஓசி தானே!?

ஒரு சஞ்சிகை நடத்துதல் என்பது பெரும் உழைப்பை வேண்டி நிற்பது.

பெரும்பாலும் பலரின் நேரடி உழைப்பில் தான் அது வெளிவரமுடியும்.

எழுதுகிறவர்களின் உழைப்பு மட்டுமல்ல, அதை வடிவமைக்கிறவர்கள் வரைக்கும்.

எனக்கு இதெல்லாம் சுமையாக இருந்ததுமில்லை.

நான் doing whatever I love ரகம். அதற்காக என் பணத்தைச் செலவிடுவதும் எனக்குப் பிரச்சனையாகவும் இல்லை.

அதற்கு குடும்பத்தினர் தடை விதிப்பதும் இல்லை. காரணம், எந்த விதமான அனாவசிய, ஆடம்பரச் செலவுகளும், கூடாத குடி, புகைப் பழக்கங்களும் கூட இல்லை. ஏதோ தனக்குப் பிடித்ததைத் தானே செய்கிறான் என்ற பெருந் தன்மை.

எல்லாமே நன்றாகத் தான் போய்க் கொண்டிருந்தது.

ஆனால், நான் என் உழைப்பையும் நேரத்தையும் இதில் செலவிடுவது என் நலன் மேல் அக்கறை கொண்ட சில நண்பர்களுக்குப் பொறுக்கவில்லை.

பொறுப்புகள் நிறைந்த ஒருவன், தான் வேறு ஏதும் வழிகளில் பணம் சம்பாதிக்கக் கூடிய வழிகள் இருந்தும் இப்படி ஒரு சஞ்சிகையை இவ்வளவு உழைப்போடு வெளியிடும்போது, அதை வாசிக்கும் தாங்கள் அதற்கான பெறுமதியைச் செலுத்த வேண்டும் என்று ஒரு நாலைந்து நண்பர்கள் கூடிப் பேசி, முதலே எனக்குச் சொன்னால் நான் மறுப்பேன் என்று தெரிந்து கொண்டு, எனக்குச் சொல்லாமலேயே எனக்கு ஒரு தொகையை மாதாந்தம் அனுப்புவதாகக் கூறி, முதல் மாதம் ஒரு தொகை ஒன்றை தனித்தனியே அனுப்பியிருக்கிறார்கள்.

என் மேல் அன்பும் அக்கறையும் கொண்ட நண்பர்களைத் தான் இதுவரையும் சம்பாதித்திருக்கிறேன்.

சில பொறாமை கொண்ட இலக்கியப் பேர்வழிகள், கடிச்சுத் தின்னும் கோபத்தோடு இருக்கும் வால்கள் தவிர!

அவர்கள் என்னோடும் என் கருத்துக்களோடும் உடன்படுகிறவர்களாக மட்டும் இல்லாமல், என் கருத்துக்களோடு முரண்பட்டாலும், என் துணிச்சலையும் நேர்மையையும் கண்டு என் மீது மதிப்புக் கொண்டவ ர்கள்.

அவர்கள் என் மீது காட்டும் அன்பும் கரிசனையும் நான் அறிவேன். இவ்வாறான ஒரு சஞ்சிகை தொடர்ந்து வெளிவர வேண்டும் என்ற அவர்களின் அக்கறையையும் நான் அறிவேன்.

இந்த நண்பர்கள் தங்கள் பங்களிப்பை பொதுவெளியில் தெரியப்படுத்தினால், விரும்பிய மற்றவர்களும் பங்களிப்புச் செய்வார்கள் எனக் கருதியதால், வலக்கை கொடுப்பதை இடக் கைகளும் அறிய வேண்டும் என்பதற்காக இங்கே தெரிவிக்கிறேன்.

இது முழுக்க முழுக்க தன்னார்வம் கருதிய பங்களிப்பு மட்டும் தான்.

Voluntary contribution.

நீங்கள் விரும்பியதை, முடிந்ததைத் தரலாம். எல்லைகள் இரண்டு பக்கத்திலும் இல்லை. அதிகமோ, குறைவோ!

ஒரு தடவையாகவோ, மாதா மாதம் சஞ்சிகையைக் கண்ட பின்னாலோ தரலாம்.

தற்போதைக்கு PayPal மூலமாக apaththam@gmail.com என்ற விலாசத்திற்கு நீங்கள் முடிந்ததை, விரும்பியதை அனுப்பலாம்.

GPay, Patreon போன்ற வேறு வழிகள் உங்களுக்கு இலகுவானதாக இருந்தால், அதற்கான வழிகளையும் செய்யலாம்.

தர முடியாதவர்கள் எந்தக் குற்ற உணர்வும் இல்லாமல், வழமை போல அபத்தத்தை வாசிக்கலாம். அதைப் பற்றிய கருத்துக்களையும் விமர்சனங்களையும் சொல்லி, எங்களை உற்சாகப்படுத்தலாம். இன்னும் தரத்தை மேம்படுத்த அது உதவும்.

மற்றவர்களுக்கும் அபத்தம் பற்றி தெரியப்படுத்தலாம். தெரிந்தவர்களை எழுத வைக்கலாம்.

ஆக, இது ஒரு Shareware வகை வெளியீடு தான்.

பங்களிப்பு என்பது நிதி ரீதியாக மட்டும் இருக்க வேண்டும் என்பதில்லையே!?

என்னுடைய வாழ்க்கை எளிமையானது.

என் தேவைகள், விருப்புகள், ரசனைகள் எளிமையானவை.

என் வீட்டுக்கு வந்து, இருப்பதற்கான துணி போர்த்து மூடிய ஆடம்பரக் கதிரைகள் இல்லாமல், கிடைப்பதில் உட்காரும் நண்பர்கள் எல்லாருக்கும் அது தெரியும்.

பொதுவெளியில் என் உடைகளைப் பார்க்கும் எவருக்கும் தெரியும்.

வீடு என்பதன் பெறுமதி அதன் மில்லியன் டொலர் சந்தைப் பெறுமதியில் இல்லை. அங்கே வாழும் மனிதர்களின் உள்ளத்தில் தான் உள்ளது.

அவ்வாறானதொரு பெருந்தோட்டத்துடன் கூடிய, சிறுகுடில் என்னுடையது, கனடியத் தமிழர்களின் வீட்டு அளவுகோல்களின் அளவுப்படி.

வீட்டுக்கு வரும் சின்னம்மா கூட, சமையலறையில் இரண்டு பேர் நிற்க முடியாது என்று கிண்டல் பண்ணுவா!

எனக்கு உணவு கூட பசிக்கானதே அன்றி, ருசிக்கானது இல்லை.

அன்போடு தரப்படும் எதுவுமே எனக்கு ருசியானவை தான்.

என் வலக்கை கொடுப்பதை இடக்கை அறிவதைக்கூட நான் விரும்புவதில்லை.

இருப்பதைப் பகிர்ந்து கொள்வது தானே வாழ்க்கை.

அறிவு உட்பட!

அப்படி, இந்தப் பணத்தைக் கூட ஏதோ வழியில் பயன்படக் கூடிய வகையில் செலவிடத் தான் என் மனச்சாட்சி என்னை அனுமதிக்கும்.

என்னுடைய இயல்பு அப்படி.

பத்திரிகை நடத்திய காலத்தில் விளம்பரத்தில் தங்கி வாழ்க்கை நடத்துவதாக இருந்தால், எத்தனை விட்டுக்கொடுப்புகளையும், சமாளிப்புகளையும் செய்திருக்க வேண்டி வந்திருக்கும்?


பெயருக்கும் அங்கீகாரத்துக்கும் புகழ்ச்சிக்காகவும் எழுதியிருந்தால், என் ஆன்மாவையே விற்க வேண்டி வந்திருக்கும்.

அதெல்லாம் இல்லாமல் நான் நானாகத் தான் இன்று வரைக்கும் இருக்கிறேன். அதுவே எனக்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் தருகின்ற விடயம்.

ஒரு சமூகத்தின் அழிவின் மேல் பிழைப்பு நடத்திக் கிடைக்கும் பணத்தையும் பெயரையும் புகழையும், பெருமையையும் பெற வாழும் வாழ்வை விட,

மானிடத்தின் மேன்மையை விரும்பி தீண்டத்தகாதவனாகவும், துரோகியாகவும், ஏழையாகவும் வாழ்ந்து விட்டுப் போவது மேல்!

ஜோர்ஜ் இ.



## மாவனெல்லையில் உடைக்கப்படுகிறார்! வடக்கு கிழக்கில் உருவாக்கப்படுகிறார்!

# புத்தருக்கு ஏன் இந்த சோதனை?

வரலாறு எந்தளவிற்கு முக்கியமானதோ அதைக்காட்டிலும் எதிர்காலம் மிக முக்கியமானதும் பெறுமதி மிக்கதும் ஆகும். வரலாற்றின் படிப்பினைகள் யாவுமே எதிர்காலத்தை கட்டமைப்பதற்கான அத்திவாரமாகவே அமைகின்றன. அதனை ஆக்கப்பூர்வமானதாக நிர்மாணித்துக் கொள்வதற்கே மானிட சமூகத்திற்கு வரலாற்றின் படிப்பினைகள் வற்புறுத்துகின்றன. அந்தப் படிப்பினைகள் உலகம் முழுவதும் ஒடுக்கப்படுகின்ற வர்க்கத்தை ஒன்றுசேரும்படியே கட்டளையிடுகின்றன. ஆனால், இன்றளவில் சாதாரண மக்களின் வரலாற்றை மூடிமறைத்தும் திரிபுபடுத்தியும் ஆளும் வர்க்கம் தம் நலன்சார்ந்து வரலாற்றை தான்தோன்றித்தனமாக திருத்தியெழுதி வந்துள்ளதாலும், மாயைசூழ் பிரமாண்டமான கருத்துமுதல்வாத வரலாற்றை உருவாக்கி அதனை மக்களின் சிந்தைகளில் திணித்துள்ளதன் காரணத்தாலும் பாட்டாளி வர்க்கம் பிரிவினைவாத அடிப்படையில் இனம், மதம், மொழி, நிறம், சாதி, பிரதேசம், பால் என்று சிதறியே கிடக்கிறது.

ஆனாலும், பிழையில்லா மக்கள் வரலாறு ஆழத்தோண்டப்பட்டு எடுத்து தொடர்ந்து அம்பலத்தில் அரங்கேற்றப்பட்டு வருவதால் ஆளும் கூட்டமும் தம் இருப்பு குறித்த அச்சத்தில் இருந்துகொண்டேதான் இருக்கிறது. இருப்பினும், முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் பிரிவினைவாதத்தைக் கடந்து விஞ்ஞானத்தையும் உண்மை வரலாற்றையும் ஏற்றுக்கொண்டு நவீனமயப்பட்டு முன்னேறி வருவதுடன், எம்போன்ற பின்தங்கிய முதலாளித்துவ கட்டமைப்பில் இருக்கும் நாடுகளோ பிரிவினைவாதத்திற்குப் பலியாகி வளர்ச்சிப் பயணத்தில் மந்தநிலையை அடைந்திருக்கிறது. ஏனெனில், பின்தங்கிய முதலாளித்துவ நாடுகளில் வரலாறு என்பது அரசியற் பகடைக்காயாக உருமாற்றப்பட்டிருப்பதால் அது மக்களை துண்டாடும் பொறியாகவிருக்கிறது.

பல்லின மக்கள் வாழக்கூடிய இலங்கை இந்தப் பொறியில் மாட்டுப்பட்டு சின்னாபின்னமாகி வருவது வேதனைக்குரிய விடயமாகும். அதாவது, தமது அரசியல் அபிலாசைகளுக்காக அதிகாரத்தில் இருப்போர் பவுத்த மதத்தை முன்னிலைப்படுத்தி திட்டமிட்டு சிறுபான்மை மக்கள் வாழக்கூடிய பிரதேசங்களை ஆக்கிரமிப்பதையும் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிப்பதையுமே இவ்விடத்தில் சுட்டுகிறேன். அதைப்போலவே, இவ்விடயங்கள் யாவையும் அறியாதது போல இறுதி தறுவாயில் வந்து இவ்வாறான ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து குதித்து தீர்க்கும் சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகள் பற்றியும் கதைக்க நினைக்கிறேன். அதற்கு முன்பாக இந்தியக் கடவுளர்களை பார்த்துவிட்டு வருவோம்.

ஏறக்குறைய 4000, 3500 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய ஆசியாவின் புல்வெளிப் பகுதியில் இருந்து வந்த ஆரியர்களால் வட இந்தியா ஆக்கிரமிக்கப்படுகிறது. பின் படிப்படியே தெற்கு நோக்கி அவர்களது ஆக்கிரமிப்பு தொடர்கிறது. இவர்களின் வழியே வேத மதமும் வேத கடவுளர்களும் வர்ணாசிரம முறையும் இந்திய துணைகண்டத்துக்குள் வந்து சேர்கிறது.

அந்த வேத மதத்தின் பேரில் வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் ஏமாற்றப்பட்டு வழிநடத்தப்பட்டு சுரண்டபட்டபோது, பிறப்பின் அடிப்படையில் ஆக்கிரமிப்பாளர்கள் தங்களுக்கு சிறப்பு பட்டயத்தை சூட்டிக்கொண்டு கல்வி மேல்குலத்துக்கு மட்டும்தான் என்று கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டு உடலுழைப்பில் ஈடுபட்ட பெரும்பான்மை சனத்தை இழிகுலமாய் ஒதுக்கிவைத்து ஏற்றத்தாழ்வுகளைப் போசித்த போது, சொர்க்கலோகம் புண்ணியலோகம் என்று கதையளந்து தானம் என்ற பெயரில் ஒரு கூட்டம் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்தபோது அதற்கு எதிராக சிரமணர்கள் குரலெழுப்பினர்.

பிரம்மம் என்கிற சொல்லில் இருந்து பிராமணர்கள் வந்தது போல சிரமம் என்ற உழைப்பின் வழியே, அதாவது மிகுந்த மனஉழைப்பின் மூலம் சக்தியைத் தேட முயன்ற சிரமணர்கள் வந்தனர். இந்த ஊற்றில் இருந்து லோகாயதம், சாங்கியம், சமணம் மற்றும் பவுத்தத்தை அடிப்படையாகக் கொண்ட இயக்கங்கள் தோன்றின. புத்தர் என்ற சித்தார்த்தனால் இன்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் பவுத்த தர்மம் போதிக்கப்பட்டது. இது சாதாரண மக்களை அணிதிரட்டியது. இது வேத மதத்தை முன்னிறுத்தி பிழைப்பு நடத்தியவர்களுக்கு அச்சத்தை

சதீஸ் செல்வராஜ்

ஏற்படுத்தியது. அதனால், இந்தியாவுக்குள் திட்டமிட்டு பவுத்த மதமும் இயக்கக்காரர்ளும் கருவருக்கப்பட்டனர். இவ்வாறு ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்றுதிரட்ட போராடிய பவுத்த தர்மம் இன்று இலங்கையில் அதிகார வர்கத்தினரின் அரசியற் கொள்கைக்கு பலியாகி பிரிவினை ஆயுதமாக உருமாற்றப்பட்டுள்ளது.

இந்தியாவில் எவ்வாறு சிறுபான்மையினரின் நம்பிக்கைகளை அடித்து நொறுக்கி, அவர்களின் உரிமைகளை மறுத்து, அவர்களின் கலாச்சாரத்தை அழித்து இந்துத்துவா குழுக்கள் ஆட்டம் காட்டுகிறதோ, அதற்கு ஒப்பான நிலைமையே இலங்கையிலும் நிலவுகிறது. இந்தியாவில் இந்து மதம் என்ற போர்வையில் பாபர் மசூதியும், சமண பள்ளிகளும், பவுத்த விகாரைகளும் இடித்தழிக்கப்பட்டு கோவில்கள் கட்டப்பட்டதுபோல், இலங்கையில் இந்துக் கோவில்களும் முஸ்லிகளின் இடங்களும் ஆக்கிரமிக்கப்பட்டு விகாரைகள் கட்டப்படுகின்றன. இவை இரண்டுமே அரசியல் மற்றும் அதிகாரம் சார்ந்ததாகவிருக்கின்றன.

அதன்படி, வரலாற்றை ஆராய்தல், தொல்லியல் பொருட்களை பரிசோதித்தல் என்று தொல்லியல் திணைக்களம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் சிறுபான்மை மக்கள் மத்தியில் பெரும்பான்மையினருக்கு எதிரான வெறுப்பையும், குரோதத்தையும் உருவாக்கிவிடுகிறது. யார் என்ன சொன்னாலும் இது இரத்தத்தை சூடேற்றும் விடயமாகும். இவ்வாறான இரத்தக் கொதிப்பால் மக்கள் பிளவுபட்டு மோதிக்கொள்வதையே எப்போதும் இலங்கையை ஆட்சி செய்தவர்களும் செய்கின்றவர்களும் விரும்புகின்றனர். இலங்கையில் மக்கள் எழுச்சி ஏற்பட்டுள்ள தற்போதைய நிலையில் அது சீர்குழைய வேண்டும் என்பதையே ரணில் ராஜபக்ஸாக்கள் விரும்பி நிற்கிறார்கள். ஆக, பொருளாதார நெருக்கடியையும் சர்வதேச நாணய நிதியத்துடனான கடன் குறித்த ஒப்பந்த விவகாரத்தையும் திசைத்திருப்பி இவ்வாறான விடயங்களை மக்கள் மத்தியில் திணிக்க போராடுகிறார்கள். தவிர, இது ஒருவிதத்தில் பிக்குமார்களை குசிப்படுத்தும் (சிறு குழு) நடவடிக்கையெனவும் கொள்ளலாம். ஏனெனில், அரச மதமென்ற அந்தஸ்தை இலங்கை அரசியலில் பவுத்தத்திற்கு வழங்கப்பட்டுள்ளமையால் ஆகும். எவ்வாறாயினும், ஆளும் வர்க்கத்தின் நலன்சார்ந்த திட்டங்களாகவே இவை இருக்கின்றன. ஆக, பவுத்த தர்மத்திற்குண்டான கௌரவத்தை நிலைநிறுத்த அரசியலில் இருந்து அது விடுவிக்கப்பட வேண்டும். அதைப்போலவே, தொல்லியல் துறைக்கும் அத்துறைசார் கல்விக்கும் பூரண சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். ஆனால், இவை அரசியலின் அங்கமாக மாற்றப்பட்டுள்ளமையானது ஆபத்தானதாகும்.

கந்தரோடையில் விகாரை அமைக்கப்படப் போவதாக தமிழ்த் தேசிய அரசியற் தரப்பிடமிருந்து கதை வருகின்றது. முல்லைத்தீவு குருந்தூர் மலையில் காணப்படும் உருளை வடிவ தொல்பொருள் சின்னம் பவுத்த தூபிக்குரிய 'யூப்ப கல' என்றும், இல்லை! அது இந்து மதத்திற்குரிய 'அஷ்ட தாராலிங்கம்' என்றும் இருவேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும், இந்த மலையில் சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் காணப்பட்ட பழங்கால கட்டட இடிபாடுகளுக்கு மத்தியில் அங்கே ஆதி ஐயனார் எனும் சிவனை தெய்வமாக கருதி இந்து மக்கள் வழிபட்டு வந்தனர். ஆனால், தற்போது பவுத்த விகாரையை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதுபோல, வவுனியா வடக்கில் நெடுங்கேணி பிரதேசத்தில் வெடுக்குநாறியில் மக்கள் சிவலிங்கத்தை வழிபட்டு வருகின்றனர். ஆனால், தற்போது அவ்விடம் வட்டமான பர்வத விகாரை எனக் கூறப்பட்டு ஆக்கிரமிக்கப்படுகிறது. தவிர, யாழ் வலி. வடக்கு தையிட்டியில் 100 அடிக்கும் உயரமான விகாரை கட்டப்பட்டு வருகிறது. இப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. திருகோணமலையில் கிண்ணியா வெந்நீர் ஊற்றும் அநுராதபுர காலத்திற்கு சொந்தமான பவுத்த சூழலுக்குரியது என்று கூறப்பட்டது. நுழைவாயில் அனுமதிச் சீட்டும் சிங்கள மொழியில் மாத்திரமே இருக்கிறது. தவிர, முஸ்லிம் மக்களின் காணிகளிலும் விகாரைகளை அமைப்பதற்கு ஒரு தரப்பினர் முயல்கின்றனர். இவ்வாறான விடயங்கள் ஒருபுறம் சிறுபான்மை மக்களை புறக்கணிப்பதாகவும் மறுபுறம் பெரும்பான்மை சமூகத்தை கவர்ந்திழுப்பதற்கான ஆட்சியாளர்களின் அரசியல்சார் தந்திரோபாயமாகவும் இருக்கிறது. தாம்தான் பவுத்தத்தை காக்க வந்தவர்கள் என்று நிறுவுவதன் மூலம் அதிகாரத்தை தக்கவைக்க முயல்கின்றனர் பவுத்தம் போதிக்கும் பஞ்சசீலக் கொள்கைக்கு (ஐயொழுக்கக் கொள்கை) நேர் எதிரான இந்த அரசியற் தலைவர்கள். மக்களை பிரித்தாளும் அரசியல் என்பது அவர்களுக்கு நாக்கில் தடவி விடப்பட்ட தேன் போன்றது.

அதற்காக, இவ்விவகாரத்தில் தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளுக்கும் வடக்கு கிழக்கு சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகளுக்கும் இலாபம் இல்லை என்று சொல்லிவிட முடியாது. நாட்டில் நிலவுகிற அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியால் குறுந்தேசியவாத அரசியலின் இருப்பு கேள்விக்குறிக்கு உள்ளாகியதால் அச்சப்பட்டு போயிருந்தவர்களுக்கு இதுபோன்ற விவகாரங்கள் பாலைவார்த்தது போன்றது தான். இருப்பினும் சிறுபான்மை மக்களின் உரிமைகள் தொடர்பாக எழும் குரல் நியாயமானதே! ஆனால், தமிழ் மக்களின்



உரிமைகளை வென்றெடுக்கக் கூடிய வலுவான ஓர் அரசியற் கட்சி வடக்கில் இல்லை. அங்கிருக்கும் பிரதான கட்சிகள் எல்லாம் தன்நலம் சார்ந்தவை.

குறிப்பாக, தையிட்டியில் கட்டப்படுகின்ற விகாரையின் கட்டுமானப்பணிகள் 2019 ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. மக்களுடைய காணிகளை கையகப்படுத்தி இவ்வாறு விகாரை கட்டப்படுவதென்பது சட்டவிரோதமானது என்பதை மறுக்கமுடியாது. ஆனால், பிரதேச செயலாளரின், பிரதேச செயலகத்தின், காணிகள் தொடர்பான நிறுவனங்களின், புத்தசாசன அமைச்சின், மாவட்டக் குழுவின் அனுமதி இல்லாமல் இவ்வாறான விகாரையை கட்டமுடியாது. ஆக, இதுநாள் வரையில் அங்கு விகாரை கட்டப்பட்டு வந்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்காத தமிழ் அரசியற் தலைவர்கள் எல்லா வேலைகளும் முடிவுறும் தருவாயில் இருக்கையில் வந்து நின்று கொந்தளிக்கின்றனர். இவ்வாறான கூத்துக்களைப் பார்க்கத்தான் வேடிக்கையாகவிருக்கிறது. அதுசரி! இது அவர்களின் கையாலாகாதத் தனத்தின் வெளிப்பாடாகவும் எடுத்துக் கொள்ளலாம். இதுவரை அமைதி காத்தவர்கள் தற்போது தமது அரசியலை ட்ரெண்டாக்குவதற்காக பொங்கியெழுகிறார்கள். வீடியோவை பக்காவாக எடுக்கச் சொல்லிவிட்டு வேகமாக அங்கஜன் நடையெடுத்து இறுதியில் களைத்து தரையில் அமர்ந்து கொண்டதற்கும், ஏனைய தமிழ்த் தேசியத் தலைவர்கள் பாய்விரித்து அமர்ந்திருந்ததற்கும் காரணம் அரசியலில் ட்ரெண்டாகுவதற்குத்தான். இவர்களை தமிழ் மக்கள் நம்பினால் இறுதியில் அவர்களும் நடுத்தெருவுக்குத் தான் வரவேண்டியிருக்கும்.

1960களில் வடக்கில் சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டங்கள் முனைப்பு பெறுவதற்கு முன்னர் ஒடுக்கப்பட்ட தமிழ்ச் சனத்துக்கு ஆலயத்தினுள் நுழைய தடைவிதிக்கப்பட்டிருந்தது. மேட்டுக்குடிகளின் குடியிருப்புக்கருகில் காணிநிலம் வழங்க மறுக்கப்பட்டிருந்தது. ஒடுக்கப்பட்ட சனம் தேநீர் கடைகளில் மரியாதையாக தேநீர் பருகுவதற்கே பெரும் போராட்டத்தை நடத்தவேண்டியிருந்தது. இவ்வாறான மேட்டுக்குடி சாதியத் திமிறுக்கும் வெறிக்கும் பலியாகிய வரலாறே வடக்கின் வரலாறாகும். தற்போதும் கூட திருவிழாக்களின் போது பெக்கோ இயந்திரங்களும், சிங்கள இராணுவ வீரர்களுமே இந்துக் கடவுளர்கள் அமர்த்தப்பட்டுள்ள தேர்களை இழுக்கின்றனர்.

இது தமிழ் மேட்டுக்குடிகளினதும், மேட்டுக்குடி அரசியற் தலைவர்களினதும் விருப்பத்திற்கிணங்கவே நடந்தேறுகின்றன. ஆக, அரசியல் அதிகார இருப்புக்காக முன்னெடுக்கப்படும் ஆளும் சிங்கள் மேட்டுக்குடிகளின் பவுத்த விஸ்தரிப்புவாதத்திற்கு எதிராக வடக்கில் போராட்டம் நிலவுவது போலவே மேட்டுக்குடி தமிழ் சாதிய அடக்குமுறைக்கு எதிரான ஒடுக்கப்பட்ட தமிழ்ச் சனத்தின் போராட்டமும் அங்கு தொடர்ந்துகொண்டிருக்கிறது. அரசியல் ரீதியாவும் சரி! சமூக கட்டமைப்பு ரீதியாகவும் சரி! வடக்கு பிளவுப்பட்டு கிடப்பதால் அது மூன்றாம் தரப்பு ஆக்கிரமிப்பாளருக்கு சாதகமாக அமைந்துவிடுகிறது. தவிர, நாட்டில் தேசிய ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட அரசியல் அதிகாரத்தில் இல்லாதது மேற்கண்ட எல்லா பிரச்சினைகளுக்குமான பிரதான காரணமாக அமைகிறது.


நம்முடைய வர்க்க எதிரிகளை பாதுகாப்பதற்கான கருத்திட்டங்கள் காலத்திற்கு காலம் ஆள்பவர்களால் நிறுவப்படுகின்றன. நாடு, தேசியப் பாதுகாப்பு, தேசிய மொழி, தேசிய மதம், பவுத்த பூமி என்று இந்த திட்டங்கள் முன்நகர்த்தப்படுகின்றன. 30 வருடகால யுத்தமும், திகன கலவரமும், ஈஸ்டர் குண்டுவெடிப்பும் இதன்படியே அரங்கேறின. ராஜபக்ஸாக்கள் தங்களை மன்னர்களாக அறிவித்துக்கொண்டதும் இந்தக் கருத்திட்டங்களில் கிடைத்த பலாபலன்களின் அடிப்படையிலேயே ஆகும். இவ்வாறான பிரிவினைவாத கோசங்கள் மேலெழும் போது மக்கள் தம் கண்களுக்கு வர்ண கண்ணாடிகளை அணிந்துகொண்டே ஏனைய பிரச்சனைகளை நோக்குகின்றனர்.

அதனால், வர்க்கப் பிரச்சனை என்பது ஒவ்வொரு நிறங்களில் அவர்களுக்கு தென்படுகிறது. ஆனால், பொருளாதார நெருக்கடி உச்சம் கண்டு அடிவயிறு பற்றியெரிந்த வேளையில் சாதாரண மக்கள் அணிந்திருந்த வர்ணக் கண்ணாடிகள் கழன்று விழுந்தன. அதன் விளைவாகவே ராஜபக்ஸாக்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

எவ்வாறாயினும், மக்களை பிரித்தாளுவதற்கான கருத்திட்டங்களை சுருட்டிக்கொள்வதற்கு ஆளும் வர்க்கம் தயாராக இல்லை. அதன்படியே, வடக்கு கிழக்கில் விகாரைகளும் புத்தர் சிலைகளும் முளைக்கின்றன. ஐரோப்பா நாடுகளில் வேலையில்லா திண்டாட்டம் உக்கிரடையும்போது இவற்றிற்கு காரணம் வெளிநாட்டவர்களின் வருகையே என்று நவ நாசிகளால் வெளிநாட்டவர்கள் தாக்கப்படுவதும் கொலைசெய்யப்படுவதும் கூட முதலாளித்துவ வர்க்கத்தை பாதுகாப்பதற்கான திட்டமிடப்பட்ட கருத்திட்டமே ஆகும். இலங்கையில் இடம்பெறும் மேற்கண்ட நடவடிக்கைகளும் இதற்கொப்பானதே. பவுத்தர்களே இல்லாத இடத்திற்கு விகாரைகள் எதற்கு? சரி! தொல்லியல்துறை கூறுவதுபோலவே வடபகுதி பவுத்த பூமி என்றாலும் கூட, அங்கு வாழக்கூடிய இலட்சக்கணக்கான ஏனைய மதங்களை பின்பற்றும் மக்களை விரட்டியடிப்பதற்காக உத்தேசம்? இது மக்களின் இரத்தத்தை சூடேற்றுவதற்காக வடக்கு தெற்கு அரசியல்வாதிகள் பிரித்து எடுத்துக்கொண்டு செயற்படுத்துகின்ற ப்ரொஜெக்ட்.

இதில் பாட்டாளி வர்க்கம் பலியாவதுடன், முதலாளித்துவ வர்க்கம் (சிங்கள, தமிழ், முஸ்லிம்) பாதுகாக்கப்படுகிறது. இந்த ஆளும் கூட்டத்திற்கு எதிரான அரசியல் இலங்கையில் வலுப்பெற்று வருவதால் இவ்வாறான புதுப்புது ப்ரொஜெக்ட்டுகள் உருவாக்கப்படுவதும், செயற்படுத்தப்படுவதும் தீவிரமடையவே செய்யும். இதனை மக்கள் ஒன்றுசேர்ந்தே வெற்றிகொள்ள முடியும்.

ஆக, மாவனெல்லையில் புத்தர் சிலை உடைத்து நொறுக்கப்படுவதும், வடக்கிலும் கிழக்கிலும் புத்தர் சிலைகள் உருவாக்கப்படுவதும் வெவ்வேறான விடயமல்ல. இரண்டும் அடிப்படையில் ஒன்றே! இதுதான் அவர்களது ப்ரொஜெக்ட். இந்தப் ப்ரொஜெக்ட்டை நிர்மூலமாக்கக் கூடிய அரசியலைத்தான் அதிகாரக் கதிரையில் அமர்த்த வேண்டும். அது சாதாரண மக்களுக்கான ஆட்சியதிகாரமாகவல்லாமல் வேறு எதுவாக இருக்க முடியும்? அ





# ‘நல்ல . . ’

எல்லாவற்றிலும் நல்லதும்
கெட்டதும் இருக்குது பாருங்கோ

நாம் சொல்லும் வரையறைக்குள்
அடங்கியிருந்தால்

நல்ல பொம்பிளை
நல்ல முஸ்லிம்
நல்ல தலித்
நல்ல தொழிலாளி

நாங்கள் உங்களுக்குத்
தேவையானவற்றை
தருகிறோமல்லவா?

நல்ல ஆம்பிளை
நல்ல இந்து
நல்ல வெள்ளாளன்
நல்ல முதலாளி

திருப்பிக் கதைத்தல்
திருப்பி அடித்தல்
உரிமை கேட்டல்
குற்றமாதலால்

யாதும் எம் எண்ணம் போலவே
நடந்தே தீரும்
யாமே அனைத்தையும்
தீர்மானித்து அருளுவோம்

பெண்ணை அடிக்கவும்
மசூதியை இடிக்கவும்
மனிதரை எரிக்கவும்
காரணமா இல்லையா எம்மிடம்?

அடித்தளமிட்டு
கட்டிக் காத்ததையெல்லாம்
சுக்கு நீறாக்க
சும்மா இருப்போமா?

ஆதலால். .
நல்லதையும் கெட்டதையும்
சொல்லித் தருகிறோம்.

ம் ..

நல்லதை எதிர்த்தலே
மிஞ்சியுள்ளது.

**உமா**



# கங்காவும் சுங்காறும்

நோர்வேயில் சூரியன் திரும்புகிறது... என்று ஒரு பேச்சுவழக்கு இருக்கிறது. உண்மையிலும் அப்படியான ஒரு சம்பவம் வருடத்தில் ஆனி, மார்க்கழி மாத இறுதிகளில் நடைபெறும்.

வடதுருவத்தில் நோர்வே இருப்பதால் பூமி சூரியனைச் சுற்றும்போது, ஆனிமாதம் 21ஆம் திகதி நோர்வே சூரியனுக்கு அருகாமையிலும், மார்கழி 21ஆம் திகதி தூரத்திலும் இருக்கும். இதன் காரணமாக ஆனிமாதக் காலத்தில் வெப்பமும், சூரிய வெளிச்சம் அதிகமாகவும் மார்கழியில் கடுங்குளிராகவும், ஓரிரு மணிநேர சூரிய வெளிச்சமும் கிடைக்கின்றன.

பலருக்கும் இலையுதிர்காலத்தின் பிற்பகுதியும் பனிக்காலத்தின் இறுதிப்பகுதி வரையான கார்த்திகை தொடக்கம் மாசி வரையிலுள்ள நான்கு மாதங்களைக் கடந்துகொள்வது மிகவும் கடினமானது. சோர்வும் உற்சாகக் குறைவும் பற்றிக்கொள்ளும். சூரியவெளிச்சம் ஓரிரு மணிநேரங்களுக்கு மட்டுமே இருப்பதால், இருளுடனேயே வாழ்வது போன்றிருக்கும். ஊட்டச்சத்து 'டீ' குறைவாக இருப்பதும் இதற்கு ஒரு காரணம் என்கிறார்கள்.

**சஞ்சயன் செல்வமாணிக்கம்**

இப்போது மார்கழி மாதம். இராப்பொழுதுகளில் குளிர் உறைநிலைக்குக்கீழ் சென்றுவிடுகிறது. சூரியவெளிச்சமும் குறைவு. நத்தார் பண்டிகைக்கான ஆரவாரங்கள் ஆம்பித்துவிட்டிருக்கின்றன. இப்படியான ஒரு மாலைப் பொழுதில் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது.

'கணினி திருத்துபவரா கதைப்பது?. எனது வீட்டுக்கு வந்து கணினியைத் திருத்தித்தர முடியுமா? என்னால் வெளியே செல்ல முடியாது. எனக்கு 92 வயதாகிறது' என்று மூச்சிரைத்தபடி கேட்டார்.

'உங்கள் கணினிக்கு என்னு பிரச்சினை?'

'அது இயங்க மறுக்கிறது. விளம்பரம் ஒன்று திரையில் தெரிகிறது. அதைக் கடந்து அப்பால் செல்ல முடியவில்லை'

'என்ன விளம்பரம்? எப்போது தோன்றுகிறது?' என்று விசாரித்தறிந்தபோது, அதுபற்றி அவரால் தெளிவான பதிலொன்றையும் சொல்ல முடியவில்லை.

வயதானவர்கள் பெரும்பாலும் பழைய கணினிகளையே வைத்திருப்பார்கள். மனைவியைப் போன்று இலகுவில் மாற்றமாட்டார்கள்.

'எப்போது உங்களின் கணினியை வாங்கினீர்கள்?'

எதிர்பார்த்தது போன்றே!

'குறைந்தது பத்து வருடம் இருக்கும்' என்றார்.

பழைய கணினிகளைத் திருத்துவதில் எனக்கு உடன்பாடு இல்லை. வீண் செலவு என்று நினைப்பவன் நான்.

எனவே, "உங்கள் கணினி மிகவும் பழையது. நீங்கள் புதிய கணினி வாங்குவதுவே நல்லது' என்றேன்.

'எனக்கு 92 வயது. புதிய கணினி வாங்கி ஒன்றும் ஆகப்போவது இல்லை. இதைத் திருத்தித் தா.'

'சரி' என்று கூறி விலாசத்தை வாங்கிக்கொண்டு, நாளை மாலை

வருவதாக ஒப்பந்தம் செய்துகொண்டேன்.

கடந்த சில நாட்களாகவே மனம் அமைதியாக இல்லை. வாழ்வு மீதான ஒருவித அந்தரிப்பான பயத்தை உணரத்தொடங்கியிருக்கிறேன். நான் மணவிலக்கானவன். கடந்த பதினைந்த ஆண்டுகள் தனிமையிலேயே கடந்துவிட்டிருக்கிறன. பதினைந்து ஆண்டுகள் என்பது வாழ்வின் பெரும் பகுதி. இளமை கரைந்து முதுமையின் வாசலில் நிற்கும்போதுதான் தனிமையின்மீது பெரும் பயம் ஏற்படுகிறது. முதுமக்கள் வாழும் மனையொன்றில் பகுதிநேர வேலை செய்துவருகிறேன். முதுமையின் தார்ப்பர்யத்தை அங்கும் காணக்கிடைப்பதால் மனம் அமைதியாயில்லை.

அண்மையில் இலங்கை சென்றிருந்தபோது சந்தித்த பெரியவர் ஒருவரும் 'தனிமையில் வாழ ஏலாதடா. நல்லது கெட்டதற்கு வாழ்வை பகிர்வதற்கு ஒருவர் வேணும். எத்தனைக் காலம்தான் தனியே இருக்கப்போகிறாய்? காலம் தாழ்த்தாதே, யோசி' என்றிருந்தார்.

மார்கழி மாதம் பனிக்காலத்தின் ஆரம்பமாகையில் இதுவரை பனி கொட்டியிருக்கவில்லை. காற்றில் கடும் குளிர் பரவியிருந்தது. பேரூந்தில் இருந்து இறங்கி அவர் தந்த விலாசத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தேன். மனம் மேலே எழுதியதை சிந்தித்துக்கொண்டிருந்தது.

மார்கழி மாதம் பனிக்காலத்தின் ஆரம்பமாகையில், இதுவரை பனி கொட்டியிருக்கவில்லை. காற்றில் கடும் குளிர் பரவியிருந்தது. பேரூந்தில் இருந்து இறங்கி, அவர் தந்த விலாசத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தேன்.

ஒஸ்லோ நகரத்தின் மத்திய பகுதிக்கு அருகிலான செல்வச் செழிப்பான புறநகர்.

வீதியின் வலதுபுறத்தில் ஒற்றை இலக்க வீடுகளும், இடது புறத்தில் இரட்டை இலக்க வீடுகளும் இருந்தன. அவரது வீடு இடப்பக்கத்தில் அமைந்திருந்த தொடர்மாடிக் குடியிருப்பொன்றில் அமைந்திருந்தது. அழைப்பு மணியை அழுத்திவிட்டுக் காத்திருந்தேன். பதில் இல்லை. மீண்டும் அழைப்பு மணியை அழுத்தியபோதும் பதிலில்லை. தொலைபேசியில் அழைத்தேன்.

'அழைப்புமணி இயங்கவில்லை. தனது வீட்டிலிருந்து கதவைத்திறக்கும் தொலைவியக்கியும் இயங்கவில்லை. மன்னித்துக்கொள்' என்று அவர் கூறியபோது, கதவுக்கு உட்புறமாக துப்புரவுத் தொழிலாளர் ஒருவர் நிலத்தைக் கழுவிக்கொண்டிருந்ததைக் கண்டேன். கதவைத் தட்டியதும், 'திறந்து யாரிடம் செல்லவேண்டும்?' என்றார். தொலைபேசியைக் கொடுத்தேன். இருவரும் பேசிக்கொண்டபின், என்னை உட்செல்ல அனுமதித்தார்.

> 'வாழ்விற்கு மன அமைதி முக்கியமானது. ஓர் ஆணின் மன அமைதிக்குப் பெண் முக்கியமானவள். பெண்களைப்போல் ஓர் ஆணை முழுமைப்படுத்துபவர்கள் வேறு எவருமிருமில்லை. அவளின் அன்பு உன்னை ஆளாக்கி மீட்கக் கூடியது.
>
> அப்படியான ஒருத்தியை நீ பெற்று வாழ்வதற்கு நீ பெரும்பேறு பெற்றிருக்க வேண்டும். எனது வாழ்வினை உச்சத்திற்கு நகர்த்தியவர்களில் மூவர் பெண்கள். இருவர் எனது மனைவியர். இன்னொருவர் எனது தோழி' என்று கனவில் பேசுவதுபோன்று பேசிக்கொண்டிருந்தார்.
>
> நான் எதுவும் பேசவில்லை. வாழ்வு அவர் ஊடாக எனக்கு எதையோ போதிக்கிறது என்றது மனது.

முதுமக்களுக்கான மனைகள் அமைந்த ஒரு குடியிருப்பு என்பதைச் சுற்றாடலையும், ஆங்காங்கே ஒட்டியிருந்த அறிவித்தல்களையும் கண்டதும் புரிந்துகொண்டேன்.

ஆறாம் மாடிக்குச் சென்று அவரது வீட்டின் கதவைத் தட்டியபோது, நான்கு கால்களைக் கொண்ட ஒரு தள்ளு வண்டியுடன் கதவைத் திறந்தார். வீட்டினுள்ளிருந்த முதுமையின் வாசனையை உணர்ந்தேன்.

இவருடனான தொலைபேசி அழைப்புக்களில் கேட்ட இவரது நோர்வே மொழியின் உச்சரிப்பிலிருந்து, இவர் நோர்வே நாட்டவர் அல்லர் என்பதைப் புரிந்திருந்தேன். 'உள்ளே வாருங்கள்' என்ற அவரது அழைப்பும் அதை உறுதிசெய்தது.

பெருத்த அவரது உடலை நகர்த்திக்கொள்வதற்கு சிரமப்பட்டார். ஒரு வசனத்தைப் பேசுவதற்கே மூச்சிரைக்கவேண்டியிருந்தது. சொற்களுக்கு இடையில் மூச்செடுப்பதற்குப் பெரும்பாடுபட்டார்.

எனது மேலாடையைக் கழற்றிக்கொண்டேன். வீட்டுக்குள் இருந்த வெப்பம் ஆறுதலைத்தந்தது. என்னை அவரது கணினி இருந்த அறைக்குள் அழைத்துப் போனார்.

கணினியின் முன்னால் உட்கார்ந்துகொண்டேன். அருகிருந்த ஒரு புகைப்படத்தில் எனது கவனம் குவிந்தது. தோட்டத்தில் வயதானவர் ஒருவர் சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருந்தபடியே, ஒரு காலை மற்றைய காலின் மேல் போட்டபடி சுங்கான் புகைத்தபடியிருக்கிறார். அவரின் அருகில் ஒரு குழந்தைகளுக்கான இருக்கையொன்றில் உட்கார்ந்தபடியே எதிரேயிருந்த நாற்காலியில் அருகே இருக்கும் பெரியவரைப்போன்று கால்களை ஒன்றின்மேல் ஒன்றாக போட்டபடி இரண்டு மூன்று வயதுக் குழந்தையொன்றும் உட்கார்ந்திருக்கும் புகைப்படத்தினைக் கண்டேன்.

அப்புகைப்படத்தை எடுத்தவர் ரசனை மிகுந்தவராக இருக்கவேண்டும். பெரியவரைப் போன்று உட்கார்ந்திருக்கும் அந்தக் குழந்தையின் அநிச்சையான செய்கையும், அக்குழந்தையை ரசிக்கும் அந்தப் பெரியவரையும் மிகவும் அழகாகப் படம் பிடித்திருந்தார். படம் எனது மனதைக் கொள்ளைகொண்டதால், எழுந்துசென்று அதனைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தேன்.

'அது எனது தாத்தா, அந்தக் குழந்தையாக இருப்பது நான். இந்தப் புகைப்படம் 1934ஆம் ஆண்டு, இங்கிலாந்தில் எடுக்கப்பட்டது. தாத்தாவை நான் கங்கா என்று அழைப்பேன்'

'நீங்கள் இங்கிலாந்து நாட்டவரா?'

'நான் பிறந்தது அங்குதான். ஆனால், கடந்த 70 வருடங்களாக நெதர்லாந்திலும் நோர்வேயிலும் வாழ்ந்து வருகிறேன்'.

'உலகின் பிரபல்யமான நதியொன்றின் பெயரை உங்களின் தாத்தாவுக்கு வைத்திருக்கிறீர்களே'

சற்று சிந்திக்கிறார். 'புரியவில்லையே'

'இந்திய புனித கங்கைநதியை கங்கா என்றும் அழைப்பார்கள்'

'ஆ! இப்போது புரிகிறது. உண்மையில் அவரும் கங்கயைப் போன்று விசாலாமானவர். என்னை வழிநடத்தியவர். அவரின் பிரதி நான் என்று அம்மா சொல்வார்'.

கணினியின் பிரச்சினைகளைச் சொன்னார். கணினியை இயக்கியதும், அது அவர் தொலைபேசியில் குறிப்பிட்டது போன்று, குறைந்து பத்தாண்டுகளாவது பழமையானது என்பதைப் புரிந்துகொண்டேன். அவரது பிரச்சினைகளைத் தீர்ப்பது வேறு பல சிக்கல்களைத் தரலாம். சிலவேளை கணினியை மீளவும் இன்ஸ்டால் செய்யவேண்டி வரலாம், அப்படியானால், உங்கள் கணினி வின்டோஸ் 10 இனைத் தாங்காது. எனவே, உங்களின் ஆவணங்களை பாதுகாத்துக்கொண்டபின் வேலையைத் தொடங்குவோம் என்றேன்.

'முதலில் நான் எழுதிய ஒரு கடிதம் அங்கிருக்கிறது. அதனை பிரின்ட் எடுத்துத் தா'

ஆவணத்தைத் தேடினேன். ஏறத்தாழ பதினைந்து வருடங்களுக்கு முன்னான ஆளுநடிசன மென்பொருளின் ஊடாக அதனைத் திரையில் காண்பித்தபோது, 'ஆம் இது தான். எனது நண்பர்களுக்கான நத்தார்க் கடிதம். நாளை தபாலில் சேர்க்காவிட்டால் புதுவருடத்தின்பின்தான் போய்ச் சேரும்'

பிரின்டருக்கு அனுப்பினேன். அது இயங்க மறுத்தது.

'உங்கள் பிரின்டரின் மை முடிந்துவிட்டிருக்கிறது. புதிய மை இருக்கிறதா?'

'அந்த லாச்சியினுள் பார்.'

'இல்லையே!

'சிவப்பு நிற பெட்டியினுள் இருக்கலாம்'

அங்கும் இருக்கவில்லை.

'உன்னால் வாங்கிவர முடியுமா?'

குறைந்தது ஒன்றரை மணிநேரமாவது வேண்டும். எனவே, 'நாளை வரும்போது வாங்கிவருகிறேன்' என்று கூறிவிட்டுப் புறப்பட்டேன்.

மறுநாள் பின்மதியம்போல் அவரது அழைப்பு மணியை அமத்தினேன். பதில் இல்லை. தொலைபேசினேன். 'பொறு நான் கீழே வந்துதான் திறக்கவேண்டும்'

காத்திருந்தேன். மெது மெதுவாக வந்து திறந்தார்.

பிரின்டருக்கு புதிய மையை இட்டு அவரது கடிதத்தினைப் பிரின்ட் எடுத்துக் கொடுத்தேன்.

தேநீர் தயாரித்தபின் என்னை அழைத்து தேநீரை எடுத்துவரச் சொன்னார். இங்கிலாந்தின் தேநீர்க் கலாசாரம் போன்று தேநீர், பிஸ்கட், இனிப்பு வகைகளுடன் அமர்ந்திருந்து கணினியைத் திருத்தியபடி பேசிக்கொண்டிருந்தோம்.

அவர் ஒரு வழக்கறிஞர், அதேவேளை வைத்தியர். இங்கிலாந்தில் கற்று 1950களின் பின் நெதர்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளில் வாழ்ந்தபின், கடந்த முப்பது வருடங்களாக நோர்வேயில் வாழ்ந்து வருகிறார். இரண்டு குழந்தைகள். இருவரும் நெதர்லாந்தில் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், மாதாந்தம் ஒருவர் வந்துபோகிறார்கள்.

மனைவி இறந்தபின், தனது சகதொழில்முறை தோழியுடன் வீட்டைப் பகிர்ந்து வாழ்ந்திருந்த காலத்தில், நினைவழிவு நோய் தோழியைப் பற்றிக்கொண்டிருக்கிறது. இயலுமானவரை அவரையும் பராமரித்தபடி... வாழ்ந்திருந்தபோது, நோய் மோசமடைந்ததாலும் இவரின் உடல்நிலை மோசமடைந்ததாலும் தற்போது அரசு தோழியைப் பராமரிக்கிறது.

அவரது வீடு முழுவதும் புத்தக் காடுபோன்றிருந்தது. எதையும் பராமரிக்கும் சக்தி அவரிடம் இருக்கவில்லை. புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், கடிதங்கள் இறைந்து கிடந்தன.

'நீங்கள் அதிகம் வாசிப்பீர்கள் போன்றிருக்கிறதே?'

சிரிக்கிறார். 'கங்கா நான் இரண்டு வயதாயிருந்தபோதே தனது மடியிலிருத்தி கதை சொல்லியிருக்கிறார். அவர்தான் எழுத்தறிவித்தார். ஐந்து வயதில் வாசிக்க ஆரம்பித்தேன். அதன்பின் வாசிப்பும் எழுத்தும் என்றாகிவிட்டது வாழ்க்கை'

'ஓ ! நீங்கள் எழுதுவீர்களா? நாவல்கள் எழுதி இருக்கிறீர்களா?'

'இல்லை'

'கவிதைகள்?'

'இல்லை'

'அப்ப என்ன எழுதியிருக்கிறீர்கள்?'

'மருத்துவ மற்றும் சட்டப் புத்தகங்கள் எழுதியிருக்கிறேன்'

எனது ஆர்வத்தைக் கண்டவர், தனது புத்தகங்கள் இருந்த அலுமாரியைக் காண்பித்து, 'இவையெல்லாம் நான் எழுதியவை' என்றார்.

எனக்குத் தலை சுற்றாத குறை. அத்தனை புத்தகங்கள் அங்கிருந்தன. அவற்றில் ஒன்றைக் கையிலெடுத்தேன். The Law and Ethics of the Pharmaceutical Industry என்னும் புத்தகத்தைக் கையில் எடுத்தேன். 422 பக்கங்கள். Cambridge University Press 2005 இல் வெளியிட்டிருக்கிறது.

புத்தகங்களின் தலைப்புக்களைக் கண்டதும் நானடைந்த பிரமிப்புக்கு அளவேயில்லை. மருத்துவ மற்றும் சட்டத்துறையில் 55 புத்தகங்கள் எழுதியிருக்கிறார். அனைத்தும் பிரபல வெளியீட்டகங்களால் வெளியிடப்பட்டவை. எழுதிய கட்டுரைகளுக்கு அளவில்லையாம்.

'எனது வாழ்வு எழுத்திலும் வாசிப்பிலும் கடந்துவிட்டது. வாழ்வின் அந்திமத்தில் நிற்கும்போது, நான் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவே உணர்கிறேன். வாழ்வு நெடுக எத்தனை மனிதர்கள், சம்பவங்கள், அனுபவங்கள். அத்தனையிலும் நல்நினைவுகள் மட்டுமே மிஞ்சியிருக்கின்றன. ஆண்டவரிடத்தில் நான் கேட்பது ஒன்றே ஒன்றுதான். இறுதி நாள்வரையில் எனது நினைவுகளை என்னிடம் இருந்து பறித்துவிட வேண்டாம் என்பதுதான்.'

'ஆம்... நானும் அதையே விரும்புகிறேன். நினைவழிவுநோய் வாழ்வின் அர்த்தத்தையே குலைத்துப்போடுகிறது'

'ஆம்! உண்மைதான். கொஞ்சம் பொறு. நான் கழிப்பறைக்குச் சென்று வருகிறேன். நீ புத்தகங்களைப் பார். தேநீரை மறக்காதே. உன்னைப் பார்த்தால் புத்தகம் என்றால் உணவை மறக்கும் இனத்தவன் போன்றிருக்கிறது' என்றுவிட்டு தள்ளுவண்டிலைத் தள்ளியபடியே நடந்தார்.

நான் புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். பல பல முக்கிய தலைப்புக்களில் புத்தகங்கள் இருந்தன.

புகைப்படங்கள், பழைய காலத்துப் பொருட்கள், கைவினைப்பொருட்கள்,

ஆளுயுர மணிக்கூடு, நில விரிப்புக்கள், பழைய தளபாடங்கள் என்று அவரது வீடு முழுவதும் நினைவுகளின் பொக்கிசங்களால் நிரம்பிக் கிடந்தது.

அங்கிருந்த ஆளுயுர மணிக்கூட்டைப் பார்த்திருந்தபோது, 'அது கங்காவின் மணிக்கூடு' என்றபடியே வந்தார்.

'என்னைப் பற்றிப் பேசியதுபோதும்! உன்னைப்பற்றிச் சொல்' என்றபடியே தேநீர்க்கேத்தலை மூடியிருந்த குல்லாய் போன்றதை அகற்றியபின், இருவருக்கும் தேநீரை ஊற்றினார்.

1986இல் சென்னையில் வாழ்ந்திருந்த காலத்தில் ஆங்கிலம் கற்பதற்கு கின்டியில் வசித்துவந்த ஓர் ஆங்கிலோ இந்தியப் பெண்ணொருவரிடம் செல்வோம். அவரும் தேநீர்ப் பிரியை. அவரது வீட்டுக்குள் காலடி எடுத்துவைத்தால், தமிழை மறந்துவிடவேண்டும். தேவையான பொழுதில் அவர் மட்டும் தமிழில் பேசிப் புரியவைப்பார். அவரது செல்லத் தமிழ் ரசிக்கத்தக்கதாய் இருந்தது. அவரிடமும் தேநீர் அருந்தும் பழக்கம் இருந்தது. அவரும் தேநீர்க் கேத்தலை குல்லாய்போன்ற ஒரு மொத்தமான துணியால் மூடிவைப்பார்.

'இலங்கையிலும் சில வீடுகளில் இப்படியொரு குல்லாயினால் தேநீர்க் கேத்தலை மூடிவைக்கும் பழக்கத்தைக் கண்டிருக்கிறேன்' என்றேன்.

'இங்கிலாந்தில் தேநீரின் சூடு ஆறாமல் இருப்பதற்காக நாம் இப்படிச் செய்வதுண்டு. அந்தப் பழக்கம் இலங்கைக்கும் தொற்றியிருக்கலாம்! ஏன் நீ இனிப்பு எடுக்கவில்லை?' என்றபடி ஒரு இனிப்பை எடுத்துக் கடித்தபடி 'உன்னைப்பற்றிச் சொல்' என்றார்.

நானும் இனிப்பை எடுத்து வாயில் போட்டுக்கொண்டேன்.

'கணினி திருத்துவது எனது பகுதி வேலை, அவ்வப்போது முதுமக்களைப் பராமரிக்கும் மனையில் வேலைசெய்வேன். இவற்றைவிட, பல்கலைக்கழகத்துறையின் நிறுவனம் ஒன்றில் கணனித்துறை முகாமையாளனாக இருக்கிறேன்'

'பிள்ளைகள்'

'இரு பெண்குழந்தைகள். அவர்கள் இங்கிலாந்தில் வாழ்கிறார்கள்'

'அந்திமக் காலத்தில் பெண் குழந்தைகள்தான் தந்தையைத் தாய்போன்று கவனித்துக்கொள்வார்கள். நீ அதிர்ஷ்டசாலிஇ எனது மகள் நாளை வருகிறாள். அது சரி, நீ தனியே வாழ்கிறாயா?'

'ஆம்'

'எனக்கு இரண்டு திருமணங்கள். இருவரும் இறந்துவிட்டார்கள். முதலாவது மனைவி இறந்தபோது, பெண்ணின்றி ஆணால் தனித்து வாழ்ந்துவிட முடிவதில்லை. தனித்து வாழ்வதும் இலகுவல்ல. பெண்ணினால்தான் ஆணின் கவலையனைத்தையும் உறுஞ்சியெடுத்துவிட முடியும். எனவே, நீ மறுமணம் முடிக்கவேண்டும் என்றார் கங்கா. அவரது கூற்று எத்தனை சரியானது என்பதை வாழ்வின் பிற்காலத்திலேயே உணர்ந்துகொண்டேன். உனது வயதில் துணையைத் தேடிக்கொள்வது பிரச்சினையில்லாத விடயம்தானே. அப்போ ஏன் தனியே வாழ்கிறாய்?'

அவரின் கேள்விக்கு என்னால் புன்னகைக்க மட்டுமே முடிந்தது,

'ஓய்வு நேரத்தில் என்ன செய்வாய்?'

'வாசிப்பும் எழுத்தும் அதிக நேரத்தை எடுத்துவிடும். அதிகம் ஓய்வு நேரம் கிடைக்காதிருப்பதையே விரும்புவேன்'

'ஓ! வாசிப்பாயா?. என்ன வாசிப்பாய்?'

'அதிகமாக தமிழிலும் கொஞ்சம் நோவேஜியன் மொழியிலும் வாசிப்பதுண்டு'

'என்ன எழுதுவாய்?'

'வாழ்வின் நினைவுகளையும் அனுபவங்களையும் சம்பவங்களையும் பதிந்துவிடவேண்டும் என்ற எண்ணமுண்டு'

'அப்படியென்றால் நொன் பிக்சன் எழுத்தாளன் நீ'

'எழுத்தாளன் என்பது சற்று அதிகம். ஆனால், நொன் பிக்சன் என்பது சரி'

'புத்தகங்கள் எழுதியிருக்கிறாயா?'

இதுவரை ஒன்று வெளி வந்திருக்கிறது. இலங்கையில் நடந்த போரின் பின்னான காலத்தில் போராளிகளின் வாழ்வியற் துயரங்கள் பற்றியது. 2023 இல் நான்கு புத்தகங்களைத் திட்டமிட்டிருக்கிறேன்'

தேநீர் முடிந்துவிட்டிருந்தது. கேத்தலில் இருந்த மீதியை இருவருக்கும் ஊற்றினார்.

'ஆங்கிலத்திலும் எழுதலாமே'

'எனது நோர்வேஜியப் புலமையைவிட ஆங்கிலப்புலமை மட்டுப்படுத்தப்பட்டது. தவிர, மனதின் உணர்வுகளை எழுத்துக்களாக இறக்கிவைக்க தாய்மொழிதான் சிறந்தது'

'உண்மைதான்' என்றபடி தொடர்ந்தார்.

'இது எனது அந்திமக்காலம். வாழ்வின் சுவராசியங்களில் முக்கியமானது 'அடுத்த நிமிடம்'.

நாளை காலை நான் எழுந்திருந்தால் அது போனஸ். இல்லையேல் நான் இல்லையேல் நான் இவ்வுலகத்தில் இருந்து விடைபெற்றிருக்கிறேன். வாழ்வின் உச்சத்தை நீ அடையும்போது மரணம் உனக்குத் தோழமையாகிவிடும்'

என்னால் எதையும் பேச முடியவில்லை. அவரே தொடர்ந்தார்.

'வாழ்விற்கு மன அமைதி முக்கியமானது. ஓர் ஆணின் மன அமைதிக்குப் பெண் முக்கியமானவள். பெண்களைப்போல் ஓர் ஆணை முழுமைப்படுத்துபவர்கள் வேறு எவருமிருமில்லை. அவளின் அன்பு உன்னை ஆளாக்கி மீட்கக் கூடியது. அப்படியான ஒருத்தியை நீ பெற்று வாழ்வதற்கு நீ பெரும்பேறு பெற்றிருக்க வேண்டும். எனது வாழ்வினை உச்சத்திற்கு நகர்த்தியவர்களில் மூவர் பெண்கள். இருவர் எனது மனைவியர். இன்னொருவர் எனது தோழி' என்று கனவில் பேசுவதுபோன்று பேசிக்கொண்டிருந்தார்.

நான் எதுவும் பேசவில்லை. வாழ்வு அவர் ஊடாக எனக்கு எதையோ போதிக்கிறது என்றது மனது.

தேநீர் முடிந்து விட்டிருந்தது. 'இன்னுமாரு தேநீர் அருந்துவோமா?' என்றவரை மறுத்து, 'இல்லை, எனக்கு வேறு வேலை இருக்கிறது. உங்களுடன் பேசியதும் பெரும் எழுத்தாளரை, அதிலும் ஆங்கிலத்தில் இத்தனை புத்தகங்கள் எழுதியவரைச் சந்திக்கக் கிடைத்ததும் மகிழ்ச்சி' என்று எழுந்தேன்.

'பொறு நான் துறைசார் விடயங்கள் இல்லாத ஒரு புத்தகம் எழுதியிருக்கிறேன். அது எனது அனுபவங்களை உள்ளடக்கியது' என்று Essays and Tails என்ற ஒரு புத்தகத்தை எனது பெயருக்குக் கையெழுத்திட்டுத் தந்தார்.

வீடு வந்து புத்தகத்தைத் திறந்தேன். முதலாவது ஆக்கமாக கங்காவைப் பற்றி எழுதியிருந்தார். அந்தப் புகைப்படமும் அங்கிருந்தது.

### எங்கே போய் முட்ட?

# பெண்ணைப் பேயும் மடை!

விறுவிறுப்பாகப் போய்க் கொண்டிருக்கும் கதைகள் எங்கே பயங்கரத் திருப்பங்கள் திரும்பும் என்று எதிர்வு கூற முடிவதில்லை...

தமிழ்ப் படங்கள் மாதிரி!

'அடேய், சீமான்!' என்று விரலைக் காட்டி எச்சரிக்கை செய்த விஜயலட்சுமி, அண்ணன் சீமானை 'சீமான் சார்' என்று பவ்வியமாக அழைத்தது மட்டுமல்ல, இது வரை நாளும் தலைவிரிகோலமாக நீதி கேட்ட அதே பாண்டியர்களை 'பொத்திக் கொண்டு போங்கடா!' என்றிருக்கிறார்.

புஹா...ஹா...

நாம் Dumbளர்களுக்கு ஒரு புரட்சித் தலைவி,

நாம் தமிழர் கட்சிக்கு ஒரு கொ.ப.செ கிடைத்திருக்கிறார்.

அண்ணனோட கொடுக்கல் வாங்கல் எல்லாம் அண்ணி தான் மேற்பார்வை.

எதற்கும் தம்பிகள் மேசைக்கு கீழ் சாஷ்டாங்கமாக விழுந்து அடிமுடி தேட ஆரம்பிப்பது நல்லது.

அனுபவம் பிற்காலத்தில் உதவும்.

அண்ணனோட 'கையில ஆட்சி சிக்கிச்சு நாளில,'

வயது போன காலத்தில் உடம்பும் வளைந்து கொடுக்கும்.

எதுக்கும் சரத்குமாருக்கு 150 வயது ஆகிறதுக்கு முன்னால, அண்ணனை அரசு கட்டிலில் ஏத்திறது நல்ல ஐடியா.

இல்லேன்னா, அப்புறம் முதல்வராகிற சான்சே அண்ணனுக்குக் கிடைக்காமல் போயிடும்.

> ராமராஜ்யம் அமைக்கும் சிவசேனையை மட்டும் களத்தில காணோம்.
>
> இது வெறும் அரசியல் ஆர்ப்பாட்டமாகத் தான் இருக்கிறதே அன்றி, இந்துமதக் காவலர்கள் எதையும் பண்ணுவதாகக் காணோம்.
>
> தற்போதைக்கு வானர சேனை போதும் என்ற நினைப்பாக இருக்கக்கூடும்.
>
> என்னவோ, ஜெனிவா விலயும், பேஸ்புக்கிலயும் ஈழம் கண்டு, யாழ்ப்பாணம் சிவபூமி ஆகிறதுக்கு முன்னால், புத்தம் சரணம் கச்சாமி என்று யாழ்ப்பாணமே வெள்ளைக் கொடியோடு சரண்டர் ஆயிடும் போல.

***

குடாநாட்டில் புத்த விகாரைகள்.

பெரும் சர்ச்சைகள். ஆர்ப்பாட்டங்கள்.

குண்டுக்கட்டாகக் கட்டித் தூக்கிச் செல்லும் வெளியேற்றங்கள்.

நாடகம் நன்னாத் தான் போய்க்கிட்டிருக்கு.

ஆனால், ராமராஜ்யம் அமைக்கும் சிவசேனையை மட்டும் களத்தில காணோம்.

இது வெறும் அரசியல் ஆர்ப்பாட்டமாகத் தான் இருக்கிறதே அன்றி, இந்துமதக் காவலர்கள் எதையும் பண்ணுவதாகக் காணோம்.

தற்போதைக்கு வானர சேனை போதும் என்ற நினைப்பாக இருக்கக்கூடும்.

என்னவோ, ஜெனிவா விலயும், பேஸ்புக்கிலயும் ஈழம் கண்டு, யாழ்ப்பாணம் சிவபூமி ஆகிறதுக்கு முன்னால், புத்தம் சரணம் கச்சாமி என்று யாழ்ப்பாணமே வெள்ளைக் கொடியோடு சரண்டர் ஆயிடும் போல.

அதனால் என்ன?

இரண்டுமே காவி தானே என்று மனதைத் தேற்றிக் கொள்ள வேண்டியதுதான்.

அத்தோடு தாமரை மலர்ந்தால், புத்தருக்கும் சூடலாம்.

***

வீடு எரிகிறது. பிடுங்கிற வரைக்கும் லாபம்.

முடிஞ்சவங்க பிழைச்சுக்குங்க.

அதே யாழ்ப்பாணி பாரம்பரியத்தில் சகோதரனோடு காணிச் சண்டை பிடித்து கோடேறி வழக்காடி, கடைசியில் காணியை விற்று அப்புக்காத்து, பிரக்கிராசிக்கு காசு கொடுக்கிற பரம்பரை. அதற்குத் தலைவர்களாக வந்தவர்களே அதே அப்புக்காத்து, பிரக்கிராசிமார் தான்.

அவர்களே இன்றைக்கும் இந்த இனத்தை வைத்து பிழைக்கிறார்கள். கடைசியில் காணி அவர்களுக்குத்

ஜோர்ஜ் இ.

தான்.

யாழ்ப்பாணிக்கு…?

அது தான் குடியேற வெளிநாடு இருக்கே!?

***

குடாநாட்டில், சைவக் கோயிலில் எளிய சாதியார் வீட்டு குடிபூரலுக்கு சாமி படம் வைத்துக் கொடுத்த ஐயருக்கு கல்தா!

'இப்ப ஆர் சாதி பாக்கினம்?' தொடங்கி, 'யாழ்ப்பாணத்தில் சாதி வெறி' என்று பி.பி.சி வெளியிட்ட செய்திக்கு கண்டனக் கையெழுத்து வேட்டை நடத்துறவங்க வரைக்கும்…

தன்னுடைய கேவலங்களுக்கு வெட்கப்படாமல், வியாக்கியானம் கொடுக்கிற சமூகத்திற்கு தீர்வு வரும் என்று நம்புகிறவர்கள் யாராக இருக்கும்?

புலிகள் சாதியை ஒழிச்சார்கள் என்று கதை விடுகிற அதே ஆட்கள் தான்.

வெளங்கும்டா!

***

இளையராஜா மனோபாலாவின் மரணத்தின் போது சொன்ன கருத்துக்கள் of bad taste.

அவர் தன்னுடைய வாய்க்குள் செருப்பைத் திணிப்பதை நிறுத்தப் போவதில்லை. அதனால் என்ன?

பாட்டைக் கேட்டுக் கொண்டே போய்க் கொண்டிருக்க வேண்டியது தான்.

பிரபலங்களுடைய திருவாய் மொழிவுகளோடு அல்லல்படாமல், அவர்களுடைய படைப்புகளை ரசிப்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டியது தான்…

இலக்கியவாதிகள் மாதிரி!

சாருவுக்கு விருந் தோம்பியோர் மாதிரி, பட்டுத் தெளிய வேண்டியது தான்.

***

இளைய ராஜா என்றதும்…

ஓ… வைரமுத்து தங்கைக்கு தங்கப் பேனா கொடுத்திருக்கிறார்.

பேத்தி வயதுப் பெண்ணைத் தங்கை என்பதன் மூலம் கவிப்

அபத்தம் நான்காவது இதழில்
எழுதியிருந்தேன்.
சாருவின் இலங்கை விஜயம் பற்றி…

'என்னவோ, வானத்தில் போகும் சனியனை ஏணி வைத்து இறக்கும் முயற்சியில் ஈடுபடும் ஈழத்து இலக்கியச் சான்றோர், சாருவின் பிரான்ஸ் பயணம் பற்றி கற்சுறா அபத்தத்திலும், தனது 'மற்றது' இணையப் பக்கத்திலும் எழுதியதைப் படிப்பது நல்லது.
யோக்கியன் வாரான், சொம்பை தூக்கி உள்ளே வை!
கமெரா, பச்சை மிளகாய்…!'

பேரரசு என்ன சொல்ல வருகிறார் என்பதை, மூளையைக் கசக்கிப் பார்த்தும் பிடிபடவில்லை.

வைரமுத்துவுக்கு முண்டு கொடுக்க இன்றைக்கும் உடன் பிறப்புகள் நிறைய உண்டு…

சாருவுக்கு இருக்கும் அல்லக்கைகள் மாதிரி!

***

மீரூ குற்றச்சாட்டு வைரமுத்து மாதிரியே, மீ ரூ குற்றச்சாட்டுகள் ஏதாவது வரக் கூடும் என்றோ என்னவோ…

தன்னுடைய கற்பொழுக்கம் பற்றி கவிஞர் ஒருவர் சிலாகித்துக் கொண்டார் அன்றோ!?

இலக்கிய வாதிகளுக்கு உரித்தேயான, தங்களைத் தாங்களே சிலாகித்துக் கொள்கிற பாரம்பரியத்தில்!

அதனால் என்ன?

எழுத்தில் சர்வதேசப் புகழ் பெறுவது போல, கற்பொழுக்கத்தில் சர்வதேசப் புகழ் பெற முடியாதா?

பிரச்சனை என்னவெனில், தன் துணைவியாரின் படத்தைப் போட்டு, தன்னைத் தான் முதுகில் தட்டிப் புல்லரித்துக் கொண்ட ஈரம் காய முன்னாலேயே…

கவிஞர் இன்னொரு க(வி)தையை அவிழ்த்து விட்டுள்ளார்.

பெரும் பீடிகையோடு, 'ஏலுமெண்டா எந்த நாடு? என்று பிடிச்சுப் பார்' என்று பீடிகையோடும், பூடகமாகவும் 'பல வண்ணத் தேவதைகள் வாழும் வட துருவ நாடு ஒன்றுக்குப் போயிருந்தேன்' என்றிருக்கிறார்.

அரச இலச்சனையான மேப்பிள் இலை பற்றி வேறு பேசுகிறார்.

நானோ மூளையைக் கசக்கிக் கொண்டிருந்தேன்.

எந்த நாடாக இருக்கும்?

கவிஞர் பலே கில்லாடியா இருப்பாரோ?

படிமங்களால் க(வி)தை சொல்கிறவராச்சே.

நம்மைப் போன்ற கவிதா ஞானசூன்யங்களுக்கு புரியவே மாட்டேங்குதே!?

கீழடியில் அகழ்ந்தெடுத்த சுடுமண்சிற்பம் உயிர் பெற்று வருகிறதா என வியப்பூட்டும் தேவதை ஒருவர் தன்னைச் சந்திக்க வந்தததாக…

கவிதை பற்றிய பரிச்சயம் எதுவும் இல்லாத இந்த மர மண்டை எப்படி இந்த கவிதையின் பொருளைப் புரிந்து கொள்ளப் போகிறதோ, அந்த நாட்டைஎப்படிக் கண்டுபிடிக்கப் போகிறேனோ என்று மூளையைக் கசக்க முன்னால்…

இல்லாத மூளையை எப்படிடா கசக்க முடியும் என்று அனுதாபப்பட்டோ என்னவோ, கவிஞரே இடையில் ரொறன்ரோ நகர் என்று விட்டார்.

அப்பாடா?

அதெல்லாம் எனக்குப் பிரச்சனை இல்லை.

கவிஞரிடம் இருந்து எனக்கு இரண்டு உதவிகள் தேவை.

ஒன்று, உயிர் பெற்று நடந்து வந்த அந்த சுடுமண் சிற்பத்தை எனக்கு அறிமுகம் செய்துவைக்க வேண்டும்.

வேறு ஒன்றுக்குமில்லை.

நான் கவிஞர் மாதிரிக் கற்புக்கரசன் இல்லை என்பது பற்றி கவிஞர் கலங்கத் தேவையில்லை.

லென்ஸ் ஒன்றை வாங்கி வைத்துக் கொண்டு, படம் பிடிக்க பேரழகி இல்லாமல் எப்படி அல்லல் படுகிறேன் என்பது பற்றி இம்முறை எழுதியிருக்கிறேன். அதற்கு மொடலிங் போஸ் கொடுப்பதற்காக.

இரண்டு, கற்புள்ளவர்கள் சொன்னால் பெய்யெனப் பெய்யும்

மழையாம்.

மழை பெய்யாமல் தோட்டம் காய்ந்து கிடக்கிறது.

பெரும் உதவியாக இருக்கும். முடிந்தால், இயல் விருதை வாங்கித் தரலாம்.

***

அபத்தம் நான்காவது இதழில் எழுதியிருந்தேன்.

சாருவின் இலங்கை விஜயம் பற்றி...

'என்னவோ, வானத்தில் போகும் சனியனை ஏணி வைத்து இறக்கும் முயற்சியில் ஈடுபடும் ஈழத்து இலக்கியச் சான்றோர், சாருவின் பிரான்ஸ் பயணம் பற்றி கற்சுறா அபத்தத்திலும், தனது 'மற்றது' இணையப் பக்கத்திலும் எழுதியதைப் படிப்பது நல்லது.

யோக்கியன் வாறான், சொம்பை தூக்கி உள்ளே வை!

கமெரா, பச்சை மிளகாய்...!'

விருந்தோம்பியோர் புலிப் பாணியில் சாப்பாட்டில் நஞ்சு வைத்துக் கொலை செய்யக் கூடும் என்பது போல, கொலை செய்யச் சதி என்று கூட நிலைமை மோசமாகி இருந்தது.

ஏதோ நல்ல காலம், தான் இலங்கை செல்வதை விரும்பாத புலன் பெயர் வாசிகள் தான் தன்னைக் கொலை செய்யச் சதி செய்கிறார்கள் என்று அவிழ்த்து விட்டிருந்தால்...?

தலைமறைவாக வேண்டி வந்திருக்குமே!?

***

தேசிக்காய் ஊறுகாய் ஆன பின்னால், புலன் பெயர் முட்டாள்களின் நம்பிக்கை நட்சத்திரங்களாக இருந்தது கஜேந்திரனும், விக்னேஸ்வரனும்.

குமார் கொழும்பில் பிரக்டீஸில் பிசி போல.

டலாடக்கடி டளபடிகள் கள முனையில் நிற்கிறார்கள்.

இதே உணர்வாளர்கள் நம்பிய இன்னொரு நம்பிக்கை நட்சத்திரம் தான் விக்னேஸ்வரன்.

அவர்தான் 'இப்ப சாதி பாத்துக் கொண்டிருக்கிறார்.'.

அதுக்கு அவர் சொன்ன விளக்கம் தான் பெரும் பகிடி.

தன்னை குறைந்த சாதி ஆட்களுக்கு நெருக்கமாகவும் உதவி செய்வதாகவும் குற்றம் சாட்டுவதால் அதை அறிந்து கொள்வதற்காகத் தான் சாதியைக் கேட்டதாக கதை விட்டிருக்கிறார்.

விக்னேஸ்வரனுக்கு, யாழ்ப் பாணிகள் பாணியில் ஒன்றைச் சொல்லலாம்.

பேயன் எண்டு நினைச்சுக் கதை சொல்லலாம்.

பேப்....!

யாழ்ப்பாணி பாணியில் தான்.

கூட்டணி மேடைகளில் பிரக்கிராசிமார் புடை சூழ, அங்கே நிற்கும் பொலிஸ்காரர்களைப் பார்த்து, பரமசிவன் கழுத்துப் பாம்பு மாதிரி, 'இங்கே நிற்கின்ற ஏவல் நாய்கள்' என்று கொப்பளிக்கின்ற உணர்ச்சிப் பேச்சாளர்கள், கவிஞர்கள் மாதிரி,

ஒரு டளபடி படப்பிடிப்பாளர் சகிதம், பொலிசாருக்கு சவால் விடுகிறார்.

இன்னொரு டளபடி, யாழ்ப்பாணி படுத்திருந்தே பகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்துவது போல, பதாகைகளோடு படுத்திருக்கிறார்.

இவர்களைப் பாராளுமன்றம் அனுப்பினால், அடுத்து ஈழம் தான் என்ற கனவோடு 'அண்ணை, பாராளுமன்றத்தில் வெடிச்சுப் பறிப்பார், காசைக் குடுத்தால் சரி!' என்று நம்பிய புலன் பெயர் டமிள் உணர்வாளர்களைப் பார்க்க சிரிப்பாக இருக்கிறது.

***

இதே உணர்வாளர்கள் நம்பிய இன்னொரு நம்பிக்கை நட்சத்திரம் தான் விக்னேஸ்வரன்.

அவர்தான் 'இப்ப சாதி பாத்துக் கொண்டிருக்கிறார்.'.

அதுக்கு அவர் சொன்ன விளக்கம் தான் பெரும் பகிடி.

தன்னை குறைந்த சாதி ஆட்களுக்கு நெருக்கமாகவும் உதவி செய்வதாகவும் குற்றம் சாட்டுவதால் அதை அறிந்து கொள்வதற்காகத் தான் சாதியைக் கேட்டதாக கதை விட்டிருக்கிறார்.

விக்னேஸ்வரனுக்கு, யாழ்ப் பாணிகள் பாணியில் ஒன்றைச் சொல்லலாம்.

பேயன் எண்டு நினைச்சுக் கதை சொல்லலாம்.

பேப்....!

***

சரி, இம்முறை அதிகமாக முட்ட முடியவில்லை. இலக்கிய சேவை செய்யும் வரைக்கும் புடலங்காய்கள் காத்திருப்பதில்லை.

கொழுத்தும் வெயில். கருகி விட்டன.

தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அதனால் அபத்தமும் தாமதமாகி விட்டது.

எதற்கும் கற்புக்கவிஞரை 'பெய்யெனப் பெய்யும் மழை' என்று கேட்கலாம் என்றால்...

'பெண்ணெனப் பேயும் மடை'(யன்) என்று தன்னைச் சொன்னதாக விளங்கிக் கொள்வாரோ!?

# கடதாசியும் கல்விப் பட்டமும்



## தங்கம்

ஒருவர் கல்வித்துறையைத் தெரிவு செய்வதற்கு பல காரணங்கள் இருப்பதுண்டு, ஆனால் நான் தொழில் புரியும் துறையை தெரிவு செய்ததற்கான முழுமுதற் காரணம் நான் படிக்க ஆரம்பித்த போது இருந்த துறைகளில் இந்த துறைக்குரிய பாடங்களுக்குத்தான் மிக குறைவான எண்ணிக்கை கொண்ட புத்தகங்கள் வாசிக்க வேண்டியிருந்தன,

பொருளாதார பலமற்று இருந்த காலமது. அத்தோடு பெரும்பாலான புத்தகங்கள் ஆங்கிலத்தில் இருந்தன. அந்த காலத்தில் ஆங்கிலத்தில் நான் ஒன்றும் விண்ணி இல்லை, ஆனால் இருக்கவே இருக்கிறது அகராதி, வெல்லலாம் என்ற ஒரு துணிவுதான்.

சூரியனே தலைகாட்டப் பயப்படும் குக்கிராமத்தில் மூன்று அகராதிகளை வைத்து மொழி படித்த அறிவுக்களஞ்சியம் நான். அதிபர் என்னை அங்கே இருக்கிற எல்லா அகராதிகளையும் வீட்டுக்கு கொண்டு போய் கொண்டு வரவும் அனுமதி வழங்கியிருந்தார்.

என்ன கோதாரி எண்டால், நான் பொம்பிளை பிள்ளையெண்டு என்னைக் கொண்டு போய் தாதிகள் துறையில் சேர்த்துவிட்டார்கள். விசா இல்லாட்டி அகதி முகாமுக்கு போக வேணும், அம்மா அப்பா எந்த அகதி முகமாமில எண்டு தெரியாது, இலங்கையிலிருந்து கடிதங்கள் எப்போதாவது வரும். அம்மாக்கள் இருக்கிற அகதிமுகாம் எங்கையெண்டு தெரியும் வரை நான் என்ன சவத்தையாவது படிப்பம் எண்டு முழு மூச்சா படிக்க வெளிக்கிட்டன்.

நாசமா போன புத்தகங்கள் எல்லாம் புது நோர்வேஜியன் மொழி, பழைய நோர்வேஜியின் மொழி, அரச உபயோகத்திற்கான மொழி என்று மூன்று கோதாரிகளையும் சேர்த்து வைத்திருந்தார்கள். கிராமமே சாமான் வாங்கிறதுக்கு ஒரே பலசரக்குகடைதான், இருந்தாலும் குறை சொல்லக்கூடாது அங்க கோவா, உருளைக்கிழங்கு வெங்காயம், இறைச்சி, மீன் எண்டு மனிசர் வாங்கி சமைத்துண்ணும் சாப்பாடுகள் கடையில் இருந்தன.

சூரியன் வர மறுத்த அந்த தேசத்திற்கு உடுப்புகள் கனக்கத் தேவையில்லை. குளிரைத்தாங்க கூடிய ஜக்கற் இருந்தா காணும், அதோடையே பனி, கடும்பனி, இலையுதிர் மற்றும் இலைதுளிர் காலங்களையும் கழிக்கலாம். ஜக்கற் போடாமல் வருடத்தில் ஒருநாள் கூட வெளியே சென்றதாக எனக்கு ஞாபகம் இல்லை அந்த கிராமத்தில ஒரு மரத்தைக் கூட நீங்கள் காணமுடியாது அவ்வளவு உன்னதமான காலநிலை. பிறகென்ன, சூரியன் ஆறு மாதத்திற்கு வரவே வராது கருமே கண்ணாக படிச்சுக் கிழிச்சதுதான்.

ஒஸ்லோ பல்கலைக்கழகம் என்னையும் சேர்த்துக் கொண்டது. அது ஒரு பரந்த தேசம், வகுப்பு எங்க நடக்கிறது என்று கண்டுபிடிக்க முதலே ஒரு தவணை முடிஞ்சு போச்சு, பிறகு யாரோ ஒரு புண்ணியவான் என்னுடைய பாடங்கள் நடக்கும் கல்விக் கூடத்தைக் காட்டி விட்டார், நாங்க படிச்ச காலத்தில அதுதான் ஒரேயொரு பெரிய கட்டிடம் என்று நினைக்கிறன். படிப்பும் முடிஞ்சுது.

ஆனா இந்த ரிவியில காட்டிற மாதிரி பட்டமளிப்பு விழா எல்லாம் நடக்கிறேல்ல. எல்லாச் சோதனையும் பாஸ்பண்ணியிருந்தா கோடைகாலம் முடியும் தறுவாயில் ஒரு சான்றிதழ் கிடைக்கும். இந்த ஆலவட்டம் எல்லாம் வந்து சேர முதலே எங்களிட்ட வேலை வாங்கிறதுக்கெண்டு பல நிறுவனங்கள் இருக்கும்.

எங்க வேலை செய்ய வேணும் எண்டு கனவெல்லாம் எனக்கிருக்கேல்லை, ஆனால் என்ன அநியாயம் எண்டால், வேலையும், வதிவிட விசாவும்

> பட்டம் நாம் படித்த துறையுடன் சம்பந்தப்பட்டது. குறிப்பிட்ட கட்டடத்திற்குள் மட்டுமே செல்லுபடியாகும் என்பது பலருக்கு புரிவதில்லை,
>
> குறிப்பாக இலங்கையாட்களுக்கு பட்டம் அதாவது டாக்டர் பட்டம், கலாநிதி பட்டம் போன்றவை 'மகர ஜோதி' போல, இந்தப்பட்டங்களை இவர்கள் கலந்து கொள்ளும் எல்லா நிகழ்வுகளிலும் அவர்கள் பெயருடன் சேர்த்து உச்சரித்துப் புளாங்கிதம் அடைவதில் பலருக்கு பேரின்பம்.
>
> பல்கலைக்கழகத்தில் வாத்தியார் வேலை முடிந்தால் பேராசியர் பட்டம் கழன்று போய்விடும். அதற்குப் பிறகு அவர் முன்னாள் பேராசிரியர் அல்லது ஓய்வுநிலை பேராசியர், கலாநிதி பட்டமும் அவர் தொழிலில் ஈடுபட்டிருந்த காலத்தில் மேற்கொண்ட ஆய்வுக்காக வழங்கப்பட்டது, அவர் ஓய்வுபெறும் காலத்தில் அவரது மாணவர்கள் அந்த துறையில் அதை விட மேம்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டு கலாநிதி பட்டமும் பெற்றிருப்பார்கள்.

கிடைத்துவிட்டன. பிறகென்ன செக்கு மாடு தான்.

கிடைத்துவிட்டன. பிறகென்ன செக்கு மாடு தான்.

என்னுடைய வேலை சம்பந்தமாக பலருக்கு பல கருத்துக்கள். எருமை மாட்டில மழை பெய்யிறமாதிரி எனக்கு.

'என்ன உங்களுக்கு எண்டு ஒரு கந்தோரும் இல்லை, கதவில் பேரும் இல்லை, உங்கள எனக்குத் தெரியும் எண்டு ஆக்களுக்கு எப்பிடிச் சொல்லுறது'

இது அவர்ற பிரச்சனை.

வேலை செய்யும் இடத்தின் பெயரைச் சொன்னால், சுதுமலை என்றால் திருகோணமலையோ என்று கேட்பது போல அது எங்கே இருக்கு என்று விசாரிப்பவர்களும் உண்டு.

'நீங்கள் இங்கையே வேலை செய்யிறீங்கள், நான் ஒரு நாளும் காணேல்ல'.

தற்செயலாக கன்ரீனுக்கு சென்றபோது.

'உங்கள எங்கையோ கண்டிருக்கிறன், அந்த ..'

'ஓம் ஓம்'

நோர்வேயை உலுக்கிய சம்பவம் ஒன்றிற்கு பின்பு

'என்ன உங்கடை ஆட்கள், ரெண்டுபேர் இல்லையெண்டுகினம், ஒராள் இருக்கெண்டுறார். உத என்னெண்டு நம்பிறது?'

'உங்களுக்கு நாய் பேய் சம்பளம் தருவாங்களே?'

(வீட்டுப் பிராணிகள் நலன்சங்கத்தில் இருந்து முறைப்பாடு வராமல் கவனமாக வசனம் எழுதியிருக்கிறன் எண்டு நினைக்கிறன்)

கோப்பிக்கு காசில்லாத காலம் ஒண்டு எங்களுக்கும் இருந்தது எண்டு சொன்னா நம்பவா போகிறார்கள். சிரிப்புடன் கடக்க வேண்டியது இது.

'உங்கட பேரை கூகுளில தேடினனான், உங்களப் பற்றின விபரம் ஒண்டும் வரேல்ல '.

இது இன்னொருவர்.

இப்பிடியான ஆக்கள் இருப்பினம் எண்டு எனக்கும் தெரியும் தானே. நானும் உங்களைப் போல இலங்கையில தானே பிறந்து வளர்ந்தனான். நீங்கள் உப்பிடியான வேலையள் செய்வியள் எண்டு தெரிஞ்சுதானே நாங்கள் ரெலிபோன் நம்பர் தேடினால் வராமலும் சொந்த பேரை முகநூலிலும் வைக்காமல் இருக்கிறம் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டேன்.

பட்டம் நாம் படித்த துறையுடன் சம்பந்தப்பட்டது. குறிப்பிட்ட கட்டடத்திற்குள் மட்டுமே செல்லுபடியாகும் என்பது பலருக்கு புரிவதில்லை, குறிப்பாக இலங்கையாட்களுக்கு பட்டம் அதாவது டாக்டர் பட்டம், கலாநிதி பட்டம் போன்றவை 'மகர ஜோதி' போல, இந்தப்பட்டங்களை இவர்கள் கலந்து கொள்ளும் எல்லா நிகழ்வுகளிலும் அவர்கள் பெயருடன் சேர்த்து உச்சரித்துப் புளாங்கிதம் அடைவதில் பலருக்கு பேரின்பம்.

பல்கலைக்கழகத்தில் வாத்தியார் வேலை முடிந்தால் பேராசியர் பட்டம் கழன்று போய்விடும். அதற்குப் பிறகு அவர் முன்னாள் பேராசிரியர் அல்லது ஓய்வுநிலை பேராசியர், கலாநிதி பட்டமும் அவர் தொழிலில் ஈடுபட்டிருந்த காலத்தில் மேற்கொண்ட ஆய்வுக்காக வழங்கப்பட்டது, அவர் ஓய்வுபெறும் காலத்தில் அவரது மாணவர்கள் அந்த துறையில் அதை விட மேம்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டு கலாநிதி பட்டமும் பெற்றிருப்பார்கள்.

புலம்பெயர் தமிழர் வாழ்நிலையை ஆவணமாக்குவோர், சமூக மீதான அக்கறை, முன்னேற்றம் என விழா எடுப்போரில் பலர் இந்தச் சோடனைகளில் மிகவும் அக்கறையாக இருக்கிறார்கள். இரும்படிக்கிற இடத்தில ஈ யிற்கு என்ன வேலை என்ற சொல்வடை இலங்கையில் இருக்கிறது.

துறைசார் நிபுணத்துவ அறிவு தேவைப்படும் இடத்தில் அவர்களின் பேரறிவு மக்களுக்குத் தேவையாக இருக்கலாம், எல்லோரையும் சக மனிதர்களாக மதிக்கும் நற்பழக்கம் சமூக அக்கறை கொண்டோருக்கும் மிகவும் அவசியம்.

நீங்கள் இப்ப ஆரைக் கடிக்கிறீங்க எண்டு சொல்லிப்போட்டுச் செய்யுங்கோ இல்லாட்டி எனக்கு இரவுக்கு நித்திரை வராது என்கிறது ஒரு உயிரி. அ

# முள்ளிவாய்க்கால் கஞ்சி



**நிர்மல்**
வன்னியிலிருந்து!

## காய்ச்சியது யார்? குடித்தது யார்? ஏப்பம் விடுவது யார்?

இறுதி யுத்த வலயத்தை எடுத்துக் காட்டும் ஓர் அடையாமாக முள்ளிவாய்க்கால் கஞ்சி காணப்படுகிறது. ஓர் அடையாளமாக அது கடைப்பிடிக்கப்படுவதும் கூட நல்ல விடயமாகும். முள்ளிவாய்க்காலில் மக்களோடு மக்களாக நின்று மக்கள் பணியாற்றிய இரு அமைப்புக்களைப் பற்றி இங்கு சிக்கித் தவித்த மக்களுக்குத் தான் நன்கு தெரியும்.

ஒன்று தமிழர் புனர்வாழ்வுக்கழகம். மற்றையது தமிழீழ வைத்தியத்துறை.

இவ்விரு அமைப்புக்களிலும் கடமையாற்றியவர்கள், தமது குடும்பம் தமது உயிர் என்பவற்றையெல்லாம் மறந்து பணியாற்றியவர்கள். இதில் முள்ளிவாய்க்காலில் கஞ்சி காய்ச்சிக்கொடுத்த தமிழர் புனர்வாழ்வுப் பணியாளர்கள் பலர் இறந்து போனார்கள். பலர் காயமுற்றார்கள். பலர் தமது குடும்பங்களை உரியநேரத்தில் காப்பாற்ற முடியாது போனார்கள். இந்தப் பணியாளர்களில் இன்றும் வறுமைப்பட்டவர்களாகவும் ஊன முற்றவர்களாகவும் பலர் நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறர்கள். ஒரு சிலர் வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தற்போது கஞ்சி காய்ச்சி அரசியல் செய்பவர்களுக்கு இந்தப் பணியாளர்கள் பற்றி எதுவும் தெரியாது.

இன்று கஞ்சி காய்ச்சும் யாரும் முள்ளிவாய்க்கால் வரை சென்றவர்களும் அல்ல. உண்மையில் தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பிர்கள்: குறிப்பாக தாயகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் கௌரவிக்கப்படவேண்டியவர்கள். இவர்களின் வறுமையும் ஊனமுற்ற வாழ்க்கையும் கண்டு கொள்ளப்பட்டு உரிய முறையில் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படவேண்டும்.

### இறுதி யுத்தத்தில் காயப்பட்ட புலிப் பிரமுகர்கள்

*2006 ஆகஸ்ட் 11ம் திகதி ஏ9 வீதியை இராணுவத்தினர் முகமாலையில் மறித்ததுடன், யாழப்பாணமும் வன்னியும் துண்டாடப்பட்டது. பொது மக்கள் யாரும் வன்னிப்பெருநிலத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரமுடியவில்லை. யாழப்பாணத்திலிருந்து தரை மார்க்கமாக வன்னிக்குப் போகவும் முடியவில்லை.*

> புலிகளின் ஆஸ்தான கவிஞரான புதுவை இரத்தினதுரை, வீராவேசமாக பல கவிதைகளையும் பாடல்களையும் எழுதியவர். இதனால் கவரப்பட்டு இவரது மகள் இயக்கத்திற்குப் போனதையறிந்து வீட்டிற்குச் சென்ற அவர் மனைவியின் கன்னத்தில் அறைந்து விட்டு, 'என்ன! கழிசறைப் பிள்ளை வளர்ப்பு வளர்த்திருக்கிறாய்?' என்று கேட்டிருக்கிறார். இது புலிகளின் தளபதிகள் மட்டத்தில் அப்போதே கதைக்கப்பட்டதொன்று.

விடுதலைப்புலிகள் வன்னியிலிருந்து வவுனியாவுக்குச் செல்வதற்கான பயண அனுமதியை படிப்படியாக இறுக்கினார்கள். செல்வந்தர்கள் தமது டிரக்டர், காணிகள், வயல்கள், வீடுகள், கடைகள், தென்னம் தோப்புக்கள் எனும் பெரும்சொத்துக்களை புலிகளுக்கு எழுதிக் கொடுத்து விட்டு தமது குடும்பத்திற்கான பயண அனுமதியை புலிகளிடம் பெற்று வவுனியா, கொழும்பு, இந்தியா, வெளிநாடு எனத் தப்பிச்சென்றார்கள்.

(இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால், 2009 இல்யுத்தம் முடிவடைந்த பின்னர் அதே செல்வந்தர்கள் மீண்டும் இலங்கை வந்து அச்சொத்துக்களைத் தமதாக்கிக்க கொண்டார்கள் என்பதுதான்.)

தமது பிள்ளைகைள் வீட்டுக்கொருவர் எனப் போராடப் பிடிக்கப்பட்டதால் தமது பிள்ளைகைளை மீட்பதற்காகப் பலர் முள்ளிவாய்க்கால் வரை செல்ல வேண்டியிருந்தது.

புலிகளுக்கு மிக நெருக்கமாக இருந்து போராட்டத்தின் முக்கியத்துவம் பற்றிய பின்னூட்டல்களைக் கொடுத்த பலர் தமது பிள்ளைகைளைப் பிடிக்கப் போகிறார்கள் எனத் தெரிந்ததும் தமது பிள்ளைகளை ஒளித்து வைப்பதிலும் திருமணம் செய்து விட்டதாக பெண்பிள்ளைகளுக்கு குங்குமப் பொட்டு வைத்து தாலிக்கொடி போட்டு யாருடையதோ குழந்தையை கையில் வைத்துக் காட்டித் தப்பிக்கொண்டார்கள்.

புலிகளின் ஆஸ்தான கவிஞரான புதுவை இரத்தினதுரை, வீராவேசமாக பல கவிதைகளையும் பாடல்களையும் எழுதியவர். இதனால் கவரப்பட்டு இவரது மகள் இயக்கத்திற்குப் போனதையறிந்து வீட்டிற்குச் சென்ற அவர் மனைவியின் கன்னத்தில் அறைந்து விட்டு, 'என்ன! கழிசறைப் பிள்ளை வளர்ப்பு வளர்த்திருக்கிறாய்?' என்று கேட்டிருக்கிறார். இது புலிகளின் தளபதிகள் மட்டத்தில் அப்போதே கதைக்கப்பட்டதொன்று.

ஏற்கனவே புதுவை போன்ற பலருக்குள் இருந்த நிலைப்பாடே இறுதிக்கட்டத்தில் வன்னியில் சிக்குண்ட புலி உறுப்பினர்களுக்கும் இருந்தது. பல இளைஞர் யுவதிகள் தமது குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக தங்களில் ஒருவர் முன்வந்து இயக்கத்தில் சேர்ந்து போராளிக் குடும்பம் என்ற அட்டையைப் பெற்று (பின்னர் இவர்கள் இறந்த பின் மாவீரர் குடும்ப அட்டை வழங்கப்பட்டது) தமது குடும்பத்தைக் காப்பாற்றியதன் பின்பே அவர்களின் மற்றய சகோதரர்களால் திருமணம், படிப்பு, வெளிநாட்டிற்கு போவது போன்றவற்றை மேற்கொள்ள முடிந்தது.

புலிகளுக்குப் போராட்ட ஊக்கியாக இருந்த பலர் புலிகளுக்கு தண்ணி காட்டி விட்டு இரவிரவாக கடலாலும் காட்டாலும் ஒளித்து ஓடினார்கள். அவ்வாறு ஓடியவர்கள் தற்போது முள்ளிவாய்க்கால் கஞ்சி கவிதையை எழுதிய நிலாந்தன் மற்றும் புலிகளின் நிதர்சனம் சர்வதேச ஒலிபரப்புக்குப் பொறுப்பானவருமான வெளிச்சம் கருணாகரன் போன்றவர்கள். தாமும் தமது குடும்பமும் இறுகிய நிலையில் பிரபாகரனின் போராட்டம் பிழையெனக் கூறி கடல் மார்க்கமாக யாழப்பாணத்திற்கு ஓடி வந்தார்கள்.

இவர்கள் அம்பாறை, மட்டக்களப்பு, எனத் தொலை தூரங்களிலிருந்து வந்து வடகளமுனைகளில் போராடிய இளைஞர்களும் யுவதிகளும் இறந்த போதெல்லாம் போராட்டம் முக்கியம் என்றவர்கள். தமது பிள்ளைகளில் புலிகள் கை வைத்தவுடன் புலிகளை எதிர்த்தார்கள்.

இவ்வாறு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து தப்பியோடி வந்த புலிகளின் பிரமுகர்களுக்கு நன்கு தெரியும் ஆயுதமுனையில் தம்மை இங்கிருந்து வெளியேறவிடாமல் தடுத்து வைத்தவர்கள் புலிகள் என்பது.

இது பற்றிய கட்டுரையொன்றினை கருணாகரன் அவர்களே பக்கசார்பற்ற வகையில் உண்மையான சம்பவங்களை வைத்து எழுதியும் இருந்தார்.

இறுதி யுத்தத்தின் ஓர் இரத்த சாட்சியாக அந்தக் கட்டுரை அமைந்தது. தற்போது வரை சமூக வலைத்தலங்களில் அது உலாவருகிறது.

## முள்ளிவாய்க்கால் கஞ்சியைக் குடிக்க வைத்தது யார்?

புலிகள் தமது பாதுகாப்பிற்காக மக்களைப் பணயம் வைத்ததாலேயே பெருமளவு மக்கள் இறக்க வேண்டி ஏற்பட்டது. இறுதியில் மக்கள் கடலுக்கும் வாவிக்கும் இடையில் மறித்து வைக்கப்பட்டிருந்தபோது 50 மீற்றர் இடைவெளிக்கொரு காவலரணகளை அமைத்து புலிகள் ஆயுதங்களுடன் நின்று மக்களை அங்கிருந்து வெளியேற விடாது தடுத்து நின்றனர். அதனை சற்றலைட் படங்களும் இலங்கை இராணுவத்தின் ஊடகப் பிரிவும் பிடித்த படங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

ஓரிரவில் மட்டும் இராணுவம் புதுமாத்தளன் அம்பலவன் பொக்கணைப் பகுதிகளில் தாக்குதலை மேற்கொண்டு எண்பத்தொன்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை தமது பகுதிக்குள் எடுத்தார்கள். இதில் அகப்பட்ட மக்கள் அன்று இராணுவத்தை மீட்பராகவே நினைக்கிறார்கள்.

மக்களை புலிகள் தடுக்காது விட்டிருந்தால் இவர்கள் சொல்லும் 'ஒரு லட்சத்து நாற்பதினாயிரம்' மக்கள் இறுதி யுத்தத்தில் இறந்திருக்க மாட்டார்கள். தற்போது புலிகளின் போராட்டத்தை நியாயப்படுத்தித் தம்மை வீரராகக் காட்டிக்கொள்ளுகின்ற பலர் இறுதி யுத்தத்தில் அகப்பட்டாதவர்கள் அல்லது புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து புலிக்குத்

தெரியாமல் தப்பி ஓடி வந்தவர்கள்.

வடமாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜா இருட்டுமடுப் பகுதியூடாக இராணுவத்திடம் ஓடிப் போய் வவுனியாவில் தற்காலிக முகாம் ஒன்றில் சாப்பாட்டிற்காக வரிசையில் காத்திருக்கிறார். ஒரு கல்வி அதிகாரிக்கே இந்த நிலைமை என்றால் சாதாரண மக்களை ராணுவம் எப்படி நடத்தும்? எனவே இராணுவத்திடம் மக்கள் யாரும் சரணடைய வேண்டாம் எனப்புலிகளின் குரல் வானொலியில் 'இறைவன்' என்றவர் அடிக்கடி கூறிக்கொண்டிருந்தார்.

இச்சந்தர்ப்பத்தில் புலிகளின் பிரச்சாரப் பிரிவினர், வெள்ளை வானொன்றில் ஒலிபெருக்கிகளைக் கட்டி மக்கள் , இராணுவத்திடம் சரணடையும் பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள், எனவே இராணுவத்திடம் சரணடைய வேண்டாம் என்றறிவித்த போது ஆத்திரமடைந்த பொது மக்கள் இந்த வாகனத்தை வழிமறித்து ஒலிபெருக்கி வயர்களைப் பிடுங்கி அந்த வாகனத்தையும் சரித்து போட்டார்கள்.

அப்போது ஒருவர் அப்படியென்றால் இயக்க குடும்பங்களை 'றெட்குறோஸ்' கப்பல்களில் ஏற்றுவது அங்கு அந்தப் பெண்களை இராணுவத்திற்கு கொடுக்கவா? என்று கேட்டார்.

மக்களைப் போக வேண்டாம் என்று தடுத்தவர்களது குடும்பங்கள் தரைமார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் வெளியேறியபோது அவர்கள் சந்தித்த இராணுவத்தினரும் கடற்படையும் தங்களைக் கொல்லவும் இல்லை. தங்களது பெண்களைக் கற்பழிக்கவும் இல்லை என்பதைக் கண்டு வியந்தார்கள். அவர்கள் கொடுத்த போத்தல் தண்ணீரையும் பிஸ்கட்டுகளையும் அமிர்தம் என்றார்கள். இராணுவ அதிகாரிகள் டீசன்டாக நடந்து கொள்கிறார்கள் என்றார்கள்.

## தற்போது களத்தில் நிற்பவர்கள் யார்?

தற்போது இறுதி யுத்தம், முள்ளிவாய்க்கால் கஞ்சி, நினைவுச் சுடரேற்றல் போன்ற நாடகங்களை நடித்துக் காட்டும் சிவாஜிலிங்கம், செல்வராஜா கஜேந்திரன், சிறிதரன் மற்றும் இவர்களது ஆதரவாளர்கள் என்றும் தம்மைப் புலிகள் என்றும் காட்டிக்கொள்பவர்கள் புலிகளுக்குப் பயந்து முள்ளிவாய்க்கால் செல்லாது

இச்சந்தர்ப்பத்தில் புலிகளின் பிரச்சாரப் பிரிவினர், வெள்ளை வானொன்றில் ஒலிபெருக்கிகளைக் கட்டி மக்கள், இராணுவத்திடம் சரணடையும் பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள், எனவே இராணுவத்திடம் சரணடைய வேண்டாம் என்றறிவித்த போது ஆத்திரமடைந்த பொது மக்கள் இந்த வாகனத்தை வழிமறித்து ஒலிபெருக்கி வயர்களைப் பிடுங்கி அந்த வாகனத்தையும் சரித்து போட்டார்கள்.
அப்போது ஒருவர் அப்படியென்றால் இயக்க குடும்பங்களை 'றெட்குறோஸ்' கப்பல்களில் ஏற்றுவது அங்கு அந்தப் பெண்களை இராணுவத்திற்கு கொடுக்கவா? என்று கேட்டார்.

இராணுவத்திடம் ஓடித்தப்பியவர்கள். . இவர்களில் யாரும் முள்ளிவாய்க்காலில் நின்று வட்டுவாகல் பாலத்தால் நடந்தவர்களுமல்ல. இறுதிவரை புலிகளுடன் நின்றவர்களும் அல்ல.

முள்ளிவாய்க்கால் கஞ்சியை சிரட்டையில் குடிப்பதற்கு முள்ளிவாய்க்காலில் சிரட்டை இருக்கவில்லை. ஒரு தேங்காய் வாங்குவதற்கு முற்சக்கர வண்டியொன்றை கைமாற்றாகக் கொடுத்த சம்பவங்களும் நடந்தேறின. இங்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் எவ்வாறாக இந்த நெருக்கடியான சூழ்நிலையில் கஞ்சியைக் கொடுத்தார்கள் என்பது கூடப் பலருக்குத் தெரியாது.

புலிகளின் தலைவர்கள் மட்டுமல்லாது புலிகளில் முக்கியப் பிரமுகரான பாலகுமார் படகில் ஏறித் தப்ப முயன்றபோது புலிகள் சுட்டதில் இவரது மகள் காயப்பட்டார். முள்ளிவாய்க்கால் வரை செல்லாது இடையில் புலிகளுக்குத் தெரியாமல் ஓடிவந்தவர்களது விருப்பம் வேறாக இருந்தது.

உதாரணமாகச் சம்பந்தன், இலங்கை அரசு, இந்திய அரசு, ரெலோ, ஈ.பி.ஆர். எல்.எவ்., ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புக்கள் புலிகள் முற்றாக அழிக்கப்பட வேண்டும் என்று நினைத்ததை விட பல மடங்கு ஆக்குரோசமாக புலிகள் அழிய வேண்டுமென வன்னியிலிருந்து ஓடிவந்த புலிகளின் ஆதரவாளர்கள் நினைத்தார்கள். பழி கிடந்தார்கள்.

புலிகளைப் போராடுமாறு தொடர்ந்தும் தடியோட்டிக்கொண்டு நின்று விட்டு ஓடித் தப்பியவர்கள் இவர்கள்.

இவர்களைப் பொறுத்த வரை இறுதி யுத்தம் ஏதோ ஒருவகையில் திசை திரும்பி பிரபாகரன், பொட்டு அம்மான் போன்றவர்கள் உயிர்தப்பி விட்டால் தாம் எல்லோரும் சுடப்படுவோம் என்ற குறுகிய எண்ணம் மட்டுமே அவர்களிடம் இருந்தது.

இவர்களில் பலர் புலிகளுடனான அவர்களின் கடந்த காலச் செயற்பாடுகளுக்காக கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு அளிக்கப்பட்டிருக்க வேண்டியவர்கள். அவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்பாது ஒரு அரணாகக் காத்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே.

முள்ளிவாய்க்காலுக்கு முன்னர் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குபோக முயன்றவர்கள் பலர் புலிகளால் சுடப்பட்டார்கள், பச்சைப் பனை மட்டையால் கடுமையாகத் தாக்கப்பபட்டார்கள். இவ்வாறு தடுத்துப் பிடிக்கப்பட்ட மக்கள் மத்தியில் உரையாற்றிய புலிகளின் முக்கியஸ்தர் ஒருவர் 'ஏன் இராணுவத்திடம் ஓடுறீங்கள் இன்னும் ஒருரிரு தினங்களில் ஐ. நா. சபையில் புலிகள் கொடியை ஏற்றுவதற்கான ஏற்பாடுகளை தலைவர் செய்திருக்கிறார் கொடியேற்றினால் நாங்கள் தமிழீழத்தில் இருப்போம்' என்றார்.

இப்படியெல்லாம் அதிக சம்பவங்கள் இருக்கிறது என்றாலும், இங்கு கேள்வி என்னவென்றால் யார் முள்ளிவாய்க்கால் கஞ்சியைக் காய்ச்சினார்கள்? அதனை யார் குடித்தார்கள்? என்பதே.. அந்த அவலத்தில், எந்த வித்திலும் சம்பந்தப்படாத இந்த அவலத்தை நேரில் காணாத, புலிகளுக்கு எதிரானவர்களே கஞ்சி காய்ச்சுவதற்கு தமக்குத்தான் உரித்துண்டு என்று காட்டிக்கொள்கின்றனர்.

உண்மையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விடயத்தில் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களே.

உருட்டும் புரட்டும்




# வெந்தும் தணியாத மோடுகள்!

புலிகள் கோலோச்சிக் கொண்டிருந்த காலம்.

'அண்ணை, அடிச்சுப் பறிப்பார்' என்ற கனவில் யாழ்ப்பாணிகள் திளைத்திருந்த காலம்.

புலிகள் கட்டாயமாக ஆட் சேர்க்கிறார்கள் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. அதை ரொறன்ரோவில் வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு கனடாவில் பிரபலமான அரசியல்வாதியான முன்னாள் ஒன்ராறியோ மாநில முதல்வர் பொப் ரேயும் அழைக்கப்பட்டிருந்தார்.

அவர் சமாதான காலத்தில் வன்னிக்குப் போய், புலிகளோடு பெரும் தொடர்பாடலைச் செய்திருந்தவர்.

அவர் சிறப்புப் பேச்சாளராக இருந்த அந்தக் கூட்டத்தில், இன்றைக்கு கனடாவில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் கரி ஆனந்தசங்கரி தலைமையில், புலி ஆதரவாளர்கள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தார்கள்.

ஒரு கனடிய அரசியல்வாதியை கனடாவில் பேசுவதற்கு அனுமதி மறுக்க முயலும் அளவுக்கு புலி வால்களின் அறிவு இருந்தது. அந்தச் சிறார்கள் தாங்களாகவே விரும்பிச் சேர்கிறார்கள் என்ற புலிப் பொய்யை உண்மை ஆதாரங்களோடு இந்த அறிக்கை மறுக்கிறது என்பது இவர்களுக்குப் பிரச்சனை.

இந்த நிகழ்ச்சிக்கு நேரடியாகப் போயிருந்த நான் அதைப் பற்றி தாயகம் இணையத்தளத்தில் எழுதியிருந்தேன்.

இது தான் புலிகளுக்கு கனடாவில் அடிக்கப்படும் கடைசி ஆணி என்று.

அதைப் போலவே, கொஞ்ச நாட்களில் கனடாவில் புலிகள் தடை செய்யப்பட்டார்கள்.

அதன் பின்னால் புலிகளின் அழிவு படிப்படியாகவே ஆரம்பித்தது.

முட்டாள் யாழ்ப்பாணிகளுக்கு தங்களின் யாழ்ப்பாணித் தேச வழமைச் சட்டம் உலகம் எல்லாம் செல்லும் என்ற நினைப்பு.

கனடிய பெரும் அரசியல்வாதியை கனடாவில் பேச அனுமதிக்க மாட்டோம் என்று குழப்பம் விளைவித்தது, யாழ்ப்பாணிகள் மந்தை முட்டாள்கள் மட்டும் அல்ல, அவர்களை உசுப்பேத்திய படித்த முட்டாள்களும் தான்.

பொய்களைச் சொல்லி புலிகளுக்கு முட்டுக் கொடுக்க

**ஜோர்ஜ் இ.**

அங்கே நின்றவர்களில், ஒரு வணக்கத்துக்குரிய குருவானவரும் இந்தச் சபை குழப்பலில் வெறும் பார்வையாளராக மட்டும் இல்லாமல், பங்காளராக இருக்கும் அளவுக்குத் தான் அன்று நிலைமை இருந்தது.

குறைந்த பட்சம் உங்கள் கருத்தைப் பண்பாகச் சொல்லுங்கள் என்றாவது அவர் வழி நடத்தவில்லை. (அப்படி நடத்தியிருந்தால், இந்த மூர்க்கர் கூட்டம் கேட்டிருக்குமா? என்பது பெரும் கேள்வி!)

அண்ணை துவக்கைக் காட்டிற மாதிரி, வெருட்டிக் காரியம் சாதிக்கலாம் என்பதைத் தவிர, வேறு எந்தச் சிந்தனையும் அவர்களுக்கு இருக்கவில்லை.

'அண்ணையின் துவக்கை மீறி கருத்துச் சுதந்திரம் இல்லை' என்ற யாழ்ப்பாணிகளின் சிந்தனை இன்றைக்கு இந்த அறப் படிச்ச யாழ்ப்பாணிகளைக் கூழ்ப்பானைக்குள் தள்ளினாலும், இன்றைக்கும் கருத்துச் சுதந்திரத்திற்கான மதிப்பை புலிவால்கள் உணர்ந்ததில்லை.

இந்த முட்டாள் மந்தைகளை வைத்துப் பிழைப்பு நடத்தும் அயோக்கியர்களும், அவர்களுக்கு மாமா வேலை பார்க்கும் ஊடகக் கோமாளித் தரகர்களும், இந்த மந்தைகள் உண்மை நிலையை அறிந்து கொள்ள வேண்டும் என்பதிலோ, இவ்வாறான

> யாழ்ப்பாணிகளுக்கு ஒரு கதை உண்டு.
> தாங்களே சொல்லி தாங்களே நம்புகிற கதை.
>
> மனநோய்க் கூட்டம் நம்பி விட்டுப் போகட்டுமே என்று
> நீங்கள் அமைதியாக இருக்கவும் முடியாது.
> அதை நீங்கள் நம்ப வேண்டும் என்று அடம் பிடிக்கும்.
> அதை நம்ப மறுத்தால் உங்களைத் துரோகியாக்கும்.
>
> தேசியத் தலைவரைப் பார்த்து சர்வதேசம் திணறுகிறது என்று சொன்ன அதே யாழ்ப்பாணி தான் இன்றைக்கும் 47 நாடுகள் சதி செய்து போராட்டத்தைத் தோற்கடித்தது என்கிறான்.

நடவடிக்கைகள் ஒரு இனத்தின் மீட்சிக்கு ஆபத்தானதாகவே இருக்கும் என்பதை தெரியப்படுத்த வேண்டும் என்பதையோ விரும்புவதில்லை.

அவர்களுக்குப் புத்தி வந்தால் தாங்கள் பிழைப்பு நடத்த முடியாது என்ற, தங்களின் சுயலாபத்திற்காகத் தான் இந்த அயோக்கியர்கள் தங்களைத் தூண்டி விடுகிறார்கள் என்பதை இந்த மந்தைகள் உணராததை, அங்கே குழப்பம் பண்ணியவரை பாராளுமன்றம் அனுப்பினால் ஈழம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் 'தமிழன் தமிழனுக்கு வோட் போட்டதை' வைத்தே அறிந்து கொள்ள முடியும்.

புலிகள் இருந்த காலத்திலேயே, தாயகம் வெளிவந்த போது, அதற்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளும், இந்த புலிவால் முட்டாள்களின் கோமாளித் தனங்களும் நாங்கள் கண்டு வந்தவை தான்.

தலைமை தொடங்கி வால்கள் வரையிலான இந்த முட்டாள் தனத்தினால் முள்ளிவாய்க்காலில் மண் கவ்விய பின்னாலும், இவர்கள் தங்கள் கோமாளி நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டதும் இல்லை.

இன்றைக்கும் கனடாவில் மாவீரர் தின, முள்ளிவாய்க்கால் தின நினைவேந்தல் மாதங்களில் எந்தக் கலைநிகழ்ச்சி நடந்தாலும், அதை இந்த மந்தைக் கூட்டத்திற்கு உசுப்பேத்தி குழப்புவதில் இந்த அயோக்கியர்கள் பின்நிற்பதேயில்லை.

அதற்கான காரணம், இழப்பை நினைவு கூருவதல்ல.

பிழைப்பு நடத்த முடியாது என்பது தான்.

அந்த நேரம் இந்தியக் கலைஞர்களையும், திரைப்படங்களையும் இங்கே காட்டி பணம் சம்பாதித்தவர்கள் புலிகளுக்குப் பணம் சேர்த்த அயோக்கியர்களே.

இவர்கள் இந்த நிகழ்ச்சிகளை குழப்புவதின் முழு நோக்கமுமே, அங்கே கூட்டம் சேர்ந்தால் இங்கே தங்கள் பிழைப்பில் மண் விழுந்து விடும் என்பது மட்டும் தான்.

மாவீர தினத்தின் போது, கட்டாயப்படுத்திக் கடைகளைப் பூட்ட வைத்து, வர்த்தகர்களின் பிழைப்பில் மண் போடுவதன் காரணமே, அன்று வேறெங்கும் போகாமல் வந்து சேரும் மந்தைக் கூட்டத்திடம் ரிசைக்கிள் மாலைகளையும், விளக்குகளையும் விற்றுப் பணம் பண்ணுவது தான்.

இப்படி யாழ்ப்பாணிகளின் மனவியாதி அவ்வப்போது கொண்டெழும்பும்.

இதனால் தான் இலங்கைக்கு எந்த இந்திய கலைஞர்கள் போனாலும், 'இரத்தம் காய முன்னம் கொண்டாட்டமா?' என்று யாராவது ஒரு முட்டாள் குரங்கு பற்ற வைத்தவுடன் தீப் பற்றுகிறது.

முள்ளிவாய்க்கால் மண் கவ்வலின் பின்னாலும் இவர்கள் எதையும் கற்றுக் கொள்ளவில்லை.

ஆனால், இவர்களை உசுப்பேத்தும் அயோக்கியர்கள் மகிந்த முதல் இலங்கை அரசு வரைக்கும் டீல் போட்டுக் கொண்டு தான் இருக்கிறார்கள் என்பதையும் இந்த மந்தைக் கூட்டம் உணர்ந்து கொள்வதில்லை.

இலங்கைப் பிரச்சனை குறித்து எடுக்கப்பட்ட படமான Demons in Paradise படம் புலிகளை விமர்சிக்கிறது என்று அறிந்த கேள்விச்செவியர்கள் அந்தப் படம் திரையிடப்படுவதற்கு ரொறன்ரோ முதல் யாழ்ப்பாணம் வரைக்கும் பெரும் களேபரம் பண்ணினார்கள்.

அதைத் தடை செய்ததன் மூலம் சீப்பை ஒளித்து வைத்து கல்யாணத்தை நிறுத்திய புளகாங்கிதம் அடைந்தார்கள்.

யாழ்ப்பாணிகளுக்கு ஒரு கதை உண்டு.
தாங்களே சொல்லி தாங்களே நம்புகிற கதை.

மனநோய்க் கூட்டம் நம்பி விட்டுப் போகட்டுமே என்று நீங்கள் அமைதியாக இருக்கவும் முடியாது.

அதை நீங்கள் நம்ப வேண்டும் என்று அடம் பிடிக்கும். அதை நம்ப மறுத்தால் உங்களைத் துரோகியாக்கும்.

தேசியத் தலைவரைப் பார்த்து சர்வதேசம் திணறுகிறது என்று சொன்ன அதே யாழ்ப்பாணி தான் இன்றைக்கும் 47 நாடுகள் சதி செய்து போராட்டத்தைத் தோற்கடித்தது என்கிறான்.

இவனுக்கு அந்தந்த நேரத்தில் என்ன பொய் சொல்ல வேண்டும் என்று தோன்றுகிறதோ, அது எவ்வளவு முன்னுக்குப் பின் முரணாக இருந்தாலும், அதை நீங்கள் நம்பியே ஆக வேண்டும்...

அகதிக் கோரிக்கைக்குச் சொல்லும் கதை மாதிரி!

அந்தக் கதையில் குறைந்தபட்ச உண்மையோ, தர்க்க நியாயமோ இருக்க வேண்டிய அவசியமேயில்லை.,

'உங்களுக்குப் புலிகள் பயங்கரவாதிகளாக இருக்கலாம், எங்களுக்கு அவர்கள் விடுதலைப் போராளிகள்' என்று இன்றைக்கும் இவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இதையெல்லாம் சர்வதேசம் நம்புமா? அட, குறைந்த பட்சம் நம்பும் அளவுக்காவது சொல்ல வேண்டாமா? என்ற கவலையெல்லாம் யாழ்ப்பாணிக்குக் கிடையாது.

நான் சொல்றன், நீ நம்பு! அவ்வளவு தான்.

மதி சுதா இயக்கிய வெந்து தணிந்தது காடு படத்தைப் புலிகள் உலகெங்கும் 'தடை செய்திருக்கிறார்கள்!'.

இலங்கையில் திரையிடப்பட்டு பாராட்டுகள் பெற்ற இந்தப் படத்தை திடீரென்று 'புலம் பெயர் தேசமெங்கும் திரையிடுவதில்லை என்ற முடிவை, தமிழர்களை ஒன்றிணைக்கும் அமைப்புகள் எடுத்துள்ளன'.

அந்த அமைப்புகள் எவை என்று இந்த யாழ்ப்பாணியும் கேட்கப் போவதில்லை.

யாழ்ப்பாணியின் பகுத்தறிவு தமிழ்த் தேசிய உணர்வாளருக்கும் துரோகிக்கும் இடையிலானது மட்டும்தான். அதற்கு அப்பால் எதையும் பகுத்தறிந்து கொள்ள வேண்டிய தேவை யாழ்ப்பாணிக்கு ஒரு போதும் இருந்ததில்லை.

அண்ணை சமாந்தரமான அரசாங்கம் நடத்துகிறார், விமானப்படை வைத்திருக்கிறார், சமாதானப் பேச்சுவார்த்தை என்று எல்லாரையும் பேய்க்காட்டி, சர்வதேசத்தின் கண்ணில் மண்ணைத் தூவி, 'தலைவர் திட்டம் வைச்சிருக்கிறார், சாமான் கொண்டு வந்து அடிக்கப் போகிறார்' என்று நம்பிக் கொண்டு, அதை நாங்களும் நம்ப வேண்டும் என்று அடம் பிடித்தவர்கள் தான் இந்த யாழ்ப்பாணிகள்.

Demons of Paradise ஐ தடுத்ததன் மூலம் முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்த பெருமை.

இதைப் போல, புதியவன் இராசையாவின் ஒற்றைப்பனைமரம் வெளியிடப்பட்ட போதும், அதைத் தடை செய்ய வேண்டும் என்று அதே 'அண்ணையின்ரை துவக்குச் சிந்தனையோடு கிளம்பினார்கள். அவ்வாறானதொரு படம் வெளியாவதை, தமிழ் தேசிய உணர்வாள பிலிம் காட்டல்காரர்கள் கூட எதிர்ப்புத் தெரிவித்ததுதான் அந்தக் கோமாளித் தனத்தின் உச்சம்.

அண்ணையின்ரை துவக்குக்குப் பிறகு, ஒரு கமெராவை வைச்சு ஈழம் எடுக்கலாம் என்ற நினைப்பில் தான் இந்த பிலிம் மேக்கர்ஸ் உள்ளார்கள். வன்னியில் புலிகளுக்கு வால் பிடித்து பிலிம் மேக்கர்ஸ் ஆன இந்த தமிழ் தேசிய உணர்வாளர்கள் இப்போது தணிக்கையாளர்களாகக் கூட மாறியிருக்கிறார்கள்.

ஒரு படைப்பாளிக்கு இன்னொரு படைப்பாளியின் கருத்துச் சுதந்திர மறுப்புக்கு எதிராகக் குரல் கொடுக்கும் சிந்தனை இல்லாமல், தாங்களே இந்தப் படத்திற்கு எதிராக 'உருக்' கொண்டு எழும்பியது தான் இங்கே ஹைலைட்.

இந்த கோமாளிகளின் எதிர்ப்பையும் மீறி ஒற்றைப் பனைமரம் வெற்றிகரமாக இங்கே திரையிடப்பட்டது. முன்பு வன்னியின் பின்னணியில் சேட்டைகள் பண்ணியவர்கள் எல்லாம் கடிக்க முடியாத வெறும் குலைநாய்களாகவே



மாறி விட்டிருந்தார்கள்.

தாங்கள் ஏவி விட்ட பில்லி சூனியப் பேய் திரும்பி வந்து இரத்தம் தா என்று மிரட்டுவது போல, தற்போது ஒரு சுவாரஷ்யம் நிகழ்ந்திருக்கிறது.

மதி சுதா இயக்கிய வெந்து தணிந்தது காடு படத்தைப் புலிகள் உலகெங்கும் 'தடை செய்திருக்கிறார்கள்!'.

இலங்கையில் திரையிடப்பட்டு பாராட்டுகள் பெற்ற இந்தப் படத்தை திடீரென்று 'புலம் பெயர் தேசமெங்கும் திரையிடுவதில்லை என்ற முடிவை, தமிழர்களை ஒன்றிணைக்கும் அமைப்புகள் எடுத்துள்ளன'.

அந்த அமைப்புகள் எவை என்று இந்த யாழ்ப்பாணியும் கேட்கப் போவதில்லை.

யாழ்ப்பாணியின் பகுத்தறிவு தமிழ்த் தேசிய உணர்வாளருக்கும் துரோகிக்கும் இடையிலானது மட்டும்தான். அதற்கு அப்பால் எதையும் பகுத்தறிந்து கொள்ள வேண்டிய தேவை யாழ்ப்பாணிக்கு ஒரு போதும் இருந்ததில்லை.

நோர்வே தமிழ் திரைப்பட விழாவில் திரையிடப்பட இருந்த படத்தை வெளியிட தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இதைச் செய்தது யாரோ தற்குறி ஒன்று.

இந்த தற்குறியும் இந்தப் படத்தால் தான் லாபம் பெறலாம்

என்று முயன்று அது கை கூடாததால் தான் இப்படித் தமிழ்த் தேசிய வேடம் போட்டதாகத் தான் தெரிய வருகிறது.

இன்றைய சூழலில் எந்தத் தற்குறியும் யாரையும் துரோகி ஆக்க முடியும். ஒரு காலத்தில் எங்களைப் போன்றவர்களை துரோகிகள் என்று முத்திரை குத்திய எல்லாத் தற்குறிகளுமே, மாட்டுக்கு குறி சுட்ட மாதிரி, தங்களுக்குள்ளேயே துரோகிகளாகக் குறி சுடப்பட்டு, கட்டாந்தரைகளிலும் காடு மேடுகளிலும் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்படி, எந்த ஒரு அயோக்கியத் தற்குறியும் கிளம்பி வந்து யாரையும் துரோகி ஆக்கலாம். திரைப்படத்தைத் தடை செய்யலாம்.

தன்னை ஒரு தமிழ்த் தேசிய உணர்வாளராகப் படம் காட்டினாலே போதும்.

இந்த மந்தைக்கூட்டம் தானாகவே உசுப்பேறும்.

அதில் உண்மை இருக்குமா? அல்லது அந்தப் படத்தைப் பார்த்த

> இன்றைய சூழலில் எந்தத் தற்குறியும் யாரையும் துரோகி ஆக்க முடியும். ஒரு காலத்தில் எங்களைப் போன்றவர்களை துரோகிகள் என்று முத்திரை குத்திய எல்லாத் தற்குறிகளுமே, மாட்டுக்கு குறி சுட்ட மாதிரி, தங்களுக்குள்ளேயே துரோகிகளாகக் குறி சுடப்பட்டு, கட்டாந்தரைகளிலும் காடு மேடுகளிலும் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.
>
> இப்படி, எந்த ஒரு அயோக்கியத் தற்குறியும் கிளம்பி வந்து யாரையும் துரோகி ஆக்கலாம். திரைப்படத்தைத் தடை செய்யலாம்.
>
> தன்னை ஒரு தமிழ்த் தேசிய உணர்வாளராகப் படம் காட்டினாலே போதும்.
>
> இந்த மந்தைக்கூட்டம் தானாகவே உசுப்பேறும்.

பின்பு உண்மையை அறிந்து விட்டாவது கருத்துச் சொல்வோமே? என்று கூட நினைப்பதில்லை.

வெறும் கேள்விச் செவிச் சமூகம் இது. இதை வைத்து எந்த அயோக்கியனும் பிழைப்பு நடத்தலாம்.

இன்றைய நிலை இது தான்.

இந்தக் கேவலத்தில், தங்களைப் பிலிம் மேக்கர்ஸ் என்று சொல்லிப் பீற்றிக் கொள்கிறவர்களும் கருத்துச் சுதந்திர மறுப்பும் தணிக்கையும் தடையும் செய்ய முயற்சிக்கிறார்கள் என்பது தான் பெரும் சிரிப்புக்குரிய விடயம்.

தமிழ்க் குறும்புப்பட பிலிம் மேக்கரும், Tamil avant garde cinema activist ம் ஆன ஞானதாஸ் காசிநாதர் சொன்ன கருத்துத் தான் என்னைச் சிரிக்க வைத்தது. இந்த self-proclaimed avant garde cinema activist அப்படி தமிழீழ சினிமாவில் என்ன புதுப் புரட்சி பண்ணியிருக்கிறார் என்று தெரியவில்லை.

இவர் தான் ஒரு சில புலி வால்களுக்கான தற்போதைய புத்திஜீவி. அவர்களுடைய தகுதிக்கு இவரே போறும்!

'ஈழம் சினிமா என்பது இலங்கை அரசின் தமிழின அடக்குமுறைக் கொள்கைகளுக்கும் எமது மக்களின் சுதந்திர வேட்கைக்கும் இடையிலான ஒரு போராட்டம் ஆகும்.'.

ஆக, அண்ணை துவக்கை வைச்சுக் கொண்டும், வான் படை, ஈரூடகப் படை எல்லாம் வைச்சு அடிச்சுப் பறிக்கப் போய் முள்ளிவாய்க்காலில் மண் கவ்விய பின்னாலும், ஒரு கொஞ்சப் பிலிம் மேக்கர்கள் செல்போன் கமெராவை வைச்சுக் கொண்டு, ஈழத்தைப் படைச்சுப் பறிக்கப் போகிறார்கள்.

'தேர்தல் அரசியல் செய்பவர்கள் மட்டுமில்லை, வெகுஜன ஆதரவு வேண்டுபவர்கள் எல்லாரும் இனவழிப்புக்கு எதிராகவும், தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவாகவும் தம் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியே ஆக வேண்டும். அந்த நிலையை உருவாக்கியது தான் எமது போராட்டத்தின் வெற்றி....




(இதெல்லாம் ஒரு நாடகம் தானே!?) ஓம்... It is a theatre. ஆற்றுகை. இந்த ஆற்றுகைகள் தொடர்ந்து நடக்க வேண்டும். நடக்கும்... இந்த ஆற்றுகைகள் எமது விடுதலைக்கான வேட்கையை, வெறியை தலைமுறை கடந்தும் கடத்தும். எமது அடுத்தடுத்த தலைமுறைகளின் நினைவிலி மனதில் பதிய வைக்கும்... அது தான் அந்த நாடகத்தின் பலம்' என்று இந்த பிலிம் மேக்கர் வேறு திருவாய் மலர்ந்திருக்கிறார்.

இவர் சொன்னது எதற்கு?

தற்போது புத்தவிகாரை எதிர்ப்பு நாடகத்தில் கஜேந்திரனின் கூத்துப் பற்றி.

அதாவது, நீங்கள் உண்மையாக இருக்கத் தேவையில்லை. நடித்தால் போதும்.

இது தான் இவர்கள் சொல்வது.

தாங்கள் சொன்ன பொய்யை தாங்களே நம்பும் சமூகத்திற்கு, அது கேட்க விரும்பும் பொய்களைச் சொல்வதற்கு எப்போதும் அயோக்கியர்கள் குறைவில் லாமலேயே கிடைக்கிறார்கள்.

விசில் அடிப்புக்காய் நடிக்கும் ஈழத்துச் சிவாஜி சார் நடிகர் திலகங்களுக்கு குறையா இருக்கப் போகிறது?

இந்தப் பொய்களும் நாடகமும் நடிப்பும் அந்த மந்தைக் கூட்டத்தை எப்போதும் கனவுலகில் வைத்திருக்கும்.

அந்த மந்தைக் கூட்டத்தை தனது நடிப்பின் மூலம் படம்

காட்டி ஏய்த்துப் பிழைப்பு நடத்த இவர் போன்ற குறும்புப்படப் பிலிம் மேக்கர்ஸ்க்கும் என்றைக்கும் குறைவும் இருக்காது.

இது அமைப்புகளுக்கும் பொருந்தும்.

தீபா மேத்தாவின் Funny Boy படம் திரையிடப்பட்ட போது, அது ஈழத்தமிழரைப் பற்றியும் அதன் போராட்டம் பற்றியும் கொச்சைப்படுத்துகிறது என்று புலி வால் அமைப்புக் கிளம்பியிருந்தது. அது ஒரு வெறும் நாடக நடிப்புத் தான்.

அதே அமைப்பு துரோகிகள் எனக் குறி சுடப்பட்ட கூட்டமைப்புடனும் சிங்கள அரசுடனும் எவ்வாறான தொடர்புகளைக் கொண்டது என்பது எல்லாருக்கும் தெரியும். கனடியப் புலிவால் அமைப்பின் மீதான இலங்கை அரசின் தடை நீக்கம் தற்செயலானது என்று நம்புவது யாழ்ப்பாணி முட்டாளாகத் தான் இருக்கும்.

ஆனால், ஒரு படைப்பாளியின் கருத்துச் சுதந்திரம் பற்றி ஆட்சேபம் தெரிவிக்க பல வழிகள் இருக்க, தங்களது ஆட்பலத்தைக் காட்டி மிரட்டும் இவர்களுக்கு...

நானாக இருந்தால் நடுவிரலைக் காட்டியிருப்பேன் என்று பேஸ்புக்கில் எழுதியிருந்தேன்.

யார்ரா நீங்கள்லாம்? என்று!

அதைப் பார்த்த, அந்த புலிவால் கூட்டத்தின் வாலில் பிழைப்புக்காக தொங்கி, தரகு மாமா வேலை பார்க்கும் கோமாளி ஒன்று, புலிவால்களைக் குஷிப்படுத்த என்னைப் பற்றி பேஸ்புக்கில் குறும்பு பண்ணியிருந்தது.

தங்களைக் கோமாளிகளாக்கியே தீருவது என்று அடம் பிடிக்கும் இந்த குறும்புப் பட பிலிம் மேக்கர்ஸின் நடிப்பும், நாடகமும் பற்றி நான் கணக்கெடுப்பதேயில்லை.

ஆனால், இது எங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் ஆபத்தான விளைவுகள் பற்றி முன் கூட்டிய தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டி இருக்கிறது.

முப்பது வருடங்களுக்கு முன்னால், துப்பாக்கி வைத்திருந்த பிரபாகரன் என்ற தற்குறியை பெரும் பிம்பமாகக் கட்டி எழுப்புவதை, யாழ்ப்பாணத்து பிராங்கன்ஸ்டைன் என்று வர்ணித்து, கடைசியில் புலி தன்னையும் அழித்து யாழ்ப்பாணிகளையும் அழிக்கும் என்று தீர்க்கதரிசனம் சொல்லியிருந்தேன்.




அது என் கண் முன்னாலேயே, எங்கள் வாழ்நாளிலேயே நிகழ்ந்தது.

இன்றைக்கும் ஒவ்வொரு தற்குறிகள் ஆங்காங்கே தோன்றி, தன்னையும் ஒரு தேசிக்காய் தலைவர் என்ற நினைப்பில், உசுப்பேத்தும் நடவடிக்கைகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

இது வெறும் திரைப்படத் தடையுடனோ, கலைஞர்கள் வருகைக்கான எதிர்ப்புடனோ நிற்கப் போவதில்லை.

தன்னை அந்தப்படத்தை வினியோகித்து லாபம் பார்க்க விடவில்லை என்றதும் ஒரு தற்குறி தோன்றி, அமைப்புகள் கூடி முடிவெடுத்ததாக ஒரு கதையை அவிழ்த்து விட முடிகிறது.

அதை இந்தச் சமூகம் கேள்விக்குள்ளாக்குவதுமில்லை. அதற்குப் பொறுப்பான ஊடகங்கள் அதை அம்பலப்படுத்துவதுமில்லை.

இதைப் போல, இலங்கையின் இனப்பிரச்சனை எந்த சிறு வழியில் கூட தீர்வு பெற்று விடக் கூடாது, அங்கே அது நீறு பூத்த நெருப்பாக இருந்தால் தான் இங்கே 'அடுத்த கட்ட நடவடிக்கை, முள்ளி வாய்க்கால் முடிவல்ல! புலன் பெயர்ந்தவர்களிடம் தலைவர் கையளித்த போராட்டம்' என்றெல்லாம் உசுப்பேத்திப் பிழைப்பு நடத்த முடியும் என்று, போராட்டத்துக்கான பணத்தை விழுங்கி ஏப்பம் விட்ட கூட்டம் தொடர்ந்தும் பணத்தைக் கபளீகரம் பண்ண வழிகள் தேடிக் கொண்டிருக்கிறது.

அது அங்கே எந்த விதமான தீர்வு கிடைக்க விரும்பாதது மட்டுமல்ல, அங்கே நாடகம் காட்டி நடிக்கும் தற்குறிகளின் பைனான்சியர்களாக இருந்து அங்கே பிரச்சனைகளை தொடர்ந்தும் உருவாக்க வழி கோலிக் கொண்டே இருக்கும்.

ஒரு இனத்தின் அழிவில் தாங்கள் தலைவர்களாகவும் லாபம் பார்க்கவும் துடிக்கும் இந்த அயோக்கியர்கள், அவர்களுக்கு தரகர் மாமா வேலை பார்க்கும் கோமாளிகள், ஊளையிடலாளர்கள், அரசியல் புலநாய்வாலர்கள், இவ்வாறு அடிக்கடி கிளம்பி உசுப்பேத்தும் தமிழ்த் தேசிய உணர்வாளத் தற்குறிகளை சமூகத்தில் இருந்து அப்புறப்படுத்தாவிட்டால், அனாவசியமாக உயிரைக் கொடுத்த கரும்புலிகள் மாதிரி, இது ஒரு சமூகத்தின் கூட்டுத் தற்கொலையாகத் தான் முடியும்.




**மல்லாவி 02**

'காணி அபிவிருத்தி இலாகா' என்றோர் அமைச்சு 70கள் வரை இருந்தது. அதன் கீழ் குடியேற்றங்களை உருவாக்குவது, மக்கள் வாழ்வதற்கான வீடுகளை அமைத்துக் கொடுப்பது, அந்தக் குடியேற்றங்களுக்குத் தேவையான பாடசாலைகள், மருத்துவமனை, தபாற்கந்தோர், விவசாயத் திணைக்களம், அரச ஊழியர்கள் தங்குவதற்கான விடுதிகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள், சந்தைக் கட்டடம் எனச் சகல உட்கட்டுமான வேலைகளையும் இந்தத் திணைக்களமே மேற்கொண்டது.

இவற்றை நடைமுறைப்படுத்தும் வேலைத்தளம், அலுவலகம் எல்லாம் மல்லாவியின் குடியேற்றத் திட்டத்தில் தற்போதுள்ள 'மூன்றாம் யுனிற்' பாடசாலைக்கு முன்பாகவுள்ள காணியில் இருந்தன. அதாவது தற்போதைய பாடசாலையின் விளையாட்டு மைதான நிலத்தில் தான் இருந்தன. அருணாசலம் என்கின்ற எனது அப்பா அங்கு காவலாளியாகக் கடமையாற்றினார். அதனால் தான் எனக்கு அந்த நினைவுகளையும் அதன் மீதான ஞாபகங்களையும் எழுத முடிகிறது. இன்றுள்ள மல்லாவிக்கும் அதன் வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் இடையில் மிகப்பெரும் நினைவுச்சிக்கல்கள் மறதிச்சிக்கல்கள் உள்ளது என்பதால் எனக்குத் தெரிந்த கதையினை எழுத முனைகிறேன்.

அந்த மூன்றாம் யூனிற் பாடசாலையில் முதலாம் இரண்டாம் வகுப்புக்களில் கல்வி கற்றுக் கொண்டிருந்த நான், பகல் 12 மணிக்குப் பாடசாலை முடிவடைந்ததும் அப்பாவுடன் அங்கு செல்வேன். அந்த அலுவலகத்தில் இருந்த வெளி இருக்கையில் அமர்ந்து எல்லாவற்றையும் அவதானித்த வண்ணமிருப்பேன்.

அங்கு நூற்றுக்கணக்கில் சிங்களத் தொழிலாளர்கள் பணிபுரிந்தார்கள். சிங்கள மொழி என்றொன்று இருப்பதை அப்போதே அறிந்திருந்தேன். அப்பாவுடன் பணிபுரியும் சிங்களவர்கள் "புத்தா" (மகன்) என்று கூப்பிட்டு எனது சொக்கையில் கிள்ளிவிட்டுப் போவார்கள்.

அந்த வேலைத்தளத்தின் முன்வாசல் 20அடி வரையில் அகலமானது. அதற்குக் கதவுகள் இல்லை. பெரிய இரும்புக் குழாய்கள் நான்கு குறுக்காகப் போடப்பட்டிருக்கும். பெரிய லொறிகள், ஜீப், டிரக்ரர் ஆகியன வரும்போதும் அவை வெளியேறும் போதும் அந்த இரும்புக் குழாய்களை இழுத்து ஒரு பக்கமாக விட்டுவிட்டு வாகனம் போனதும் மீண்டும் அந்தக் குழாய்களை இழுத்து விடுவார்கள். அதைவிட ஒரு சிறிய இடைவெளி அருகில் இருந்ததால் நடந்து செல்வோர், சைக்கிளில் செல்வோர் அதற்குள்ளால் போய் வந்தார்கள்.

நான் முதன் முதலில் கண்ட அரச அலுவலகமும் அதுதான். உள்ளே பலர் பெரிய மேசைகளில் இருந்து பணியாற்றுவார்கள். பெரிய பெரிய பதிவுப் புத்தகங்களில் எழுதிக்கொண்டிருப்பார்கள். பெரும்பாலும் கார்பன் பென்சில்களையும் (நீர் பட்டால் அந்த எழுத்து நாவல் வர்ணத்தில் தெளிவாகத் தெரியும்). மையில் தொட்டு எழுதும் பேனாக்களையும் பாவிப்பதைப் புதினமாகப் பார்த்திருக்கிறேன். அப்போது நான் சிலேற் எனப்படுகின்ற கற்பலகையில்தான் பள்ளிக்கூடத்தில் எழுதுவேன். . அதற்கு ஒரு சதுரமான கார்பன் கூரும் இருக்கும். அதைச் சிலேற் பென்சில் என்று சொல்வோம்.

அப்பாவின் அலுவலகத்தில் பணி புரிவோர் எனக்குக் கார்பன் பென்சில் தருவார்கள். அப்போது என்னிடம் அப்பியாசக் கொப்பிகள் இல்லாததால் காங்கேசன் சீமெந்துப் பைத் தாள்களில் கீறிப் படித்தேன்.

அந்த அலுவலகத்தில் கறுத்த உருளையான அரைக்காற்சட்டை, சப்பாத்துப் போட்ட வட்டமான தடித்த காக்கித் தொப்பி போட்ட இராசரத்தினம் என்பவர் பெரியவராக இருந்தார். அவரது வீடு வேலைத்தளத்துக்கு அருகில் 'கூழா' மரமொன்றிற்கு அருகில் இருந்தது. அவர் அலுவலகத்துக்குள் வரும்போதும் வெளியேறும்போதும் சிங்கள ஆக்களும் அப்பா போன்ற தமிழர்களும் எழுந்து நிற்பார்கள். நான் அவற்றை அவதானித்திருக்கிறேன். ஏன் அப்படிச் செய்கிறார்கள் என்று அப்போது எனக்குத் தெரியவில்லை.

கறுத்த உருவமான மிடுக்கான குரல் உள்ள அவர்தான் அங்கு பெரியவர் என்பதும் என்னுடன் படித்த தனுராஜின் அப்பா என்றும் மல்லாகத்தைச் சேர்ந்தவர் என்றும் பின்னர் தெரியவந்தது.

இராசரத்தினத்தின் வீட்டுக்கு எதிரில் குலேந்திரசிங்கம் என்கிற இரண்டாவது பெரியவரின் வீடு தகரத்தில் பொருத்தப்பட்ட கிடுகால் வேயப்பட்டு இருந்தது. நாங்கள் பாடசாலை விட்டுப்போகும் போது வெளி விறாந்தையில் வெறும் தேகத்துடன் சிறிய பவுண் சங்கிலி ஒன்றைப் போட்டுக்கொண்டு சாய்மனைக் கதிரையில் படுத்திருப்பார். நான் கண்ட தங்கச் சங்கிலி அணிந்திருந்த முதல் ஆண் மகன் அவர்தான். மேவித் தலையிழுத்த மெல்லிய உயரமான அவர் சாரத்தை நிலத்தில் படுமாறு கட்டியிருப்பார். அவர் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்று அறிந்தேன். இன்னோர் அலுவலர் மாணிக்கவாசகர். அவரின் வீடும் கிடுகால் வேயப்பட்டது.



எம்.ஓ குவாட்டர்ஸ் வேலிக்கும் (மெடிக்கல் ஒவ்பீசர் வதியும் குவாட்டர்ஸ். இந்தக் குவாட்டர்ஸ் பற்றிய கதை பின்னர் எழுதுகிறேன்.) பாடசாலைப் பின் வீதிக்கும் இடையில் தகரத்தால் அடித்த நீண்ட வாடி ஒன்றும் அதற்கு எதிரில் இராசரத்தினம் அவர்களின் வீட்டுக்கு முன்னாலும் பெரிய தகர வாடி ஒன்றிருந்தது. அவையும் கிடுகால் வேயப்பட்டவை.

இந்தக் காணி அபிவிருத்தி இலாகா அலுவலகம், குவாட்டர்ஸ்கள், வாடிகள் எல்லாமே 1973 இறுதிப் பகுதியில் அல்லது 1974இல் பிடுங்கப்பட்டன. அப்போது பாடசாலை விடுமுறையாக இருந்ததால் அவை பிடுக்கப்பட்டதை நான் காணவில்லை. மீண்டும் பாடசாலைக்குச் சென்றபோது அந்த இடங்களைப் பார்க்க மிகவும் துக்கமாக இருந்தது. அப்போது எனக்குப் பத்து வயது என்பதால் அதுபற்றி எதுவும் புரியவில்லை. எங்களுடன் பாடசாலையில் கற்ற இராசரத்தினம், குலேந்திர சிங்கம் ஆகியோரின் பிள்ளைகள் எங்களது பாடசாலைக்கு வரவில்லை. எங்கோ இடம்பெயர்ந்திருந்தார்கள். தனுராஜ் தற்போது பிரான்சில் வசிக்கிறார் என்று அறிந்தேன்.

பகல் நேரத்தில் காலையில் கட்டட வேலைகளுக்குச் செல்லும் தொழிலாளர்கள் பெரிய லொறிகளில் வந்து இறங்குவார்கள். அவர்கள் இறங்கியதும் லொறிகளை அலுவலகத்துக்குப் பின்னாலிருந்த பெரிய தகரக் கொட்டகைகளுக்குள் நிறுத்துவார்கள். அதில் தண்ணீர் பவுசர்களும் நிறுத்தப்பட்டிருக்கும். அந்த பவுசரில் ஒன்று எமது பள்ளிக்கூடத்திலிருந்த ஒற்றைத்தூண் சிறிய தொட்டிக்கும் தண்ணீர் நிரப்பிவிடும். இந்த பவுசர்கள் மல்லாவி முருகன் கோவிலுக்கு அருகிலிருந்த பெரிய கிணற்றில் நீரிறைக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்தித் தண்ணீர் இறைந்து நிரப்புவதைக் கண்டிருக்கிறேன். அப்பா அந்தத் திணைக்களத்தில் வேலை செய்ததால் அங்கு பணிபுரிந்த சிங்களவர்களும் தமிழரும் எப்போதும் அப்பாவுடன் கதைத்துக்கொள்வார்கள்.

நான் முதன் முதலாக நீர் இறைக்கும் இயந்திரத்தைக் கண்டதும் அந்த பவுசரில் பொருத்தப்பட்டிருந்த இயந்திரத்தைத்தான்.

பகல் வேலை முடிந்துவரும் தொழிலாளர்கள் தமது ஆயுதங்களைக் களஞ்சியத்தில் ஒப்படைத்துவிட்டு அவசர அவசரமாக பாடசாலையைக் கடந்து செல்வார்கள். அங்கு பெரிய தகர வாடி ஒன்று இருந்தது. அந்தத் தகர வாடி பற்றி எங்கள் பாடசாலையின் ஆரம்பகால (சிவபாக்கியம்) ரீச்சரின் மகள் கூறும்போது அந்த வாடியில் ஒரு சிறிய கடை இருந்தது என்றும் அந்தக் கடையை ஒரு சிங்களப் பெண் நடத்தினார் என்றும் நாங்கள் அந்தக் கடையில் இனிப்பு, பிஸ்கட் போன்றவற்றை மாலை நேரத்தில் போய் வாங்குவது வழக்கம் என்றும் கூறினார்.

அலுவலகத்தில் பணிபுரிந்த சிங்கள ஊழியர் ஒருவரை மெசேஞ்சர் என்று அப்பா அழைப்பார். அது அவரது பெயர் என்று முதலில் நினைத்தேன். பின்னர்தான் தெரியவந்தது அவர் காணி அபிவிருத்தி இலாகாவுக்குச் சொந்தமான தபாற்காரன் போன்ற பதவியை வகிப்பவர் என்று. செய்தியை எடுத்துச் செல்பவர் என்பதால் மெசேஞ்சர் என்று அழைக்கப்பட்டார். இப்படி ஒரு பதவியை வேறு எங்கும் நான் கண்டதில்லை. காக்கிச் சேட்டும், காக்கி காற்சட்டையும் போட்டிருப்பார். சைக்கிளுக்கு முன்புறமாக இரும்புக் கரியர் பூட்டி அதன் மேல் தபாற் பை ஒன்றை வைத்திருப்பார். அவர் வெள்ளையான சீனாக்காரன் போன்ற தோற்றமுடையவர்.

அந்தத் திணைக்கள வேலைகளில் அப்போது கட்டப்பட்டுக்கொண்டிருந்த கட்டடங்கள், இன்றைய மல்லாவி மத்திய கல்லூரி, கொல்ல விளாங்குளம் பாடசாலை, ஒட்டங்குளம் பாடசாலை ஆகியன எனப் பின்னர் அறிந்தேன். இவையே அந்தத் திணைக்களம் மல்லாவிப் பகுதியில் இறுதியாகக் கட்டிமுடித்த கட்டடங்கள்.

அந்தக் காலத்தில் குடியேற்ற வீடுகள் சீமெந்துக் கற்களாலும் அரச கட்டங்கள் செங்கற்களாலும் கட்டப்பட்டன. மிகப் பெரிய தொழிலாளர் படையையும் வாகனங்களையும் அலுவலகங்களையும் உள்ளடக்கிய அந்தப் பெரிய காணி அபிவிருத்தி இலாகா அலுவலகமும் வேலைத்தளமும் 1974காலப்பகுதியில் திடீரென மறைந்து போனது கவலை. அதே போன்றுதான் பல்வேறு கட்டடங்கள் வேறு வேறு காலங்களில் மறைந்து போனது. உருமாற்றம் கொண்டது. முன்பு சிங்களவர்கள் அதிகமாக வேலை செய்தும் வாழ்ந்தும் வந்த ஒரு ஊரிலிருந்து ஒரு கால கட்டத்தில் காட்டுக்கத்தி,கோடாலி கொண்டு துரத்தியடிக்கப்பட்டார்கள் என்ற தகவலும் உண்டு.

# குப்பிளான் சண்முகமும் ‘கோடுகளும் கோலங்களும்’



## பூங்கோதை

குப்பிளான் சண்முகத்தின் இச்சிறுகதைத் தொகுப்பு அலை வெளியீடாக, மார்கழி 1976 இல், குருநகர், யாழ்ப்பாணத்தில் பதிப்பாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இந்நூலிற்கு சாகித்திய விருது கிடைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்கு பதினொரு சிறுகதைகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. சொற் சிக்கனமும் கச்சிதமும் கொண்ட இச்சிறுகதைகள் உள் விரிவுகள் கொண்டவையாகவும் பல முற்போக்கு சிந்தனைகளை மிக இலாகவமாக சொல்லிச் செல்பவையாகவும் இருக்கின்றன.

குப்பிளான் சண்முகம் அவர்கள் இலக்கிய ஆளுமையாக மட்டுமல்ல ஒரு தனிப் படைப்பாளியாக இருந்து, தான் சமுதாயத்திற்கு என்ன சொல்ல விரும்பினாரோ அது போலவே தானும் வாழ்ந்து காட்டியிருக்கிறார் என்பதை இவருடைய இணையவழி நினைவேந்தலில் கலந்து கொண்ட, அவரோடு பயணித்த பலரும் நினைவில் வைத்திருந்தார்கள்.

இங்கு இந்த இடத்திலே நான் மறைந்த ‘நடு’ சஞ்சிகை கோமகனையும் குப்பிளான் சண்முகம் போல, ஒரு சமூகப் போராளியாக, மற்றவர்களையும் தம்மோடு இழுத்துச் சென்ற ஒருவராகவே நினைவு கூர விரும்புகிறேன். இவர்கள் இருவரும் இலக்கியத்தை தம் உலகாக நினைத்து தம் வாழ்வையும் அதற்கே அர்ப்பணித்தவர்கள்.

குப்பிளான் சண்முகம் இடது சாரிக்கொள்கைகளினால் முழுதாக ஈர்க்கப்படாதவராக இருந்தாலும் சிறுகதைகளில் தன்னை அவர் அடையாளப்படுத்தும் விதங்கள் அலாதியானவை. இதனாலேயே இவருடைய சிறுகதைகள் தனித்துவமானவையாக விளங்குகின்றன. அனைத்து கதைகளிலுமே கதை சொல்லியாகவோ அல்லது அதில் வரும் கதை மாந்தர்களின் வழியாகவோ தனது ஜனரஞ்சகமான எழுத்தினால் வாசகர்களைக் கட்டிப் போட்டு, தன்னுடைய எண்ணப்பாடுகள், அவை



சிலாகித்து நிற்கும் கேள்விகள், அதற்கான பதில்களை அழகாக நகர்த்திச் செல்கிறார்.

உதாரணமாக தடங்கள் என்னும் சிறுகதையை இங்கு பார்க்கலாம். இச்சிறு கதையில் மூன்று நண்பர்களுக்கிடையேயான கலந்துரையாடல் ஒன்று கடற்கரை அருகில் கற்றாழை மரங்கள் சூழ்ந்த ஒரு தோப்பில் நடைபெறுகிறது. இங்கு கதை சொல்லிக்கு தான் விரும்பிய ஒரு பெண்ணை இன்னொருவருக்கு இழந்து போன சோகம் இழையோடி, அவளது அழகும் அவள் குறித்த எண்ணங்களையும் கலைகளின் வடிவமாய்க் காணும் எண்ணம் தோன்றுகிறது.

ஆனால் ஒரு நண்பன் கலை என்பது வெறும் அழகின் அடிப்படையில் மட்டுமே படைக்கப்படுவதில்லை, அது மனித மனத்தின் உணர்வுக்குவியல்கள், அதன் கொந்தளிப்புகளால் கூட ஏற்படுவதுண்டு எனத் தன் வாதத்தை ஆரம்பிக்கிறான்.

அப்போது மற்ற இரு நண்பர்களும் தம் கருத்துக்களை அதோடு இணைத்துக் கொள்கிறார்கள்.

இருந்தாலும் இறுதியில் அவர்கள் தமது மூன்றாவது நண்பனின் கருத்தோடு உடன்படுகின்றனர். இங்கு வெறும் அழகும் நவரசங்களும் வெறும் மனித உணர்வுகளும் மட்டுமல்ல, சமுதாய உணர்வுகளை வெளிப்படுத்தும் கலைகளே உன்னதமானவை என்கின்ற ஒரு

கோட்பாடு நிறுவப்படுகிறது. அது மேலும் கூறும் போது வெறும் தனி மனிதம் சார்ந்த உணர்வுகளின் அடிப்படையில் படைக்கப்படும் கலைகள் சமுதாய முனைப்பை திசை திருப்பக்கூடும் என்பதையும் வலியுறுத்திப் போகிறது.

அத்தோடு வலியவருக்கும் மெலியவருக்குக்கும் இடையிலும் மனிதருக்கும் இயற்கைக்கும் இடையிலும் நடைபெறும் போராட்டங்களே சமூகத்தின் நாகரீக வளர்ச்சிப் பரிமாணத்தை தீர்மானிக்கின்றன என்கிறார் கதாசிரியர்..

'இருளிலிருந்து ஒளி பிறக்கிறது' என்கின்ற கதை எனக்கு மிகப் பிடித்த ஒரு கதையாகிப் போனதற்கான காரணம் இங்கு படைக்கப்பட்டிருக்கும் கதாபாத்திரங்களின் தன்மையும் அங்கு நிறுவப்பட்டுள்ள கருப்பொருளும் எனலாம். அது மட்டுமல்ல இந்தக் கதையில் அவர் தமது ஊருக்கான ஒரு வட்டார வழக்கில் கதை சொல்லி சதாசிவம் பேசுவதாக எழுதியுள்ளார். எனது தந்தையாரின் பிறந்த ஊர் குரும்பசிட்டிக்கு அயல் ஊர் குப்பிளான் என்பதால் அந்தக் கதையாடல்களில் வரும் அவரது கதையாடல்கள் காதுக்குப் பழக்கமான நினைவுகளை அழைத்து வந்திருந்தது.

இங்கு அவர் படைத்த சதாசிவம் என்கிற சிறுவனுக்கு சகோதர சகோதரிகள் இல்லை, ஆனால் அவன் திருநீற்று வாத்தியாரின் மகள் மங்கையற்கரசியைத் தன் சகோதரியாக எண்ணிப் பழகுகிறான். அவளும் அதே போலத் தான் பழகுகிறாள்.

சதாசிவம் பாடசாலையை முற்றாக வெறுக்கும் ஒரு சிறுவனாக இங்கு சித்தரிக்கப்படுவதும் பல சாதாரண விடயங்களை அவன் வேறு ஒரு கோணத்தில் அலசிப் பார்ப்பதும், மூன்றாம் வகுப்போடு தன் பாடசாலைக் கல்விக்கு முழுக்குப் போடுவதும் என்று அவனது தன்மையை இப்போது நாம் பாடசாலைகளில் சந்திக்கின்ற autistic syndrome அல்லது global delay போன்றவற்றால் மனவளர்ச்சி குன்றிய ஒரு மாணவன் போல் இங்கு வருகிறான்.

கல்வி என்பது, அதுவும் பாடசாலைக் கல்வி என்பது வெறும் வகுப்பறைக்கல்வி அல்ல என்பதை நான் ஒரு ஆசிரியையாக உணர்ந்தவள். அது அவ்வாறான குழந்தைகளுக்கு மிகவும் கடினமான ஒன்று. அவருடைய காலத்திலேயே அவர் அதை உணர்ந்து அப்படியான ஒரு குழந்தையின் மன ஓட்டங்களை எமக்கு சித்தரித்திருக்கிறார். அக்குழந்தை பாடசாலைக்கு வெளியேயான தன் உலக அனுபவங்களால் மட்டுமே வளர்கிறான். பல விடயங்களைப் புரிந்து கொள்கிறான்.

இந்தக் குழந்தைகள் மாற்றங்களை விரும்பாதவர்கள். என்னுடைய வகுப்பறையில் சதாசிவம் போல் பல மாணவர்களை நான் சந்தித்திருக்கிறேன். இருந்தாலும் அவனது கண்களுக்கு மங்கையற்கரசி ஒரு மிகச் சிறந்த பெண்ணாகவும் அவள் செய்பவை எல்லாமே சரியாகத்தான் இருக்கும் என்பதும் பதிந்து விடுகிறது. ஆகவே மங்கயற்கரசியை மட்டுமே சகோதரியாகப் பார்ப்பவனாக, அவளோடு இணைந்து பழகுபவனாக அவன் சித்தரிக்கப்படுகிறான்.

அவள் ஒரு பருவப் பெண்ணாக, பல்கலைக்கழகம் செல்வதும் ஆண், பெண் வித்தியாசம் இன்றி அனைவரோடும் இயல்பாகப் பழகுவதும் அவனுக்குப் பிடித்திருக்கிறது. ஆனால் அவள் காதலில் விழும் போது அவனுக்கு அது ஏற்க முடியாமல் இருந்தாலும் அவள் அது சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயம் தான் என்பதை எடுத்துரைக்க அவனும் அதை ஏற்றுக் கொண்டு அவளை அவள் தந்தை ஒரு மதிப்பிற்குரிய திருநீற்று வாத்தியருக்குத் தெரியாமல் ஓர் இரவில், அவள் காதலனுடன் அனுப்பி வைக்கிறான்.

'என் தங்கச்சியும் அவனும் இப்ப வெளிச்சத்தில நடப்பினம்' என சதாசிவம் நினைப்பதில் சமூகம் குறித்த அவரது பார்வை புலப்படுகிறது. சமூக ஒடுக்குமுறைகளுக்கெதிராகப் போராட வேண்டிய தேவை, பெண்களின் சுதந்திரமான எண்ணங்கள், அவர்களது வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டிய தேவை, என பலதும் அவர் எழுத்துக்களில் பரவியிருக்கிறது.

'கண்ணை மூடிக்கொண்டே என்னுள்ளே பார்க்கின்றேன். மனம் எதற்கோ ஏங்குவது போலத் தவிக்கிறது. இந்த உலக வாழ்க்கையில் விரக்தி வந்த மாதிரி, உலகத்தையே துறந்து விடவேண்டுமென்ற உத்வேகம் வந்த மாதிரி, திடீரென்று சாவு வந்தால் புன்சரிப்புடன் அதை ஏற்றுக் கொள்ளச் சொல்கிற மாதிரி... பச்சை, சிவப்பு, நீல, மஞ்சள் வர்ணங்கள் சுழல்கிற மாதிரி ... அந்த நிறங்களுக்கும் அந்த மௌன கீதத்திற்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிற மாதிரி அந்த மௌனகீதம் மஞ்சள் நிறமான மாதிரி ஐயோ, நான் கண்களைத் திறக்கின்றேன். ' மௌன கீதம் என்கின்ற இச்சிறுகதையில் குப்பிளான் சண்முகம் அவர்கள் கதை சொல்லியின் ஊடாகத் தத்துவ விசாரங்களில் ஈடுபடும் ஒருவராய்த் திகழ்கிறார்.

தர்க்க நியாயங்களுக்காக சமூக நீதிக்காக போராடிய மனித நேயம் கொண்ட, பல விளிம்பு நிலை மக்கள் பற்றிய கருப்பொருட்கள் அவர் கதைகளில் உருப்பெற்றிருக்கின்றன. அளவுக்கதிகமான தனியார் சொத்துக்கள் பொது உடமையாக்கப்பட வேண்டும் என்ற மிகச் சிறந்த எண்ணங்களைக் கொண்ட கதை மாந்தர்கள் அவர் கதைகளில் நடமாடுகிறார்கள்.

கு.ப.ராஜகோபால் போல குப்பிளான் சண்முகத்தின் கதைகளிலும் பெண்களின் உளவியல் சார்ந்த விடயங்களைக் காணக் கூடியதாக இருப்பதோடு, இவருடைய கதைகளில் வரும் கருத்தாடல்களும், கதை எழுதுவதில் இருக்கும் நுட்பமும் பண்புகளும் அசோகமித்திரன், தி ஜானகிராமன் போன்றவர்களின் கதைகளோடும் ஒப்பிடக் கூடியவையாகவே இருக்கின்றன.

சமூக மாற்றத்திற்கான தேவைகள், சமூக ஒடுக்கு முறைகளுக்கான காரணங்கள், முட்டாள்த் தனமான எண்ணங்களினால் கட்டப்பட்டுள்ள சமூகக் கட்டுமானங்களும் அதைத் தகர்க்க வேண்டிய தேவைகள் எனப் பல சமூக, பொருளாதார, அரசியல் தளங்களை இந்த ஒரு சிறிய சிறு கதைத் தொகுப்பில் அவர் தொட்டுச் சென்றுள்ளார்.

அவருடைய ஏனைய படைப்புகளை தேட வேண்டும் என்ற உந்துதலைத் தந்த ஒரு படைப்பு இது. இதில் சில கதைகள் பல தசாப்தங்களிற்கு முன்பே எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் அன்று அவர் கதைகளில் கூறப்பட்டிருந்த அதே விடயங்களுக்கெதிராக, சமூக மாற்றத்திற்காய் நாம் இன்றும் போராடிய வண்ணமே இருக்கிறோம். ஆக , அன்று தொடக்கம் இன்று வரை சமுதாயத்தில் பெரும் மாற்றம் ஒன்றும் வந்ததாய்த் தெரியவில்லை என்பது துயரம்.

# தாலாட்டுபவள்

## ஓர் சிரியக் கவிதை



**தமிழில் க.கலாமோகன்**

(Nouri Al-Jarrah *1956 ஆம் ஆண்டு சிரியாவில் பிறந்து 1986 இல் இருந்து லண்டனில் வாழ்பவர். சிரியா நாட்டு அராபிய மொழியில் இவர் எழுதிய கவிதைகள் ‘தூங்குபவனின் புன்னகை‘ எனும் தலைப்பில்* Antoine Jocky *இனால் பிரெஞ்சில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* Al-Kâtiba *(எழுத்தாளி) எனும் இதழை, இந்தக் கவிஞர் அராபியப் பெண்களது எழுத்துக் கலைக்காகத் தொடங்கியவர். 15 கவிதை நூல்களை வெளியிட்ட இவரது கவிதைகளில் ஒன்றினை பிரெஞ்சு மொழிபெயர்ப்பிலிருந்து தமிழிற்கு மொழிபெயர்த்துள்ளேன்.)*

தூங்கு,
எனது இனியவனே தூங்கு
வழங்குனர்கள் மீண்டும் வந்தார்கள்
துறைமுகத்தின் குளிரான சாலையோரங்கள்
அதிர்ந்து கொண்டேயுள்ளன

தூங்கு, எனது இனியவனே தூங்கு.

தூங்கும் அறையை நோக்கிய தாழ்வாரங்களையும்
துறைமுகங்களையும் இனிய மனிதர்கள் கடந்தார்கள்
தூங்கு
அவர்களது விழிகள் மூடப்பட்டுள்ளன
அவர்களது கரங்களிலிருந்து சொர்க்க நறுமணம் வீசுகின்றது
தூங்கு
உனது உறக்கத்தை விட்டு நான் நகர
தூங்கு
நிலவு உடைந்தது, எனது நினைவுகள் யாவும் வெண்மை

தூங்கு, எனது இனியவனே தூங்கு

தூங்கு, நான் உன்னை வயலுக்குக் கூட்டிச் செல்வேன்
தூங்கு
உனக்காக நான் ஓர் அப்பிளைப் பிடுங்குவேன்
தூங்கு,
புயலையும், பறவையினையும் மிஞ்சிய உயரத்தில்
நான் உன்னைத் தூக்குவேன்

தூங்கு, எனது இனியவனே தூங்கு

அப்பிள்கள் மருட்சியிலும் அவைகளது கிளைகள்
முணுமுணுத்துக்கொண்டும் உள்ளன
இயற்கை உறக்கத்தில், கற்பனைகள் சிரித்தபடி
தூங்கு தூங்கு தூங்கு
ஓர் குழந்தை தூங்குவது போல
சிறுவர்கள் களிமண் கூடிய தண்ணீரில் சந்தோசமாக
நடக்கின்றனர்
சிறிய கற்கள் பிரகாசிக்கின்றன, பேசுகின்றன
தூங்கு

தண்ணீர் பக்கங்களைப் புரட்டுகின்றது
உருவங்கள் தப்பியோடுகின்றன
தூங்கு

கைகளை விட்டு மீன்கள் நழுவுகின்றன
நரி மீண்டும் வந்தது, உனக்கு முயலைத் தந்தது
தூங்கு

பறவை கீழே வந்தது, தண்ணீர் மேலெழுகின்றது
தூங்கு

தண்ணீர் தன்னை நினைக்கின்றது
தூங்கு
செதில்கள் வெண்ணிறத் தோற்றம் கொள்கின்றன
தூங்கு

தூங்கு, எனது இனியவனே, தூங்கு

துர்நாற்றம் பரவுகின்றது, துறைமுகங்கள் படகுகளை
வரவேற்கின்றன

வெண்மை தனது இறக்கைகளை விரிகின்றது
துயரத்திற்கு முழுமுணுப்பு அதனது இடத்தைக் கொடுக்கின்றது

எனது இனியவனே, நீ தூங்குவதற்கு எதனைக் கொண்டு
உன்னைக் கவரப்படுத்தலாம்?

உனது தூக்கத்தை அச்சுறுத்த துப்பாக்கிகள்
காத்துக்கொண்டுள்ளன
தூங்கு
விமானங்கள் உனது தூக்கத்தைக் கீறுகின்றன
தூங்கு

வெண்மையில் நீ தூங்கு, இரத்தக் கறைபடிந்த மூக்குத்
துடைப்புத் துணியில் நினைவினை இருத்து
கதவின் பின்னால் விழுந்த இலைகளைக் கூட்டும் காற்றால்
தாலாட்டப்பட்டு நீ தூங்கு
காற்றினது திரைகளின் பின் எழுத்துகளில் நீ தூங்கு
சித்திரத் தையல் உடைவில்
வானத்தின் அனாதையான நீ
தூங்கு

தூங்கு எனது இனியவனே தூங்கு

இரத்தத்தின் செம்மை ஜொலிக்கின்றது
இராணுவத்தினர் அண்மைய கடந்த காலத்தைச் சுமக்கின்றனர்.

வெண்மையானதும் துடிப்பானதுமான ஓவியத்தில் தூங்கு
நித்திரையின் பிரமாதத்தில் தூங்கு
உனது கையில் இடைஞ்சல்படும் ஒளியின்மீது தூங்கு
தூங்கு நான் உன்னை ஆழமான தூக்கத்தில் இருப்பதற்கு
இந்தத் தூக்கம் உனது ஆன்மாவை எனக்குக் காட்டுவதற்காக.

தூங்கு உனது கட்டிலில்
நீ மரணிக்காதே
கதையில் நீ தூங்கு
நீ மரணிக்காதே

பேரார்வம் சொட்டுகின்ற
புன்னகையில் நீ தூங்கு
மரங்களில் தூங்கு
அமைதியில் தூங்கு

தூங்கு, எனது இனியவனே, தூங்கு.

இறகுகள் மிதக்கின்றன, காற்று மெதுவாகக் கடக்கின்றது
தூங்கு
பறவை தனது இறகை மறைத்த இருளுக்குள் தூங்கு

தூங்கு
தூங்கு
தூங்கு, தூங்கு
தூங்கு, தூங்கு, தூங்கு

தூங்கு, தூங்கு, தூங்கு
தூங்கு, தூங்கு
தூங்கு

தூங்கு, எனது இனியவனே, தூங்கு.

அ

# ஒரு
# ‘நான் ஏன் பிறந்தேன்?’
# மோமன்ட்!



ஜோர்ஜ் இ.

என்னுடைய புகைப்பட வில்லைத் (Lens) தொகுப்பில் இருக்க வேண்டும் என்று நீண்ட காலமாக நான் வாங்க விரும்பிய வில்லை Canon EF 85mm f/1.8 வில்லை.

மனிதர்களின் முகங்களைப் படம் பிடிக்கும் portrait படப்பிடிப்புக்கு சிறந்த வில்லை அது.

பின்னணியை மங்கலாக்கி, முகத்தை தனிமைப்படுத்தித் தூ க்கலாக்குவது மட்டுமன்றி, gives increased rates of compression without distorting the subject's features.

முகத்தின் அழகான அம்சங்களைத் திரிவுபடுத்தாமல் மெருகூட்டக் கூடியது.

ஆனால் புதிதாக வாங்குவதாயின் அதன் விலை சற்றே அதிகம்.

அந்த விலைக்கு வாங்கும் அளவுக்கு நான் படப்பிடிப்பில் பணம் எதுவும் சம்பாதிப்பதும் இல்லை.

அல்லது போராட்டத்திற்குப் பணம் சேர்த்தவனும் இல்லை.

என்னுடைய மற்ற ஆர்வக் கோளாறுகள் மாதிரித் தான் இதுவும்.

இப்படி வாங்கிக் குவித்த கருவிகள் இங்கே ஏராளம்.

மண்வெட்டிகள் முதல் இசைக் கருவிகள் வரைக்கும்!

மயிர் பிடுங்கும் மெஷின் உட்பட...

சிரட்டையில்!

கோரிக்கையற்றுக் கிடக்கின்றன,

வேரிற் பழுத்த பலா போல!

எனவே, நீண்ட காலமாக அவ்வப்போது எண்ணம் வரும் போதெல்லாம் இணையத்துச் சந்தைகளில் அதைத் தேடுவதுண்டு.

எந்தப் பொருளை வாங்குவதற்குத் திட்டமிட்டாலும், அதற்கு என் மனதில் ஒரு விலை மதிப்பு இருக்கும். அந்த விலைக்குள் கிடைத்தால் மட்டுமே வாங்கிக் கொள்வது. இல்லையேல் அதைப் பற்றி அலட்டிக் கொள்வதில்லை.

சந்தை மரக்கறிகள் என்றாலும்!

இப்படி இந்த வில்லை, நீண்ட காலம் இடைக்கிடை கைக்கெட்டியும் வாய்க்கெட்டாமல் போய் விடும். எங்காவது நான் எதிர்பார்த்த விலையில் விற்பனைக்கு வரும்போது, நான் வாங்குவதற்கு திட்டமிடுவதற்குள் எவராவது அபகரித்துக்கொண்டு போய் விடுவார்கள்.

அப்படி பெரும் மவுசான வில்லை அது.

சந்தையில் அதிக காலம் நிலைப்பதில்லை.

வீதியோரப் பூவும் ஜன்னலோரப் பெண்ணும் மாதிரி!

அதிட்டமோ என்னவோ, பயன்படுத்தினாலும் பாதி விலைக்குக் குறைவாக விற்பனைக்கு போட்ட ஒருவருக்கு அனுப்பிய உட்பெட்டிச் செய்திக்கு பதில் வந்தது.

விற்ற படப்பிடிப்பாளர் ஒரு பெண்.

நானும் வழமையான யாழ்ப்பாணிப் பாரம்பரியப்படி 'குறைக்க மாட்டியளோ?' தான்.

ஆனால் எனக்கு அறநெறிகளும், தர்மங்களும் உண்டு.

விலை அறுதியும் இறுதியுமானது என்று நீ குறிப்பிடவில்லை, எனவே கேட்பதில் தப்பு இல்லை என்று நினைக்கிறேன்.

I don't want to insult your intelligence. But, it doesn't hurt to ask as you said nothing about the price being firm என்று தொடங்கி...!

கேட்ட விலைக்குத் தர சம்மதித்த பின்னாலும், பணத்தைக் கொடுக்கும் போது, ஒரு 'இரண்டு ரூபாய் குறை' என்று

இப்படி இந்த வில்லை, நீண்ட காலம் இடைக்கிடை கைக்கெட்டியும் வாய்க்கெட்டாமல் போய் விடும். எங்காவது நான் எதிர்பார்த்த விலையில் விற்பனைக்கு வரும்போது, நான் வாங்குவதற்கு திட்டமிடுவதற்குள் எவராவது அபகரித்துக்கொண்டு போய் விடுவார்கள்.

அப்படி பெரும் மவுசான வில்லை அது.

சந்தையில் அதிக காலம் நிலைப்பதில்லை.
வீதியோரப் பூவும் ஜன்னலோரப் பெண்ணும் மாதிரி!

யாழ்ப்பாணி அழுங்கு மாதிரி இரண்டு மணித்தியாலம் கெஞ்சிக் கொண்டிருக்க மாட்டேன்.

பெறுமதி தெரியும், இந்த விலையில் தரச் சம்மதித்ததற்கு நன்றியும் மகிழ்ச்சியும் என்று சொல்லித் தான் வாங்கிக் கொள்வதுண்டு.

பெரிய புத்திசாலி மாதிரி அடிமாட்டு விலைக்குக் கேட்டோ,

Price firm என்று போடுகிறவர்களிடம் போய் 'குறைக்க மாட்டியளோ?' என்றோ, மொக்கையீனப்படுவதும் இல்லை.

எனவே, சொன்ன விலையிலும் சற்றே குறைவாகத் தர சம்மதித்தால் நாளைக்கு காலையிலேயே இன்ன நேரம் வந்து வாங்கிக் கொள்கிறேன், நான் இங்கிருந்து புறப்படும்போது உனக்குச் செய்தி அனுப்புவேன், (நீ அனாவசியமாகக் காத்திருக்கத் தேவையில்லை) என்று அனுப்பிய செய்திக்கு...

சாதகமான பதில் வந்தது.

சின்னக் கடையில் மீன் விற்கிற பெண்களுடனான பேரம் பேசுதலாக இருந்திருந்தால், என் அம்மா தன் கல்லறைக்குள் உருண்டிருப்பாள்.

அல்லது அதற்குள் இருந்து கிளம்பி வந்து என்னை நாலு உழக்கு உழக்கியிருப்பாள்...

சந்தையில் நாலு பேருக்கு முன்னால் என் மானத்தை வாங்கியிட்டியேடா? என்று.

வழமையில் இப்படிப் பொருள் விற்கும் பலர் தங்கள் வீடுகளுக்கு அந்நியர்கள் வருவதை விரும்புவதில்லை. எனவே முன்கூட்டி சம்மதித்த பொது இடங்களிலேயே இவ்வாறான வியாபார விடயங்களை முடித்துக் கொள்வதுண்டு.

குறிப்பாகப் பெண்கள்.

ஆனாலும், இது போன்ற பெறுமதியான பொருட்களை இப்படியான இடங்களில் வாங்குவதில் ஆபத்தும் உண்டு. பழுதான பொருட்களைத் தந்து விட்டால், பிறகு ஆட்களைத் தேடிப் பிடிக்கவே முடியாது.

நீண்ட நாட்களுக்கு முன் வேலை செய்த இடத்தில், இரவு

உணவு நேரத்தில் வெளியே போன ஒருவர் வீதியில் யாரோ வழி மறித்து மலிவாக விற்ற புது வீடியோக் கமெராப் பெட்டியை வாங்கி வந்து, வேலையிடத்து உணவு அறையில் பிரிக்க...

செங்கட்டி இருந்தது.

என்னவோ, முதலில் ஒரு பொது இடத்தில் சந்திப்போம் என்றவர், ஏனோ என்னில் நம்பிக்கை கொண்டு வீட்டுக்கே வரச் சொல்லி விட்டார்.

இப்படி எத்தனை பேரை முகம் தெரியாமலேயே நம்ம எழுத்து வசியம் பண்ணியிருக்குமோ?

ஆனால் ஒரு நாற்பது கிலோமீட்டர் கார் பயணம்.

அதுவும் குளிர் காலம்.

அதனால் என்ன? அந்த விலைக்கு குளிரும், சுமை கூலியும் பெரிதல்ல.

விற்பனை செய்தவர் ஒரு பெண். ஆப்கானியர்.

என் தோற்றத்தைப் பார்த்து மதிப்பீடுகள் சற்றுக் குறைவாக இருந்திருக்கக் கூடும்.

வில்லை பற்றிய பெருமைகளையும் விளக்கங்களையும் ஆரம்பிக்க...

அது ஏற்கனவே தெரிந்ததால் தான் வாங்க வந்திருக்கிறேன் என்றேன்.

விரிவுரை அத்தோடு நிறுத்தப்பட்டது.

திருமணப் படப்பிடிப்பாளர். ஆப்கானிஸ்தானாக இருந்தால், படப்பிடிப்பாளர் என்றால் ஆணாக இருந்தாலேயே கொலை செய்யப்பட்டிருக்கக்கூடும்... படம் பிடித்தல் ஹராம் என்று!

இது கனடா. பெண் சுதந்திரமாகவே திருமணங்களில் பெண்ணின் அழகைப் படம் பிடிக்கக் கூடியதாக இருக்கிறது.

சில நேரம், பெண்ணாக இருப்பதே இங்கே அவருக்கு சாதகமாக இருந்திருக்கவும் கூடும்.

மணப் பெண்ணை ஒரு பெண் படம் பிடிப்பது இங்கேயுள்ள ஆப்கானிய ஆண்களுக்குப் பாதுகாப்பு உணர்வாகவும் இருந்திருக்கலாம்.

அந்தப்புரங்களுக்குள் பயமின்றி அனுப்ப அவர்கள் சம்மதிக்கக் கூடும்.

சாத்தானின் பாவச் சோதனைகள் ஆண்களுக்கு மட்டும் தானே!?

பெண்களைச் சாத்தான் சோதனை செய்யாது என்பதனால் தானே, அவர் தன் பாதுகாப்புக்கு ஆண்கள் எவரையும் அருகில் வைத்திருக்கவும் இல்லை.

கொண்டு போன எனது புகைப்படக் கருவியில் பொருத்தி, auto-focus வேலை செய்கிறதா என்று பரீட்சித்துப் பார்த்தேன். அதைக் குளிரில் பொருத்துவதே கஷ்டமாக இருந்தது. என் கையிலிருந்த கார் திறப்பை தான் வாங்கிக் கொண்டு, நான் பொருத்தும் வரையில் காத்திருந்தார்.

மகிழ்ச்சியோடு பணம், பொருள் பரிமாற்றத்தோடு வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டோம்.

இதையெல்லாம் வாங்குவது பிரச்சனையில்லை.

அது பாதிக் கிணறு தாண்டிய மாதிரித் தான்.

படம் பிடிப்பதற்கு மொடல் அழகிகள் வேண்டுமே!?

வீட்டில் உள்ளோருக்கு போஸ் கொடுப்பதில் எல்லாம் நாட்டம் கிடையாது.

வீட்டு நாய் உட்பட!

மொத்தத்தில் யாரும் ஒரு திறமைசாலியை நம்புவதுமில்லை. மதிப்பதுமில்லை.

முன் பின் தெரியாதவர்களிடம் சிகை, புருவ அலங்காரங்கள் செய்ய சம்மதிப்போர் கூட, முன் பின் தெரியாத படப்பிடிப்பாளனை தங்களைப் படம் பிடிக்க அனுமதிப்பதில்லை.




**மணப் பெண்ணை ஒரு பெண் படம் பிடிப்பது இங்கேயுள்ள ஆப்கானிய ஆண்களுக்குப் பாதுகாப்பு உணர்வாகவும் இருந்திருக்கலாம்.**

**அந்தப்புரங்களுக்குள் பயமின்றி அனுப்ப அவர்கள் சம்மதிக்கக் கூடும்.**

**சாத்தானின் பாவச் சோதனைகள் ஆண்களுக்கு மட்டும் தானே!?**

**பெண்களைச் சாத்தான் சோதனை செய்யாது என்பதனால் தானே, அவர் தன் பாதுகாப்புக்கு ஆண்கள் எவரையும் அருகில் வைத்திருக்கவும் இல்லை.**

தங்களின் அழகை, திறமைக்கான ஆதாரங்கள் எதுவும் இல்லாத தேர்ச்சியற்றவர்களின் கையில் கொடுப்பதை யாரும் விரும்புவதில்லைப் போலும்.

ஒரு லக்ஸ் சோப்பில் வைக்கும் நம்பிக்கையைக் கூட, அழகுதாரகைகள் ஒரு புகைப்படக்காரனில் வைப்பதில்லை.

எந்தத் தீர்க்கதரிசியும் தன் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்று யேசுவே சொல்லியிருக்கும் போது, ஒரு திறமைசாலி வீட்டில் ஏற்றுக் கொள்ளப்படாமல் இருப்பது இந்த புலியைக் கடித்த யாழ்ப்பாணிக்கு ஒன்றும் ஆச்சரியப்படும் விடயம் அல்லவே!?

தயக்கம் இல்லாமல் போஸ் கொடுக்கக் கூடிய பேர் (பெற்ற) அழகிகளும், உள்ளங் கவர் கள்ளிகளும் உலகெங்கும் நட்பில் இருக்கிறார்கள்.

பேஸ்புக்கில் தான்.

உள்பெட்டிக்குள் இல்லை!

இங்கே கூட, கேட்டுப் பார்ப்பதற்கு யாரும் பக்கத்திலும் இல்லை...

அதாவது பேரழகிகள்.

ஆக, வாங்கி ஓரிரு வருடங்கள் இருக்கலாம். யாரையும் படம் எடுக்கச் சந்தர்ப்பம் வரவேயில்லை.

தூர இருக்கும் பறவைகளையும், அருகில் இருக்கும் பூக்களையும், கொஞ்சம் தள்ளி இருக்கும் கள்ளிகளையும் படம் பிடிக்க அதற்கான Tele, Macro lens கள் கை வசம் இருப்பதால், அவை எப்போதும் பாவனையில் இருந்து படப்பிடிப்பு தொடர்ந்த வண்ணமே இருந்தது.

இம்முறை அபத்தத்தில் கவிதைகளின் படங்கள் என்னுடையவை தான். பக்க வடிவமைப்புக்காகக் கத்தரிக்கப்பட்டிருக்கின்றன.

இது மட்டும் என் கை படாத ரோஜாவாக கவனிப்பாரற்றுக் கிடந்தது.

பக்கத்து வீட்டு இத்தாலித் தந்தை நோய் வாய்ப்பட்டு படுக்கையில் உள்ளார். இல்லாவிட்டால், என்னோடு போட்டி போட்டுக் கொண்டு இந்த கோடை காலத்தில் தோட்டம் கொத்திக் கொண்டு இருந்திருப்பார். கவனிப்பாரற்றே அவரது தோட்டம் களை மண்டிப் போய் கிடக்கிறது. அதையும் கொத்திப் புரட்டுவதாக உறுதி அளித்திருக்கிறேன். அந்தக் களைகளை விட்டால், என் தோட்டத்தையும் காவு கொண்டு விடும்.


அத்தோடு அதை யூடியூப்பில் போட்டு ஒரு யூடியூபராகும் கனவு வேறு!

பெரியதொரு மாளிகை சைஸ் வீட்டில் தனித்து வசிக்கும் அவரையும் தாயையும் பார்க்க பிள்ளைகள் வருவார்கள்.

அதில் கடைசி மகன் நாங்கள் இங்கே வந்த போது பள்ளி மாணவனாக இருந்தவன்.

இப்போது திருமணம் முடித்து இரண்டு பிள்ளைகள்.

மகளும் மகனுமான அழகான



சுட்டிகள்.

அவனை அந்த நேரம் தாய் சப்பாத்தால் அடித்ததை என் மனைவி கண்டும் இருக்கிறாள். இப்போதும் சொல்லிக் கொள்வாள்... எனக்கு.

இத்தாலியன் மம்மாக்கள் பற்றி தனிக் கதையே உண்டு.

Mama mia!

இத்தாலிய பிரதமராக இருந்த சில்வியோ பேர்லுஸ்கோனி கூட, 72 வயதிலும் 95 வயதான தன்னுடைய மம்மா மேல் பயம் கொண்டிருந்தார்.

இந்த இத்தாலியன் மம்மாக்கள் பற்றி ரைம் சஞ்சிகையிலோ எதிலோ தனிக் கட்டுரையே வந்தது.

சில நேரம் அவர்களுக்குப் போட்டியாக இருக்கக் கூடியது நம்ம சின்னக்கடை மீன்கார மம்மாக்களாகத் தான் இருக்கும்.

Sans கெட்ட வார்த்தைகள்.

வந்தவர்கள் முற்றத்துப் புல் வெளிக்குள்ளால் குடும்பமாக என் மனைவியோடு சுகநலம் விசாரிக்க, தோட்டத்தில் கொத்திக் கொண்டிருந்த என்னை என் மனைவி அவசரமாகக் கூப்பிட்டாள்.

ஓடி வந்து பார்த்தால்...

அவர்களோ குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு, ஸ்டூடியோவில் போஸ் கொடுப்பது போல...

புல் வெளியில் நிற்கிறார்கள்.

அவர்களைப் படம் எடு எனக் கட்டளையிட்டாள்.

அவர்கள் முன்னாலேயே!

மறுக்கவா முடியும்?

இத்தனை ஆயிரம் டொலர்கள் பெறுமதியான புகைப்படக் கருவிகள் புல் வெளியில் வீசப்படுவதற்கான காரணமாக நான் இருந்து விடக் கூடாதன்றோ!?

சற்றே பொறுங்கள் என்று ஓடிப் போய் கருவியைத் தூக்கி வந்து,

சட... சட... சட...!

இதற்குள் தாய் வந்ததும், பேரர்களை வைத்துப் படம் எடுப்போம் என்று நான் சொன்னதும் மகிழ்ச்சியோடு படிகளில் உட்கார்ந்தார்கள்.

எடுத்து முடிய, உடனேயே கை வசம் இருந்த USB stick இல் பதிந்து கொடுத்து விட்டேன்.

படங்கள் மிகவும் நன்றாகத் தான் வந்திருந்தன.

ஆனாலும், ‘உலகத்தரமான படங்களை நான் எடுத்திருக்கிறேன், என்னைப் போல படங்கள் எடுக்க இங்கே யாரும் கிடையாது’ என்று என்னை நானே புகழ்ந்துகொள்ள நான் என்ன தமிழ் இலக்கிய மேதகுவா?

சில நாட்கள் கழிந்து, நோய் வாய்ப்பட்டிருந்த தந்தையைப் பார்க்கப் போனேன்.

படம் பார்த்தீர்களா என்று கேட்ட போது, இல்லை, மகன் கொண்டு போய் விட்டான், எங்கள் கணினி வேலை செய்யாது என்றார்கள்.

இரண்டு நாட்களின் பின்னர், என்னுடைய மடிக்கணனியில் போட்டுக் கொண்டு போய், படுக்கையில் இருந்த தந்தைக்கும், அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்த தாய்க்கும் படங்களைக் காட்டினேன்.

இருவருக்கும் மட்டில்லாத மகிழ்ச்சி.

படங்கள் நன்றாக இருப்பதை அவர்களின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியிலேயே உணரக் கூடியதாக இருந்தது.

இருவரும் கோரஸாக சொன்னார்கள்...

‘ஓ, உன்னுடைய கமெரா நல்ல கமெரா, நன்றாகப் படம் எடுக்கிறது.’

ஆக, படம் மனதுக்குப் பிடித்ததாக இருக்கும் போது, யாரும் ‘நீ ஒரு சிறந்த படப்பிடிப்பாளன்’ என்று சொல்வதே இல்லை.

இதற்கு இவ்வளவு பணம் செலவிட்டு, நெடுங்காலம் காத்திருந்து, நெடுந்தூரப் பயணங்கள் செய்து அலைந்து எல்லாம் கருவிகள் வாங்கி, எத்தனையோ தொழில்நுட்ப விடயங்களைக் கற்றுத் தேர்ந்து ஒரு படப்பிடிப்பாளனாகும் எண்ணம் இல்லாமல்...

பேசாமல் ஒரு இலக்கியவாதியாக காலத்தைப் போக்கியிருக்கலாம்.

பிழைப்பும் நடத்தியிருக்கலாம்.

கூழ் குடிக்க டிக்கட் போட்டு விமானத்தில் வர வைக்கும் அளவுக்கு!

எந்த விதமான அறிவோ, செலவோ தேவையில்லாமல்...

ஒரு கவிதையோ, கதையோ எழுதினால்...

யாரும் ‘நீ ஒரு நல்ல பேனா வைத்திருக்கிறாய், அது நன்றாக கவிதை எழுதுகிறது’ என்றோ, ‘உனது மின்கணினி மிகவும் சக்தி வாய்ந்தது, அதனால் நல்ல கதைகளை எழுத முடியும்’ என்றோ சொல்லுவதேயில்லை!




இத்தாலிய பிரதமராக இருந்த சில்வியோ பேர்லுஸ்கோனி கூட, 72 வயதிலும் 95 வயதான தன்னுடைய மம்மா மேல் பயம் கொண்டிருந்தார்.

இந்த இத்தாலியன் மம்மாக்கள் பற்றி ரைம் சஞ்சிகையிலோ எதிலோ தனிக் கட்டுரையே வந்தது.

சில நேரம் அவர்களுக்குப் போட்டியாக இருக்கக் கூடியது நம்ம சின்னக்கடை மீன்கார மம்மாக்களாகத் தான் இருக்கும்.

Sans கெட்ட வார்த்தைகள்.

# முதலிரவு! மற்றும் இரண்டாம் மூன்றாம் இரவுகளும்.!!!!



*1.*

எப்படிச்செய்வதென்று தெரியாது. வேடிக்கை யாதெனில், வாஸ்தவத்தில், ‘அதை‘ எப்படிச்செய்யாமல் விடுவதென்றுதான் தெரியாது!!!

செய்யாமல் விடுவதென்ற விஷயத்தின் தெரியாதமையை எப்படி செய்வதென்று தெரியாமல் இருப்பது, நிஜத்தில் ஒரு படுஊமுரண் விவகாரம்தான்.

நிஜத்தின் முரண் விவகாரங்களே உலகின் அழகு.

இந்த ‘அபத்த‘, அயதார்த்த, முரண் சில்லெடுப்பில் மாட்டுண்டு இருந்தவள் கண்ணகி.

கண்ணகிக்கு வயது இருபத்தியேழு. போன மாத முடிவில்தான் அவளது பிறந்தநாள் வந்திற்கு.

இந்த முரண் சில்லெடுப்பு ஒரு நீண்ட கதை.

**சிறினோ சிறி சிறிசு**

அதை சுருக்கமாகத்தான் சொல்லலாம்.

இந்த ‘அது‘ என்பது ‘முதலிரவு உடலுறவு‘.

முதலிரவின் உடலுறவில் காம ரீதியான சிக்கல் நிறைய்ய்ய பொருந்தியிருக்கலாம். ஆனால், எளிய கரும ரீதியான சிக்கலேதாவது இருப்பின், அது பெரும் சிக்கல் சில்லெடுப்புத்தான். கோவி என்று அழைக்கப்படுகிற கோவிந்தன் என்ற கோவிந்தராஜ், மிக இறுக்கமாக சொல்லியிருந்தான், கண்ணகிக்கு.

எக்காரணங்கொண்டும் ‘அவனுடன்’, விருப்பத்துக்கு எதிராய், அடாத்தாக, வெருட்டி வற்புறுத்தி கல்யாணம் செய்து வைக்கப்பட்ட ‘புது: விரும்பா கணவனுடன்’ படுக்காதே, என்று.

‘நீ என்ன செய்வியோ, ஏது செய்வியோ, ஏதாவது வழிப்பண்ணி, எதையாவது வழிப்பண்ணி, அவனுடன் படுப்பதை தவிர்,‘ என்று இறுக்கமாக சொல்லியிருந்தான்.

அது சும்மா இறுக்கம் இல்லை படிறுக்கம்.

‘அது’, ‘ஏன்’ கோவிக்கு அத்தனை முக்கியமானதாக இருக்கிறதென்பது கண்ணகிக்கு புரியாவிட்டாலும், ‘அது முக்கியமான ஒன்றுதான்‘ என்று அவளுக்கு பெரும்படியாய் புரிந்திருந்தது. இந்த ‘ஏன்’ இற்கு பதில், ஆண்களுக்கு ‘ஒரு மாதிரியாயும்‘ பெண்களுக்கு ‘இன்னொரு மாதிரியாயும்‘ ‘ஏன்’ ஏன் இருக்கிறதென்பது, பற்றி ஐயந்திரிபற எவருக்குமே தெரியாது, என்பதுதான். மானுஷ்ய சமூக, ஆண்:பெண் அடிப்படை குணரீதியான வித்தியாஸங்களின் மூல அழகே இதுதான்.

இதுவும் இல்லையென்றால்.??!!

'All the men of the whole world would die before knowing who a woman is' என்பதற்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கக்கூடும்.

சரியாய்த்தெரியாது.

‘அதை‘ எப்படிச்செய்யாமல் விடுவது?!

அது தன் கையில் இல்லை, என்பது கண்ணகிக்கு தெரியும். அது விரும்பா புது கணவனின் கையிலேயே முழுமையாய் இருப்பதையும் அவள் அறிவாள்.

‘கடைசியில்‘, முதலிரவும் வந்தது.

முதலில், கடைசி இரவு வந்திருந்தால் அவள் தப்பியிருந்திருக்கக்கூடும்.

ஆனால், முதலில் வந்ததோ முதலிரவுதான்.

வேறு வழி இல்லாமல், கதவைத்திறந்து கொண்டு, பெரும் எதிர்பார்ப்புடனும், மதனத்துடனும் காத்துக்கொண்டிருந்த ‘புது விரும்பா கணவனிடம்‘ போனாள், கண்ணகி.

*2.*

கண்ணகியின் மிக்க நெருக்கமான நண்பி மாதவி.

“

கொளுத்தி விடுவதில், ‘கொளுத்தாடு‘ பிடிப்பதில் கிழவியை விஞ்சியோர் இலர். கூனி மந்தாரை, தாடகை, சூர்ப்பனகை என்ற எல்லா ராமாயண பாத்திரங்களையும் கூட்டினாலும் கொடிச்சிவாலிக்கிழவிக்கு ஈடாகா.

‘சீமான் அதிஸ்டசாலி. இவளோடையிருந்து உத்தரிக்காமல் வேளை காலைக்கே போய்ச்சேர்ந்திட்டான்,‘ என்று கிழவியின், நீண்டநாள் முன் இறந்த புருஷன்காரனைப்பற்றி ஊர் பேசுகிற அளவுக்கு கிழவி கொடிச்சி வாலி.

கிழவி விடிகாலையில் மூஞ்சி கழுவுகிறதோ இல்லையோ, எங்கு எதை மூட்டி, ஊத்தைத் தண்ணீரால் யாரைக் கழுவி நாற்றிக்கலாமென்றே தூக்கம் கலைந்தவுடன் சிந்திக்கும். தேவையற்ற ஆட்களிடம் தேவையில்லாமல் போய் தேவையற்ற கதை பேசி, மூட்டி வைக்கும், மூளியலங்காரி.

”

‘இந்த கண்ணகிக்கோ மாதவிக்கோ, பழம்பனுவல் சிலப்பதிகாரத்து கோவலன் மனைவி, கள்ள வைப்பாட்டி ஆயோருக்கோ எவ்வித சம்பந்தமும் கிடையாதென்பது பிரதானமாய் இத்தால் குறிப்பிடப்பாலது.

அவளுக்கும் வயது இருபத்தியேழுதான்.

பால்யத்திலிருந்து தெரிந்து, பள்ளியில் ஒரே வகுப்பில் படித்து, இன்றுவரை மிக்க அண்மித்த ஸ்நேகிதிகள். உயிர் நட்பு என்பார்களே, அதுபோலிருக்கலாம். ஆளுக்காள் ரகஸ்யம் கிடையாது, இன்றுவரை. அவள்தான் கண்ணகியின் கோவிந்தனுடனான நான்கு வருஷ ‘விடுதூது’.

ஒருவகையில் இருவருக்குமிடையில் ‘காந்தக்கந்தர்வத்தை‘ கிளப்பி விட்டதே மாதவிதான். ஆச்சர்யமாக, பரஸ்பரத்துக்கு மாதவியை அவளது கம்பீரமான காதலமகனுடன் கொழுவி வைத்தவளுமே கண்ணகிதான்!!!!!

ஆளுக்காள் காதலுபகாரம்.

ஒரு மாற்றேற்றம் மாதிரி. வேளைகளில், மற்ற ஏற்றம் மாதிரியும்.

இயல்பில், பெருங்கூச்சலான கண்ணகிக்கு, அடிமேல் அடியடித்து, விடுதூதராகி, பொருத்திவிட நிறைய முக்க வேண்டியிருந்தது, மாதவிக்கு. ஈற்றில், குண்டம்மி நகர்ந்தது.

இந்த காதல் சமாச்சாரங்களுக்கு எப்போதும் ஒரு விடுதூதாவது இருந்து விடுகிறது.

அறிவுரை சொல்ல, காதல் தமாஸுகளை பகிர, பெற்றோர்க்கும் உற்றோர்க்கும் கள்ளக்காதல் உறவை எப்படி ஒளிப்பதென்ற தந்திரோபாயத்தை வகுக்க, சிக்கலில் ஆபத்சகாயராக வேடமிட.. ஆய இன்னோரன்ன விவகாரங்களுக்கு இந்த விடுதூதுகள் இன்றியமையாதவை.

நீள்காலமாய், கண்ணகி கோவி காதல் வீட்டுக்கோ ஊருக்கோ எப்பனும் தெரியாமல்தான் கிடந்தது. படுயிர்ப்பாய் இருந்தாலும் ஓரமாய்த்தான் கிடந்தது ஊருக்கு.

படு சாதுரியமாக தமது ரகஸ்யக்காதலை முன் கொண்டு முழக்கினர் காதலர்.

இந்த களவு, ஊர்ப்பரகஸ்யமானது ஒரு கிழவி மூலம்.

சாதா கிழவியல்லள் அவள்.

கொடிச்சிவாலிக்கிழவி என்றுதான் அவளை ஊரறியும்.

கொளுத்தி விடுவதில், ‘கொளுத்தாடு‘ பிடிப்பதில் கிழவியை விஞ்சியோர் இலர். கூனி மந்தாரை, தாடகை, சூர்ப்பனகை என்ற எல்லா ராமாயண பாத்திரங்களையும் கூட்டினாலும் கொடிச்சிவாலிக்கிழவிக்கு ஈடாகா.

‘சீமான் அதிஸ்டசாலி. இவளோடையிருந்து உத்தரிக்காமல் வேளைகாலைக்கேபோய்ச்சேர்ந்திட்டான்,‘ என்று கிழவியின், நீண்டநாள் முன் இறந்த புருஷன்காரனைப்பற்றி ஊர் பேசுகிற அளவுக்கு கிழவி கொடிச்சீ வாலி.

கிழவி விடிகாலையில் மூஞ்சி கழுவுகிறதோ இல்லையோ, எங்கு எதை மூட்டி, ஊத்தைத் தண்ணீரால் யாரைக் கழுவி நாற்றிக்கலாமென்றே தூக்கம் கலைந்தவுடன் சிந்திக்கும். தேவையற்ற ஆட்களிடம் தேவையில்லாமல் போய் தேவையற்ற கதை பேசி, மூட்டி வைக்கும், மூளியலங்காரி. மூதேவி வாலாயக்காரி. மூன்று தெருக்கள் சந்திக்கும் திரிகோண மூட்டினை, முகவாசல் மற்றும் கிழக்கு

வீதியாகக்கொண்ட ஆவளைப்பிள்ளையார் கோவில் வாசலில் நிமிர்ந்திருந்த தேர் முட்டி விசித்திரமானது. மேலேறும் அடுக்குப்படிகளின் இடது பக்கமாய் சத்தாருக்கு எழும்பும் சுவரை அண்டி உட்கோறையான ஒரு கள்ள அறை இருந்தது. உற்சவங்களுக்கு திருவாசி வளை பின்கட்டி, சாமி காவும் வாகனங்கள் உழுத்துப்போனால், புதிது வர, அவற்றினை எறியாமல் இந்த கள்ள அறையில் தேக்குவது, பூசாரிமாரின் வழக்கமாய் இருந்தது.

சாமியேறிய பழைய வாகனங்களை பூச்சாத்தி, ஆளிறங்கா நீர்நிலையில் சூர்ய உதயத்துக்கு முன், கிழக்குப்பக்கமாய் எறிய வேண்டும் என்று ஆகம விதி பூசாரிகளுக்கு தெரியாதிருக்கலாம். முன்னரெல்லாம், மாலை வேளைகளில், ஊர் வாண்டுகள் போளை அடித்து சலித்தபின், கள்ள அறையில் புகுந்து, சாமி வாகனங்களிடையில் ஒளித்துப்பிடித்து விளையாடுவதுண்டு. அதற்கும் சனியன் பிடித்தது கொடிச்சிவாலிக்கிழவியால். தேவையற்ற வகையில், குறளி காட்ட, பையன்களிடம் போய், ‘கும்பலைச்சுடலை முனி கள்ள அறையில் குடியிருப்பதாயும், சிறுவர்களின் இரத்தம் குடிக்க காட்டேறியாய் ஆவலாதிப்படுவதாயும்‘ சும்மா கிளப்பி விட்டபின், திகிலில் பையர் அந்தப்பக்கம் போவதேயில்லை.

ஐயரும் போவதில்லை.

சமசாலை மரவள்ளி மூடல், வெள்ள வாய்க்கால் மதகடி, கீளிச்சந்தைப் பின்புறத்து பீநாறிப்பற்றை மூடல், ஒதுக்காய் இருந்த சந்திக்குத்தி சூலம் குத்திய ஆலமர அடியென்று, நீண்ட நாளாய் ஒளித்து, களவியலும் கற்பில்லா இயலும் விளையாடிய கண்ணகியும் கோவிந்தனும் ஈற்றில், தேர்முட்டியடி கள்ள அறையைக்கண்டு பிடித்தனர்.

உழுத்தாலும் உதவும் வகையிலிருந்த பிள்ளையார் வாகனம் எலி மேல் கோவிந்தனும், முருக வாகனம் மயில் மேல் கண்ணகியும், கள்ள அறையில் குந்தியிருந்து கதை பேசுவது நீள்நாள் நடந்தது.

இடையிடை, எலி மயில்மேல் பாய்ந்ததும் உண்டு.

உள்ளிருட்டு அதற்கு வாகு செய்தது.

அதுவும் ஈற்றில் தூளாய் கிழிந்தது.

அதற்கும் சனியன் பிடித்தது கொடிச்சிவாலிக் கிழவியால்தான்.

கிழவி நேரே கண்ணகியின் தகப்பன்காரனிடம் குடோட்டமாய் போயிற்று.

‘மோனை, உனக்கொரு வியளம் தெரியுமோடாம்பி??!!

உன்ரை மோளும் ‘விய‘ மாலிங்கத்தின்ரை பொடியும், ஆவளைத் தேர்முட்டியடியிலை..

‘லக்கண்ட..லக்கண்ட.. லக்கண்ட.. லக்கண்ட‘..‘ என்று இல்லாதது பொல்லாததையும் அவிழ்த்து விட்டு தீ வைத்தது, கொடிச்சிவாலிக்கிழவி. போச்சு.

“ சமசாலை மரவள்ளி மூடல், வெள்ள வாய்க்கால் மதகடி, கீளிச்சந்தைப் பின்புறத்து பீநாறிப்பற்றை மூடல், ஒதுக்காய் இருந்த சந்திக்குத்தி சூலம் குத்திய ஆலமர அடியென்று, நீண்ட நாளாய் ஒளித்து, களவியலும் கற்பில்லா இயலும் விளையாடிய கண்ணகியும் கோவிந்தனும் ஈற்றில், தேர்முட்டியடி கள்ள அறையைக்கண்டு பிடித்தனர்.

உழுத்தாலும் உதவும் வகையிலிருந்த பிள்ளையார் வாகனம் எலி மேல் கோவிந்தனும், முருக வாகனம் மயில் மேல் கண்ணகியும், கள்ள அறையில் குந்தியிருந்து கதை பேசுவது நீள்நாள் நடந்தது.

ஃஇடையிடை, எலி மயில்மேல் பாய்ந்ததும் உண்டு. உள்ளிருட்டு அதற்கு வாகு செய்தது. ”

3.

கண்ணகி கிட்டமட்ட வீட்டுக்காவலில் வைக்கப்பட்டாள் கொடிச்சிவாலிக்கிழவியின் தீயின் வெக்கையை உடன் அடுத்து.

நீண்ட காலமாய் கண்ணகியை மச்சான் முறைகாரப் பையனுக்கு திருமணிப்பதாய்த்தான் தகப்பன்காரன் திட்டமிட்டிருந்தான். ஒரே சாதி. காசுக்காரக்குடும்பம். பணமும் பணமும் கலக்கும். ஏலவே, தீர்மானமாக கலந்து பேசி முடிவெடுத்த விஷயம்.

கொடிச் சிவாலிக்கிழவி குடுகுண்டைப் போடும்வரை எல்லாம் சுமுகமாய்த்தான் போயிற்று.

ஏற்கெனவே, மனமும் மனமும் என்பதிலும், பணமும் பணமும் என்று போட்ட கல்யாண உடன்பாடிருக்க, இப்படியொரு சில்லெடுப்பு கிளம்பி எகிறுமென கண்ணகியின் தகப்பன்காரன் கனவிலும் கருதவில்லை.

வீட்டுக்காவலில் வைப்பதுதான் உசிதமாகப்பட்டது.

‘மகாலிங்கத்தின் ‘விய‘ மகனுடன் கூட்டிக்கீட்டிக்கொண்டு, ஓடிக்கீடி விட்டால், என்னாவது.??!!‘

வைக்கப்பட்டாள்.

கண்ணகியின் தகப்பன் படுசார் பேர்வழி. ‘பேந்தென்பதும் பின்னையென்பதும் இல்லை, என்பதற்கு சமானம்‘ என்பதை அச்சொட்டாக அறிந்த பேர்வழி.

சடக்குப்புடக்கென்று கண்ணகிக்கும் பணக்காரக்குடும்ப, ஒரே சாதிக்கார, மச்சான் முறைக்காரப் பையனுக்குமான திடீர் திருமண ஏற்பாடுகள் முடுக்கி விடப்பட்டன.

இதெல்லாம் கண்ணகியை வீட்டுக்காவலில் வைத்தபடிதான். அவளால் ஏதுமே செய்ய முடியவில்லை அறையுள் அடங்கி அழுவதைத்தவிர.

அறு தினமும் Bus ஏறிப்போய், நகர் மத்தியில், நல்ல சட்டவாளர் ஒருவருக்கு நல்ல உதவியாளராக இருந்த அவளது நல்ல வேலையும் கெட்ட முடிவுக்கு வந்தது.

கல்யாணத்தை, கட்டென்றால் கட்டவேண்டிய கட்டுமானமே, அப்போ, ஊரிலிருந்த பெண்டுகளின் நிலபரம். இப்படித்தான், கிஞ்சித்தேனும் விருப்பமற்ற, ஒரு விரும்பா மச்சான் முறை ஆளுடன் கல்யாணம் கட்டவேண்டிய கஸ்டம், கண்ணகிப்பெட்டைக்கு வந்து தொலைத்தது.

பிறகு, அந்த, எப்படிச்செய்யாமல் விடுவது, என்று தெரியாத, கோவி,

இறுக்கமாய் தவிர்க்கச்சொன்ன முதலிரவின் உடலுறவு நேரமும் வந்து தொலைத்தது. வந்து தொலைத்தபோது வந்தவை, தொடர்ந்தவை ரொம்ப மதனமானவை. கோவி இறுக்கமாய் சொன்ன ஏதும் தவிர்க்கப்படவில்லை. எப்படி அது ஆகும்.??!!

ஆகாதே.

கண்ணகியின் சால்ஜாப்பேதும் பொசிதமாகவில்லை. எரியெச்சில் கசிய அதரம் பிளந்து, கூர்ப்பல் விழிற, பாய ஓர்மமான புலியின் முன், பிணை மான் என்ன செய்யும்..???!!!!

உரு ஏறி, பூதல வெக்கையெல்லாம் உருண்டித்து, நெம்பு தடியின் நுனியில் இறுகி, சூட்டுக்குருதி வேகமாய்க் கிளர்ந்து, வீசுரமாகி, இடை நவுந்து, உடல் பிணைந்து, நீர் ஒழுகலாக ஆகல்,: ஆகும்போது, தென்பில்லா பிணை என்ன செய்யும்....??!!

ஏதும் இயலாது.

4.

கண்ணகியின் பெருநட்பு விடுதூது மாதவி மாபெரிய master planner/ மூன்றுநாள் 'பிணை பிணைச்சல்' தொடர்ச்சியாய் நிகழ்ந்தது.

உருண்டித்த, பூதல வெக்கையெல்லாம் நெம்புதடியின் நுனியில் ஏறி உரு ஏறிற்று.

மூன்று தொடர் இரவுகளாக. கண்ணகியின் விருப்பு வெறுப்புக்கள் அங்கு கிஞ்சித்தேனும் முக்கியம் பெறவில்லை. ரோதனைதான்.

'அப்பத்தைய' அங்கத்தைய ஊர்ப்பாங்கில் பெண்களின் விருப்புகளுக்கு பெறுதி கிடையாது. ஆண் விருப்பே உதியுயர் விருப்பு.

தொடர்ந்து, கல்யாண சம்பிரதாய அட்டஹாஸங்கள் அமந்தறையாய் நிகழ்ந்தன. கண்ணகியின் தகப்பன்காரன், படு எடுப்பில் குடும்ப அந்தஸ்தை தூக்கிக் காட்டுமுகமாய்த்தான் திருமணச்சடங்குகளை ஒழுங்கு படுத்தியிருந்தான் சாதிமான் தடிப்பைக்காட்ட.

சாதிமான்கள் அந்தஸ்தைக் காட்டுவது ஊர்ப்பாங்கு.

நாலாம் நாள் காலையில்தான், விடுதூது மாதவியின் master plan வில்லிலிருந்து ஏவப்பட்டது. அவள் நாலாஞ்சடங்கு எடுப்புக்கு கண்ணகி வீட்டுக்கு வந்தது தெரியும். நெருக்க நண்பிகள் தம்முள் 'கசமுச' என்று குசுகுசுத்தது தெரியும். சடங்கு வீடு, கண்ணகியின் வீட்டார், மைத்துனன் முறை, விரும்பா புதுக்கணவனின் வீட்டார் என்று யாதும் யாபேரும் நாலாம் நாள் காலை, சாதாரணமாய், சுமுகமாய்த்தான் இருந்தன் இருந்தனர் என்பது தெரியும். பிறகு நிகழ்ந்தவை பற்றி செம்மையாய்த் தெரியாது.

அவை master plan இற்கு உட்பட்டவையாய் இருக்க வேண்டும். பிறகுதான், அல்லது இச்சூழலிலேயேதான் மாதவியின் அந்த 'உச்சத்திட்டம்' அசுமாத்தமேதுமே இல்லாமல் சாதுரியமாக ஏவப்பட்டது.

அது ஏவலோ ஏவல். பேரேவல்.

மாதவி என்ன செய்தாளோ, ஏது செய்தாளோ என்பது பற்றி விளக்கமாக ஏதும் தெரியாது.

ஆனால், யார்க்கும் தெரியாமல் படு ரகஸ்யமாக, சிறு luggage உடன் கண்ணகி வீட்டை விட்டு கிளம்பி, காத்து நின்ற காதலமகன் கோவிந்தராஜுடன் 'கூட்டிக்கொண்டு ஊரை விட்டோடியது' தெரியும்

அது பிற்பாடு, முழு ஊருக்குமே தெரியும்.

ஊரைவிட்டு கூட்டிக்கொண்டு ஓடமுன், கண்ணகியிடம் 'முதமுதல் முதல்முதலான' கேள்வியாக, கோவிந்தன் கேட்டான்‹

'அவனுடன் படுத்தாயா?'

'இல்லை..!!' என்றாள் கண்ணகி.

இதெல்லாம் நடந்தது நீண்ட, நீண்ண்ண்ண்ட காலத்துக்கு முன். காலம் ஓடும் ஓட்டம்,: பிஸாசோட்டம்.

5.

இது நீண்ட, நீண்ண்ண்ண்ட காலத்துக்குப்பின்.

கண்ணகிக்கு விரும்பா ஆளுடன் திருமணம் நிகழ்ந்தமை, முதலிரவு மாத்திரமல்ல, இரண்டாவது மூன்றாவது இரவுகளின் மதன காம அலுவல்கள் நிகழ்ந்தமை, மாதவியின் master plan ஏவலால் காதலரிருவரும் 'கூட்டிக்கொண்டோடியமை'

இவையெல்லாம் அப்போ.

இது இப்போ.

பல சிக்கல்பின் கண்ணகியும் கோவிந்தனும் வெளிநாடு பெயர்ந்திருந்தார்கள். வெள்ளைக்கார வெளிநாடுதான்.

பணக்கார, வெள்ளைக்கார வெளிநாடு. ஊர் போல அல்ல. ரொம்ப திறந்த மனப்பாங்கு கொண்ட சமூக வலையமைப்புக்கொண்ட நாடு.

தம்பதியரின் வாழ்க்கை ஒப்பீட்டுக்கு நீண்ட காலமாய் மிக்க இனியமையாய்த்தான் ஓடிற்று. அசாதாரண, தீவிர மனமுறிவேதும் இருக்கவேவில்லை. இரண்டு விபரமான பிள்ளைகளும் ஆயிற்று.

பிறகு இப்படித்தான், அல்லது இப்படித்தான் பிறகு, அந்த கரிநாளும் வந்திற்று.

அது கண்ணகி:கோவிந்தராஜ் தம்பதியர் வாழ்க்கையின் படு கரிநாள்தான். வெளிநாட்டு, வெள்ளைக்கார மக்கள் வாழ்க்கை பற்றி, ஏற்கனவே, அதிகம் பேசியிருந்தாலும், அன்று என்னவோ கொஞ்சம் கூடுதலாக அது சம்பாஷணையில் கலந்திருந்தது.

'என்னதான் இருந்தாலும், வெள்ளைக்காரன் வாழ்க்கை வெளிப்படையானதுதான். சும்மா பேருக்கு பிறருக்காக வாழமாட்டார்கள். உதாரணத்துக்கு, கல்யாணம் செய்து settle ஆக முன்னர், வேறுவேறு ஆட்களை date பண்ணுவார்கள். அவர்களுடன் படுப்பார்கள். அது நல்ல விஷயந்தானே. அதிலென்ன பிழை??!! கண்டவர்கள் எல்லாம் அதை தப்பென்று எடுப்பதில்லை. அது எவ்வளவு நல்ல விஷயம்,' என்றான் கோவி.

அவனை நிமிர்ந்து ஆழமாய் பார்த்தாள் கண்ணகி

'அதுதானே,' என்று ஆமோதித்தவள், 'எனக்கு, மனதை எப்போதும் கடுமையாய் உறுத்துகிற விசயமொன்றை உங்களுக்கு சொல்லவேண்டும்,' என்று துவங்கினாள்.

கோவிந்தன் ஆவலுடன் நிமிர்ந்தான்.

'முன்னர் நீங்கள் கேட்டபோது, நான் சொன்னது உண்மையல்ல. கல்யாணம் செய்த முதல் மூன்று நாட்களும் நான் அவனுடன் படுக்க வேண்டியதாய்ப்போச்சு.!!!!'

போச்சு.

எல்லாம் போச்சு.

அவ்வளவுதான்.

பிறகு நடந்தது நீண்ட கதை.

'அதை' அண்டி கோவிந்தராஜ், கண்ணகியை விவாகரத்து செய்தது நீண்ட கதை.

அதையெல்லாம் சுருக்கமாக இப்போதைக்கு சொல்ல முடியாது.

# NEO காத்தமுத்து சிவானந்தன்கள்



நிலாந்தன் என்கிற ‘மாயக் கதையாடல் மன்னன்’ அவர்களது ஆய்வுகளின் கதைகளை தமிழ்த் தேசிய மனநோயாளிகள் தொடர்ந்து காவியலைவதன் பின்னால் இருப்பது இலங்கைவாழ் தமிழ் மக்களது ‘நிம்மதியான எதிர்கால வாழ்வு குறித்த அக்கறை’ என்று ஒன்றுமேயில்லை. அது முழுக்க முழுக்க தற்குறித்தனமானது. இந்தவகை மனநோயாளிகள் விரும்பும் வகையில், தான் எதையாவது தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்க வேண்டும் என்ற நெருக்கடியும் நிலாந்தன் அவர்களைத் துரத்துகிறது. அதற்காக அவர் காலா காலத்திற்கு ஏற்றாற்போல் தனது கதைசொல்லும் திறனால் புதிதாக எதையோ கண்டுபிடித்ததைப் போலவும் ஆராய்ந்து சொல்வதைப் போலவும் தமிழ்த் தேசிய மனநோயாளிகளுக்குக் கதை சொல்லிக் கொண்டிருக்கிறார். அல்லது சொல்ல வேண்டிய கட்டாயத்திலிருக்கிறார்.

யுத்தகாலத்தில் இந்த வகை மனநோயாளிகளின் மனதைக் குளிர வைப்பதற்காக, அல்லது அந்த மனநோயாளிகளிடமிருந்து அளவு கணக்கற்ற பணப் பெறுமதியைப் புலிகள் பெற்றுக் கொள்ளவைப்பதற்காக நிலாந்தன் அவர்கள் எழுதிய எழுத்துக்கள் ஏராளம்.

‘சந்திரிகா எழுதப் போகும் சோதனை’(2005) என்று கண்டியில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த பிக்கு ஒருவரது நிலை குறித்து எழுதியது என்றாலும் சரி, ‘ சேது சமுத்திரத் திட்டம் கடற்புலிகளுக்கு எதிரானதா’ (2005)என எழுதியது என்றாலும் சரி, சந்திரிகாவின் அரச காலத்தில்‘சமாதானத்திற்குக் குறுக்கு வழிகள் உண்டா?’(2004) என்று எழுதியதென்றாலும் சரி, ‘தமிழ் தெரியாத, அநேகமாக ஆங்கிலமும் தெரியாத ஜப்பானியர்கள்

**கற்சுறா**

வவுனியாவில் வீடு வீடாகச் சென்று கைப்பாசைகள் மூலம் மணிக்கூடு விற்கிறார்கள்’ என்று தொடங்கும் ‘வல்லரசுகளின் குத்துச் சண்டைக்குள் சமாதானம்’(2003) என்று எழுதிய பல கட்டுரைகள் அவற்றிற்கு உதாரணங்களாக இருக்கின்றன. உண்மையில் அவர் எழுதும் எழுத்துக்கள் அயோக்கியத் தனம் கொண்டவை என்று அவருக்கு உணர முடிந்திருந்தாலும் அதையே அவர் தொடர்ந்தும் எழுதினார். ஏனெனில் அவர் ஒரு தற்குறி.

யுத்தம் முடிந்த பிற்பாடு 2009இன் பின்னர் ‘பிரபாகரனிசம்’ என்று ஒன்று உருவாகும் என்பதாகச் சூரியத் தேவன் பற்றி மிகவும் உணர்ச்சிவசப்பட்டு எழுதிய கட்டுரையையும், கறுப்பு வெள்ளையாக நாம் ஒரு கருத்தை அணுகமுடியாது என்பதாகக் குறிப்பிட்டு சாம்பல் நிறக் கருத்தாக்கம் பற்றி எழுதிய கட்டுரையையும் அவர் அவ்வப்போது உரையாற்றும் முள்ளிவாய்க்கால்

**ஒரு அழுகிய யுத்தத்திற்குள் இருந்து ஒருவர் தனது உயிரைத் தப்ப வைப்பதற்கு எந்த நிலைப்பாட்டை எடுத்தாலும் அதுவே சரி என்பதுதான் மனித இயல்பு. அதே போன்று நிலாந்தன் அவர்கள் எடுத்த முள்ளிவாய்க்காலுக்குள் செல்லாது தப்பிய முடிவு என்பதும் எக்காலத்திலும் நியாயமானதே. ஆனால் அந்த முடிவின் பின்னர் அவர் பேசிவரும் அசிங்கம் கொண்ட கதைகள் மனித குலத்திற்கு எதிரானது. மனித நேயத்திற்கு எதிரானது. அதன் இயல்பிற்குள் அடங்காதது.**

நினைவுப் பேருரைகளையும் நீங்கள் அனைவரும் தொடர்ந்து பார்த்திருக்கக் கூடும்: கேட்டிருக்கக் கூடும். இவ்வாறு காலாகாலத்திற்குத் தகுந்தபடி மனநோயாளிகளுக்குக் கதை சொல்ல வேண்டி வந்ததில் சொல்லப்பட்ட கடைசிக் கதைதான் அவரது கஞ்சிக் கதை: கவிதை.

இந்த ஆய்வாளன் சொன்ன 'முள்ளிவாய்க்கால் கஞ்சி'யை முள்ளிவாய்க்காலுக்குள் இருந்து அவர் குடித்ததேயில்லை என்பதே என் கணக்கு. என் கணக்குத் தப்பாது இருந்தால் ஜனவரி 2009 காலப்பகுதியில் கிளிநெச்சி இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் முழுதாகக் கொண்டுவரப்பட்ட காலத்தில் அவர் யாழ்ப்பாணம் சென்றிருக்க வேண்டும். அவர் இறுதி யுத்த காலத்தில் முள்ளிவாய்காலிற்குள் வாழ்ந்ததாக எந்தத் தகவலையும் அறிய முடியவில்லை. அவரும் அதனைச் சொன்னதில்லை. அவர் தனது பேச்சு வல்லமையால் அந்தக் கதையை மழுங்கடித்தே தொடர்ந்து பேசிவருகிறார்.

ஒரு அழுகிய யுத்தத்திற்குள் இருந்து ஒருவர் தனது உயிரைத் தப்ப வைப்பதற்கு எந்த நிலைப்பாட்டை எடுத்தாலும் அதுவே சரி என்பதுதான் மனித இயல்பு. அதே போன்று நிலாந்தன் அவர்கள் எடுத்த முள்ளிவாய்க்காலுக்குள் செல்லாது தப்பிய முடிவு என்பதும் எக்காலத்திலும் நியாயமானதே. ஆனால் அந்த முடிவின் பின்னர் அவர் பேசிவரும் அசிங்கம் கொண்ட கதைகள் மனித குலத்திற்கு எதிரானது. மனித நேயத்திற்கு எதிரானது. அதன் இயல்பிற்குள் அடங்காதது.

ரொரண்டோவில் அவரை அழைத்த தமிழ்த் தேசிய மனநோயாளர்கள் முன்னால் அவர் ஒரு உரை நிகழ்த்தினார். அந்த 'முள்ளிவாய்க்கால் நினைவுப் பேருரை'யை நீங்கள் இந்த இணைப்பினை அழுத்திக் கேட்கமுடியும்.

https://www/youtube/com/watch?v=pYB60VmJ-iQ

இதனை அனைவரும் கேட்க வேண்டுமென விரும்புகிறேன். இந்த உரையில் அவர் சொல்வதெல்லாம் அவரது மதியிழந்த உரை என்றே நான் கணிப்பிடுகிறேன். ஒரு அயோக்கியக் கூட்டத்திற்கு முன் தான் என்ன உரை ஆற்ற வேண்டும் என மனித நேயம் கொண்டவர்கள் தயங்குவார்கள். ஆனால் எந்தத் தயக்கமும் இன்றி, எந்தக் கூச்சமும் இன்றி கேட்டுக் கொண்டிருப்பவர்களது விருப்பத்திற்கு ஏற்றாற்போல் உரையாற்றும் நிலாந்தன் என்பவரை நாம் எவ்வாறு அடையாளப்படுத்துவது? என்ன பெயர் கொண்டு அழைப்பது?

'சுனாமி அரசியல்' (ஜனவரி 2005) என்ற கட்டுரையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் செய்யப்படும் மீள் கட்டுமானங்களும் சுனாமி உதவிக் கொடுப்பனவுகளும் புலிகளுக்கூடாகவே செய்யப்பட வேண்டும் என்பதாகவும் அது சர்வதேசத்திற்கு புலிகளை மறைமுகமாகவேனும் அங்கீகரிக்கும் நிலையை உருவாக்கியிருக்கிறது என்பதாகவும் சொல்லும் நிலாந்தன் 'இது புலிகளின் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளும் ஒரு வளர்ச்சிக்குக் கொண்டுபோய்விடக் கூடும், இது தவிர்க்க முடியாததும் கூட' என்கிறார்.

உலகம் பூராவும் செய்வதறியாது உறைந்து போயிருந்த காலத்தில், அவலச்சுழியில் அனைத்து மனித உயிர்களும் அழுது கொண்டிருந்த காலத்தில், அந்த அவலத்தை வைத்து புலிகளின் மேலாண்மையைக் காட்ட வழிகாட்டிப்பிழைக்கிறார் நிலாந்தன். சுனாமியில் வதை பட்டு மரணித்த பிணங்களிலிருந்து நகைகளைக் கழற்றி யெடுத்தவர்களுக்கும் கரையொதுங்கிய பிணங்களை ஒளித்து வைத்து தாமே கண்டெடுத்தோம் என்று வீடு தேடிச்சென்று கொடுத்துப் பணம் பெற்ற பலசாலிகளின் மேலாண்மைக்கும் நிலாந்தன் சொல்லும் புலிகளின் மேலாண்மைக்கும் என்ன வித்தியாசம் உள்ளது?

நித்திரைப் பாயிலிருந்து குழந்தைகளையும் பெற்றோரையும் ஒருசேர இழுத்துச் சென்று

பிணங்களாய் கரையொதுங்கவைத்த பேரலைக்குள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் செய்வதறியாது பார்த்திருந்த மிஞ்சியவர்களுக்கு கிடைத்த உலகநாட்டின் உதவிக்குள்ளால் புலிகளின் மேலாண்மைக்குக் கணக்குத் தேடிக் கொடுக்கிறார் கயமையை மனங்கொண்டலையும் நிலாந்தன்.

அதைவிடவும் சேது சமுத்திரத் திட்டம் காங்கேசன் துறைமுகம் உட்பட இலங்கையின மற்றைய துறைமுகங்களுக்கு பெரிய வளர்ச்சியைக் கொடுக்கும் ஒரு திட்டம் என்று பலர் எழுதுகிறார்கள் என்றும், ஆனால் அது கடற்புலிகளுக்கு நல்ல சூழல் அல்ல எனச் சொல்லும் நிலாந்தன் அவர்கள்

'தமிழீழப் போராட்டம் முடிவுறாத சூழலில் அதுவும் இந்தியா புலிகளுடன் எத்தகைய ஒரு இணக்கத்திற்கும் வரப் பின்னடிக்கும் ஒரு சூழலில் எல்லாவற்றையும் விட முக்கியமாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மேற்கு நாடுகள் தத்தெடுத்துவிடுமோ என்று ஒரு அச்சம் புதுடில்லியில் உள்ள சில கொள்கை வகுப்பாளர் மத்தியில் உருவாகிவரும் ஒரு சூழலில் இத்திட்டமானது போரியல் அர்த்தத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பாதகமாக மாறக் கூடிய நிலைமைகளே அதிகம் காணப்படுகின்றன.' என்கிறார்.

இந்த மாதிரியான புலிகளுக்காக வலிந்து வலிந்து முண்டு கொடுத்த எழுத்துக்களை அளவிட்டே அவரை நான் புலிகளின் உத்தியோகத்தர் என்று சிலகாலத்தின் முன் அடையாளம் இட்டேன். அவர் அதனை உடனடியாகவே மறுத்திருந்தார். உண்மையாய்ச் சொல்லப் போனால் புலிகளை விடவும் புலிகளுக்காக வேலை செய்த உத்தியோகத்தர்களை விடவும் மானிட விரோதம் கொண்ட அயோக்கியத்தன வேலைகளையே அவர் அன்றும் இன்றும் தொடர்ந்து செய்து வருகிறார். அதற்கான சான்றுகளே இவை.

நிலாந்தன் தன்னுடைய வாழ்நாளில் இவ்வாறு எழுதிய யுத்தகாலக் கட்டுரைகளை தனது அடையாளமாகக் காட்ட விரும்பாது போகலாம். ஆனால் நமது சமூகத்தின் அழிவிற்கும் அது தொடர்ந்தும் அறிவைக் கொலை செய்வதற்கும் இவர்களைப் போன்ற நயவஞ்சகர்களே காரணம் என்பதற்காகவேனும் அவர் யுத்தகாலத்தில் எழுதிய கட்டுரைகளை நாம் யாரேனும் தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும். அது அவர் விரும்பாது விட்டாலும் கூட.

இவர்களைப் போன்றவர் களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் பொழுது இலங்கையிலிருந்த எனது நண்பர் ஒருவர் சொன்னார், 'மச்சான் உவங்கள் தான்ரா ' உண்மையான கோயில் யானைகள்' என்று.

கோயில் யானைகளுக்கு பாரம் தூக்கிற வலி தெரியாது. பசி தெரியாது. மழையோ, வெயிலோ, காற்றோ, புயலோ, இடியோ, மின்னலோ எதனுடைய அச்சமும் தெரியாது. சேறும் சகதியும் தெரியாது. நல்ல வடிவாக வெளிக்கிட்டு பொட்டும் வைத்துக் குடையும் பிடித்து வரவேற்பாளர்களுக்கு முன் நடந்து திரிவதோடு பார்வையாளர்கள் கொடுக்கும் வாழைப்பழங்களை வாங்கித் தின்று திரிவதும், அவ்வப்போது விருந்தாளிகளைச் சந்திப்பதும் தானே வாழ்க்கை. அந்த வாழ்க்கையை ஒத்ததுதான் நிலாந்தன் போன்றவர்களது வாழ்க்கையும். பொதுவாச் சொன்னா 'பெரகரா யானை' மாதிரி விருந்தாளிகளுக்கு முன் நடனமாடும் யானைகளடா உவங்கள்' என்றார். அவர் சொன்ன அவ்வளவு சொல்லும் உண்மை என்பதனை நிலாந்தன் நமக்குத் தொடர்ந்தும் நிரூபித்து வருகிறார்.

முள்ளிவாய்க்காலுக்குள் அகப்பட்டு சீரழிந்து சிதைந்து போன மக்கள் கதை ஒன்றாக இருக்க ரொரண்டோவில் உள்ள தமிழ்த் தேசிய மனநோயாளிகளுக்கு, தான் ஏதோ முள்ளிவாய்க்காலில் வாழ்ந்ததாகக் கஞ்சிக் கதையும் வாய்ப்பன் கதையும் கடலை வடைக் கதையும் சொல்லிச் செல்கிறார். அதனையும் மீறி வங்கக் கடலினை மலக்கடல் என்றும் நந்திக் கடலைப்

**ஒரு முப்பதினாயிரம் பெறுமதியான சங்கிலியை முன்நூறு ரூபாவிற்கு விற்று தனது குழந்தைக்குப் பால்மா வாங்கினேன் என்று கதறிய தாயின் அழுகையை அப்போது இங்குள்ள புலிப்பினாமிகள் ஒலிபரப்பினார்கள். அவ்வாறு வாங்கியவனும் அந்த மரணவாழ்விற்குள் தானே இருந்தான் என்பது இந்த மனநோயாளிகளுக்கும் தெரிந்திருந்தது. ஆனால் அந்தத் தர்க்கம் குறித்து உரையாடினால் தங்ககளது பிழைப்புப் பறிபோய்விடும் என்பதில் அவர்கள் கவனமாக இருந்தார்கள்.**

பிணக்கடல் என்றும் அங்கிருந்து பார்த்ததாகக் கதை சொல்கிறார். ஒரு பச்சைமிளகாய் நூறு ரூபாவிற்கு விற்றார்கள். கறிக்குப் புளியிருக்கவில்லை. கறிக்குப் பால் இருக்கவில்லை என்கிறார். இந்தக் காலத்தில் தான் ரொரண்டோவில் புலிகளின் பினாமியாக இயங்கிய வானொலிகள் தொலைக்காட்சிகள் எல்லாம் முள்ளிவாய்க்காலில் இருந்து நேரடி ஒலிபரப்பு செய்து கொண்டிருந்தன.

ஒரு முப்பதினாயிரம் பெறுமதியான சங்கிலியை முன்நூறு ரூபாவிற்கு விற்று தனது குழந்தைக்குப் பால்மா வாங்கினேன் என்று கதறிய தாயின் அழுகையை அப்போது இங்குள்ள புலிப்பினாமிகள் ஒலிபரப்பினார்கள். அவ்வாறு வாங்கியவனும் அந்த மரணவாழ்விற்குள் தானே இருந்தான் என்பது இந்த மனநோயாளிகளுக்கும் தெரிந்திருந்தது. ஆனால் அந்தத் தர்க்கம் குறித்து உரையாடினால் தங்ககளது பிழைப்புப் பறிபோய்விடும் என்பதில் அவர்கள் கவனமாக இருந்தார்கள்.


முள்ளிவாய்க்கால் இறுதி யுத்த காலத்திலும் ரொரண்டோவிலிருந்து உண்டியல் மூலம் அங்கே பணம் அனுப்பக் கூடியதாகத்தான் இருந்தது. அவ்வாறு அனுப்பிய பணத்தின் மூலம் பிடித்துச் சென்ற தனது சகோதரங்களை புலிகளிலிருந்து விலக்கி எடுத்து இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் வெளிக் கொண்டு வரவும் முடிந்த காலங்களாகத்தான் அவை இருந்தன.

இவையெல்லாம் நிலாந்தன் வகை ஆய்வாளர்களுக்கும் நன்கு தெரியும். அவர்களை நம்பியிருக்கும் மனநோயாளிகளுக்கும் தெரியும். ஆனால் இவை எதையும் தெரியாததும் அறியாததும் போல இவர்கள் காட்டும் பாவனை என்பது மனித குலத்திற்குத் தீங்கானது. இந்தப்பாவனைகள் அவசர அவசரமாக் காடாற்றப்பட வேண்டும். இல்லையேல் இந்த சமூகத்திற்கு மீட்சி என்பதே ஒருபொழுதிலும் இருக்கப் போவதில்லை.

யுத்தகாலத்தில் உசுப்பேற்றி எழுதிய கட்டுரைகளைப் போல இன்று அவரது கஞ்சிப் பாடலையும் சாம்பல் நிறக் கதைகளையும் கேட்டு மதி மயங்கிய மனநோயாளிகளைப் போலத்தான் ஆரம்பகாலத்தில் இனத்துவேசங்களையும் தியாகி: துரோகி கட்டமைப்புக்களையும் வெளிக்காட்டி துரோகிகளைக் களையெடுக்கவேண்டும் என எழுதிய எழுத்துக்களை நம்மவர்கள் கொண்டாடினார்கள். இவ்வாறு கொண்டாடிய கொண்டாட்டம் எவ்வளவு பெரிய கொடூரத்தை தனது இனத்துக்குள்ளேயே நிகழ்த்தி முடித்தது என்பதனை நமக்கு நம் வாழ்காலத்திலேயே கண்டுணர வைத்திருக்கிறது.

ஒருவனைச் சுட்டுக் கொன்றுவிட்டு அதற்கு 'துரோகத்தின் பரிசு' இதுதான் என்று எழுதியவர்கள் நம்மிடையே வாழ்ந்த சாதாரண மக்களல்ல, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்.

களையெடுப்போம் வாரீர் தமிழரே! தமிழரரைக் காட்டிக் கொடுக்கும் தமிழரைத் தலையெடுப்போம் வாரீர். என்று எழுதியது ஒன்றும் சாதாரண தமிழ் மகனல்ல. அன்று ஈழத்தமிழ் உலகம் கொண்டாடிய தமிழர்களது உணர்ச்சிக் கவிஞன் காசியானந்தன்.



Arunmozhi Varman
2d


நெய் உறிஞ்சிய தீபத்தின் ஒளி
பெருவெளிக்குத் திரும்புகின்றது
புதைக்கப்பட்டவர் யார்?
காற்றில் கரைந்துபோனவர் யார்?
புதிரின் ஆழ் இடுக்குகளில்
சொருகப்பட்டிருக்கின்றன சாவுகள்
இனி வரப்போவது யாருமில்லை
ஆயினும்
நினைவுகளின் புதைவிடத்தில்
நான் இரண்டு பூக்களை வைக்கின்றேன்
நினைவு கூரக்கூடிய
நினைவு கூர முடியாத
எல்லோருக்குமாகவும்.
-சித்தாந்தன்-

ஆனால் இந்தத் தமிழ் உணர்ச்சிக் கவிஞன்தான் இன்று தான் கேட்டது இந்துத் தமிழீழம் என்கிறார். இந்த லட்சணத்தில் இவர் அன்று கைகாட்டிய துரோகி இன்று தியாகியா? அன்றைய தியாகி இன்று துரோகியா? என்று இடம் வலம் தெரியாமற் கிடக்கிறது நிலைமை.

இந்தப் பதகழிப்பில் எல்லோருக்கும் நல்லவனாக நடிக்க அடுத்த ஒரு அயோக்கிய இலக்கியக் கூட்டம் வெளிக்கிட்டிருக்கிறது. துரோகிக்கும் ஒரு பூ. தியாகிக்கும் ஒரு பூ என்று இரண்டு பூக்களை ஏந்தியவாறு வருடத்திற்கு இரண்டு முறை அலைகிறது. ஒன்று புலிகளின் மாவீரர் தினத்திற்கும் மற்றது புலிகள் மக்களை அழித்து தானும் அழிந்த மே மாதத்திற்கும்.

இந்தக் கவிதையை எழுதியவர் பலர் 'கவிஞர்' என அடையாளம் சொல்லும் சித்தாந்தன். ஆனால் இதனைக் காலாகாலமும் தொடர்ந்து காவுபவர் எழுத்தாளர் அருண்மொழிவர்மன். இவர்கள் தாங்கள் கடந்து வந்த அழுகிய புலித் தேசியக் காய்ச்சலில் இருந்து இன்னும் அறுபட முடியாது தொங்குபவர்கள். அதற்கும் வாலாட்ட வேண்டும் மற்றப் பக்கமும் தலையாட்ட வேண்டும் என்ற வில்லங்கத்தில் கொண்டலையத் துடிக்கும் கவிதை இது. இந்தக் கவிதை சொல்ல வரும் விடயம், அதனைத் திரும்பத் திரும்பப் பதிவிட்டு அதற்கான நிலை நிறுத்தலைக் கோர நினைக்கும் மனப்பான்மை இந்த சமூகத்தை இன்னும் நிலை குலையச் செய்பவை. இதற்கும் நிலாந்தன் தினமும் கொட்டிக் கொண்டிருக்கும் நஞ்சிற்கும் எள்ளளவும் வித்தியாசமில்லை. அன்று காசி ஆனந்தன் எழுதிய 'களை' எடுக்கும் கவிதைக்கும் இதற்கும் இயல்பில் மாற்றம் இல்லை. இது நவீனமடைந்த நச்சுச் செயல். NEO காசியின் வளர்ச்சி.

இன்னும் சொல்லப் போனால்,



உயிர் தமிழுக்கு

களை எடுப்பு

களை எடுப்போம் வாரீர் தமிழரே!
தமிழரைக் காட்டிக் கொடுக்கும் தமிழர்
தலை எடுப்போம் வாரீர்! மீண்டும் நாம்
தலையெடுக்க வேண்டுமாயின் இவரை
முளைதனிலே கிள்ளி எறிதலே
முதல் வேலை! ஓடிப் புறப்படுங்கள்!
கொலை நெடுவாள் தூக்கி இவர்சிந்தும்
குருதியிற் பகைவரை மூழ்கடிப்போம்!

நெடுங்கடலை நாங்கள் அடக்கலாம்
புயலை நிறுத்திப் போர் செய்திடலாம்!
சுடும் அனலை வென்று நொடிப் போழ்தில்
கொடியும் தூக்கலாம்... போராடி மாற்றார்
விடுங்கணைகள் கோடி எனினும் போய்
எதிர்நின்று வென்றிகொண்டுவரலாம்!
கொடுங் களைகள் இருக்கும் வரை நாங்கள்
இவை செய்யோம்...களைகொளுத்துவீரே!

நிறை கருவில் எம்மைப் பல திங்கள்
சுமந்த தாயெனினும் சரியே! இன்னல்
சிறிதளவு மின்றி எமை வளர்த்துச்
சிறப்பீந்த தந்தை எனினும் சரியே
உறுபகைவர் நட்பில் மகிழ்ந்தெங்கள்
தமிழருக் குலைவைப்பராயின் ஓடி
வெறியொடவர் உடல்கள் விழுத்துமின்...
அதன் பின்போர் விழாவும் நடத்திவைப்போம்!

—காசி ஆனந்தன்

24.2.71 சுதந்திரன் (படம் நன்றி கிரிதரன்)

'மண் அகத்திலும் வானிலும் எங்குமாம்
திண் அகத்து திரு ஆலவாய் அருள்
பெண் அகத்து எழில் சாக்கியப் பேய் அமண்
தெண்ணர் கற்பழிக்கத் திரு உள்ளமே'

என்று

சமணப்பெண்களைக் கற்பழிக்க இறைவா வழி செய்து கொடு என்று பக்திகாலத்தில் திருஞானசம்பந்தர் பாடிய தேவாரத்திற்கும் இவர்கள் பாடும் இத்தகைய கவிதைகளுக்கும் பெரிய வித்தியாசங்கள் ஒன்றுமேயில்லை.

காசி பாடியதற்கும்
புதுவை பாடியதற்கும்
சித்தாந்தன் பாடியதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது.

காலமும் மொழியும் ஆட்களுந்தான் வேறு. ஆனால் கதை ஒன்றுதான். ஒரே சிந்தனைதான்.

நவீனமடைந்த நச்சு.

இந்தச் சிந்தனையைத்தான் அறுந்தழிய வேண்டும் என்கிறேன் நான்.

காசியைத் தாண்டிப் போய் ஞானசம்பந்தனையே எட்டிப் பிடிக்கும் நிலையை இந்த NEO உணர்ச்சிக் கவிஞர்கள் கொண்டிருப்பது எப்பொழுதும் ஆபத்தானது. இது அறிவைக் கொலை செய்யும் சமூகம்.

இதனைக் கவனமாகக் காடாற்ற வேண்டும். அ

# சாரு
# சர்ச்சைகளால் உயிர் வாழும் provocateur

சர்ச்சைகளுக்கு ஓய்வு கொடுக்காதபடிக்கு சாரு ஓய்வில்லாமலேயே உழைத்துக் கொண்டிருக்கிறார்.

அமெரிக்க விருது விவகாரத்தை எல்லோரும் மறந்து விட்டார்கள்.

அவர் உட்பட!

தனக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதை விட,
மணமோ, பிணமோ, நாயகன் ஆனால் போதும்!

ஒடியல் கூழ் குடிக்கப் போய், நாய்களுக்குப் பயந்து காலை ஹாண்டிலில் தூக்கிப் போட்டு, கிழுவம் வேலிகளுக்குள் விழுந்தெழும்பி போய்ச் சேர்ந்து விட்டார்.

தனக்கு உயிராபத்து என்று பரபரப்பை ஏற்படுத்தியவர், போக்குவரத்துக்கும் வாடகைக்கும் பணம் கோரி நின்றவர், இன்று எதுவும் நடக்காதது போல, யாரோ கனவுக் கன்னியைச் சந்தித்த கதையை அவிழ்த்து விட்டிருக்கிறார்.

தன்னை ஒரு irresistible hunk ஆகக் கட்டமைப்பதில் இந்த non-stop sex machine க்கு அப்படி ஒரு பேரின்பம்.

இப்போது அந்த அழகி பற்றிய தன்னுடைய புதுக் குறுநாவலை, அராத்து லட்சக்கணக்கில் சம்பாதித்தது (?) போல, Non-fungible token ஆக விற்று பணம் சம்பாதிக்கலாம் என்ற கனவுக்குள் மூழ்கியிருக்கிறார்.

அதற்காக, தன்னுடைய புது நாவலைப் பற்றி தானே சிலாகிக்கத் தொடங்கியிருக்கிறார்.

வழமை போல, இது தான் தன்னுடைய masterpiece என்பது போல அவரே புகழுரையை ஆரம்பித்திருக்கிறார். அடுத்த புக்கர் பரிசு தனக்குத் தான் என்ற கனவும் மீண்டும் துளிர் விட்டிருக்கக் கூடும்.

ஆக, எந்தச் சர்ச்சையுமே அவருக்கு நிரந்தரமானதல்ல.

அவருடைய நிரந்தரமே சர்ச்சைகளால் ஆனது மட்டும் தான்.

சாரு பற்றிச் சொன்ன போது, நண்பர் கலாமோகன் வர்ணித்த வார்த்தை...

Provocateur.

வேண்டுமென்றே மற்றவர்களைக் கோபமூட்டுவதும், அசௌகரியமாக்குவதும், அனாவசிய விவாதங்களை உருவாக்குகின்றதுமான ஒருவராகவே சாரு காணப்படுகிறார்.

தற்போதைய இலக்கியச் சூழலில் (பின்நவீனத்துவ?) முக்கியமானவர்களில் ஒருவராக அவர் சொல்லப்படுகிறார்.

(அதைப் பெரும்பாலும் அவரே சொல்லிக் கொள்கிறார், மற்ற மேதகுக்கள் மாதிரி!)

அவரை தனது ராபி (குரு) என்று என்று அழைத்தவர்களும் உண்டு.

இப்போது அதே அவர்களே 'அவனை நான் அறியேனே!?' என்று சேவல் கூவ முன் மும்முறை மறுதலிக்கவும் கூடும்.

ஜோர்ஜ் இ.

தமிழ் இலக்கிய உலக மேதகுக்களுக்கு இருக்கும் சுய மோக வியாதியின் உச்சநிலையில் ஆசானோடு போட்டி போட்டுக் கொண்டிருப்பவர் அவர். தாங்கள் தமிழ் இலக்கிய உலகில் மட்டுமல்ல, உலகத்திலேயே பிரபலமான எழுத்தாளர்களை விட மேலான, ஈடிணையற்றவர்கள், தங்களுடைய இலக்கியம் மட்டுமே உன்னதமானது என்று சொல்லிக் கொண்டு, அதே நேரம் தங்களை எவருமே கண்டுகொள்ளவில்லை என்று புலம்பிக் கொண்டிருக்கின்ற வியாதியால் கிட்டத்தட்ட இவர்கள் எல்லாருமே பீடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் எல்லாருமே எழுதுவதோடு மட்டும் இல்லாமல், தங்கள் ஆளுமைகளைச் சமூகத்திற்குள் திணித்துக் கொண்டும், அதே சமூகத்தைத் திட்டிக் கொண்டும் இருப்பதால் அவர்களுடைய எழுத்துக்களோடு மட்டும் விமர்சனங்களை நிறுத்திக் கொள்ள முடிவதில்லை.

சமூகம் பற்றி எந்த அக்கறையும் இல்லாமல், சமூகம் தங்களை அங்கீகரிக்கவில்லையே என்று சதா குற்றம் சொல்லிக் கொண்டிருக்கும் மனநிலை இவர்களுடையது.

ஆசானுக்கு தமிழர்கள் மீது இனமாகவே இருக்கும் வெறுப்புப் போலவே, சாருவும் தமிழ் இனத்தை philstines என்று அழைப்பதை, ஒரு சாடிஸ்டுக்குரிய குரூர திருப்தியோடு செய்து கொண்டிருக்கிறார்.

கலை, இலக்கியம் மீது எந்தப் புரிந்துணர்வோ, அக்கறையோ

இல்லாமல், அதன் மீது வெறுப்புக் கொண்டிருக்கும் இனமாகத் தமிழர்களைச் சித்தரித்துக் கொண்டிருக்கிறார்.

இவர்கள் இருவருமே, தமிழர்களைக் குடிமுழுகி விட்டு, தாங்கள் பிரபலமாக இருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் கேரளாவில் செட்டிலாகத் தயாராக இல்லை.

அங்கே இந்தப் பருப்புகள் வேக முடியாமல் இருக்கக் கூடும்.

இதில் உள்ள முரண்நகை என்னவெனில், அதே பில்ஸ்தீன்களை, தன்னைப் பரிபாலிக்க வேண்டிய கடமையுள்ளவர்களாக வலியுறுத்துவது தான். தான் ஒரு பெரிய எழுத்தாளன், தன்னைத் தூக்கிக் கொண்டு காவடியாட வேண்டும் என்பதோடு, நைவேத்தியங்களால் ஆராதனையும் செய்து, தேவதாசிகளைக் கூட்டிக் கொடுக்கும் மாமா வேலையும் செய்ய வேண்டும் என்பது தான் அவரது எதிர்பார்ப்பு போலும்.

தமிழில் பிறழ்வு இலக்கியம் என்றாலேயே, அதனோடு அடையாளப்படுத்தப்படுகிறவராகத் தான் அவர் இருக்கிறார். அதைத் துணிச்சலான நடவடிக்கையாகவும், தமிழ் இலக்கியத்தில் பெரும் பாய்ச்சலாகவும் அவரும், அவரை வழிபடும் சிலரும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இதெல்லாம் பிரச்சனை இல்லை.

சுயமோகிகள் தங்களைப் பற்றி மட்டும் தானே கவலைப்பட முடியும்?

போர்ணோகிராபி எனப்படும் ஆபாசப் படைப்புகளுக்கும் கலைக்குமான வித்தியாசம் என்ன?

அது கறுப்பு வெள்ளையானதில்லை. அதன் எல்லைகள் எப்போதுமே நகர்த்தப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன...

யாழ்ப்பாணத்து வேலிகள் மாதிரி.

ஆனால், சமூகப் பொதுவெளியில் ஆபாசம் என்பதற்கான எல்லைகளை, ஏற்றுக் கொள்கிறோமோ இல்லையோ, ஜனநாயக அரசுகள் வரையறுத்துக்

கலைக்கும் ஆபாசத்திற்குமான எல்லை எதுவாக இருக்கக் கூடும்?

நோக்கம் என்பது தான் என்று நான் நினைக்கிறேன்.

மனித உள்ளங்களுக்குள் கிடக்கும் வக்கிர, பிறழ்வு உணர்வுகளைத் தூண்டி, இச்சையை நிறைவேற்றி, இந்திரியத்தை வெளியேற்றுகிற சரோஜாதேவிக் கதைகளுக்கும், அவ்வாறான உறவுகளில் ஏற்படும் உள, உணர்வுச் சிக்கல்களை படம் பிடித்துக் காட்டும் எழுத்துக்களுக்குமான வித்தியாசம், அதன் நோக்கத்தில் தானே இருக்க முடியும்.

தன்னுடைய ஆழ்மனப் பிறழ்வுகளால் ஏற்படும் பாலியல் வக்கிரங்களை வர்ணித்து நியாயப்படுத்துவதற்கு கலை என்ற அந்தஸ்தை வழங்கி விட முடியுமா?

கொண்டு தான் இருக்கின்றன. அதுகூடக் காலப் போக்கில் பல விடயங்களை அனுசரித்து அங்கீகரிக்கிறது. இந்தியா, அரபு இஸ்லாமிய நாடுகள் போன்ற பழமை வாதத்திற்கு திரும்பும் இடங்களில் திரும்பவும் புராதன காலத்திற்கே செல்கிறது.

Full frontal nudity, penetration என்பவை பொதுவெளித் திரையரங்குகளில் அனுமதிக்கப்படுவதில்லை. அல்லது அதற்கான முத்திரை குத்தலோடு அதற்கு அனுமதிக்கப்பட்ட வயதினருக்காக, அதற்கான தளங்களிலேயே அனுமதிக்கப்படுகின்றன.

நீண்ட காலத்திற்கு முன் இங்கே திரையிட்டு, நான் பார்த்த Unbearable lightness of being என்ற படம் இப்படிச் சர்ச்சைக்குரிய காட்சிகளைக் கொண்டிருந்தது.

அதையெல்லாம் தூக்கிச் சாப்பிடும் அளவுக்கு Baise moi என்ற பிரெஞ்சுப் படம் பிறகு இங்கே வந்தது. அது பிரான்சில் X rating வழங்கப்பட்டு, ஆபாசப்படமாக முத்திரை குத்தப்பட்டு, பொது திரையரங்குகளில் திரையிடுவது தடை செய்யப்பட்டது.

இவற்றை ஆபாசம் என்று ஒரு சாராரும், கலை என்று தூக்கிக் கொண்டாட இன்னொரு சாராரும் இருந்தார்கள். எப்போதுமே இருக்கத் தான் செய்வார்கள்.

திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவு பற்றிய Lady Chatterley's lover ம், வயது குறைந்த சிறுமியுடனான உறவு பற்றிய Lolita வும் ஒரு காலத்தில் தடை செய்யக் கூடியதாகவும், இன்னொரு காலத்தில் கலையாக அங்கீகரிக்கப்படுவதாகவும் இருந்தது.

அதற்கான 'அளவுகோல்கள்' ஆளுக்காள் வேறுபடக் கூடும்.

கலைக்கும் ஆபாசத்திற்குமான எல்லை எதுவாக இருக்கக் கூடும்?

நோக்கம் என்பது தான் என்று நான் நினைக்கிறேன்.

மனித உள்ளங்களுக்குள் கிடக்கும் வக்கிர, பிறழ்வு உணர்வுகளைத் தூண்டி, இச்சையை நிறைவேற்றி, இந்திரியத்தை வெளியேற்றுகிற சரோஜாதேவிக் கதைகளுக்கும், அவ்வாறான உறவுகளில் ஏற்படும் உள, உணர்வுச் சிக்கல்களை படம் பிடித்துக் காட்டும் எழுத்துக்களுக்குமான வித்தியாசம், அதன் நோக்கத்தில் தானே இருக்க முடியும்.

தன்னுடைய ஆழ்மனப் பிறழ்வுகளால் ஏற்படும் பாலியல் வக்கிரங்களை வர்ணித்து நியாயப்படுத்துவதற்கு கலை என்ற அந்தஸ்தை வழங்கி விட முடியுமா?

சாருவின் நோக்கமே சர்ச்சைகளால் நிரந்தரம் பெறுவது தான் என்றால், அவரது எழுத்துக்களின் நோக்கமே அந்தச் சர்ச்சைகளை உருவாக்குவதாகத் தானே இருக்க முடியும்.

எங்களில் பலரும் எங்களின் வாசிப்புகளை குமுதம், விகடன் முதல் பாடசாலை காலத்துச் சரோஜாதேவிக்கதைகளும் ஊடாகத் தானே கடந்து வந்திருக்கிறோம்.

அந்த வயது மீசை அரும்பும் ஓமோன்களின் திருவிளையாடல் களால் திருச்சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டுத் தானே எங்களுடைய coming of age நிகழ்ந்திருக்கிறது.

அது இயற்கையானது. யதார்த்தமானது.

அதுவே எங்களின் மனப்பிறழ்வுக்கும் காரணமாக முடியாதபடிக்கு நாங்கள் பகுத்தறிவு ரீதியாக வளரா விட்டால், எங்களுடையது மிருக உணர்வாகத் தானே இருக்க முடியும்.

துவாயைக் கழட்டிக் காட்டினால், படுக்க வருவார்கள் என்ற எதிர்பார்ப்பே அந்தப் பிறழ்வுடையது தானே.

எதுவும் அறியாத innocent வாசகிக்கு தன் பாலியல் உருவேற்றும் கதைகளை அனுப்பி, groom பண்ண நினைப்பதும் அந்த வக்கிரத்தின் ஒரு வடிவம் தானே.

இணையத்தின் பாதாள உலகத்தில் இந்த பலான கதைகளுக்கான தளங்கள் நிறையவே இருக்கின்றன. தாய், சகோதரிகள் என யாரையும் தவற விடாத இந்தக் காமக்கதைகளுக்கு மில்லியன் கணக்கில் வாசகர்கள் இருக்கத் தானே செய்கிறார்கள்?

தூக்கம் குலைக்கும் சினிமாவின் கனவுக் கன்னிகளை விட, வேலம்மாவுக்கும் சவிதா பாபிக்கும் இல்லாத, ஜொள்ளும் எல்லாமும் வடிக்காத ரசிகர்களா? அதற்காக காசை அள்ளி வீசி சந்தாதாரர்களாக எத்தனை பேர் இருக்கிறார்கள்.

பிறழ்வும் வக்கிரமும் சமூகத்தில் இருக்கின்றன. அதற்கு தாயையோ, சகோதரியையோ, மகளையோ தெரிவதும் இல்லை. ஆனால் அதை நியாயப்படுத்த முடியுமா?

அப்படி எதுவும் தங்கள் சமூகத்தில் இல்லையென்று மறுப்பவர்கள் கலாசார, மத அடிப்படைவாதிகள் மட்டும் தான். அவர்களுக்கு இந்தப் பிறழ்வுகள் இருப்பது தெரிந்தாலும், அதை பகிரங்கமாக ஏற்றுக் கொள்ள அவர்கள் தயாராக இல்லை.

அது அவர்கள் நம்புகிற பொய்களுக்கு முரணாக இருப்பதால், இது கேட்கவும் சொல்லவும் விரும்புகிற பொய்யாக இருக்கிறது.

ஆனால், அது இருக்கிறது என்பதை எழுத்து மூலமாக வடிப்பதில் தவறேதும் இல்லை. அந்தப் பிறழ்வுகளை எந்த நியாயப்படுத்தலும், தீர்ப்பளிப்பும் இல்லாமல் படம் பிடித்துக் காட்டுவதில் தவறு இருக்க முடியுமா?

இது தான் ஆபாசத்திற்கும் கலைக்குமான வித்தியாசமாக இருக்க முடியும் என்று நான் நினைக்கிறேன்,

சாரு இதற்குள் எதில் வருகிறார்?

அவர் provocateur.

அவர் உயிர் வாழ்வது அப்பத்தினால் மட்டுமன்று, சர்ச்சைகளாலும்!

நாடகம் ஒன்றில் மேடையில் அவருடைய lewd gestures காரணமாக, களேபரமாகி அந்த நாடகம் நிறுத்தப்பட்டதாக வாசித்தேன்.

தர்க்க ரீதியாக தன்னுடைய கருத்தை நியாயப்படுத்தத் தெரியாதவர்கள் சர்ச்சைகளை உருவாக்கிக் கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்பவே செய்வார்கள்.

> தூக்கம் குலைக்கும் சினிமாவின் கனவுக் கன்னிகளை விட, வேலம்மாவுக்கும் சவிதா பாபிக்கும் இல்லாத, ஜொள்ளும் எல்லாமும் வடிக்காத ரசிகர்களா? அதற்காக காசை அள்ளி வீசி சந்தாதாரர்களாக எத்தனை பேர் இருக்கிறார்கள்.
>
> பிறழ்வும் வக்கிரமும் சமூகத்தில் இருக்கின்றன. அதற்கு தாயையோ, சகோதரியையோ, மகளையோ தெரிவதும் இல்லை. ஆனால் அதை நியாயப்படுத்த முடியுமா?
>
> அப்படி எதுவும் தங்கள் சமூகத்தில் இல்லையென்று மறுப்பவர்கள் கலாசார, மத அடிப்படைவாதிகள் மட்டும் தான்.
> அவர்களுக்கு இந்தப் பிறழ்வுகள் இருப்பது தெரிந்தாலும், அதை பகிரங்கமாக ஏற்றுக் கொள்ள அவர்கள் தயாராக இல்லை.

Being controversial for the sake of being so.

அளிப்பதற்கு எந்த substance ம் இல்லாதவர்கள் தான் சர்ச்சைகளை உருவாக்கும் provocateurs ஆக இருக்கிறார்கள்.

அவர்களுக்குக் கருத்துச் சொல்வதை விட, கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்புவதில் தான் அக்கறையும் ஆர்வமும் அதிகமாக இருக்கும்.

அதில் சுய மோகத் தன்மை இருந்தால், அறைக்கலன் விவகாரம் போல, நாயர் பிடிச்ச புலிவாலு நிலையில் தான் முடியும்.

***

எதுவாக இருந்தாலும், இலங்கையில் நாய்கள் என்றது பற்றிய விவகாரம் misguided என்பது தான் என்னுடைய கருத்து.

இடம், பொருள், ஏவல் அறியாத, சாருவின் முட்டாள்தனமான வார்த்தைப் பிரயோகம்.

ஒரு provocateur இன் அனாவசியமான provocation.

தன் காலில் தானே சுட்டுக் கொண்ட முயற்சி.

அல்லது வாய்க்குள் சப்பாத்தைச் சொருகிய...

அதில் நாய்கள் என்பது அவர் கோபம் கொண்ட இலங்கையர் மீதானது என்று நான் நினைக்கவில்லை.

தமிழ் உணர்வாளர்கள்.

அவர்கள் பொங்கத்தான் செய்வார்கள்.

அவர்களுக்குப் பொங்கத் தான் தெரியும்.

கேள்விச் செவியர்கள். சொன்ன எதையும் அதன் context படி புரிந்திருப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு எனக்கு இல்லை.

ஏதோ நல்ல காலம், இந்தத் தமிழ் உணர்வாளர்கள் எல்லாம் 'அன்று எமது மக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட போது, இந்த சாரு என்ன செய்தார்?' என்றோ, முள்ளிவாய்க்காலில் ஏன் அஞ்சலி செலுத்தவில்லை என்றோ தொடங்கவில்லை.

தொடங்கியிருந்தால், அங்கிருந்த மின் கம்பச் சிலுவை ஒன்றில், சாரு அறையப்பட்டிருக்கக் கூடும்.

தன்னைத் தூக்கிக் காவடி எடுக்கவில்லை என்பதும், ரசிகைகள் மொய்க்கவில்லை என்பதும் சாருவின் ஈகோவை உரசியிருக்கலாம்.

தன்னை அழைத்து அவமானப்படுத்தியதாகக் கூட உணர்ந்திருக்கலாம். தன்னை விட மற்றவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தது சுயமோகிக்கு சகிக்க முடியாதது?

அது அழைத்தவர்களுக்கும் அவருக்குமான விவகாரம்.

அதிலும் அழைத்தவர் மீது தற்போதும் எந்தக் கோபமும் இல்லாமல் நன்றி சொல்லித் தானே இருக்கிறார்? தற்போதைய அறிக்கையில் எவர் மீதும் கொதிப்போடு இருந்ததாகத் தெரியவில்லையே?

காரணம், அவர் அந்தந்தக் கணப்பொழுதுகளில்provocateur ஆக இருக்கவே விரும்புகிறார்.

இருந்தாலும், ஒரு விருந்தாளிக்கு இருக்க வேண்டிய சாதாரண மனிதப் பண்புகள் அவருக்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. தன்னை ஒரு இளவரசனைப் போல, பல்லக்கில் வைத்துக் கொண்டாட வேண்டும் என்ற எதிர்பார்ப்புள்ளவராகத் தான் அவரைப் பற்றிய படம் இருக்கிறது.

அவரைப் பிரான்ஸ்க்கு அழைத்தவர்கள் பட்ட பாடு பற்றி வாசித்த போதே, ஒரு அடிப்படைப் பண்புகள் கூட இல்லாத மனிதன் என்பதைத் தவிர வேறு எந்த மரியாதையும் ஏற்பட்டதில்லை.

அந்த நேரம் ஏதோ ஒரு சிற்றிதழுக்கு அளித்த பேட்டியில் 'அறுகம்புல் சாற்றை உறுஞ்சி இடையில்லாத இன்பம் அளிக்கும் வித்தையைச் சித்தர் ஒருவரிடம் கற்றதாகச்' சொன்னதும், தன் பிரான்ஸ் விஜயம் பற்றி குமுதத்திற்கு அனுப்பிய கட்டுரையை வாசித்திருந்ததும் அவர் பற்றிய அந்த நினைப்பை உறுதி செய்தே இருந்தன. அதில் சன்மானத்தைத் தன் சொந்தப் பெயருக்கு அனுப்பச் சொன்னதாக குமுதம் காலை வாரி விட்டது தனிக்கதை.

நித்தியானந்தாவுக்கு ஆனந்த விகடனில் கதவைத் திறந்து காற்று வர விட்ட 'ஆவி எழுத்தாளர்' இவர் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது.

இவரது மனைவி நித்தியானந்தாவிடம் அடைக்கலம் அடைந்த கதை இருக்கிறது. இவருடைய ஈனப்புத்தி பற்றியும், பாலியல் பிறழ்வுகள் பற்றியும் நிந்தியானந்தாவுக்கு எழுதிய கடிதம் இருக்கிறது.

வாசகிக்கு சரோஜாதேவிக் கதையை அனுப்பி ஆட்டையைப் போட முயன்ற திருக்கைங்கர்யம் இருக்கிறது.

இவருக்கு நாங்கள் தான் எழுதிக் கொடுத்தோம் என்ற உரிமை கோரியவர்கள் இருக்கிறார்கள்.

அவர் தனது படைப்புகளைத் திருடி தனது பெயரில் பிரசுரித்தார் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது.

ஆக, தனிப்பட்ட வாழ்வில் ஒழுக்கம் உள்ளவராகவோ, அறநெறிகள் உள்ளவராகவோ இவர் ஒருபோதும் அறியப்பட்டதே இல்லை.

சுருக்கமாக, கற்சுறாவின் வார்த்தைகளில் சொல்வதாயின், அயோக்கியன்.

அழகு தமிழில்...
கடைந்தெடுத்த...!

தனிமனிதன் என்ற ரீதியில் எந்த விதமான மதிப்பும் கொள்ள முடியாத ஒருவர்.

அவருக்கான வாசகர்களும் வாசகிகளும் இருப்பதில் எங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை.

இதை விட அதிகமான பலான கதை எழுத்தாளர்களின் ரசிகர்களை இணையத்தின் பாதாள உலகின் பலான தளங்களில் காண முடியும்.

அதையிட்டுப் பெருமை கொள்வதற்கு எதுவும் இல்லை.

> ஒரு விருந்தாளிக்கு இருக்க வேண்டிய சாதாரண மனிதப் பண்புகள் அவருக்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.
>
> தன்னை ஒரு இளவரசனைப் போல, பல்லக்கில் வைத்துக் கொண்டாட வேண்டும் என்ற எதிர்பார்ப்புள்ளவராகத் தான் அவரைப் பற்றிய படம் இருக்கிறது.
>
> அவரைப் பிரான்ஸ்க்கு அழைத்தவர்கள் பட்ட பாடு பற்றி வாசித்த போதே, ஒரு அடிப்படைப் பண்புகள் கூட இல்லாத மனிதன் என்பதைத் தவிர வேறு எந்த மரியாதையும் ஏற்பட்டதில்லை.

இலக்கியத்தின் அவரின் இடம் என்ன?

அந்த இடத்தை யாருமே எட்டி விட முடியாதபடிக்கு எல்லாரையும் விட உயர்ந்ததாக, தனக்குச் சரி நிகர் சமானமாக யாரும் இல்லாத மாதிரிக்கும், தன்னைச் சர்வதேசத் தரத்தில் புக்கர், நோபல் பரிசு ரேஞ்சிலான வேற லெவல் எழுத்தாளர் என அவர் தான் கட்டமைத்துக் கொண்டிருக்கிறார்.

அதை எந்தக் கூச்சமோ, வெட்கமோ இல்லாமல் அவரே சொல்லியும் கொள்கிறார்.

இதைப் பார்த்து ஆசான் பொறாமைப்படுவாரா? இல்லை, கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டிருக்கிறாரா? என்று அவரது சீடகோடிகள் எங்களுக்குத் தெரியப்படுத்தலாம்.

அல்லது அவரது இணையத்தளத்துக்குக் கடிதம் எழுதும் அவரது 'வாசகர்கள்'!

இவருடைய அடித்து விடுதல்கள், தங்களுடைய intelligence ஐ அது insult பண்ணுவதாக அதைக் கருதும் அளவுக்கு அதைக் கேட்பவர்களும் இருப்பதாகத் தெரியவில்லை.

தன்னையும் ஒரு இலக்கிய மேதகுவாகக் கட்டமைக்கும் முயற்சியில் இருக்கும் அராத்துவும், அவர் போன்று சாருவைச் சார்ந்து பிழைப்பு நடத்தும்

இலக்கியக் குடிசைக் கைத்தொழில் அதிபர்களும் ‘சாருவைப் போல உலகத்தில் யாருமே எழுத முடியாது’ என்று அவருக்கு ஆட்சேர்க்கும் மாமா வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லாப் பிரபலங்களுக்கும் போல, பேஸ்புக் பிரபலங்க்ள உட்பட, பின்னூட்டத்தில், ‘அசத்திட்டீங் கண்ணே!’, ‘செமண்ணே!’, ‘வேற லெவல்ணே!’ வாய் பிளக்கும் வாசகர் வட்டம் சாருவுக்கும் உண்டு.

ஆனால், சாரு பற்றிய நம்ம இலக்கியக் கும்பலின் கருத்துத் தான் என்ன?

ஆசான் போல, ஒரு புறத்தில் கடுமையாகத் திட்டிக் கொண்டே, உள்ளூர அவர்கள் போல ஆக முடியவில்லையே, ஆக வேண்டுமே என்ற எண்ணங்களோடு இருக்கக் கூடும்.

சாருவின் அவிழ்த்தல் கதைகளை நம்பி, தங்களையும் செக்ஸ் மெஷின்களாக உருவகிக்கும் கனவுகள் கூட இருக்கலாம். யாருக்கும் தெரியும்.

ஆனால், ஒரு தனிமனிதனாக அறப் பண்புகள் கொண்ட, குறிப்பாக பெண்கள் விடயத்தில், தன் துணைவியர் விவகாரங்களில் கூட, நற்பண்புகள் கொண்ட மனிதனாகக் கூடக் கருத முடியாத ஒரு மனிதனோடு, தங்களைத் தூர விலக்கிக் கொள்ள முடியாதவர்களாகவோ, ஒதுக்க முடியாதவர்களாகவோ இருக்கிறார்கள்.

பாப்லோ நெருடா விவகாரத்திலும், மீ ரூ விவகாரத்தில் மேற்குலகிலும் பிரபலங்கள் சமூகம் எதிர்பார்க்கும் ஒழுக்க நெறிகளை மீறிய போது, அவர்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களி டமிருந்து பலரும் தங்களைத் தூர விலத்திக் கொண்டார்கள்.

ஆனால் சாரு விவகாரத்தில் தமிழ் இலக்கிய உலகம் அவ்வாறான கறாராக நடந்து கொள்ள முடியாததன் காரணம், அவர்களும் கல்லெறிய முடியாதபடிக்கு பாவம் செய்யாதவர்களாக இல்லை என்தைத் தவிர வேறு எந்த விளக்கத்தையும் என்னால் கொண்டிருக்க முடியவில்லை.

பாப்லோ நெருடா விவகாரத்திலும், மீ ரூ விவகாரத்தில் மேற்குலகிலும் பிரபலங்கள் சமூகம் எதிர்பார்க்கும் ஒழுக்க நெறிகளை மீறிய போது, அவர்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களி டமிருந்து பலரும் தங்களைத் தூர விலத்திக் கொண்டார்கள்.

ஆனால் சாரு விவகாரத்தில் தமிழ் இலக்கிய உலகம் அவ்வாறான கறாராக நடந்து கொள்ள முடியாததன் காரணம், அவர்களும் கல்லெறிய முடியாதபடிக்கு பாவம் செய்யாதவர்களாக இல்லை என்தைத் தவிர வேறு எந்த விளக்கத்தையும் என்னால் கொண்டிருக்க முடியவில்லை.

கோணங்கி விவகாரத்திலும் அதே!

எப்படி வைரமுத்து எந்தக் கூச்சமும் இல்லாமல் பொதுவெளியில் உலவ முடிகிறது என்பது எங்கள் தமிழ்கூறு நல்லுலகத்திற்குத் தான் வெளிச்சம். அதைப் போல, சாரு போன்ற அயோக்கியர்களும் எந்த வெட்கமும் இன்றி, மேடைகளில் உரையாற்ற அழைக்கப்படுகிறார்கள், உரையாற்றுகிறார்கள்.

அவர்களுடைய படைப்புகளுக்காகப் போற்றப்படுகிறார்கள்...

இவர்கள் போலவே, Foot in the mouth disease இனால் பாதிப்பட்ட இளையராஜா மாதிரி!

இயல் விருது கொடுக்கும் அ.முத்துலிங்கம் சாருவோடு நீண்ட காலத் தொடர்பில் இருக்கிறார். சாருவின் கதைகளை வாசித்துப் புல்லரித்தாக சாருவே எழுதியும் இருக்கிறார். அமெரிக்க மொழி பெயர்ப்பு நாவல் போட்டியில் இருவருமே இறுதித் தேர்வுப் போட்டியாளர்களாகவும் இருந்திருக் கிறார்கள்.

ஆனாலும், ஏன் இன்னமும் சாருவுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது கொடுக்கப்படவில்லை?

மில்லியன் டொலர் கேள்வி அது!

ஓ, ஆயிரத்து ஐநூறு டொலர் கேள்வி.

தன்னுடைய profile ஐ தமிழ்நாட்டில் உயர்த்தும் business plan இன்படி, மிகக் கவனமாக ஆரம்பத்திலிருந்தே அங்கிருந்த இலக்கிய மேதகுக்களைப் புழுகிப் புல்லரிக்க வைப்பதில் இருந்தே இயல் விருதுக்காரரின் இலக்கியப் பயணம் தொடங்குகிறது.

இதனால் தான் காலச்சுவடு கண்ணன் முதல் மனுஷ்யபுத்திரன் வரைக்கும், ஆசான் முதல் சாரு வரைக்கும், நக்கினார்க்கினியன் எஸ்.ரா ஈறாக, தங்களுக்குள்ளேயே பகைமை பாராட்டுகின்ற சகலரோடும் தொடர்பாட முடிகிறது.

அதன் நீட்சியாக வரும் இயல் விருதுகளும் அவ்வாறான லாப நட்டக்கணக்குகளின்படியே வழங்கப்படுகின்றன.

சாருவோடு நண்பராக இருந்தால், சாரு தன்னைப் பற்றி சிலாகிப்பார்.

ஆனால் சாருவுக்கு விருது கொடுத்தால்...?

அதனால் வரும் சர்ச்சைகள் தன்னைப் பற்றிய பிம்பத்திற்கு களங்கத்தை ஏற்படுத்தும் என்ற கணக்காக இருக்கலாம். இல்லாவிட்டால், இப்படி புக்கர் பரிசு பெறப் போகும் எழுத்தாளருக்கு முதலே இயல் விருதைக் கொடுத்தால் திறமையை முதலில் நாங்களே அங்கீகரித்தோம் என்று உரிமை கோர முடியுமே!?

அது நடக்கப் போவதில்லை.


சாருவால் கிடைக்கும் பயன்களை விட, சாருவுக்கு விருது கொடுப்பதால் வரக் கூடிய நட்டங்கள் அதிகம்.

சரி, இவன் சொல்லி விட்டானே, அதைப் பொய்யாக்க வேண்டாமா என்று அடுத்த தடவை கொடுத்தால்,

விருதுப் பேருரையில் யாருக்கு முதலில் நன்றி சொல்ல வேண்டும் என்பதை சாரு அறிந்து கொள்ளட்டும்.

அபத்தத்திற்குத் தான்!

அதுவரைக்கும் சாரு, அப்பத்தினால் மட்டுமன்று, தன் வாயிலிருந்து வரும் வார்த்தைகளால் ஏற்படும் சர்ச்சைகளால் உயிர் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டியது தான்.




## ‘கடல் நீர் உவர்ப்பை உருசித்து கண்ணீரைச் சிறுமைப்படுத்திக் கொண்டேன்’

## J.P.ஜோசபின்

யாழ்ப்பாணம் தீவகத்தை சேர்ந்த மெலிஞ்சி முத்தனின் ஆதிரை வெளியீடாக வந்துள்ள நாவல் காந்தப் புலம். தனது அண்ணன் மற்றும் தம்பிக்கும் சமர்ப்பித்துள்ள இப்புத்தகம், மனப் பயணக் குறிப்பு என்று குறிப்பிட்டு உள்ளார் எழுத்தாளர். தற்போது கனடாவில் வசித்து வரும் எழுத்தாளர் மெலிஞ்சியில் இயற்பெயர் விஜயனாதன் இயூஜின் என்பதாகும்.

கதை ஆசிரியர் குறிப்பிடுவது போல ஒரு மன உணர்வின் பிரதிபலிப்பாகும் இக்கதை. இலங்கையில் நிலவும் போர் சூழல், அதில் கடலோர மக்கள் நம்பின கத்தோலிக்க கிறிஸ்தவம், பவுத்தம், சைவம், மற்றும் சித்தர் மதங்கள் அத்துடன் கம்யூனிஸ்டு , அம்பேக்கர் கொள்கைகள் சார்ந்த பல கேள்விகளுடன் கதை செல்கிறது.


பூர்வகுடிகளின் மத நம்பிக்கையில் உள்ள கிழவி, கிழவியை பயப்படும் இன்றைய புதிய மத ஆட்கள் இதயங்களை கடவுளை நோக்கி எழுப்புவதே விட, அவர்களின் வாழ்க்கையை பசியிலிருந்து காப்பதே தன் முன்னால் இருந்த பெரும்பணி என நம்பின மரிசிலின் பாதிரியார். அத்துடன் மானிட மீட்புக்கு கிறிஸ்தவம் மட்டுமே என சொல்ல வேண்டிய மரிசிலின் என்ற கிறிஸ்தவ பாதிரியாரின் கடவுள், ‘இயற்கை‘ என மாறிய மன மாற்றம், சிந்தனை, இடது சார்ந்த கொள்கைகளை நம்பும் உழைப்பாளியான கொத்தண்ணன், மற்றும் கோயிலை அண்டி பிழைத்து வந்த கிறிஸ்து தோத்திரம், மோசமான கிறிஸ்தவத்தின் உருவகமான எழுப்புதல் பாதிரியார், பவுத்தம் மேல் நம்பிக்கை வைக்கும், நம்பும் சாமிகண் இப்படி கதை நகர்கிறது

போர் சூழலில் ராகுலன் வாய் பேச ,காது கேட்க இயலாத தனது அம்மாவுடன் புதிய ஊருக்கு புலம் பெயர்கிறான். அம்மாவுடன் புதிய ஊரில் வந்த ராகுலனுக்கு மரிசலின் என்ற முதியவரின் அறிமுகம் ஆறுதலும் பாதுகாப்பாகவும் அமைகிறது. அவர் ஒரு கத்தோலிக்க பாதிரியாராக இருந்தவர். மக்களுக்கான சேவைக்கு வாய்ப்பு இல்லை என்றதும் சாதாரண மக்களுடன் வாழ ஆரம்பிக்கிறார். கிறிஸ்துதோத்திரம் மகளை மணக்கிறார்.அவர்களுக்கு கமலன் என்ற குழந்தை பிறந்த நிலையில் மனைவி இறந்து போகிறாள். பின்பு கல்வியில் கமலனை சிறப்பாக வளர்க்க வேண்டும்

என்று நினைத்தாலும் இயக்கத்தில் சேரும் கமலம் சில நாட்களில் மாரீசன் தங்கையை கல்யாணம் செய்கிறான். ஜாதி வெறி பிடித்த மாரீசன் தந்தை கமலனை வெட்டிக் கொலை செய்கிறான். பிற்பாடு மரிசிலில் வாழ்க்கை இயற்கை கடவுளை தேடி திரிகிறது.முடிவில் துயரத்தை வெல்லவே புத்தன் வழியில் சென்றடைகிறது.

நாகங்களை விரும்பும் கிழவி அன்பாக உள்ளாள். ஆனால் வேற்று வகை கடவுள் வணக்கம் உள்ள கிழவி மேல் பயம் மட்டுமே ராகுலன் அம்மாவிற்கு மிஞ்சுகிறது.

கிறிஸ்து தோத்திரம் ஒரு பிடிப்பான கிறிஸ்தவராக இருந்தும் புது பாதிரியாரான எழுப்புங்கள் சுவாமியிடம் தாக்கு பிடிக்க முடியாததால் கோயில் சமையல்காரர் வேலையை விட்டு விட்டு. கொத்தண்ணர் மூலம் மரக்கடை வியாபாரம் செய்ய ஆரம்பிக்கிறார். கொத்தண்ணர் ஓடம் கட்டும் தொழிலாளி என்பதால் இடது கம்யூனிஸ்டு கொள்கையோடு பற்றுா ள்ளவராக உள்ளார்.



அடுத்தும் இடம் பெயரும் நிலையில், பதின்ம வயதை எட்டிய ராகுலன் தனது மனதை சடையன் என்ற கதாப்பாத்திரமாக கண்டு கொள்கிறான். புது ஊரில் மாணங்கி கூட்டாளாக கிடைக்கிறான்.

இளைஞன் ஆன சடையன் வாழ்க்கையில் இயனி வந்து சேர்கிறாள். ஒரு இயக்க போராளியான இயனி ஒரு பெரியாரிச, விடுதலை சிந்தனை கொண்ட போராட்ட குணமுள்ள பெண். அவளுடன் உள்ள சடையனின் உறவு பெண்: ஆண் உளவியல், உறவு சார்ந்து சிந்திக்க வைக்கிறது. ஆனால் இயனியோ மனிதர்களிடம் உறவை பேணினாலும் உணர்விற்கு இடம் கொடுக்காது இருப்பவள். ஒரு போரில் இயனி மிகவும் மோசமாக கொல்லப்ப்படுகிறாள். இயனி இயனி என்ற மனம் பிற்பாடு சவுகந்திகாவோடு கூடிகுழாவியதை சடையனின் மனம் கேள்வி கேட்டுக் கொண்டு இருக்கிறது.

தங்கள் வாழ்வாதாரத்திற்காக வளமையான நாடுகளில் புலம்பெயர்ந்த மக்களின் பண்பாட்டு அடையாளங்களுக்கும் அப்பாற்பட்டு, மனிதர்களும் பெரிய நிறுவனங்களின் கச்சாபொருளாகும், உற்பத்தியில் இயந்திரமாகும் அவலத்தையும் கூறுகிறார். ஆசைகள், கற்பனை: கனவுகளுடன் பயணிக்கும் மனிதனின் தனிநபர் வாழ்க்கை எதிர் கொள்ளும் இழப்பு, அதையும் கடந்து தான் கொண்ட கொள்கைக்கே இரையாவும் அவலத்தையும் சொல்லி உள்ளார்.

கதை முடியும் போது சடையன் இரு நபர்களாக நிறைவு பெறுகின்றனர். ஒருவன் தனது மரபு பணியான பொம்மைகளை செய்து கொண்டு இருக்கிற காட்சியுடன் கதை நிறைவடைகிறது.

ஒரு மனிதனின் குழந்தைப்பருவம் முதலுள்ள மதம் , பண்பாடு சார்ந்த தேடல், அடையாளம் அத்துடன் தன்னுடைய அகச்சிக்கல்களை பல கதாப்பாத்திரம் சம்பவங்கள் ஊடாக சிறப்பாக நகத்தி உள்ளார் எழுத்தாளர்.

கதை ஒரு முடிவிற்குள் வருமுன் எழுத்தாளர் விடை பெற்றாலும் வாசிப்பவர்கள் மனதில் பல ஆயிரம் வினாக்களை தூவி சென்றுள்ளது இப்புனைவின் வெற்றி ஆகும்.

இந்த புதினம்,கதை, கதை மாந்தர்கள் மட்டுமல்ல, தான் சார்ந்த சமூகத்தின் நெறிகள், சமூக அவலம் சார்ந்தும் பல இடத்தில் குறிப்பிட்டு உள்ளார். உதாரணம் குமுதினி கொலை, கிறிஸ்தவ சபைக்குள் பாதிரியார்கள் உருவில் இருந்த ஜாதி வெறி, யுத்ததால் உடல் பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் நிலை மற்றும் மலையகத்தை சேர்ந்த ராகுலம் தந்தை இலங்கை யாழ்ப்பாண தமிழ் மக்களிடம் எதிர்கொண்ட பாகுபாடு, சிங்கள மக்களுடன் இணைந்து வாழ இயலாத தமிழர்களின் வாழ்க்கைக்கு கொஞ்சமும் சிறிது அல்ல.

புத்தகம் முழுதும் விரவிக்கிடக்கும் தத்துவ விசாரணைகளும் கவித்துவமான பல வரிகள் இப்புத்தகத்திற்கு வலு சேர்க்கிறது என்றால் மிகையாகாது.

'என்னை உடைத்து பார்க்க வேண்டிய நான் என்னை தொகுத்துப் பார்த்துக்கொண்டு இருக்கிறேன்' சிரிப்பு,என்பதற்கு வாய் தேவையா?

' கடல் நீர் உவர்ப்பை உருசித்து கண்ணீரைச் சிறுமைப்படுத்திக் கொண்டேன்'

' கிழவியின் கரிசனைகளை விடவும் கிழவி மீதான அச்சமே மிகுதியாக இருந்தபடியால் கிழவியின் அன்பை யாருமே பொருட்படுத்தவில்லை'

' நான் சத்தங்களையும்,அம்மா மணங்களையும் ரசித்தோம்'

இவ்வனத்தில் முற்றி முறுகி ஆழமாய் வேரோடி நிற்கிறது துயரமெனும் பெருமரம்'

' உண்மை நிரந்தர அழகுத் தன்மை கொண்டது'

புத்தக உள்ளடக்கத்திற்கும் அட்டைப்படத்திற்குமான சில பொருத்தம் இன்மை ஒரு குறைபாடாக தோன்றியது.ஒரு தனித்துவமான உள்ளடக்கம் கதை நடைக்கு தகுந்த அட்டைப்படம் அவசியமாக இருந்தது.

அ

# உளர் Ur

## Queer Tamil Collective (QTC) Exhibition

**June 11, 2023- January 31, 2024**

**Scarborough Musuem**
**1007 Brimley Rd, Toronto, ON M1P 3E8**

This exhibition reflects on, intervenes, illuminates and re-tells our Queer Tamil stories from multiple perspectives critiquing and disrupting comfortable narratives of Being Queer and Tamil: the ways in which we have become attuned to heteronormative patriarchy, capitalism, social media marketing and visibility.

**queertamilcollective.com**
**follow us on Instagram: Queer Tamil Collective (QTC)**
**Facebook: Queer Tamil Collective.**
**queertamilcollective@gmail.com**



# மோனம் தரு ஞானம்

## Reggae முதல் Rock வரை

ஆங்கிலப் பாடல்கள் என்றால் அந்தக் காலத்தில் எனக்கு Boney M, ABBA மட்டும் தான். மற்றப் பாடல்கள் எல்லாம் கஞ்சா, கொக்கெய்ன் போதையில், காதைக் கிழிக்கும் கிட்டார் சத்தத்தோடு எந்த மெலடியும் இல்லாத காட்டுக் கத்தல் தான்.

கனடா வந்து வேலை இடங்களில் தவிர்க்க முடியாதபடிக்கு வானொலிகள் சதா ஓடிக் கொண்டிருக்கும். அப்போது தமிழ் வானொலிகளும் கிடையாது. இப்போதைய தமிழ் வானொலிகள் கேட்பதற்கு எனக்கு பொறுமையும் கிடையாது.

இதனால், ஆங்கிலப் பாடல்களை கேட்டேயாக வேண்டிய கட்டாயம். ஆனாலும், பொப், றொக் என்று ஒவ்வொரு இசை வடிவத்திற்கும் தனியான ரேடியோ என்பதால், அந்தந்த ரசிகர்கள் அந்த வானொலிகளையே உச்ச ஸ்தாயியில் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

அங்கே அகப்பட்டுக் கொள்ளும் என் போன்றவர்கள் எல்லாம் captive audience தான்.

சத்தத்தைக் குறை என்று கூடச் சொல்ல முடியாது. அதுவே பெரும் தகராறாகி விடும்.

இதை விட, எனது அறை நண்பர்கள் பொப் மார்லியையும் reggae இசையையும் அறிமுகப்படுத்தியிருந்தார்கள். சனிக்கிழமை பார்ட்டிகளில் தவிர்க்க முடியாமல், கலியாண வீடுகளில் காதைக் கிழிக்கும் டிஜேக்கள் மாதிரி, பொப் மார்லி நாங்கள் கேட்காமலேயே பல once more கள் பாடிக் கொண்டிருப்பார்.

காரணம்...

பொப் மார்லியே கஞ்சாப் போதையில் தான் பாடினார் என்றால், என் அறை நண்பர்கள் அதைக் கஞ்சாப் புகைக்குள் தான் கேட்க வேண்டும் என்று அடம் பிடிப்பார்கள். ஏற்கனவே குடிப் பழக்கம் இல்லாததால் குடிகாரர்களோடு பார்ட்டிகளில் கலந்து கொள்வதில் உள்ள துன்பம் போதாதென்று, இந்த சிவமூலிகையின் நறுமணத்தில் பரிநிர்வாணம் அடையாமல் தப்பிப்பது என்பது சாதாரணமானதும் இல்லை.

சிவ மூலிகை உபயத்தில், அவர்களின் ரூத்ர தாண்டவ நடனங்களும், வெற்றிடம் நோக்கி வெறித்த பார்வைகளும், உலகை மறந்த மோனநிலையும் சுவாரஷ்யமாகவே இருக்கும்.

கஞ்சாநெஞ்சர்கள் திருப்பித் திருப்பி அதே இசைத்தட்டை கேட்டு இன்புறுவார்கள். எங்களுக்கு எந்த நேயர் விருப்பத் தெரிவுகளும் இருக்காது.

இதற்குள் பொப் மார்லியின் குழுவில் இருந்த பீட்டர் ரொஷ்ஷின் ரசிகரான ஒருவர் போட்டிக்கு அவரது இசைத்தட்டைப் போட..

சபாஷ் பலே, சரியான போட்டி தான்.

இதற்குள் அவர் 'பொப் மார்லியைக் கூட சவுத் ஆபிரிக்காவில் பாட விட்டவர்கள், பீட்டர் ரொஷ்ஷை விடவில்லை' என்பதை, அறுபத்து மூன்றாவது தடவையாக எனக்குச் சொல்லிக் கொண்டிருப்பார்.

காரணம், நான் ஒருவன் தான் இவ்வாறான சுவாரஷ்யங்களை மட்டுமன்றி, எந்தக் குடிகாரர்களின் கதைகளையும் பொறுமையாகக் கேட்பவன்...

முகத்தை முறிக்கக் கூடாது என்று!

இதற்குள் அப்பார்ட்மென்டின் கீழ் வீட்டுக்காரன் போன் அடித்து செக்கியூரிட்டி கார்ட் வந்து

**ஜோர்ஜ் இ.**

எச்சரிக்கை வேறு செய்து விடுவான். அவனது புண்ணியத்தில் திருவிழா இனிதே நிறைவு பெறும்.

****

எங்களுடைய வானொலிகள் மாதிரி, இங்கே பெரும்பாலும் பாடல்களுக்கு முன்னோ பின்னோ, உடனேயே அந்தப் பாடலை யார் பாடியது என்பதைச் சொல்ல மாட்டார்கள்.

எனவே, ஏதாவது எனக்குப் பிடித்த நல்ல பாடல்கள் வந்தால் பக்கத்தில் நிற்கும் வெள்ளையர்கள் யாரையாவது பிடித்து இந்தப் பாடலை யார் பாடியது என்று கேட்பேன். இங்கே பிறந்தவர்கள், ஆங்கிலம் பேசுகிறார்கள் என்பதற்காக அவர்களுக்கும் எல்லாப் பாடல்களும் தெரிவதுமில்லை. தங்களுக்குப் பிடித்த குழுக்கள், இசை வடிவ பாடல்களோடு மட்டுமே நிறுத்திக் கொள்கிறவர்கள் அதிகம்.

அதை விட ஆங்கிலம் என்பது அமெரிக்காவில் தொடங்கி அவுஸ்திரேலியா வரைக்கும் சூரியன் மறையாத மொழி!

எல்லாருக்கும் எல்லாரையும் தெரிந்திருக்க நியாயமும் இல்லை.

முதலில் வேலை செய்யத் தொடங்கிய இடத்தில் என்னோடு ஒரு மலையாளி வேலை செய்தார். எனக்கு ஒரு அண்ணன் மாதிரி அன்பு பூண்டவர். அவர் இளம் வயதில் வந்து இங்கே படித்ததால், அவருக்கு இந்தப் பாடல்கள் எல்லாம் அத்துபடி. எனவே, எந்தப் பாடல் என்றாலும் யார் பாடியது என்று சொல்லும் அளவுக்கு தேர்ச்சி பெற்றவர்.

இப்படியாகத் தான் Maneater என்ற பாட்டைக் கேட்டு மனம் உருகி, இதை யார் பாடியது என்று கேட்க, அந்த மலையாளியும் Holy notes என்றார். நானும் அந்தப் பெயரை வைத்துக் கொண்டு தேடினால், எங்கேயும் இல்லை.

பிறகு தான் தெரிந்தது அது Hall and Oates.

அந்தக் காலத்தில் கொலம்பியா ஹவுஸ் என்ற இசைத்தட்டு விற்பனை நிறுவனம் ஒன்று இருந்தது. அவர்கள் எங்களை வாங்க வைப்பதற்காக, முதலில் பத்து இசைத்தட்டுகள் ஒரு டொலருக்கு என்று தூண்டில் போட்டு மாட்டி விடுவார்கள். பிறகு நாங்கள் வழமையான விலைக்கு வாங்க வேண்டும்.

இப்படிப் பாடல்களைக் கேட்டு, பாடகர்களையும் குழுக்களையும் தெரிந்து கொண்டு, அந்த நேரத்தில் புகழ் பெற்ற பொப் இசை வடிவ பாடல்களைப் பாடிய பாடகர்கள் பலரின் ரசிகனாக நானும் மாறி, இசைத்தட்டுகளை வாங்கிச் சேர்க்கத் தொடங்கினேன்.

நீண்ட நாட்கள் பின்நேர வேலை என்பதால், வீட்டில் ஆளரவம் இல்லாத தனிமை நேரங்களில், Stevie Wonder முதல் Stevie Winwood வரை என ஏகப்பட்ட பாடகர்களின் இசைத்தட்டுகளோடு தான் என் இசை ரசனை வளர்ந்தது.


காலை வேலைக்குப் போய், இருட்டறைக்குள் நுழைந்தால் ஒரே கஞ்சா மணமும் காட்டுக் கத்தலும் தான்.

அவர்களின் போதை ரசனைக்கு Led Zeppelin, AC/DC தான். அதைத் தவிர வேறெதையும் கேட்ட ஞாபகம் இல்லை.

எனக்கோ Led Zeppelin, AC/DC ஐக் கண்ணில் காட்ட முடியாது.

ஓகே. காதால் கேட்க முடியாது.

போதைக்குறைக்கு காதைக் கிழிக்கும் சத்தத்தில் பாட்டுக் கேட்பார்கள்.




பிறகு இன்னொரு வேலைக்கு மாறி விட்டேன். அது திரைப்படச் சுருள்களைக் கழுவும் பெரு நிறுவனம். ஜெமினி, பிரசாத் லபோரட்டரிகள் மாதிரி. 24 மணி நேரம் வேலை நடக்கும் இடம். நள்ளிரவு வேலை செய்வோர் கஞ்சா அடித்தபடி தான் வேலை செய்வார்கள். அந்த நேரம் வேலையிடத்தில் புகை பிடிப்பது சட்டவிரோதமாகாத காலம்.

இருட்டறைகளுக்குள் இருந்து பிலிம் சுருள்களை இரசாயனப் (வேதிப்) பொருட்களுக்குள்ளால் அனுப்புவதும், வெளியே வருவதை இரண்டாயிரம் அடி சுருள் சுருளாக வெட்டுவதுமான வேலை.

காலை வேலைக்குப் போய், இருட்டறைக்குள் நுழைந்தால் ஒரே கஞ்சா மணமும் காட்டுக் கத்தலும் தான்.

அவர்களின் போதை ரசனைக்கு Led Zeppelin, AC/DC தான். அதைத் தவிர வேறெதையும் கேட்ட ஞாபகம் இல்லை.

எனக்கோ Led Zeppelin, AC/DC ஐக் கண்ணில் காட்ட முடியாது.

ஓகே. காதால் கேட்க முடியாது.

போதைக்குறைக்கு காதைக் கிழிக்கும் சத்தத்தில் பாட்டுக் கேட்பார்கள்.

அங்கேயும் எனக்குச் சிலர் இருந்தார்கள். எந்தப் பாட்டைக் கேட்டாலும் ஓடிப் போய், அந்தப் பாட்டைப் பாடியது யார் என்று கேட்டால் உடனே சொல்வார்கள்.

அதில் ஒருவன் கயானியனான இந்திய வம்சாவழியினன். கரிபியன் நாட்டில் எடுக்கப்பட்ட ஒரே இந்தியப் படமான மிஸ்டர் பிம் என்ற படத்தில் பணியாற்றியவன். அந்தப்படம் முன்பு இங்கே பிறநாட்டு மொழிகளுக்கான தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில், வருடாந்தம் ஒளிபரப்பாகும்.

இங்குள்ள யோர்க் பல்கலைக்கழகத்தில் சினிமா ஒளிப்பதிவு பயின்று, அது சம்பந்தமான வேலை கிடைக்காமல் அங்கே திரைப்படச் சுருள் கழுவிக் கொண்டிருந்தவன். அதாவது

ஒரிஜினல் நெக்கட்டிவ்.

திரைப்படப் பிடிப்பின் போது எடுக்கப்படும் படங்கள். அன்றே வரும் சுருள்களை கழுவிப் பிரதி செய்து கொடுத்தால் தான் ஒளிப்பதிவாளர்களுக்கு படம் சரியாக வந்திருக்கிறதா என்ற விவகாரமே தெரிய வரும். இதெல்லாம் டிஜிட்டல் கமெராக்களுக்கு முந்திய காலம்.

நான் வேலை செய்தது பிரதி போடும் பகுதி. திரைப்பட வினியோகத்திற்காக ஒரே படத்திற்கு ஆயிரக்கணக்கில் பிரிண்ட் எடுப்பார்கள்.

அவன் தன் சினிமாக் கனவுகள் நிறைவேறாத கவலைகள் எதுவும் இன்றி, அங்கு கிடைக்கும் சம்பளத்தோடு மகிழ்ச்சியோடு வேலை செய்து கொண்டிருந்தான். அவன் சினிமா பற்றிப் பயின்ற விடயமே எனக்கு நீண்ட காலத்தின் பின்னர் தான் தெரியும்.

அவன் பாடகர்களின் பாடல்கள் மட்டுமன்றி, வாத்திய இசை மட்டும் கொண்ட பாடல்கள் (Instrumentals) பற்றியும் பெயர் சொல்லக் கூடிய அளவுக்கு கேள்வி ஞானம் மிக்கவன்.

Eric Clapton பொப் மார்லியின் I shot the sheriff பாடலைப் பாடியிருந்த விடயத்தை எனக்குச் சொன்னவன் அவன் தான். அதை நான் எத்தனை தடவைகள் யூடியூப்பில் பார்த்தேன் என்பது ஞாபகம் இல்லை.

இன்னொருவன் பிலிப்பைன்காரன்.

இருவரும் இந்தப் பாடகர்கள் பற்றிய அறிவை எனக்கு வளர்த்துக் கொண்டிருந்தார்கள்.

வேறு ஒருவன் கொஞ்சக் காலம் தான் வேலை செய்தான். ஒரு இசைக்குழுவில் கிட்டாரிஸ்டாக இருந்தான். அவனும் இந்தப் பாடல்கள் பற்றிய அறிவு அதிகமானவன்.

ஒரு தடவை பாடல் ஒன்று புல்லாங்குழல் இசையோடு அற்புதமாக கேட்க இனிமையாக இருந்தது. பக்கத்தில் நின்றவன் அவன் தான். யார் பாடியது என்று கேட்டேன்.

Guess who? என்றான்.

இதென்னடா, நான்




பெயரைக் கேட்டால், என்னையே ஊகிக்கச் சொல்கிறான் என்றால்...

இசைக்குழுவின் பெயரே Guess who தான்.

பிறகு மகன் பிறந்த போது, அவனுக்குப் படுக்கையில் வைத்துக் கதைகள் சொல்வேன். அப்போது இந்தக் கதையைச் சொல்லி, அவன் Guess who என்று சொல்ல, நான் 'அடே, நான் பெயரைக் கேட்கிறேன், நீ என்னை ஊகிக்கச் சொல்கிறாயே!' என்று சொல்ல...

அவனும் நானும் திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருந்ததாக சொல்லுவேன்.

மகனுக்கு ஒரே சிரிப்பு. இப்போதும் அதை நினைவுபடுத்திச் சொல்வான்.

இப்படி பெரும்பாலும் பொப் பாடல்கள் பற்றிய அனாவசியமான, எதற்கும் பயன்படாத அறிவு எனக்கு வளர்ந்து கொண்டே இருந்தது...

என்னுடைய மற்ற அறிவுகள் மாதிரி!

பிறகு கொஞ்ச நாள் Classical music கேட்க வேண்டும்

ஒரு தடவை பாடல் ஒன்று புல்லாங்குழல் இசையோடு அற்புதமாக கேட்க இனிமையாக இருந்தது. பக்கத்தில் நின்றவன் அவன் தான். யார் பாடியது என்று கேட்டேன்.
Guess who? என்றான்.
இதென்னடா, நான் பெயரைக் கேட்டால், என்னையே ஊகிக்கச் சொல்கிறான் என்றால்...
இசைக்குழுவின் பெயரே Guess who? தான்.

என்று எண்ணம் தோன்ற, அதற்கு மட்டுமேயான வானொலி என் காரில் கொஞ்சக் காலம் ஓடிக் கொண்டிருந்தது.

ஆறாம் வகுப்பில் மேற்கத்திய இசை கற்ற போது, அதைக் கற்பித்த பிரான்சிஸ் ஜோசப் அடிகளார், இறுதி யுத்தத்தில் கடைசியில் காணாமல் போனவர், எங்களுக்கு தன்னுடைய இசைத் தட்டுத் தொகுப்பில் இருந்து பீத்தோவன், பாக் என்றெல்லாம் அறிமுகப்படுத்தியிருந்தார்.

( இதை எழுதிய இரவில் பேஸ்புக்கில் அவரது மரணத்தை ஒட்டி நான் படித்த பாடசாலையில் அரைக்கம்பத்தில் கொடி பறக்க விட்டது பற்றி எழுதியிருந்தார்கள்.)

இந்த சாஸ்திரிய இசை ரேடியோவின் தொடர்ச்சியான இசை ரசிகனாக இருந்ததால், சாஸ்திரிய இசையில் பிரபலமான தற்காலக் கலைஞர்கள் பற்றியும் தெரிந்து கொண்டேன். அதில் அயர்லாந்து நாட்டார் இசை வயலின் வாசிக்கும் Leahy யின் ரசிகன் நான்.

Yo-Yo Ma வின் செல்லோ அல்பம் ஒன்று என்னுடைய தொகுப்பில் கீழ்வீட்டில் எங்கேயோ இருக்க வேண்டும்.

பிறகு, நீண்ட காலமாக நான் வெறுத்த Rock and Roll இசையை பல்லைக் கடித்துக் கொண்டாவது கேட்க வேண்டும் என்று ஒரு தடவை எண்ணம் தோன்றியது.

பிறகென்ன?

கார் போக்குவரத்தின் போது ரேடியோவில் அது தான்.

றொக் பாடல்களிலும் பல வகை.

Christian Rock முதல் Heavy metal வரைக்கும்.

அதில் நான் கேட்டது Classic Rock.

தனிமைப் பயணம். யாருக்கும் தொந்தரவும் இல்லை.

Acquired taste என்பது போல, படிப்படியாக நானும் அதை ரசிக்கத் தொடங்கி விட்டேன்...

Hot dogs, beer மாதிரி!

Led Zeppelin, AC/DC, Pink Floyd, Scorpions ஐ எல்லாம் ரசிக்கும் அளவுக்கு நான் மாறியிருந்தேன். தெரிந்திராத பல பாடகர்களையும் குழுக்களையும்

தெரிந்திருந்தேன்.

அவர்கள் பற்றி தெரிந்ததால், அவர்கள் பற்றி வாசிக்கவும் செய்தேன்.

இந்தப் பாடல்களும், முன்பு பிடிக்காதிருந்த இந்த விடயங்களைப் போல 'பரவாயில்லைத் தான்' என்று றொக் பாடல்கள் பற்றி என் மனதை மாற்ற வைத்திருந்தன.

அங்கேயும் பிடித்தமான பாடலை யார் பாடினார் என்பதைப் பிடிப்பது பெரும் வேலை. உடனே சொல்ல மாட்டார்கள்.

ஆனால், அந்த வானொலி நிலையத்தின் இணையத்தளத்தில் ஒலிபரப்பான பாடல்களின் பட்டியலை வைத்திருப்பார்கள்.

எனவே, எந்த நேரம் பாடல் ஒலிபரப்பானது என்பதை மனதில் வைத்துக் கொண்டு வந்து இணையத் தளத்தில் பார்த்துத் தான் யார் பாடியது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

பின்னர் HD Radio தொழில்நுட்பம் வந்து விட்டது. இது சாதாரண பண்பலை வானொலியில் மேலதிக தகவல்களை டிஜிட்டல் முறையில் சேர்த்து ஒலிபரப்ப உதவும். எனவே உங்கள் ரேடியோவில் அதற்கான வசதிகள் இருந்தால் பாட்டுக் கேட்கும் போதே அந்தப் பாடல் பற்றிய விபரங்கள் எழுத்து வடிவில் ஓடிக் கொண்டிருக்கும்.

இதனால் யார் பாடியது என்பதை உடனடியாகவே அறிந்தும் கொள்ளலாம்.

இணையம் பரவலாகி பின்னர் இப்படியான பாடல்களை அடையாளம் காண்பதற்கான செயலிகள் வந்து விட்டன. அதில் Shazam என்பது பிரபலமானது. ரேடியோவில் கேட்டுக் கொண்டிருக்கும் பாடல்களை மட்டுமன்றி, நீங்கள் தெரிந்த பாடல்களை ஹம் பண்ணினால் கூட, இந்த செயலி அதைப் பாடியது யார் என்பதை அடையாளம் காட்டும்.

இந்தச் செயலியை பின்னர் அப்பிள் வாங்கி விட்டது.

எனக்கு மிகவும் பிடித்த ஒரு ஸ்பானிய பாடல் ஒன்றை இதன் மூலம் தான் அடையாளம் கண்டேன்.

இருந்தாலும், ஒரு பாட்டைக் கேட்டவுடன் அந்தச் செயலியைத் திறந்து பாட்டைக் கேட்க வைத்து... அதெல்லாம் மினக்கெட்ட வேலை.

தற்போது வேலையிடத்தில் போர்க் லிப்ட் ஓட்டுகிறவர் ஒரு மாதிரியான பேர்வழி. அனாவசியமாக போர்க் லிப்டை திட்டுவார். பார்சல்கள் வரும் பெரும் கம்பிப் பெட்டிகளை உதைப்பார். தன் பாட்டில் யார் மீதோ கோபம் கொண்டு கத்திக் கொண்டிருப்பார். கண்ணுக்கெட்டின தூரம் வரை யாரும் இருக்க மாட்டார்கள்.

அவரோடு தொடர்பாடல் வைத்துக் கொள்கிறவர்கள் பெரும் ஜாக்கிரதையாக இருப்பார்கள். எந்த நேரம் கோபிப்பார் என்பது தெரியாது.

ஆனால், என்னோடு தனிமரியாதை.

அவரது ரேடியோ எப்போதும் சத்தமாக ஓடிக் கொண்டிருக்கும். அதோடு சேர்ந்து அவரும் பாடுவார். எனவே, எந்தப் பாடல் போய்க் கொண்டிருந்தாலும் பெரும்பாலும் அவருக்குத் தெரியும். அவரை ஓடிப் போய்க் கேட்பேன். ஆர்வத்தோடு பதில் சொல்வார்.

சில நேரம் அவருக்குக் கூடத் தெரியாத பாடல்களும் உண்டு.

ஒரு நாள் தற்செயலாக கூகிள் தேடுபொறியில் உள்ள மைக்ராபோனைக் கேட்க வைத்தால் என்ன என்று தோன்றியது.

ரேடியோவில் பாட்டுப் போய்க் கொண்டிருக்க, கூகிளைத் திறந்து கேட்கச் சொல்ல, அதுவாகவே கேட்டது...

பாடலை அடையாளம்



பாடகரான Bob Dylan க்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு கிடைத்தது.

அது வழமை போல, பல இலக்கியகாரர்களுக்கு மற்றவர்களுக்கு விருது கிடைக்கும் போது ஏற்படும் வயிற்றெரிச்சல் வந்தாலும், தனக்கு கிடைக்கவில்லையே என்று எப்போதும் புலம்பும் சல்மான் ரஷ்டி அதைப் பாராட்டியிருந்தார்.

நம்ம பின் நவீனத்துவக் கவிஞர்கள் பாடல் ஆசிரியர்களை இலக்கியவாதிகளாகக் கணக்கெடுப்பதே இல்லை.

கண்ணதாசன், வாலி, வைரமுத்து எல்லாம் எங்கள் இலக்கிய அளவுகோல்களின்படி கவிஞர்களே அல்ல.

காணவா? என்று.

பிறகென்ன?

இப்போது தெரியாத எந்தப் பாடலாக இருந்தாலும், போனை எடுத்து கூகிளைக் கேட்க வைத்து விட்டு வேலை செய்து கொண்டிருப்பேன். அதுவாகவே பாட்டை அடையாளம் கண்டு, கூகிளில் அதன் வீடியோவையும் பாடல் வரிகளையும் கொண்டு வந்து வைத்து விட்டுக் காத்திருக்கிறது.

அட, இவ்வளவு நாள் தெரியாமல் போச்சே!?

இப்படி ஆங்கிலப் பாடல்களைக் கேட்டுக் கேட்டே, எனக்கு குரலை வைத்தே அந்தப் பாட்டை யார் பாடியிருப்பார் என்று அறியக் கூடியளவுக்கு அறிவு நிறைந்திருக்கிறது.

கிட்டார் இசையைக் கேட்டே, அதை யார் வாசித்திருப்பார்கள் என்று சில கிட்டாரிஸ்டுகளை அடையாளம் கண்டு சொல்ல முடிகிறது.

இது ஏற்கனவே தெரிந்திருந்தால், இன்னும் நிறையப் பாடல்களை அறிந்திருக்கலாமே, என் அறிவும் வளர்ந்திருக்குமே என்ற ஏக்கம் வேறு மனதை நிறைத்தது.

இப்போது என்னுடைய பிரச்சனை, எதற்கும் பயன்படாத அனாவசியமான இந்தப் பேரறிவை வைத்து நான் என்ன செய்வது என்பது தான்.

பாடகரான Bob Dylan க்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு கிடைத்தது.

அது வழமை போல, பல இலக்கியகாரர்களுக்கு மற்றவர்களுக்கு விருது கிடைக்கும் போது ஏற்படும் வயிற்றெரிச்சல் வந்தாலும், தனக்கு கிடைக்கவில்லையே என்று எப்போதும் புலம்பும் சல்மான் ரஷ்டி அதைப் பாராட்டியிருந்தார்.

நம்ம பின் நவீனத்துவக் கவிஞர்கள் பாடல் ஆசிரியர்களை இலக்கியவாதிகளாகக் கணக்கெடுப்பதே இல்லை.

கண்ணதாசன், வாலி, வைரமுத்து எல்லாம் எங்கள் இலக்கிய அளவுகோல்களின்படி கவிஞர்களே அல்ல.


ஆனால், வெறும் பாடல் வரிகளும் எழுதிய பாடகரான பொப் டைலானை நோபல் குழு அங்கீகரித்திருக்கிறது.

இந்த விடயம் எல்லாம் நம்ம இலக்கிய மேதகுக்களுக்கு தெரியுமோ தெரியாது. உலகத் தரத்தில் எழுதும் தங்களுக்கு புக்கர், நோபல் பரிசு அங்கீகாரங்கள் கிடைக்கவில்லையே என்று அவர்கள் புலம்பும் போது, இதையெல்லாம் அறிந்து கொள்வதற்கு அவர்களுக்கு நேரம் இல்லாமலும் இருந்திருக்கக் கூடும்.

இப்படி இந்த றொக் அன்ட் ரோல் பாடல்கள் பற்றிய வரலாறுகளும் தகவல்களும் எனக்கு நிறையவே தெரியும்.

Rod Stewart இன் You're in my heart, in my soul பாட்டைக் கேட்டு உருகிப் போய், அவனுடைய இசை நிகழ்ச்சியை இங்கே றொறன்ரோவில் போய் பார்த்தேன். என்னுடைய முதல் காதலி என்னுடனான காதலை முறித்திருந்த காலம்.

அந்த நிகழ்ச்சிக்குப் போய் வந்து, தாயகத்தில் ஒரு சிறுகதை எழுதியிருந்தேன். பெரும் வரவேற்புப் பெற்றது. (நம் இலக்கியப் பெருந்தகைகள் மாதிரியான சுயபுகழ்ச்சி இல்லை!)




Lynyrd Skynyrd இன் Sweet Home Alabama வில் ஏன் நீல் யங்கின் பெயர் வந்தது, அதன் பின்னணியில் இருந்த அமெரிக்க தென்பகுதியின் நிறவெறி என்ன என்பது முதல் அமெரிக்காவின் வியட்னாம் யுத்தத்திற்கு எதிரான பாடல்கள் வரை, எந்த இசைக்குழு எந்த அரசியல்வாதியின் மனைவியோடு கூட்டுக்கலவி செய்தது என்பது ஈறாக எழுதவும் முடியும்.

ஆனால், அந்தப் பாடகர்களின் பெயரை, எங்கள் இலக்கியக்காரர்கள் உலக இலக்கியர்களின் பெயர்களை name dropping செய்து அவிழ்த்து விடுகிற மாதிரி, நானும் அவிழ்த்து விட்டால், யாருக்குத் தான் அவர்களைத் தெரியும்?

பின் நவீனத்துவத்துவம் முதல் பூக்கோ வரையும், தோஸ்தோயேவ்ஸ்கி முதல் ஹரூகி முகாரமி வரையும், அம்பேத்கார் முதல் பெரியார் வரையும், மார்க்ஸ் முதல் மாவோ வரையும் கரைத்துக் குடித்தவர்கள் மாதிரி எல்லாம் வெறுமனே இந்தப் பெயர்களை மட்டுமே வைத்து பிழைப்பு ஜீவிதம் நடத்தும் அளவுக்கு நமது இலக்கியவாதிகள் எல்லாம் அறிவுஜீவிகளாக வலம் வரும் போது, இந்த ஆங்கிலப் பாடல் அறிவை வைத்து எந்த ஜீவனமும் பண்ண முடியாத அளவுக்கு இதெல்லாம்...

என்னுடைய மற்ற அறிவுகள் போலவே...

எதற்கும் பயன்படாத வெறும் சிகை அறிவு தான்!

Lynyrd Skynyrd இன் Sweet Home Alabama வில் ஏன் நீல் யங்கின் பெயர் வந்தது, அதன் பின்னணியில் இருந்த அமெரிக்க தென்பகுதியின் நிறவெறி என்ன என்பது முதல் அமெரிக்காவின் வியட்னாம் யுத்தத்திற்கு எதிரான பாடல்கள் வரை, எந்த இசைக்குழு எந்த அரசியல்வாதியின் மனைவியோடு கூட்டுக்கலவி செய்தது என்பது ஈறாக எழுதவும் முடியும்.

ஆனால், அந்தப் பாடகர்களின் பெயரை, எங்கள் இலக்கியக்காரர்கள் உலக இலக்கியர்களின் பெயர்களை யேஅந னசழிிைபே செய்து அவிழ்த்து விடுகிற மாதிரி, நானும் அவிழ்த்து விட்டால், யாருக்குத் தான் அவர்களைத் தெரியும்?



*1.*

*Laws ignore our deepest needs.*
*promises turn into thin air.*
*You've grasped our beliefs,*
*and have outdoned our simple prayers.*

*Now gunshots fill our classrooms everyday.*
*You seek for the answers to ask the question*
*" Why?"*

*2.*

*This was our home*
*But you have turned off the lights*
*broke through our windows*
*And robbed a life.*

*This was our place to stand*
*But you cut apart our legs and*
*hoped we'd fall.*

*There aren't many days to come*
*Where we can't keep building more windows*
*Because one like you*
*comes to shatter it*
*in the end.*

**Akaraa Bourassa**

# கடந்து போகும் பொழுதுகள்



தங்கம்

என்னுடைய பொழுதுகளின் ஆரம்பங்கள் காலத்திற்கு காலம் வேறுபடும். இலங்கையில் சொந்த பந்தங்கள், உதவி தேவைப்படுவோர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் தேவையைப் பொறுத்தும் அது வேறுபடும்.

இன்றைக்கு காலை ஆறு முப்பது மணியளவில் தொலைபேசி அழைத்தது. இலங்கையாக இருக்குமோ என்றபடி தொலைபேசியின் அழைப்பை ஏற்கும் பகுதியை அழுத்துகிறேன்.

நான் சாமி கும்பிட்டுக் கொண்டிருக்கேக்க திடீரென்று தண்ணி ஓடுற சத்தம் கேட்டது, அவர் இப்படிக் கூறும் போது அவருடன் முன்பு நடந்த உரையாடல்களை மூளை விரைவாக மீட்டல் செய்யத் தொடங்குகிறது. அந்த பதினைந்து நிமிடம் நடைபெற்ற உரையாடலில் எனக்கு விளங்கியது குளியலறையில் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது என்பது மட்டுமே.

'தண்ணி எங்கேயிருந்து ஊத்தின்னுது' இது நான்.

'இவ்வளவு நேரமும் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறன்'

அவரது குரல் சற்று உயர்கிறது. அவர் மீண்டும் நான் சாமி கும்பிட்டுக் கொண்டிருக்கேக்க என்று ஆரம்பித்து சொல்லிக்கொண்டிருக்கும் போது இன்னுமொரு பதினைந்து நிமிடம் ஓடி விடுகிறது, நான் அவரது குடும்பபெயரை அழைத்து 'தயவு செய்து படம் எடுத்து அனுப்புறீங்களா?'

நான் வேலைக்கு போக வேண்டிய தயாரிப்புக்களில் ஈடுபடுகிறேன்.

மீண்டும் அழைப்பு அவரிடமிருந்து

'எனக்கு படம் எடுக்க முடியேல்ல,' இன்னுமொரு பதினைந்து நிமிட உரையாடல்.

என்னுடைய புரிதலின் படி மலசலகூடத்தின் தண்ணீர் நிறைந்திருக்கும் மேற்பகுதியிலிருந்து தண்ணீர் வெளியே வழிந்து குளியலறையில் இருக்கும் குளிக்கும் போது தண்ணீர் வெளியேறும் தூவாரத்தினூடாக ஓடிக்கொண்டிருக்கிறது.

எனது விளக்கத்தை நோர்வேஜிய மொழியில் எழுதி அவருக்கு அனுப்பி சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பும்படி சொல்கிறேன். நான் குறுஞ்செய்தி அனுப்பி சில நிமிடங்களில் மீண்டும் அழைத்தார் அவர். என்னுடைய குறுஞ்செய்தி உதவி

> ‘ஏன் அவர் இப்படிச் செய்தவர்,’ ‘இப்படி ஒரு வாழ்க்கை வரும் எண்டு நான் கனவிலையும் நினைக்கேல்ல,’ இப்படி யாரும் செய்வினமே, மாட்டுக்கு இந்த வயதில் இளம் பொம்பிள கேட்குதோ?’ என்று ஆரம்பித்து,
> ‘நான் கலியாணம் செய்து முதல் முதல் வீட்ட வாறன் அந்த பிள்ளை தவண்டு வந்து காலைப் பிடிக்குது, நான் வந்த வரத்தில உடுப்பும் கழட்டாமா அந்த பிள்ளைக்கு பால் கரைச்சுக் குடுத்தனான், அந்த பாம்பு, பிள்ளையள் வளர்ந்தவுடனே நான் பள்ளிக்கூடம் போயிட்டு வீட்ட வாறதுக்குள்ள கதவின்ர பூட்டை மாத்திப்போட்டுது. என்ர சூட்கேஸ் வெளியில புல்தரையில கிடக்கு, நான் வெளியில நிண்டு களைச்சுப் போய் பக்கத்துவீட்டு தமிழ் ஆட்களின்ர வீட்டு பெல்லை அமத்தி இப்படி எண்டு சொன்னன், அவையும் ரெலிபோன் அடிச்சுப் பாத்தினம், பிறகு இரவு போல பொம்பிளையள் இருக்கிற சென்றறில கொண்டு போய் விட்டவை’.இவ்வாறான வாக்குமூலங்கள், பிரிந்திருக்க விண்ணப்பம், விவாகரத்துக்கு விண்ணப்பம், வலுவிழந்தோர் உதவிப்பண விண்ணம் இன்னபிற படிவங்களைப் பூர்த்தி செய்தல், சமூகஉதவி பணம் நிறுத்தப்பட்டால் முறையீடு செய்தல் என்று எல்லா கிளறிக்கல் வேலையும் செய்து முடிய மனம் உடலும் மிகவும் களைத்துச் சோர்த்து கட்டிலை கண்டால் காணும் என்ற நிலையில் இருக்கும்.

கேட்கும் தொனியில் இருக்கவில்லை, தயவு செய்து என்றெல்லாம் நீங்கள் எழுகவில்லை, திருத்துங்கோ என்று கூறினார். நான் வசனம் வசனமாக வாசித்து தமிழில் சொல்கிறேன்.

‘ஆ, சரி’

நான் கோப்பியைக் காவிச்செல்லும் குவளையை ஏந்தியபடி, தலை இழுத்துக்கட்ட நேரம் போதாமல் அவசர அவசரமாக வெளியே செல்கிறேன். இண்டைக்கு பஸ் எடுத்தால் நல்லது, கெதியாக போய் சேரலாம் என்று நினைத்தாலும், பஸ்சிற்குள் இருக்கும் போது வந்து போகும் தொலைபேசி அழைப்புக்கள் எனது அமைதியையும் காலங்காலத்தால என்னுடன் கூடவே பயணிக்கும் சக பிரயாணிகளின் அமைதியை குலைக்க விரும்பாமல் நான் அவசர அவசரமாக வேலை மையத்தை நோக்கி நடக்கிறேன்.

அலுவலக வாசலில் எத்தியோப்பிய சகோதரி கடவுள் இன்றைய நாளை அழகாக்குவாராக என்று ஆசிர்வதிக்கிறார். நல்ல காலம் மனதிற்குள் தோன்றுதை வெளியில் சொல்லாமல் தடுக்கும் எனது புன்முறுவல் வந்து என்னைக் காப்பாற்றிக் கொண்டது.

வேலை முடிவதற்கிடையில் எண்ணிடங்காத கேள்விகள், வீட்டை வாடகைக்கு கொடுத்தவரிடமிருந்து அவருக்கு வந்த கேள்விகளுக்கும் அந்தக் கேள்விகளை ஏன் அவர் கேட்கிறார் என்ற விளக்கத்தை இவருக்கு சொல்வதிலும் அன்றைய பொழுது கழிய எனக்குத் தெரிந்த, தெரியாத நபர்கள் எல்லோரிடமும் உடைந்து தண்ணீர் கொட்டும் ரொயிலெற்றை எப்படி திருத்தலாம் என்று கேட்டு விலை விசாரித்து விட்டு அந்த நபருக்கு அறிவிக்க தொடர்பை ஏற்படுத்தினேன்.

‘அவர் ஒரு குறுஞ்செய்தி அனுப்பியிருக்கிறார் அதைப் பாருங்கோ’ என்றார்.

வீட்டின் சொந்தக்காரரர் தான் ஒரு plumber தேடிக் கொண்டிருப்பதாக அறிவித்திருந்தார். நல்லது என்று நான் நினைத்துக் கொள்கிறேன். இதற்கிடையில் எத்தனையோ சின்ன சின்னத் தீர்க்க முடிந்த, முடியாத பிரச்சனைகளுடன் என்னுடைய நாள் முடிவுக்கு வருகிறது என்று கனவு காணும் போது அந்த நபர் மீண்டும் அழைத்தார்.

‘என்ன ரொயிலற் திருத்தியாச்சோ?’ என்றேன் நான்.

‘கோதாரி’ என்று பதில் வந்தது, அவர் அதை மறந்தே விட்டார். இப்போது வேறு ஒரு பிரச்சனை முளைத்திருந்தது. பொலிஸ் நிலையத்திற்கு எப்படிச் செல்வது, உள்ளே சென்று அந்த அடையாள அட்டையை எப்படி பெற்றுக் கொள்வது என்பதாக அது கிளைவிட்டிருந்தது.

நோர்வேயில் இப்போது வங்கி அட்டைகளை நபர்களின் படத்துடன் வழங்குவதை வங்கிகள் நிறுத்திவிட்டன. இலங்கை தேசிய அடையாள அட்டையைப் போல ஒரு அடையாள அட்டை வழங்கும் திட்டம் அமுலுக்கு வந்துள்ளது. இந்த நபருக்கும் வங்கி அட்டை படம் இல்லாமல் வந்து விட்டது. அந்த அட்டையை அடையாள அட்டையாக பாவிக்க முடியாது என்பதை விளக்கிப் புரிய வைக்க ஒரு வாரம் எடுத்துக் கொண்டது. அதன்பிறகு அடையாளஅட்டைக்கு விண்ணப்பித்து நேரமும் எடுத்தாகி விட்டது.

பொலிஸ் நிலையத்திற்கு செல்வதற்கு இன்னும் மூன்று வாரங்கள் இருக்கின்றன, ஆனால் அந்த நிலையத்திற்கு எப்படி செல்வது என்பது ஒரு பூதாகரமான பிரச்சனையாக எழுந்து நின்றது இப்போது.

அவர் இருக்கும் இடத்திலிருந்து ஒரு அரைமணிநேர பஸ் பிரயாணத்தில் அமைந்திருந்தது அந்த பொலிஸ்நிலையம். அவர் குறிப்பிட்ட தரிப்பிடத்தில் இறங்கி

அதில் நிற்பவர்களைக் கேட்டாலே கையை உயர்த்திக் காட்டினால் தெரியும் கட்டிடம் தான் அந்த பொலிஸ் நிலையம். அவர் எந்த நிற பஸ்சில் ஏறி எந்தக் நிற கட்டடத்திற்கு அருகில் இருக்கும் தரிப்பிடத்தில் இறங்க வேண்டும் என்பதையும் குறிப்பிடுகிறேன். இப்போது அங்கே வீடு கட்டும் வேலைகள் நடக்கின்றன, மரங்கள் தறிக்கப்பட்டு விட்டன, பூ, புஸ்பம், தேனீர், கோப்பி விற்கும் கடைகள் எல்லாம் இப்போ அங்கே இல்லை என விலாவாரியாகச் சொல்கிறேன்.

நோர்வேஜியர்கள் அல்லாதோருக்கு வழி சொல்வதற்கு எங்களுக்கு அதிக நுண்ணறிவு இருக்க வேணும். சென்றடைய வேண்டிய இடம் பற்றி விளக்கம் கொடுக்க வேண்டுமென்றால் பக்கத்தில் இருக்கும் கோயில், பெரிய விளம்பரப்பலகை ( இவைகள் அடிக்கடி மாறும் என்பது வேறு பிரச்சனை, அவர்கள் அந்த இடத்திற்குச் சென்ற ஆண்டில் இருந்த விளம்பரப்பலகை எங்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும்) என்று சம்பந்தா சம்பந்தமில்லாத விடயங்களைச் சொல்ல வேண்டும், இந்த வீதியால போய், வலது கை பக்கம் திரும்புங்கோ என்பது ( ஆர்ற வலது கை என்று கேட்பவர்களும் உண்டு, சில பேருக்கு வலது, இடது தமிழில் சொன்னால் விளங்காது அதை நோர்வேஜிய மொழியில் சொல்ல வேண்டும்) எல்லாம் சரிவராது.

2015 ஆண்டு கடவுச்சீட்டு எடுப்பதற்கு சென்ற போது சென்ற பாதையை எனக்கு விளக்கிக் கூறுகிறார். நான் எல்லாவற்றிற்கும் ம்ம் ம்ம் என்று கூறுகிறேன்.

இந்தப் பாதையில் ஒரு சிக்கல், முன்பு பஸ்சிலிருந்து இறங்கி பாதையைக் கடந்து வந்தால் பொலிஸ்நிலையத்திற்குச் செல்ல வேண்டிய பஸ்சை எடுக்கலாம், இப்போ அப்படிச் செய்ய முடியாது பஸ் போகும் பாதையை மாற்றி விட்டார்கள், அந்த தரிப்பிடத்தை இப்போது அகற்றிவிட்டார்கள், இறங்கும் இடத்திலிருந்து சற்றுத்தூரம் நடந்து வந்த பின்பு தான் காவல் நிலையம் கண்ணில் படும். சுமார் நூறு மீற்றர் தூரத்தை கடந்து வந்து நிமர்ந்து பார்த்தால் காவல் நிலையம் கண்ணில் படும் என்பதை விளங்கப்படுத்த எனக்கு மணித்தியாலங்கள் பிடித்தன. ஆனாலும் அவருக்கு சந்தேகம் வலுத்துக் கொண்டே போனது, நாளைக்கு மிச்சத்தைக் கதைப்போம் என்று தொடர்பைத் துண்டிக்கிறேன்.

நாளைக்கு காலையில் இவரிடம் இருந்து தொலைபேசியை எதிர்பார்க்கலாம்.
இது மட்டுமல்ல,

'ஏன் அவர் இப்படிச் செய்தவர்,' 'இப்படி ஒரு வாழ்க்கை வரும் எண்டு நான் கனவிலையும் நினைக்கேல்ல,' இப்படி யாரும் செய்வினமே, மாட்டுக்கு இந்த வயதில் இளம் பொம்பிள கேட்குதோ? என்று ஆரம்பித்து,

'நான் கலியாணம் செய்து முதல் முதல் வீட்ட வாறன் அந்த பிள்ளை தவண்டு வந்து காலைப் பிடிக்குது, நான் வந்த வரத்தில உடுப்பும் கழட்டாமா அந்த பிள்ளைக்கு பால் கரைச்சுக் குடுத்தனான், அந்த பாம்பு, பிள்ளையள் வளர்ந்தவுடனே நான் பள்ளிக்கூடம் போயிட்டு வீட்ட வாறதுக்குள்ள கதவின்ர பூட்டை மாத்திப்போட்டுது. என்ர சூட்கேஸ் வெளியில புல்தரையில கிடக்கு, நான் வெளியில நிண்டு களைச்சுப் போய் பக்கத்துவீட்டு தமிழ் ஆட்களின்ர வீட்டு பெல்லை அமத்தி இப்படி எண்டு சொன்னன், அவையும் ரெலிபோன் அடிச்சுப் பாத்தினம், பிறகு இரவு போல பொம்பிளையள் இருக்கிற சென்றறில கொண்டு போய் விட்டவை.'

இவ்வாறான வாக்குமூலங்கள், பிரிந்திருக்க விண்ணப்பம், விவாகரத்துக்கு விண்ணப்பம், வலுவிழந்தோர் உதவிப்பண விண்ணம் இன்னபிற படிவங்களைப் பூர்த்தி செய்தல், சமூகஉதவி பணம் நிறுத்தப்பட்டால் முறையீடு செய்தல் என்று எல்லா கிளறிக்கல் வேலையும் செய்து முடிய மனம் உடலும் மிகவும் களைத்துச் சோர்த்து கட்டிலை கண்டால் காணும் என்ற நிலையில் இருக்கும். தொலைபேசியை நிறுத்தி விட்டு நித்திரை கொள்ள முடியாது, எண்பதுகளின் ஆரம்பத்தில் இருக்கும் அம்மாவுக்கு ஏதாவது என்றால் அதிகாலையில் தான் எனக்கு அறிவித்தல் வரும்,

இப்படியாக ஓடிக்கொண்டிருக்கும் நேரம் விழுங்கிய பொழுதுகளில் எஞ்சும் சொற்ப நேரங்களை விழுங்க முகநூலும், அங்கங்கே தென்படும் புதியவரவுகளும் தங்களுக்கென்று இருக்கும் கொஞ்ச நேரத்தைக் கொள்ளை கொண்டு போகும்.

மீண்டும் அவரிடமிருந்து ஒரு அழைப்பு, 'செல் போனில எடுத்த படத்தை எப்படி பிரிண்ட் அவுட் எடுக்கிறது?'.

அதை மின்னஞ்சலுக்கு அனுப்பி போட்டு பிரிண்ட் பண்ணுங்கோ என்று நாக்கு நுனி வரை வந்தது ஆனாலும் ஆறுதலாக கேட்கிறேன், 'பிரிண்ட் பண்ணி என்ன செய்யப் போறீங்க?'

'இல்லை, ரொயிலிற்றின்ர படத்தில எங்க தண்ணி வருகுதெண்டு களர் அடிச்சுப் போட்டு அத படம் எடுத்து வீட்டுக்காரருக்கு அனுப்ப போறன் ஏன் எண்டால் அவருக்கு தண்ணி எங்கியிருந்து லீக்காகுது எண்டு படத்தில தெரியாதுதானே, அது உண்மையில படத்தில தெரியேல்லைங்கோ'

'ஓகே, அந்த படத்தை எனக்கு அனுப்புங்கோ, நான் நாளைக்கு வேலையில பிரிண்ட் அவுட் எடுத்துக் கொண்டு வந்து தாறன்.'

மீண்டும் பொலிஸ்நிலையத்திற்குச் செல்லும் பாதையை கூறுகிறார். நான் ம்ம் என்று கேட்கிறேன்.

'அப்ப பொலிஸ்நிலையம் பஸ்தரிப்பிடத்திற்கு முன்பக்கமோ, பின்பக்கமோ இருக்கு?

இந்த கேள்விக்கு என்னிடம் பதில் இருக்கவில்லை, உண்மையில் எனக்கு கேள்வி விளங்கவில்லை என்றே சொல்ல வேண்டும், பஸ்தரிப்பிடத்திலிருந்து முன்நோக்கிச் செல்ல வேண்டும் என்று கேட்கிறாரா அல்லது பின்னோக்கிச் செல்ல வேண்டும் என்று கேட்கிறாரா? பஸ்சிலிருந்து இறங்கி நேரே நடக்க வேண்டும் என்றால் பொலிஸ் நிலையம் முன்பக்கமாகத்தானே இருக்க வேண்டும்.

'எனக்கும் சரியாக தெரியேல்ல, நாளைக்கு நான் போய் பாத்திட்டு வந்து சொல்றன்'

'ஓம் நானும் போய்ப்பாப்பம் எண்டுதான் இருக்கிறன், நீங்களும் போய் பாருங்கோ, நானும் போய் பாக்கிறன்'.

என்னுடைய வாய் இந்தநேரத்தில் சற்று அவசரப்பட்டுவிட்டது.

'அப்ப நீங்கள் போய் பாக்கிறதெண்டால் நான் ஏன் போகவேணும்?'

'நீங்களும் போய் பார்த்ததானே நான் கேக்கேக்க பிறகு எனக்குச் சொல்லலாம்'

எங்கள் வீட்டுக்குசினியில் ஏதோ நொருங்கும் சத்தம் சற்றுப் பலமாகவே கேட்டது.

# ‘பாலைவனப் பூஞ்சோலைகள்’

வாழ்க்கையில் விரக்தியின் வழிந்தோடல்கள்
தனிமையின் வாசம் மூக்கைத் துளைக்கும்
விடியல்கள் வாழ்க்கையின் வலுக்கட்டாயங்கள்
துயில்கள் சோகத்தின் வடிகால்கள்
ஊண் என்பது உயிர்வாழ்க்கைக்கானது

நிகழ்காலம் கடந்த காலத்தின் பதிவுகள்
தனிமையைத் தேர்ந்தெடுத்ததன் விளைவுகள்
சமுதாயத்தின் மீது இடைவிடாச் சாடல்கள்
தலைநிமிர்ந்து நிற்கும் தைரியங்கள்
எல்லை கடவாத சங்க இலக்கியங்கள்

துயரத்தின் உச்சியில் என்றோ ஓர்நாள்
அலுவலகம் செல்லும் அவசியக் கட்டாயம்
புகையிரதத்தில் தொலைதூரப் பயணம்
அருகில் அமர்ந்ததோ இளம் தாயும் சேயும்
தயக்கம் கண்களில் புன்னகை வதனங்களில்


உடைந்து போன ஆங்கிலத்தில் உரையாடல்
அனுபவங்களின் பரஸ்பரப் பரிமாறல்கள்
கேட்டதும் கண்கள் நிறைந்து குளமாகின
தளராத மனம் கண்டு விசாலமான வியப்புகள்
போரின் அழிவுகள் தப்பி வந்த தைரியங்கள்

அடுத்த தரிப்பில் இறங்கும் அவசியம் அவர்களுக்கு
தூரேயிருந்த கணவன் அருகில் வர அறிமுகம்
இறங்கும் முன் அக்குழந்தை கைகளை வருட
எதிர்காலம் நன்றாக மனம் நிறைந்த வாழ்த்துக்கள்
பாலைவனப் பூஞ்சோலைகள் வாழ்வின் நிஜங்கள்



சி.திலகா

# மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நாமம்:




## வரலாற்று தேடல்கள் 6

**எம்.ஆர்.ஸ்டாலின் ஞானம்**
Facebook: M R Stalin Gnanam

மட்டக்களப்பு தமிழகத்தின் வரலாற்றெழுத்தியலில் புராணங்களிலும் இலக்கிய பிரதிகளிலும் ஏட்டுச்சுவடிகளிலும் காணப்படுகின்ற தகவல்கள் ஒரு தொன்மைமிகு பாரம்பரியம் மிக்க சமூகம் இந்த மண்ணிலே வாழ்ந்து வருவதனை புலப்படுத்துகின்றன. இவற்றோடு சேர்த்து புராதன வரலாறுகளை தெளிவாக உறுதி செய்து கொள்வதற்கான ஆதாரங்களாக தொல் பொருட்கள் சார்ந்த அடையாளங்களே முக்கியமானவையாகக் கொள்ளப்படுகின்றன. இத்தகைய தொல்பொருட்கள் விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு எடுக்கப்படுகின்ற முடிவுகளே அறிவியல் ரீதியில் ஒரு பிரதேசத்தின் வரலாறு பற்றிய தெளிவானதும் துல்லியமானதுமான முடிவுகளை தரவல்லதாகும்.

அவ்வாறு நோக்குகின்றபொழுது பண்டையகால பிராமிச் சாசனங்கள், கல்வெட்டுக்கள், ஈமச்சின்னங்கள் போன்றவை முக்கியமான தொல்பொருட்களாக அடையாளம் காணப்படுகின்றன. இத்தகைய தொல்பொருள் சின்னங்கள் காணப்படும் இடங்களில் மென்மேலுமான புதைபொருள் ஆய்வுகள் செய்யப்படுவதன் ஊடாகவே ஒரு குறித்த இடத்தின் தொன்மையான வரலாற்றை அறியவும் உறுதி செய்யவும் முடியும்.

அந்தவகையில் மேற்படி ஆய்வுகளுக்கு உட்படவேண்டிய பல்வேறு விதமான தொல்லியல் சான்றுகள் மட்டக்களப்பு மண்ணிலே நிறையவே மண்டிக் கிடக்கின்றன.

மட்டக்களப்பின் வடக்கே இருக்கின்ற பூர்வ குடிகளின் (கரையோர வேடர்களின்) தாயகமாக காணப்படுகின்ற வாகரை, கதிரவெளி போன்ற பிரதேசங்களில் தொடங்கி மட்டக்களப்பின் தெற்கெல்லையாக உள்ள பாணமை பகுதி வரையிலான பல இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ள ‘ஈமத்தாழிகள்’, ‘நடுகற்கள்’ போன்றன இவ்வகையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

இறந்தவர்களை தாழிகளில் வைத்து புதைப்பதும் அதேபோன்று புதைக்கின்ற இடங்களை அடையாளமிட்டு நடுகற்களை இட்டு பாதுகாத்துவருவதுமான வழக்கங்கள் புறநானூற்றுக் காலப் பண்பாடுகள் ஆகும். அந்நோக்கில் கதிரவெளி பகுதியில் கண்டெடுக்கப்பட்ட ஈமத்தாழிகள் மட்டக்களப்புத் தமிழகத்தின் தொன்மையான நாகரீகம் பற்றி பறைசாற்றுவனவாக உள்ளன.

அதேபோன்று பண்டைய மட்டக்களப்பு தமிழகத்தில் பாணமைப்பற்று வன்னிமையின் ஆட்சியின் கீழிருந்த (அம்பாறை மாவட்டத்தின்) சங்கமன் கண்டி பிரதேசத்துக்கு அருகேயுள்ள காட்டுப் பகுதியில் காணப்படும், தொல்லியல் ஆதாரங்களும் முக்கியமானவையாகும்.

சங்கமன் கண்டி பிரதேசத்தின் பிரதான வீதியிலிருந்து மேற்குப் புறமாக சுமார் மூன்று கிலோமீட்டர் தூரத்தில், ஏராளமான புராதன சின்னங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சில சின்னங்கள் கிறிஸ்துவுக்கு முன்னர் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று அறியப்படுகின்றன.

கல்வெட்டுக்கள், நடுகற்கள், கல்லறைகள், பாறைத்தூண்கள், கல்லிருக்கைகள், மலைகளில் குடையப்பட்ட நேர்த்தியான குழிகள் மற்றும் நீர்த் தொட்டிகள் உள்ளிட்ட ஏராளமான புராதன சின்னங்கள் இங்கே காணக் கிடைக்கின்றன. ஈமத்தலங்களில் அமைக்கப்பட்ட நான்குக்கும் மேற்பட்ட கல்லறைகள் இப்பகுதியில் காணப்படுகின்றன. இவை நீள் சதுரமான வடிவுடையவையாகும்.

சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னர் சங்கமன் கண்டியில் காணப்படும் தொல்பொருட்கள் நிரம்பிய இவ்விடத்தினை நேரடியாக தரிசித்த அனுபவம் இக்கட்டுரையாளருக்கு உண்டு என்பது இங்கே மேலதிக தகவலாக தரப்படுகின்றது.

இறந்தவர்களின் நினைவாக அமைக்கப்படும் ‘நடுகல்’ இங்கு காணப்படுகின்றமையினை பேராசியர் பத்மநாதன் உறுதிப்படுத்தியுள்ளதோடு, ‘நடுகல்’ என்பது, ஆதி இரும்புக்காலம் என்று சொல்லப்படுகின்ற பெருங்கல் பண்பாட்டுச் சின்னங்களில் ஒன்றாகும் என்றும் இப் பெருங்கற்கால மக்கள்தான் ‘நாகர்’கள் என அழைக்கப்படுவதாகவும் அங்கே கிடைக்கப்பெற்ற பானையோடு ஒன்றில் தமிழ் பிராமி எழுத்து காணப்பட்டதாகவும் அதனூடாக



பாணமை சங்கமன்கண்டி என்னும் இடத்தில் காணப்படும் தொல்பொருட்கள்

கிறிஸ்துவுக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில், தமிழ் மொழியைப் பேசிய மக்கள் இங்கு வாழ்ந்துள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்தலாம் என்றும் பேராசிரியர் பத்மநாதன் கருத்து தெரிவித்துள்ளார்.

மேற்படியான தொல்லியல் எச்சங்கள் தொல்லியல் துறையினரால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள போதிலும் இன்றுவரை இவற்றைப் பாதுகாப்பதற்கான இறுக்கமான பொறிமுறைகளோ முறையான ஆய்வுகளோ இன்றி இச்சான்றுகள் அழிந்து கொண்டு செல்கின்றன.

அதேபோன்று இறக்கின்றவர்களை புதைக்கும் பழக்கங்கள் இன்றுவரை மட்டக்களப்பில் கடைப்பிடிக்கப் பட்டு வருவதும் பழந்தமிழர் பண்பாட்டின் தொடர்ச்சியாகும். எனினும் விதி விலக்காக மட்டுமே இறந்தவர்களை எரியூட்டும் ஒரு சில நிகழ்வுகளும் மட்டக்களப்பில் இடம்பெறுவதுண்டு. இது போன்ற பலல்வேறு விடயங்களில் ஆறுமுகநாவலரின் ஆசாரக்கறை படியாத பேறுபெற்றதன் காரணமாகவே ஆரிய பண்பாட்டு மயமாக்கலில் இருந்து தப்பிப் பிழைக்கும் வாய்ப்புகளை மட்டக்களப்பு தமிழகம் பெற்று வந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## முக்குவர், மற்றும் இஸ்லாமிய சட்டகோவைகள்

மட்டக்களப்பு மக்கள் தமது அரசியல் வரலாற்றில் மட்டுமல்ல கலை, கலாசாரம், பண்பாடு, சடங்கு சம்பிரதாயங்கள், மற்றும் உணவு முறைகளிலும் கூட தமக்கான தனித்துவமான பழக்கவழக்கங்களை கொண்டிருக்கிறார்கள். இவைகளில் பெரும்பாலானவை ஆரிய கலப்பற்றவையாகவும் தாய்வழி சமூதாய உரிமைகளை பேணுபவையாகவும் 'குடி' முறை வகுத்துவார் முறைகளை தொடர்பவையாகவும் மற்றும் சாதிவாரியாக தீண்டாமை இறுக்க மற்றவையாகவும் காணப்படுகின்றன. இப்பண்புகள் ஒரு சமூகவியல் பார்வையில் முற்போக்கு அம்சங்கள் நிறைந்தனவாகும். இந்த அம்சங்களடங்கிய சமூக ஒழுங்குகளையும் அவைசார்ந்த பண்பாட்டு கூறுகளையும் பேணிபாதுகாப்பதற்காக கிழக்குமாகாணம் தனக்கான தேசவழமைகளை காலா காலமாக கைக்கொண்டு வந்திருக்கின்றது.

சமூகவியல் சார்ந்த வழக்காறுகளாக மட்டக்களப்பில் நீண்டகாலமாக பின்பற்றப்பட்டு வரும் 'நிலபுலம்', 'வீடுவளவு',மற்றும் 'சொத்துப்பத்துக்கள்' போன்றன குறித்த கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய மரபுகள் தனித்துவமானவையாகும். பரம்பரையாக கிடைக்கின்ற இவ்வகை ஆதனங்களை 'முதுசம்' என்றழைப்பது இங்கு வழமையாகும்.

ஒரு குடும்பத்துக்கென இருக்கக்கூடிய பரம்பரைச் சொத்துக்களும் 'தேட்டம்' காரணமாக அதாவது சொந்த உழைப்பினால் தேடுகின்ற சொத்துக்களும் ஒருமித்ததாக அக்குடும்ப வாரிசுகளுக்குரிய முதுசம் எனக் கொள்ளப்படும். பெற்றோரின் இறப்புக்குப் பின்னர் அக்குடும்பத்தின் வாரிசுகளுக்குரிய முதுசமாக இவை கைமாறப்படும். ஆனால் அதனை தந்தையின் பெயரால் ஒரு போதும் அழைப்பதில்லை.மாறாக அவை 'தாயதி முதுசம்' என்றே அழைக்கப்படும். அதேபோல அக்குடும்ப வாரிசாக இருக்கும் பெண் பிள்ளைக்கே 'வீடுவளவு' வாரிசு உரிமையாகும். அப்பெண் பிள்ளை திருமணமாகி தன் தாயதி முதுசமான அதே வீடுவளவில்தான் வாழ்வது தொடரும். இங்கே ஒரு பெண்ணுக்கு பிறந்தவீடு புகுந்தவீடு என்னும் வேறுபாடுகள் இருப்பதில்லை. அதேவேளை அப்பெண்ணை திருமணம் செய்யும் மாப்பிளையானவன் தான் பிறந்த வீட்டை விடுத்து தான் திருமணம்

செய்யும் பெண்ணின் வீட்டில்தான் வந்து வாழ வேண்டியிருக்கும். இத்தகைய நடைமுறையானது இன்றுவரை மட்டக்களப்பில் காணப்படும் திருமணம் சார்ந்த வழக்காறுகளில் முக்கியமானதொன்றாகும்.

அதேவேளையில் ஒரு ஆண் தனது திருமண பந்தம் காரணமாக மனைவியின் வீடு வாசல்களை அனுபவிக்கலாமேயன்றி அவற்றை விற்பதற்கோ கைமாறுவதற்கோ உரிமையற்றவனாவான் என்பதும் இந்த வழக்காறுகளில் இருந்து வந்த போதிலும் தற்காலங்களில் இந்நிலைமைகள் மாற்றங்கண்டுவருகின்றன.

மேற்படி பெண்களின் சொத்துரிமை குறித்த பாதுகாப்பு அம்சங்கள் பெண்களே குடும்பத்தின் அதிகாரங்களை தீர்மானிக்கும் தாய்வழி சமூகத்தின் தொடர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன.

அதுமட்டுமன்றி சேரநாட்டு மக்களிடையே இருந்து வந்த ‘மருமக்கள் தாயக முறை‘ என்பது இந்த முதுசங்களின் கைமாறலில் மட்டக்களப்பு முக்குவர்களிடையேயும் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. எனினும் தற்காலத்தில் இம் ‘மருமக்கள் தாயம்‘ முறைமையானது கைவிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாண மக்களிடையே காணப்பட்ட இத்தகைய தேசவழமைகள் எப்படி 1707 ஆம் ஆண்டு தொகுக்கப்பட்டு யாழ்ப்பாண தேசவழமை சட்டம் எனும் சட்ட அந்தஸ்தை பெற்றனவோ அதேபோன்று மட்டக்களப்புத் தமிழர்களுக்குரியனவாக இந்த வழக்காறுகளும் ஒல்லாந்தரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து ஆங்கிலேயர் ஆட்சியில் மட்டக்களப்பில் நிலவிய இந்த தேசவழமை வழக்காறுகள் அனைத்தும் ‘சி.பிறித்தோ‘ என்னும் சட்டவாளரால் ஒரு நூலாக தொகுக்கப்பட்டு 1876ஆம் ஆண்டில் ‘முக்குவர் சட்டம்‘ எனும் அந்தஸ்தை பெற்றது.

கிழக்கிலும் வடக்கிலும் வாழுகின்ற மக்கள் பேசுகின்ற மொழியில் தமிழர்களாகவே இருந்தபோதும் கிழக்கும் வடக்கும் ஒரே விதமான வழக்காறுகளாலோ சட்ட திட்டங்களினாலோ கட்டுப்படுத்தப்பட முடியாதவையாக உள்ளன என்பதை இதுபோன்ற வரலாறுகள் தொடர்ச்சியாக உறுதிப்படுத்தி வந்துள்ளன.

இதே போன்றே கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கும் இஸ்லாமிய மத நம்பிக்கையின் அடிப்படையிலமைந்த ஷரியா சட்டகோவை சார்ந்த பல விடயங்கள் இலங்கையில் காலணித்துவ ஆட்சியாளர்களினாலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையும் அவற்றின் தொடர்ச்சியாக இங்கு வாழும் முஸ்லிம்களிடையே ‘காதி நீதிமன்றுகள்‘ மற்றும் ‘வக்பு சபை‘ போன்றவை மரபார்ந்த நிறுவனங்களாக சட்டவலுப் பெற்றுள்ளமையும் மட்டக்களப்புத் தமிழகமானது தனக்கென கொண்டுள்ள பல்லினப்பண்பாட்டை எடுத்தியம்புகின்றன.

மேற்படி இலங்கைத் தமிழரிடையே கைக்கொள்ளப்பட்டுவந்த தேச வழமைகள் பற்றிய விபரங்களை அலசுகின்ற நூலாக சி.பத்மநாதன் அவர்கள் எழுதிய ‘இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும்‘ என்னும் நூல் திகழுகின்றது. அதேபோன்று தமிழ் நாட்டின் ‘நெய்தல் வெளி‘ பதிப்பகத்தார் மேற்குறித்த மட்டக்களப்பு ‘முக்குவர் சட்டம்‘ நூலின் தமிழாக்கத்தினை அண்மையில் வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். அ



# முற்றுப்பெறா...

## சதாசிவம் ஜீவா

செம்மஞ்சள் சூரியன் மேற்குத் திசைநோக்கி விரைந்துகொண்டிருந்தான். மக்களின் பெரும்பாலானோரும் வேலை முடிந்து வீடு விரைந்துகொண்டிருந்தார்கள். சிவாவும் பாருக்கு விரைந்தான். நண்பனை நெடுநேரம் காகக்கவைக்க விரும்பாமல். ஒரு இருபத்தைந்தாண்டுகளுக்கு முன் இப்போதிருக்கிற தொழில்நுட்பம்போல் இல்லை. பெரும்பாலும் நேருக்கு நேர் சந்தித்து கதைப்பதுதான் கதை.

நண்பன் இவனுக்காக காத்திருந்து காத்திருந்து பெறுக்காமல் இரண்டு போத்தல் பியரை உள்ளிறக்கிவிட்டான். தெளிந்தும் தெளியாத ஒரு நிலையிலிருந்தான்.

'றவிக்கில மாட்டுப்பட்டுட்டன்' என்றவாறே அவனருகில் சிவா இருந்தான். வெயிட்டர் சிவாவுக்குமாக பியரை வைத்தான்.

'மச்சான் ஊரில என்னமாதிரி'

'ஊர் என்ன? நாடே நாசமாப்போய்கொண்டிருக்கு'

'என்ன விசர்கத கதைக்கிற சிங்களவன் எக்கேடு கெட்டுப்போகட்டும். ஆனால் தமிழர இயக்கம் காப்பாத்தும்'

'இயக்கம் காப்பத்தும் எண்டா எப்படிடா?'

'ஆமிக்காரன வடக்கு கிழக்கில இருந்து ஒரே அடியா அடிச்சு துரத்திட்டா சரி'

'அதுக்கப்புறம் தமிழ் மக்கள் தேனில முங்கி பாலில எழும்பிவினமோ?'

'நீ என்ன இயக்கத்துக்கு எதிரோ?'

'சரி அதவிடு நானும் பாக்கிறன் நீ சரியான முடா குடிகாரன இருக்கிற ஏன் வீட்டில பிரச்சினையே'

'பிரச்சினை வீட்டில இல்ல மண்டேல'

'என்னடா?'

'ஆமாட மச்சான் அண்ண அண்ண என்று அவள் கெஞ்சின ஈனக்குரல் காதில கேட்டுக்கொண்டே இருக்குது. அவளின்ர ஈனப்பார்வ நினைவில இருந்து அழியாமல் அலக்கழிக்குதாடா நினைக்க நினைக்க அழுகையா வருது செத்திடவேணும் போல கிடக்கு'

'விசர் கத கதைக்காத இந்த இதையும் இழு.. அப்படி என்னடா நடந்திச்சு'

***

சவுதியில் தங்கியிருந்து பணிபுரிந்த சிந்துவுக்கு நெருங்கிய சிநேகிதிகள் எல்லோரும் இந்தியர்கள். நாணும் பருப்புக் கறியும் சாப்பிட பழகியவளுக்கு ஹிந்தி பேசுவதில் என்ன சிரமமிருக்கப்போகிறது? ஊரில் சிந்துவின் அம்மா நோய்வாய்பட்டு சிரமப்படுவதாக இரண்டு தங்கச்சிகளும் கடிதம் எழுதியிருந்தார்கள். அப்பா சந்தைக்குப் போகும் வழியில் ஆமிக்காரன் சுட்டுப்போட்டான்.

இன்னும் கொஞ்சம் காசு சேர்த்துக்கொண்டு ஊருக்கு போவோம் என்றிருந்தவளுக்கு இலங்கை இந்திய ஒப்பந்தம் சிவப்பு கம்பளம் விரித்தது. ஊருக்கு வந்தவள் வீட்டு வேலியைப் பிரித்து ஒரு கொட்டிலைப்போட்டு பலசரக்கு கடை ஒன்றைத் திறந்தாள். சவுதிக்கு திரும்பிச் செல்ல மனமில்லாமல். சொல்லிவைத்தாற்போல் பட்டகாலிலேயே படும் கெட்ட குடியே கெடும்.

இயக்கத்துக்கும் இந்திய அமைதிப் படைக்கும் இடையே சண்டை மூண்டது. பிறகென்ன மூட்டை முடிச்சுக்களுடன் ஊரார் கோவிலில் தஞ்சம். இந்தியனாமி கொஞ்சம் மரியாதை கொடுப்பான் என்ற நப்பாசைதான். அந்த நம்பிக்கைக்கு பங்கமில்லாமல் கோவிலை சுற்றிவளைத்த இந்தியன் ஆமி சூவை வெளியில் களட்டிவிட்டு கோயிலுக்குள் வந்தான். இதற்குள் இயக்கம் கண்ணுக்கெட்டிய தூரத்திலிருந்து மறைந்து காட்டுக்குள் பதுங்கிக்கொண்டது.

கோயிலுக்குள் நின்ற இந்தியனாமி அங்கிருப்பவர்களுடன் கதைப்பதற்காக ஆங்கிலம் அல்லது ஹிந்தி தெரிந்த ஒருவரை தேடியது. இருந்த ஒரேஒருவரான சிந்து தானாகவே முன்வந்தாள்.

வந்த இந்தியனாமியும் திரும்பிப்போகும் போது வெறுங்கையுடன் போவதா! அங்கிருந்த ஆண்கள் சிலரையும் பெண்கள் மூவரையும் தேர்ந்தெடுத்தார்கள். எல்லோரும் அதிர்ச்சியில் அழத்தொடங்கினார்கள். பெண்களின் அம்மாக்கள் இந்தியனாமி மேஜரின் காலைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதார்கள். சற்று மனம் மாறிய மேயர் பெண்களை அங்கேயே விட்டுவிட்டு ஆண்களை மட்டும் அழைத்துக்கொண்டு போய்விட்டான்.

விடிகாலை இந்தியனாமியிடம் பறிகொடுத்த ஆண்களின் பெற்றோர், மனைவி, பிள்ளைகள் சிந்துவைச் சுற்றிக் கொண்டார்கள். எல்லோரும் கலந்தாலோசித்து ஊரில் பெரியவர்கள் மூவருடன் சிந்துவும் இணைந்து இந்தியானாமி காம்புக்குப் போய்

> என்னண்ண சொல்லுறியள் எனக்கும் அவங்களுக்கும் ஒரு தொடர்புமில்ல அவங்கள் பிடிக்சுக்கொண்டுபோற எங்கட பெடியளத்தான் அவங்களோட கதைச்சு எனக்கு ஹிந்தி தெரியும் என்றதால கதைச்சு விடுவிக்கிறனான். உங்கட ஆக்களயும் விடுவிச்சிருக்கிறன். அது உங்களுக்கே தெரியும்தானே'
>
> 'நீ கதச்சவுடனே அவங்கள் விட்டுடுவாங்களோ?'
> 'எனக்கு ஹிந்தி தெரியும் என்றதால யார்? எவர்? ஊரில எவடம்? எவளவுகாலம் இருக்கனம் என்ற சொல்லி அவங்கள் கேக்கிற கேள்விக்கு பிடிபட்டாள் என்ன சொல்லுறாரோ அதைச் சொல்லித்தான் அவயள விடுக்கிறனான்'
>
> 'ஹிந்தில அவன் என்ன கேக்கிறவன் நீ என்ன பதில் சொல்லுறனீ
> 'அண்ண அவன் என்னட்ட கேக்கிறேல்ல..'

கதைத்து அவர்களை விடுவிப்பது.

போனவர்களை காணவில்லையே என்ற ஏக்கத்துடன் ஊரார் காத்திருந்தனர். காலைவேளை போனவர்கள் மாலை வேளையில் திரும்பி வந்தார்கள் பிடிபட்டிருந்த ஆண்களுடன். அவர்கள் நையப் புடைக்கப்பட்டிருந்தார்கள்.

இவ்வாறாக நாளொரு மேனி நையப்புடைக்கப்படுவதும், பொழுதொரு வண்ணமாக சிந்துவும் பெரியவர்களும் இணைந்து அவர்களை மீட்பதுமாக காலம் ஓடிக்கொண்டிருந்தது.

இயல்பு வாழ்க்கை மெல்ல மெல்ல திரும்பிக்கொண்டிருந்தது. இப்பொழுது இயக்கம் மக்களுக்குள் பதுங்கிக்கொண்டது.

சிந்து கடைவியாபாரத்திலும் அவ்வப்போது ஊர்மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தியனாமியுடன் கதைத்து பிடிபடுபவர்களை மீட்கும் மீட்பராக இருந்தாள். இதில் இயக்கம் சாந்தவர்களையும், இயக்கத்தை சேர்ந்தவர்களையும் அவள் தெரிந்துகொண்டே விடுவித்துக்கொண்டிருந்தாள்.

சிந்துவைத் தெரியாதவர்களே இல்லை. வெளி ஊரிலிருந்தும் அவளுடைய உதவியை நாடியவர்களுக்கும் உதவினாள். ஏன் இளம் கன்று மட்டும்தானா பயமறியாது?

இயக்கமும் பயமறியாது. சிந்துவின் கடைக்கு முன்னால் இயக்கம் வந்து நின்றது.

'என்னண்ணா உங்கடை ஆக்கள் ஆரேனையும் பிடிச்சுப்போட்டாங்களே?

இல்ல உங்கள விசாரிக்கச் சொல்லி அம்மான் சென்னவர் எங்களோட வாங்கோ

ஏன்னண்ணா சொல்லுறியள். சனத்துக்குத்தானே உதவிசெய்தனான். பயப்படாமல் உங்களுக்கும் உதவினான்தானே.

அக்கா ஏறுங்கோ சைக்கிள்ள என்று அதட்டியவனின் சைக்கிள் பாறில் மறுபேச்சின்றி ஏறினாள்.

வெளிச்சமும் இருட்டும் இன்றிய ஒரு மம்மல்பொழுது ஊரின் ஒதுக்குப்புறமாக இருந்த தனிவீட்டு முற்றத்தில் சிந்துவை ஏற்றிய சைக்கிள் நின்றது. வீட்டினுள் தெரிந்த மங்கிய வெறிச்சத்தில் இரண்டு உருவங்கள் தெரிந்தன.

நடுக்கமும் பயமும் அவளை ஒருசேர பற்றிக்கொண்டது. அது அவர்கள் மீது கொண்ட பயத்தினால் அல்ல. பொழுதுபட கூண்டுக்குக்குள் அடையும் குருவிகள் போல சனங்கள் பொழுதுபட முன்னமே வீட்டுக்குள் அடைந்துவிடுவார்கள். இருட்டு அது பயத்தைக்கொடுக்கும். பயத்தை மட்டுமே கொடுக்கும்.

மற்றும்படி கடுமையான கட்டுக்கோப்பான இயக்கம். ஊரும் உலகும் நம்பியது. அந்த நம்பிக்கையை அவர்கள் தகர்த்ததாக சரித்திரமே இல்லை.

எந்த பிரதிபலனும் எதிர்பாரமல் ஊர்சனத்துக்கு உதவினாள். இயக்கத்துக்கும் உயிரை துச்சமென உதவினாள்.

அப்படியிருக்க அவள் அஞ்சவில்லை. இருளுக்கு அஞ்சினாள் அவ்வளவே. வீட்டுக்குள் நுழைந்தவள் ஒருவரை இலகுவாக அடையாளம் கண்டுகொண்டாள். அவர் வேறுயாருமல்ல இயக்கத்தின் ஊர் பொறுப்பாளர் கேடி. இப்பொழுதான் முழுமனசும் நின்மதியால் நிறைந்தது. மற்றவர் நன்கு பழக்கப்பட்ட முகம் ஆனால் உடனடியாக அவளால் அடையாளம் காணமுடியவில்லை. ஆனால் அவளை அழைத்துவந்தவர் மொட்டை நாதன்.

அவள் கேடியைப் பார்த்து, 'என்னண்ணா என்ன பிரச்சனை?
'ஒண்டுமில்ல பயப்படாதங்கோ நீங்கள் அந்த அறைக்க இருங்கோ வாறன்'

அறைக்குள் ஒரு மேசை ஒரு கதிரை ஒரு கட்டில் ஒரு குப்பி வெளிச்சத்தில் தெரிந்தன.

வெளியில் போத்தல் கிளாஸ் உரசும் சத்தம் கேட்டது

ச்சா... பொடியள் அப்படிச் செய்யாங்கள் பின்னர் சிகரெட்டின் மணத்தையும் அவள் உணர்ந்தாள்.

மொட்டை நாதனா இருக்கும் அவர் இயக்கமில்லத்தானே என தனக்குத்தானே சமாதானம் செய்துகொண்டாள்.

அவளின் காத்திருப்பு நீண்டது. நீண்டுகொண்டே இருந்தது. தன்னைக்காணாது அம்மாவின் தங்கச்சிகளின் ஏக்கத்தை உணர உணர இதயத்தின் துடிப்பு உயர்ந்துகொண்டே போனது. இருளில் கலந்த பயம் அவளுக்குள்ளும் மெல்ல மெல்ல நுழைந்தும் நுழையாத நிலையில்

கேடி அறைக்குள் வந்தான். கதிரையிலிருந்த சிந்து எழுந்து நின்றாள். சாராய வெடில் மிக அருகில்.

'பறவாயில்ல இருங்கோ உங்களுக்கும் இந்தியனாமிக்கும் என்ன தொடர்ப்

என்னண்ண சொல்லுறியள் எனக்கும் அவங்களுக்கும் ஒரு தொடர்புமில்ல அவங்கள் பிடிக்சுக்கொண்டுபோற எங்கட பெடியளத்தான் அவங்களோட கதைச்சு எனக்கு ஹிந்தி தெரியும் என்றதால கதைச்சு விடுவிக்கிறனான். உங்கட ஆக்களயும் விடுவிச்சிருக்கிறன். அது உங்களுக்கே தெரியும்தானே'

'நீ கதச்சவுடனே அவங்கள் விட்டுடுவாங்களோ?'

'எனக்கு ஹிந்தி தெரியும் என்றதால யார்? எவர்? ஊரில எவடம்? எவளவுகாலம் இருக்கனம் என்ற சொல்லி அவங்கள் கேக்கிற கேள்விக்கு பிடிபட்டாள் என்ன சொல்லுறாரோ அதைச் சொல்லித்தான் அவயள விடுக்கிறனான்'

'ஹிந்தில அவன் என்ன கேக்கிறவன் நீ என்ன பதில் சொல்லுறனீ'

'அண்ண அவன் என்னட்ட கேக்கிறேல்ல..'

'படார்' என்றொரு வெடிச்சத்தம் போல கேட்டது. சிந்து கதிரையிலிருந்து சுருண்டு தரையில் விழுந்தாள். அவள் அணிந்திருந்த தோடு சுவரில் மோதி எங்கோ ஒழிந்துகொண்டது

'பட்ட வேச சொல்றி உண்மய' என எழுந்தான் கேடி. காலால் அவள் பிஸ்டத்தின் ஓங்கி உதைத்தான். அவள் உடல் ஒரு பக்கம் எம்பி தரையோடு தரையாக கிடந்தது.

விளக்கு வெளிச்சத்தில் சிறகடிக்கும் பூச்சிகளை வேடையாட நின்றிருந்த பல்லிகளும் சிதறி ஓடின.

டே.. நாதன் டே.. பிண்டமேன அவள் மயங்கிப்போனாள் தண்ணி கொண்டுவந்து தெளிடா.

அவளின் ஒரு பக்க கன்னம் ஐந்து விரல்பட்டு வீங்கியிருந்தது. கண்களிலிருந்து தரைதாரையாக கண்ணீர் வீழ்ந்தது. அவள் உதடுகள் நடுநடுங்கின அதனிலும் நடுக்கமாய் வார்த்தைகள் வந்தன

'அ.. ண்.. ணா.. அ.. ண்.. ணா.. அ.. ண்.. ணா..'

கேடி விடுக்கென்று அறையைவிட்டு வெளியேறினான்.

மொட்டை நாதன் மெதுவாக குனிந்த அவள் காதில் சத்தமின்றி சொன்னான். புரியும் சக்தி அவளிடமிருக்கவில்லையா? அல்லது அவளுக்கு கேக்கவே இல்லையா? எதுவுமே புரியவில்லை.

மொட்டை நாதன் அவளை மெதுவாக அள்ளி கட்டிலில் கிடத்தினான். அவளுடைய ஆடைகளை களைந்து அவளின் அங்கங்களை மூடினான்.

சிறிது நேரத்தில் அவளிருந்த அறைக்கு வந்த கேடி பிஸ்டலை எடுத்து மேசைமீது வைத்துவிட்டு ரவுசரைக்கழட்டி தரையிலேயே விட்டான்.

அதன் பிறகு வந்த நன்கு பழக்கப்பட்ட முகம்.

கடைசியாக மொட்டைநாதன்.

ஒரு மலையே அவள் மீது விழுந்து அழுத்தியதுபோல் நொந்து செத்தாள். கேடி அவள் மீதிருக்கும்போது எல்லா பிம்பங்களும் சுக்கு நூறாக நொறுங்கி கண் வழி விழுந்து இன்னும் அவள் மூச்சைத் திணறடித்தது.

சில கணங்கள் கண்கள் அயர்ந்தன விழித்தாள்.

என்னெண்டாலும் உயிரோடு விட்டுட்டாங்களே போதும் கேடி புண்ணியம். இருட்டில் நடந்தது இருட்டோடே போகட்டும். இருட்டுக்கு பழகிய அவளது கண்கள் அவர்கள் அனைவரையும் அடையப்படுத்தியது.

இன்னும் சிறிது நேரத்தில் விடியப்போகிறது. இந்தியனாமி காம்பை விட்டு வெளிக்கிட்டு ஊருக்குள் உலா வருவான். அதற்குள் அவளை அவர்கள் விடுவித்தாக வேண்டும்.

அவள் எழுந்து உடைகளை அணிவதற்கு மொட்டை நாதன் உதவி செய்தான்.

'அண்ண என்ன உயிரோட விடுவீங்கதானே'

'ஓமோம்.. வீட்ட கொண்டே விடச்சொல்லித்தான் கேடியண்ண சொன்னவர்'

ஆனால் அவர்களால் அவளை விடமுடியவில்லை. காலை கழிந்து மதியம் கழிந்து மாலை வேளையில் மொட்டைநாதன் சோத்துப்பாசலை அவளிடம் நீட்டினான்.

'அண்ண என்ன விடுங்கோ நான் வீட்டபோய் சாப்பிடுறன்'

'ம்.. ம்..'

அவளை இருள் சூழும் கூடவே அவர்களும். பொழுது பொழுதுகளாக மாறின. நாள் நாட்களாக மாறின. தினமும் பகலில் சோத்துப்பாசல். இரவில் ஆடை களைந்து மீண்டும் அணிதல். இந்த ஆடையை ஏன் மீண்டும் அணியவேண்டும்? அவளாள் சிந்திக்க முடியவில்லை. எத்தனை நாட்கள் கழிந்தனகூட ஞாபகத்திலில்லை. இந்தியனாமிக்கு இந்த வீடு மட்டுமேன் கண்ணில் படவில்லை? கேள்விகள் மட்டுமே அவளிடமிருந்துது.

அன்று எல்லோரும் அங்கிருந்தனர். எல்லோரும் ஒரு றவுண்டு வந்திட்டும் போயிருந்தார்கள். அவளை மொட்டைநாதன் வெளியே அழைத்துவந்தான்.

'ஏ.. உன்ன உயிரோட விடுறன். அங்க போய் இந்தியனாமிகாரணோட படுத்தியோ மண்டேலதான் போடுவன்'

அவள் கையெடுத்துக் கும்பிட்டாள். மொட்டை நாதன் அவளை சைக்கிள் பாரில் ஏற்றிக்கொண்டு போனான். நன்கு பழக்கப்பட்ட முகம் ஐயத்துடன் கேடிக்கருகில் சென்று

'என்னண்ண உம்மயா அவள விடுறதெ..?'

'புண்ட அவள சந்தியல வைச்சுப் போடுறா'

தலைகால் புரியாத மப்பு. அவன் சொன்ன கதைய கேட்டு சிவாவுக்கு மப்பு தெளிந்தது. சித்தம் தெளியவில்லை. பில்லை தான் பே பண்ணினதா என்ற குழப்பத்திலும் சொன்ன கதையில் எந்த குழப்பமில்லாமல் பலவர்ணத்தில் மின்னும் வெளிச்சத்தில் அவனின் கோரமும் என் சமூகத்தின் விகாரமும் வந்து வந்து போயின.

***

அதிமேதகு அவர்களுக்கு,

எனக்கு கிடைத்த தகவல்கள் மற்றும் ஆதாரங்களைக் கொண்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நபருக்கு என்னால் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாகம் தமிழீழ தாயகம்

இப்படிக்கு,

தாழ்மையுடன்

கேடி

பொறுப்பாளர்.

சாவகச்சேரி

யாழ்ப்பாணம்.

1989 புரட்டாசி 26.

பெயர் சிந்துயா கணவதிப்பிள்ளை

வயது 30

(சிந்துயா குடும்பத்தின் நலனைக் கருத்தில்கொண்டு அவளின் பெயர் மாற்றப்பட்டுள்ளது)

அன்று எல்லோரும் அங்கிருந்தனர். எல்லோரும் ஒரு றவுண்டு வந்திட்டும் போயிருந்தார்கள். அவளை மொட்டைநாதன் வெளியே அழைத்துவந்தான்.

'ஏ.. உன்ன உயிரோட விடுறன். அங்க போய் இந்தியனாமிகாரணோட படுத்தியோ மண்டேலதான் போடுவன்'

அவள் கையெடுத்துக் கும்பிட்டாள்.




# தமிழ்த் தேசிய உணவின் அரசியலும் பிழைப்பும்

## கூழ்ப்பானை யாழ்ப்பாணியின் ஒடியல் கூழ் மான்மியம்

பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

;பாலைவனத்தில் தண்ணீருக்காக அலைந்தவன் போலவோ, அல்லது தண்ணிக்காக அலையும் தண்ணிச் சாமிகள் மாதிரியோ, சாருவும், சாருவோடு சதா தொங்கிக் கொண்டிருக்கும் அராத்துவும், யாழ்ப்பாண ஒடியல் கூழுக்கு அலைந்த அலைச்சல் எனக்கே பெரிய பீலிங்காகப் போய் விட்டது.

பிடிச்சவனோ, பிடிக்கா தவனோ, நண்பனோ, பகைவனோ வீடு தேடி வந்தவனுக்கு, தேத்தண்ணியை கேளாமலேயே ஊத்திக் கொடுத்து, 'வேண்டாம், வெயிலுக்குள்ளால வந்தனான். சரியான வெக்கை' என்று மறுத்தாலும், 'அப்ப நீங்கள் எங்கட வீட்ட குடிக்க மாட்டியள்?' என்று குற்ற உணர்வு வர வைக்கிற யாழ்ப்பாணிப் பரம்பரையில் வந்த எனக்கு, தவிச்ச வாய்க்கு தண்ணியோ, பசிச்ச வயிற்றுக்கு கஞ்சியோ கொடுக்கா விட்டால் பிறகென்ன விருந்தோம்பல்?

இப்படி வாய் விட்டுக் கேட்டும் ஒரு நாயும் கணக்கெடுக்கவில்லை என்பது எனக்கே ஒரு மாதிரிப் போய் விட்டது. ஊரில் உள்ள அண்ணன்மார், அக்காவுக்கு போன் அடித்து, கூழ் காய்ச்சிக் கொண்டு போய் கொடுக்கச் சொல்லலாமோ என்று கூடத் தோன்றியது.

யாழ்ப்பாணியையும் குறை சொல்ல முடியாது.

யாழ்ப்பாணிக்கு இது கூழ் சீசன் இல்லை.

கஞ்சி சீசன்.

எழுபதுகளின் பின்னால் வந்து சேர்ந்த கொத்து ரொட்டியும், மட்டன் ரோலும் புலன் பெயர்ந்த யாழ்ப்பாணியின் பண்பாட்டுக் கூறுகளானதும் போதாமல், கோடை காலங்களில் கனடியப் பூங்காங்களில் ஊர் ஒன்றுகூடல் ஒடியல் கூழையும் கடந்து தற்போது யாழ்ப்பாணி கஞ்சியைக் கண்டுபிடித்திருக்கிறான்.

இறுதி யுத்தத்திற்குள் அகப்படாமல், காய் வெட்டித் தப்பி, எங்கோ நின்ற நிலாந்தன், ஏதோ இறுதி யுத்தத்தில் அல்லல்பட்டு, அங்கே சோற்றுப்பருக்கைகள் தேடிப் பிடிக்க வேண்டிய கஞ்சியை தானும் குடித்த மாதிரி, யாழ்ப்பாணியின் தலையில் மணியாக மிளகாய் அரைத்து விட, இப்போது யாழ்ப்பாணி அதை ஒரு பண்பாட்டுக் கோலமாக்கி விட்டிருக்கிறான்.

> சோற்றுப் பருக்கைகள் இல்லாத கஞ்சியை நினைவு கூர்ந்து, யாழ்ப்பாணிகள் பாற் புக்கை பொங்கிக் கொண்டிருக்கிறார்கள்.
> பெரிய குற்ற உணர்வோடு இருக்கும் பாவனையில், 'உங்களுக்காக இதையும் செய்யாட்டி நாங்கள் இருந்தென்ன பிரயோசனம்?' என்ற மாதிரி, பேஸ்புக்கிலும் அதை வரலாற்றுப் பதிவாக்கி விடுகிறார்கள்.
>
> அவர்களைக் குறை சொல்ல முடியாது.
> பொங்குதமிழர்கள்.
>
> அவர்களால் பொங்கத் தான் முடியும்.

அது வழமை போல ஒரு கேலிக்கூத்து ரேஞ்சில் வந்து நிற்கிறது.

சோற்றுப் பருக்கைகள் இல்லாத கஞ்சியை நினைவு கூர்ந்து, யாழ்ப்பாணிகள் பாற் புக்கை பொங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பெரிய குற்ற உணர்வோடு இருக்கும் பாவனையில், 'உங்களுக்காக இதையும் செய்யாட்டி நாங்கள் இருந்தென்ன பிரயோசனம்?' என்ற மாதிரி, பேஸ்புக்கிலும் அதை வரலாற்றுப் பதிவாக்கி விடுகிறார்கள்.

அவர்களைக் குறை சொல்ல முடியாது.

பொங்குதமிழர்கள்.

அவர்களால் பொங்கத் தான் முடியும்.

வெளியே நின்று!

'கஞ்சி ஏழை எளியதுகளின்ரை சாப்பாடு. நாங்கள் சாப்பிடேலுமே?'

பேஸ்புக் கூத்து சொல்லி மாளாது.

சிறிய அலுமினியப் பானையில் புக்கை கிண்டி, அந்த பானையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

என்று எழுதி போட்ட பேஸ்புக் பதிவு பார்த்தேன்.

முட்டாள்களுக்கு கொலைகாரர்கள் தலைவர்களாக இருந்த நிலை போய், அயோக்கியர்கள் தலைவர்களாகியிருக்கிறார்கள்.

கோமாளிகள் தரகர்களாகி இருக்கிறார்கள்.

அவர்கள் வழி காட்டுகிறார்கள்.

மேய்ப்பர்கள் மாறினாலும், மந்தைகள் மாறுவதில்லைத் தானே!? மந்தைகள் மந்தைகளாகத் தானே இருக்க முடியும்.
பகுத்தறிவை புண்ணாக்கோடு கரைச்சு தீத்தவா முடியும்?

அதனால் என்ன?

Look at the bright side.

உயிரிழப்பு எதுவுமில்லை என்பதிலாவது மகிழ்ச்சி கொள்ளத்தானே வேண்டும்.

ஆக, சாருவுக்கு கூழும் இல்லை. கஞ்சியும் இல்லை.

கடற்கரையில் குளித்துக் குடிக்க!

கடைசியில் சாருவுக்கு கூழும் கஞ்சியும் ஒரு பெரிய பிரச்சனையாக இல்லாதபடிக்கு தலைக்கு மேல் பிரச்சனைகள்.

இல்லாவிட்டால், ரசிகைகள் தன்னை மொய்க்கவில்லை என்பதே சாருவுக்கு பெரிய பிரச்சனையாக இருந்திருக்கும்.

கைலாய நித்தியானந்தா ரேஞ்ச் கற்பனைகளோடு வந்திருப்பார்... ரஞ்சித சிஷ்யைகள் கால் பிடித்து, பாலும் குளிகையும் தந்து விடுவார்கள் என்று!

பிறகென்ன? படுக்கையில் பல்டி தான்! என்ற பெருங் கனவு கலைந்திருக்கும்.

கடைசியில் நம்ம நாட்டுத் தெருநாய்களை ‘அடிக், அடிக்’ என்றபடி, சைக்கிள் ஹாண்டில் மேல் கால் போட்டு கிழுவை வேலிக்குள் போய் விழுந்த மாதிரி போய் சேர்ந்து விட்டார்.

அவருக்கு ஆயிரம் பிரச்சனை? பாடை வேறு கட்ட வேண்டும்.

ஏதோ நல்ல காலம், யாழ்ப்பாணிகள் இரவு நேரத்தோடு நித்திரைக்குப் போனது, கையில் அகப்பட்டிருந்தால், கூழானாலும் குளித்துக் குடிக்க கொடுக்க

ரசிகைகள் தன்னை மொய்க்கவில்லை என்பதே சாருவுக்கு பெரிய பிரச்சனையாக இருந்திருக்கும்.

கைலாய நித்தியானந்தா ரேஞ்ச் கற்பனைகளோடு வந்திருப்பார்... ரஞ்சித சிஷ்யைகள் கால் பிடித்து, பாலும் குளிகையும் தந்து விடுவார்கள் என்று!

பிறகென்ன? படுக்கையில் பல்டி தான்! என்ற பெருங் கனவு கலைந்திருக்கும்.

கடைசியில் நம்ம நாட்டுத் தெருநாய்களை ‘அடிக், அடிக்’ என்றபடி, சைக்கிள் ஹாண்டில் மேல் கால் போட்டு கிழுவை வேலிக்குள் போய் விழுந்த மாதிரி போய் சேர்ந்து விட்டார்.

முடியாவிட்டாலும், சாருவைக் கந்தலாக கசக்கிக், கட்டி அனுப்பியிருப்பார்கள்.

””

யாழ்ப்பாணிகளுக்கு கொத்து ரொட்டி என்பது எழுபதுகளில் அறிமுகமான ஒன்று. மொக்கங் கடை தான் கொத்துரொட்டிக்கு புகழ் பெற்றது. பிறகு ஆங்காங்கே சந்திகளில் கொத்துரொட்டிக் கடைகள் முளைக்கத் தொடங்கின.

அது மலையாளி களிடமிருந்தோ, மட்டக்களப் பாரிடமிருந்தோ இறக்குமதியான ஒன்று தான். அதன் பூர்வீகத்தை அறியும் பணியை வரலாற்று ஆசிரியர்களிடம் விட்டு விடுவோம்.

மட்டன் றோல் யாழ்ப்பாணத்தில் கடை வைத்திருந்த சிங்கள உணவகங்களில் தான் முதலில் கிடைத்து பின்னர், யாழ்ப்பாண கோப்பி பார்களில் பிரபலமானது.

யாழ்ப்பாணத்துச் சோத்துக கடைகளிலும், கமல் சிறீதேவி படம் மேலே போட்ட டீக்கடைகளிலும், கேளாமல் கொண்டு வந்து வைத்து, தூக்கிப் பார்த்துத் திருப்பி வைத்த, பல கை பட்ட வடை, வாய்ப்பன்கள் மட்டும் தான் இருந்தன.

இவை இரண்டையும் யாழ்ப்பாணிகள் கையகப்படுத்தி, தேசியமயமாக்கி, தமிழ்த் தேசிய உணர்வோடு ஒண்டறக் கலக்க வைத்து விட்டார்கள்.

தமிழர்களின் தேசிய உணவு எது என்று புலன் பெயர்ந்த எந்த தமிழ்ப் பிள்ளையைக் கேட்டாலும் இந்த இரண்டும் தான்.

கொத்துரொட்டித் தமிழர்கள் தங்கள் ஒடியல் கூழைப் பற்றி பெருமையோடு பேசும் போது, இவர்கள் ஐ.நாவுக்கு முன்னால் கொடி பிடிக்கும்போது, ஏன் UNESCO's Intangible Cultural Heritage list இல் தங்கள் ஒடியல் கூழுக்கும் அந்தஸ்து தர வேண்டும் என்று போராட்டம் நடத்துவதில்லை என்று யோசிப்பதுண்டு. சம்பெயினுக்கும் பிலாவுக்கும், ஏன் இத்தனூண்டு தம்மாத்துண்டு ஹாயிதியின் பூசணிக்காய் சூப்புக்கும், கிடைத்த கௌரவம் தங்களுக்குக் கிடைக்காதது 47 நாடுகளின் சதி என்று கதை விட்டிருக்கலாம்.

ஒருவேளை கொத்து ரொட்டிக்கு தந்தால் போதும் என்ற நினைப்பு போலும். அதனால் தான் கனடியப் பிரதமரையே அழைத்து கொத்துரொட்டி அடிக்க வைத்தார்கள். அதை தங்களது தமிழீழத்திற்கும் புலிகளுக்கும் கிடைத்த அங்கீகாரமாகத் தான் யாழ்ப்பாணிகள் பெருமிதம் கொண்டார்கள்.

அப்படி உலகத்திலே கண்டறியாத ஒரு கூழை தாங்கள் கண்டுபிடித்த மாதிரியும், அது தங்களின் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த பெருமை மாதிரியுமான பில்டப்புடன் தான் யாழ்ப்பாணிகள் கதை விடுவதுண்டு.

புலன் பெயர்ந்த நாடுகளில் கோடை பிறந்தால் கூழ்ப் பார்ட்டி என்பது பொங்கல், புதுவருசம் மாதிரித் தான்.
பெரும் கோலாகலம்.

அப்படி என்னதான் இருக்கிறது இந்த ஒடியல் கூழில்?

உலகில் எந்த இனக்குழுவிற்குள் போனாலும்,

அதற்கும் கூழ் உணவு இருக்கும்... சூப் என்ற பெயரில்.

அந்தப் பிரதேசத்தில் கிடைக்கக் கூடிய உணவுப் பண்டங்களை ஒரே பானையில் போட்டு கொதிக்க வைத்து உண்பது என்பது பொதுவான சமையல் முறை. பெரும்பாலும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கலாச்சாரங்களில் வேலை நேரத்தில் வயிற்றை நிரப்பிக் கொள்ள வசதியான உணவு.

சமையல் என்று தொடங்கி, சோறு, கறிகள் என்றெல்லாம் நீட்டி முழக்காமல், கோப்பைகளையும் கைகளையும் கழுவி மினக்கெடாமல், கையில் கிடைத்த சிரட்டை, பிழா, பலா, பூவரசம் இலை என்றெல்லாம் கைக்கு அகப்பட்டவற்றைக் கொண்டு உண்பதற்காக, ஒரே பானையில் மட்டுமான சமையல்.

மிஞ்சிய பழைய உணவுகள், சீண்டுவாரற்றுக் கிடக்கும் மரக்கறிகள் என்றெல்லாம் இருப்பவற்றைக் கொண்டு ஒப்பேற்றுவது சூப்.

வசதியுள்ளவர்கள் ஆடம்பரமாக இறால், நண்டு எதுவும் போடலாம்.

ஏழை, எளியவர்கள் கிடைப்பதை மட்டும் போட்டு வயிறாறலாம்.

வீட்டில் கூழ் காய்ச்சிய போதெல்லாம், தோட்டத்தில் கிடைக்கும் மரக்கறிகளான மரவள்ளிக்கிழங்கு, பயற்றங்காயோடு, மீன், இறால், நண்டு போன்ற கடல் உணவுகள் தான்.

அவ்வப்போது ஏதாவது கோயில்களுக்கு யாத்திரை போகும்போதோ, சுற்றுலா போகும் போதோ, கூழ் சிரமம் இல்லாத சமையலுக்கு வசதியானது.

இப்படிச் சமைக்கப்பட்ட கூழில், சிறு வயதில் தொண்டைக்குள் சிக்கிய மீன் முள்ளுகளால் பெரும் அவதியுற்றதுண்டு.

இப்படி, புலன் பெயர்ந்த தடிப்பில் பொழுதுபோக்குக்காக கொண்டாட்டமாக கூழ் காய்ச்சுகிறவர்கள் முதல் எதுவுமே இல்லாத ஏழைகள் கிடைத்தவை வைத்து கொதிக்க வைத்து வயிற்றை நிரப்புவது வரைக்கும் சூப் பலரின் பசியை போக்கிக் கொண்டு

ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையைப் பேணினால், ஒரு பக்கத்தால் அள்ளிக் கொண்டிருக்க மற்றப் பக்கத்தால் உள்ளே புதிய மரக்கறிகளையும் உணவுப் பொருட்களையும் போட்டுக் கொண்டே இருக்க வேண்டியது தான்.
சூப் பழுதாகவே மாட்டாதாம்.
கிட்டத்தட்ட நம்ம ஊர் 24 மணி நேர சோத்துக்கடைகளின் சாம்பார் அண்டா மாதிரித் தான். அண்டா கழுவாமலேயே மாதக்கணக்கில் பிரெஷ் சாம்பார் கிடைப்பது மாதிரி!

இருக்கிறது.

கடற்கரை என்றால் கடல் உணவுகள், நாட்டுப் பக்கம் என்றால் மரக்கறிகள், காட்டுப் பக்கம் என்றால் காளான், கிழங்கு, இறைச்சி வகைகள். எல்லாவற்றையும் ஒன்றாகப் போட்டுக் கூழாம்பாணியாக்கி உண்பது யாழ்ப்பாணிகளுக்கு மட்டும் உரித்தானதில்லையே.

தடிமன், காய்ச்சல் என்றால் கோழி சூப் கிட்டத்தட்ட எல்லா கலாசாரங்களுக்கும் பொதுவானது. எல்லா பாட்டி வைத்தியங்களிலும் அடங்கியது.

சூப் என்பது என்ன?

கைவசம் உள்ள சகல உணவுப் பொருட்களையும் ஒன்றாகப் போட்டு அவிப்பது.

இதே போல, வேட்டைத் தண்ணீர் என்று ஒன்றுண்டு. வெறும் வெங்காயம், மிளகாய், உப்புப் போட்டு அவித்த நீர். மரவள்ளிக் கிழங்கோடு சாப்பிட, 'அந்த மாதிரி' இருக்கும்.

வழமையான சூப்பிற்கு உறைப்பு இருக்க வேண்டும். உலகப் பொதுவான மிளகாய். அல்லது மிளகு.

அதை விட, herbs எனப்படும் சரக்குப் பொருட்கள். மேற்குலகில் parsley, sage, rosemary and thyme.

(Are you going to Scarborough fair என்ற மத்திய காலத்தின் நாட்டார் பாடலின் வரி இது. பின்னர் Simon and Garfunkel பாடிப் பிரபலமானது).

மத்திய காலம் என்றதும் நினைவுக்கு வருகிறது... அந்தக் காலத்தில் inns எனப்படும் வழிகளில் தங்கிச் செல்லும் ஹோட்டல் போன்ற இடங்களில் 24 மணி நேரமும் சூப் பானை கொதித்துக் கொண்டே இருக்குமாம். ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையைப் பேணினால், ஒரு பக்கத்தால் அள்ளிக் கொண்டிருக்க மற்றப் பக்கத்தால் உள்ளே புதிய மரக்கறிகளையும் உணவுப் பொருட்களையும் போட்டுக் கொண்டே இருக்க வேண்டியது தான்.

சூப் பழுதாகவே மாட்டாதாம்.

கிட்டத்தட்ட நம்ம ஊர் 24 மணி நேர சோத்துக்கடைகளின் சாம்பார் அண்டா மாதிரித் தான். அண்டா கழுவாமலேயே மாதக்கணக்கில் பிரெஷ் சாம்பார் கிடைப்பது மாதிரி!

இப்படி கிரேக்கர்களுக்கு ஒரிகானோ.

இத்தாலியர்களுக்கு ரோஸ்மேரி. தக்காளிச்சாறு.

நமக்கு மல்லி, சீரகம்.

அந்தந்தப் பகுதியில் வழமையாகப் பயன்படுகின்றவை.

புளிப்பு இருக்க வேண்டும்.

ஜப்பானில் அரிசி வினாகிரி.

ஐரோப்பாவில் திராட்சை வினாகிரி.

நமக்கு பழப்புளி.

கிழங்கு என்றால்

தென்னமெரிக்காவில் உருளைக் கிழங்கு.

ஆபிரிக்கா, ஆசியாவில் மரவள்ளி.

ஆங்காங்கே என்ன கிழங்கு கிடைக்கிறதோ, அது!

வெறும் தண்ணீராக இருக்காமல் தடிப்பாக இருக்க வேண்டும்.

அதற்கு மாப்பொருள் thickener வேண்டும்.

ஆசியாவில் அரிசி இருந்தால் அரிசி மா.

மேற்குலகில் கோதுமை இருந்தால் கோதுமை.
தென்னமெரிக்காவில் சோளம் இருந்தால் சோளம் மா.

குரக்கன் இருந்தால் குரக்கன் மா.

நமக்கு பனை இருக்கிறது.

ஒடியல் மா.

அது கட்டாயமானதும் இல்லை.

ஒடியல் மா இல்லாவிட்டால், வெறும் ஆட்டா மாவும், இருந் தால் குரக்கன் மாவும் போடுவது சாதாரணம்.

என் பக்கத்து வீட்டுக் கிழவி சிறுவயதில் ஒரு பழமொழி சொல்வாள்.

கூழ் கடைப் படி,
புட்டு பட்டணம் மட்டும்.

சோறு ஏதோ என்று. (எது என்று ஞாபகம் இல்லை! நீண்ட நேரம் பசியைத் தாங்கும் என்னும் கருத்தில்.)

அதாவது கூழ் கடையில் உள்ள தராசின் படி மாதிரி, வைத்து விட்டு திரும்பவும் உடனேயே இறக்கி வைப்பது போல, உடனேயே திரும்பவும் பசிக்கும்.

புட்டு பட்டணம் போகும் வரைக்கும் தாக்குப் பிடிக்கும்.

சோறு அதை விட அதிகமாக.

இதனால் தான் இங்கே சீனக் கடைகளில் பசியைத் தூண்ட வைக்கும் appetizer ஆக சூப்கள் தரப்படுகின்றன.

நான் கிட்டத்தட்ட சீன உறைப்பு புளிப்பு சூப்பில் ஒரு உத்தியோகப்பற்றற்ற நிபுணன். தடிமன், காய்ச்சல் என்றால் தவறாமல் சட்டி முட்டக் காய்ச்சி, மூக்கு முட்டக் குடிப்பேன். அதில் வகை வகையாக செய்து அவ்வப்போது குடிப்பதுண்டு.

அவ்வப்போது எங்களுடைய ரசத் தூளோடும் சூப் செய்வதுண்டு.

பிரிட்ஜில் விலை போகாமல் கவனிப்பாரற்றுக் கிடப்பவை எல்லாம் வெட்டி நிறைத்து கோழியோ, கடலுணவோ போட்டுத் தான் அந்தச் சமையல்.

அது எனக்கு சூப் தான். கூழ் இல்லை.

எதுவும் இல்லாத ஏழைகள் குடித்த கஞ்சியை, ஒரு பெரும் மனிதப் பேரவலத்தில் துன்புற்ற மக்கள் குடித்த கஞ்சியை இன்று யாழ்ப்பாணிகள் அரசியலாக்கியிருக்கிறார்கள்.
அது கேலிக்கூத்தாக வந்து முடிந்திருக்கிறது.

உணவை அரசியலாக்கலாம் என்பதை விட, யாழ்ப்பாணிக்கு அதை வியாபாரமாக்கலாம் என்பது தான் முக்கியம்.

இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி தொடங்கப்பட்டு, சீன் காட்ட வெளிக்கிட்ட போது, இங்கே முதன் முதலில் பெரும் விளம்பரப்படுத்தியவர் ஆமைக்கறி சீமானின் கனடிய ஏஜன்டான ஒரு சோத்துக்கடைக்காரர். இப்போது அவர் அதைச் செய்ததாகக் காணவில்லை.

அதுசரி, சீமானுக்கு யாரும் முள்ளிவாய்க்கால் கஞ்சி அனுப்பவில்லையா?

சிரட்டையில் கஞ்சி குடித்த படம் போடும் அரசியல் வியாபாரத்திற்கும், இங்கே மண்டபத்தை வாடகைக்கு எடுத்து ‘நினைவேந்தல்’ செய்து பணம் சம்பாதிப்பவர்களுக்கும் இந்தக் கஞ்சி ஒரு வியாபாரப் பண்டம் மாத்திரமே.

எப்படி மாவீரர்களுக்கான விளக்கு கொழுத்துதலும் மாலை சாத்துதலும் ஒரு கேலிக்கூத்தாகப் போனதோ அதே மாதிரி.

யாருக்குத் தெரியும்? மாவீரர் தினத்திற்கு தென்னாபிரிக்காவிலிருந்து கார்த்திகைப் பூ இறக்குமதி செய்து பணக்காரன் ஆன மாதிரி, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கும் யாராவது சுத்திஜீவி சிரட்டையும் பிழாவும் பலா இலையும் பூவரசம் இலையும் இறக்குமதி செய்து சம்பாதிக்கக் கூடும்.

ஆக செய்ய வேண்டியது இந்த அயோக்கியர் தங்களின் தரகர்களான அரசியல் புலநாய்வாலர்களையும், கோமாளி அல்லக்கைகளையும் ஊளையிடலாளர்களையும் ‘இதெல் லாம் யாழ்ப்பாணிகளின் பண்பாட்டுக் கூறு’ என்று கதை விடப் பண்ணி, இந்த முட்டாள் மந்தைகளை நம்ப

“

யாருக்குத் தெரியும்? மாவீரர் தினத்திற்கு தென்னாபிரிக்காவிலிருந்து கார்த்திகைப் பூ இறக்குமதி செய்து பணக்காரன் ஆன மாதிரி, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கும் யாராவது சுத்திஜீவி சிரட்டையும் பிழாவும் பலா இலையும் பூவரசம் இலையும் இறக்குமதி செய்து சம்பாதிக்கக் கூடும்.

ஆக செய்ய வேண்டியது இந்த அயோக்கியர் தங்களின் தரகர்களான அரசியல் புலநாய்வாலர்களையும், கோமாளி அல்லக்கைகளையும் ஊளையிடலாளர்களையும் ‘இதெல் லாம் யாழ்ப்பாணிகளின் பண்பாட்டுக் கூறு’ என்று கதை விடப் பண்ணி, இந்த முட்டாள் மந்தைகளை நம்ப வைக்க வேண்டியது தான்.

வைக்க வேண்டியது தான்.

பிறகென்ன? சிரட்டையில் கஞ்சி குடிக்கப் படை எடுத்து, அதை ஒரு வெற்றி விருதாக போஸ் கொடுத்து, பேஸ்புக்கில் கலர்ஸ் காட்ட ஒரு மந்தைக்கூட்டம் இருக்கும்.

ஆக, இந்த மந்தைகளுக்கு கஞ்சி பிண்ணாக்கு மாதிரித் தான்.

மாவீரர்களுக்கு எல்லாம் மாவீரனின் மரணத்திற்காக ஒரு விளக்கைத் தன்னும் இன்றைக்கும் ஏற்ற மறுக்கும் யாழ்ப்பாணிகள் தங்களது யாழ்ப்பாணித் தமிழ்த்தேசிய உணர்வைக் காட்டுவதற்கான சீன் காட்டலாகத் தான் மாவீரர் தின அஞ்சலிகள் வந்து முடிந்திருக்கின்றன.

உணவின் அரசியலும் பிழைப்பும் இல்லாமல் அந்த மாவீரர் தினங்கள் களை கட்டுவதில்லை.

புலன் பெயர்ந்த நாடுகளில் அந்தக் கேவலம் சொல்லி மாளாது.

மாவீரர் தினத்திற்கு முதல் நாள் பிரபாகரனின் பிறந்த நாள் என்று, அவரது வயது எண்ணிக்கைக்கு (அதற்கு அகவை என்பது யாழ்ப்பாணித் தமிழாம்!) ஏற்ற பானைகளில் பொங்கல், அத்தனை இறாத்தல் கேக் வெட்டல் என்ற கூத்தும் கும்மாளமும் எல்லாம் நடத்தி முடிந்து தான், மாவீரர் தினத்திற்கு விளக்கு கொளுத்துதலும், கார்த்திகைப் பூ விற்பனையும், ஒப்பாரியும் நடக்கும்.

அங்கே தவறாமல் கொத்துரொட்டி விற்பனையும் நடைபெறும்.

தமிழ்த் தேசிய உணர்வு என்பது தமிழ்த் தேசிய உணவு என்பதாகி விட்டது... கொத்து ரொட்டி, மட்டன் ரோல் விற்பனயோடு!

இப்படி இந்த உணவுப் பொருட்களைக் கூட பண்பாடு ஆக்கியது மட்டுமல்லாமல், அதை அரசியலாகவும் பணம் கொழிக்கும் வியாபாரமும் ஆக்கியிருக்கிறார்கள் இந்த யாழ்ப்பாணிகள்.

உணவு பசிக்கானதாக இல்லாமல், தனது அரசியல் தடிப்பைக் காட்டுவதற்கானதாக யாழ்ப்பாணிகளால் மாற்றப்பட்டிருக்கிறது.

கூழ், கொத்து ரொட்டி,
இப்போது கஞ்சி.

இனிமேல் நினை வேந்தல்களுக்கு அழைக்கப்படும் கனடிய அரசியல்வாதிகளும் சிரட்டையில் கஞ்சி குடிக்கும் படம் வெளியாகக் கூடும். தங்களை சமூகத் தலைவர்கள் என்று கிளெய்ம் பண்ணிக் கொண்டு, கனடிய அரசியல்வாதிகளோடு ஒட்டிக் கொள்கிற அயோக்கியர்கள் இந்த மந்தைத் தமிழர்களுக்கு அடுத்துச் செய்து காட்டுவது இதுவாகத் தான் இருக்கும். அந்த சிரட்டையில் கனடிய வெள்ளையின அரசியல்வாதிகள் கஞ்சி குடிக்கும் படத்தை, தமிழீழத்திற்கான அங்கீகாரமாகவும், இன அழிப்புக்கான முத்திரையாகவும் இந்த முட்டாள் மந்தைகள் நம்பிக் கொண்டிருப்பார்கள்.

உண்பதற்கு ஏதுமின்றி, ஒரு அழிந்து கொண்டிருக்கும் இனம் குடித்த கஞ்சியை இப்படி கேவலப்படுத்த யாழ்ப்பாணிகளால் மட்டும் தான் முடியும்.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது, ஒரு குழு இராணுவத்தினர் திசை மாறி எங்கோ போய், பசியால் அலைந்து எங்கோ ஒரு பாட்டி வீட்டில் தஞ்சம் அடைகிறார்கள்.

எல்லாருக்கும் பசி. சாப்பிட எதுவும் இல்லை.

எதுவும் இல்லாமல், அவர்களை பசியோடு திருப்பி அனுப்ப விரும்பாத பாட்டி, கடைசியில் ஒரு இராணுவ வீரனின் சப்பாத்தை வாங்கி, அந்த தோலில் சூப் வைத்துக் கொடுக்க, அந்த இராணுவ வீரர்கள் பசியாறினார்கள்.

அந்த சூப்பிற்கும் உறைப்பும், புளிப்பும் தடிப்பும் இருந்திருக்கும்.

இந்த யாழ்ப்பாணிகளின் தடிப்பு மாதிரி இல்லாமல்!

இதே போன்றதொரு காட்சி தங்கம் தேடப் போய், பனிப் புயலில் அகப்பட்ட சார்லி சப்ளின் படத்தில் கூட வந்திருக்கும்.

Gold Rush.

யாழ்ப்பாணிகளின் அரசியல் இன்றைக்கு இன்னொரு நூறு வருடங்களுக்குத் தீர்வு காண முடியாதபடிக்கும், யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்ற அடையாளமே தெரியாதபடிக்கும் கொண்டு போய் விட்டிருக்கிறது.

பல்லிகள் போல, எல்லாம் தெரிந்த இந்த புலன் பெயர்ந்த, அறப்படிச்ச யாழ்ப்பாணிகள் தாங்கள் கூழ்ப்பானைக்குள் விழுந்து நாறிப் போய் கிடப்பதை இன்னும் உணர்ந்து கொள்வதாக இல்லை.

ஆனாலும், எளிய சாதிகளுக்கு சிரட்டையில் தண்ணியும் தேத்தண்ணியும் கொடுத்ததை பெருமையாகக் கருதிய யாழ்ப்பாணியின் பண்பாடும் அரசியலும், அதற்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டங்களை வசதி கருதி மறைத்து விட்டு, யாழ்ப்பாணித் தமிழ்த்தேசியத்தில் மூழ்கி முத்தெடுத்த 'அண்ணை ஈழத்தை அடிச்சுப் பறிப்பார்' என்று போய், இன்றைக்கு சிரட்டையில் கஞ்சி குடிப்பதைப் பெருமையாகக் கருதும் அளவுக்கு அரசியல் பிழைப்பாக மாறியிருக்கிறது.


அந்த மாற்றத்தை That's one small step for a man, but a giant leap forward for a mankind என்று யாழ்ப்பாணி நினைக்காவிட்டாலும், யாழ்ப்பாணிக்கு அது பெரும் 'தவளைப் பாய்ச்சல்' தான்! அ

இனிமேல் நினை வேந்தல்களுக்கு அழைக்கப்படும் கனடிய அரசியல்வாதிகளும் சிரட்டையில் கஞ்சி குடிக்கும் படம் வெளியாகக் கூடும். தங்களை சமூகத் தலைவர்கள் என்று கிளெய்ம் பண்ணிக் கொண்டு, கனடிய அரசியல்வாதிகளோடு ஒட்டிக் கொள்கிற அயோக்கியர்கள் இந்த மந்தைத் தமிழர்களுக்கு அடுத்துச் செய்து காட்டுவது இதுவாகத் தான் இருக்கும்.
அந்த சிரட்டையில் கனடிய வெள்ளையின அரசியல்வாதிகள் கஞ்சி குடிக்கும் படத்தை, தமிழீழத்திற்கான அங்கீகாரமாகவும், இன அழிப்புக்கான முத்திரையாகவும் இந்த முட்டாள் மந்தைகள் நம்பிக் கொண்டிருப்பார்கள்.










# உலகெங்கும் அமசோனில்....

| | |
|---|---|
| இந்தியாவில்... | www.amazon.in |
| அமெரிக்காவில்... | www.amazon.com |
| கனடாவில்... | www.amazon.ca |
| இங்கிலாந்தில்... | www.amazon.co.uk |
| ஜேர்மனியில்... | www.amazon.de |
| பிரான்சில்... | www.amazon.fr |
| நெதர்லாந்தில்... | www.amazon.nl |
| அவுஸ்திரேலியாவில்... | www.amazon.com.au |
| இத்தாலியில்... | www.amazon.it |

**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**
**என்ற வார்த்தையைத்**

## தேடுங்கள்...
## கண்டடைவீர்கள்!

# கொடுப்பதால் பெருமை பெறும் விருது

தாயகம் சுவடிகள்

*சில பல வருடங்களுக்கு முன் தாயகம் இணையத்தளத்தில் வெளிவந்தது.*

ரொறன்ரோவில் இது ஒரு வருடாந்த சடங்காகவே மாறி விட்டிருக்கிறது.

கடந்த வருடத்திற்கான வாழ்நாள் இலக்கியச் சாதனைக்கான விருது அறிவிப்பு வெளியாகும்.

(அதென்ன, கடந்த வருடத்திற்கான வாழ்நாள் சாதனை? கடந்த வருடம் வெளியான வெளியீட்டுக்கு கொடுப்பது வேறு. வாழ்நாள் சாதனையை போன வருடம் முடிவு பண்ணி இந்த வருடம் விருது? இந்த வருடம் கொடுத்தால், ஒருவேளை அடுத்த ஆறு மாதங்களுக்குள் வேறு யாராவது வாழ்நாள் சாதனை படைத்து விடுவார்கள் என்ற பயமோ?)

தமிழ்நாட்டில் இந்து முதல், ஆங்காங்கே முகாம் அமைத்து, இந்துவை 'பார்ப்பனிய இதழ்' என்று ஒற்றுமையாய் திட்டிக் கொண்டே, வாழ்நாளையே தங்களுக்கு இடையிலான இலக்கியச் சர்ச்சைக்காய் ('ஒடுகாலிகளின் கூட்டுச் சதி!' சண்டைக்கு!) அர்ப்பணித்த ஜோல்னாப் பை சிற்றிலக்கிய இதழ்கள் வரை அதன் அதிர்வு எதிரொலிக்கும். (கானடா நாட்டில் வழங்கப்படும் இலக்கிய நோபல் பரிசுக்கு இணையான இந்த விருதைப் பெற்ற முன்னாள் பட்டியல் முதல் விருது பெற்றவர் மீதான வசை பாடல் வரை!)

புலன் பெயர்ந்த நாடுகளில் இலக்கியம் படைக்கும் மாற்றுக் கருத்தாளர்கள், நள்ளிரவு அறிவிப்பை நித்திரைப் பாயில் பகிர்ந்து, விருது கொடுக்கப்பட்டவருக்கான இலக்கியத் தகுதி, நேர்மை குறித்து முகப்புத்தகத்தில் ஒரு பாட்டம் கலக்கி ஓய்வார்கள். (தங்களுக்கு அழைப்பிதழ் நிச்சயமாய் கிடைக்காது என்று தெரிந்தவர்கள் மட்டும்!)

இலங்கையில் இலக்கிய வாதிகள் ஒகோ, அப்படியா! என்று விட்டு, தங்கள் வேலையைப் பார்க்கப் போய் விடுவார்கள். புலன் பெயர்ந்த நாடுகளில் (கனடா உட்பட!) உள்ள தமிழுணர்வாளர்களும், விடுதலை இலக்கியம் படைப்போரும் தங்கள் வீட்டு நிலக்கீழ் அறையில், இலக்கிய உலகையே அதிர வைக்கும் இவ்வாறான ஒன்று நடப்பதை தெரிந்து கொள்ளாமல், வோட்டுப் போடுதல், கொடி பிடித்தல், புத்தக வெளியீடு, சினிமா நடிகை வரவேற்பு, கோயில் திருவிழா வகையறாக்களில் மும்முரமாகி விடுவார்கள்.

விருது விழாவுக்கு தமிழகத்திலிருந்து விருது வாங்கும் கதாநாயகப் பிரபலம் வந்திறங்குவார். (நல்ல காலம், விமான நிலையத்தில் மேளதாளங்களும், வந்தவரோடு போஸ் கொடுக்கும் 'ஊடகவியலாளர்'களும் தவிர்ந்து!)

அழைப்புக் கிடைத்தவர்கள் தங்கள் இலக்கியப் பங்களிப்புக்கு கிடைத்த அங்கீகாரம் குறித்த பெருமையுடன், ஆட்டிறைச்சிக் கறி மணக்கும் கோட்டுகளை கிளறி எடுத்து அதை ட்ரை கிளீன் பண்ணாமல் போட முடியுமா? இல்லை, வேஷ்டி, நாஷனல், சால்வை அல்லது தமிழ் பண்பாட்டுக் குர்தா, ஷெர்வாணி இத்யாதிகளுடன் ஆஜராவதா என்ற குழப்பத்துடன்... பதினைந்து நிமிட இலக்கிய அந்தஸ்து கிடைத்த விழா ஏற்பாட்டாளர்களின் குடும்பத்தினர், விருது வழங்கும் கொடையாளர்களுக்கே கொடை கொடுத்த கொடையழு வள்ளல்கள், மற்றும் தங்களைப் போன்ற (இன்விட்டேசன்) கார்ட் கரியிங் இலக்கியப் பிரபலங்களுடன் தோள் உரச கிடைத்த அரிய வாய்ப்பை நழுவ விடாமல், அதை சர்வதேசமும் அறிந்து கொள்வதற்கு வசதியாகவும், அழைப்புப் பெருமையுறா மற்றவர்களுக்கு கடுப்பு ஏற்றவும் 'எனக்கும் அழைப்புக் கிடைத்திருக்கிறது. போவதற்காக இப்போது மலசல கூடத்திலிருக்கிறேன்' என்று காலையிலேயே தொடங்கி முகப்புத்தகத்தில் ஸ்டேட்டஸ் போடத் தொடங்குவார்கள்.

விழாவை முழு உலகும் கண்டு களிக்க, அமைப்பாளர்கள்

www.thayagam.com
தாயகம்

> தமிழ் மகன் நிர்வாக விற்பனை நிலையங்களில், உடன் இறைச்சி, மீன் வாங்க சனிக்கிழமைகளில் திரளும் புலன் பெயர்ந்த தமிழர்களுக்கு, இரத்தம் சொட்டச் சொட்ட ஊர் ஆடும், தாயகத்துக் கடலில் பிடிக்கப்பட்ட விளைமீனும் வெட்டி, சேவை வழங்கும் பணியாளர்கள் தவிர, கனடாவில் கிட்டத்தட்ட தமிழர்கள் எல்லோருமே ஏதோ ஒரு விருது பெற்றிருக்கிறார்கள்.
>
> ஊர்களுக்கு மட்டுமன்றி, ஊரில் செய்த உத்தியோகங்களுக்கும் இங்கே சங்கம் அமைத்து, சங்கங்களுக்கு எல்லாம் புலி தலைமையில் சங்கம் அமைத்த தமிழன், ஏன் இன்னமும் விருது வழங்குவோருக்கு சங்கம் அமைத்து, மொத்த விற்பனை விலையில் கழிவு விலைக்கு விருது வாங்கும் முயற்சியில் ஈடுபடவில்லை என்பது அந்த விருதுநகர் வியாபாரிகளுக்குத் தான் வெளிச்சம்.

இன்னமும் லைவ்ஸ்ட்ரீமிங், ட்விட்டர் பயன்படுத்தா விட்டாலும், கலந்து கொள்வோரின் முகப்புத்தக அப்டேட்டுகள் உண்டு. (இதோ, நான் வடையோடு டீ குடித்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய ஹைக்கூ கவிதைத் தொகுப்பு மூன்றை விற்று விட்டேன்!)

தமிழ்நாட்டு நெல்லுக்கு இறைத்த விருது, வாய்க்கால் வழியே புலன் பெயர் புற்களுக்கும் வழிந்தோட.. இன்னும் சிலரும் also ran!

விருதுப் பேருரையெல்லாம் கலந்து கொள்வோருக்கு மட்டுமானது. வெளியே கண்டதில்லை.

விருது வாங்கி முடிந்து, வந்தவர் நயாகரா வீழ்ச்சி காண்பதற்கு அவரை காரில் முன்னாசனத்திருத்தி சரியாசனம் காணப் போட்டி போடும் இலக்கிய வாதிகள் ஒருபுறம்.

சினிமா நடிகையைக் கூப்பிட்டு, கை குலுக்க வரிசையில் நிற்க வைத்து பணம் அறவிடுவோர் போல, இந்த இலக்கியப் பிரபலத்தின் நேரடித் தரிசனத்திற்கு பணம் அறவிடும் விருந்திலும், எங்காவது இலக்கியப் புள்ளிகளின் வீடுகளில் நடைபெறும் சந்திப்புகளிலும் தங்கள் இலக்கியப் படைப்புகளை அவரின் கையில் எப்படியாவது திணித்து, அவர் மூலமாய் விமர்சனம் (விமோசனம்?) பெற்று, தமிழ்நாட்டு இலக்கியக் கோட்டைக்குள் நுழைவதற்கான பிரேக் கிடைக்கும் என்ற கனவுடன் இருப்பவர்கள் மறுபுறம் என ரொறன்ரோ அமர்க்களமாகும்.

அடுத்தடுத்த வாரங்களில் சனிக்கிழமை இரவுகளில் நடைபெறும் உத்தியோகப்பற்றற்ற இலக்கியச் சந்திப்புகளில், அழைப்புக் கிடைக்காதவர்கள் சேர்ந்து, கோட், வேஷ்டிகளுடன் ஆஜரானவர்கள் பற்றியும், பரிசு பெற்றவர் பற்றி சிறப்பிதழ் வெளியிட்டு தியேட்டர் பீடா விற்பனையாளன் போல, விற்பனை செய்பவர் பற்றியும், அவர்களின் பிரசன்னம் இல்லாத தருணங்களில், கேலியும் கிண்டலுமாய் இலக்கிய சர்ச்சை செய்வதுமாய் (இது தான் ஒரிஜினல் ‘ஒடுகாலிகளின் கூட்டுச்சதி’யோ?) இந்த விருது வழங்கல் நிறைவு பெறும்.

கனடாவில் தமிழர்கள் விருது வழங்குகிறார்கள்!

அச்சியந்திரங்களை நிறுத்துங்கள்! பிந்திய செய்தியை முந்தித் தரவேண்டும்!

கனடாவில் விருது வழங்குவதை ஒரு செய்தியாகக் கருதுபவர், தேசியத் தலைவராக மட்டுமே இருக்க முடியும். அதாவது... எங்காவது ஒரு பங்கருக்குள் வெளியுலகத் தொடர்பு எதுவும் இல்லாமல் கரந்துறைபவராக!

தமிழ் மகன் நிர்வாக விற்பனை நிலையங்களில், உடன் இறைச்சி, மீன் வாங்க சனிக்கிழமைகளில் திரளும் புலன் பெயர்ந்த தமிழர்களுக்கு, இரத்தம் சொட்டச் சொட்ட ஊர் ஆடும், தாயகத்துக் கடலில் பிடிக்கப்பட்ட விளைமீனும் வெட்டி, சேவை வழங்கும் பணியாளர்கள் தவிர, கனடாவில் கிட்டத்தட்ட தமிழர்கள் எல்லோருமே ஏதோ ஒரு விருது பெற்றிருக்கிறார்கள்.

(பாவம் அந்தப் பணியாளர்கள்! அவர்களுக்கு விருது கிடைப்பதை விட, கனடிய மாகாண அரசுகள் சட்டப்படி அமுல்படுத்தும் குறைந்த பட்ச சம்பளம் ஒழுங்காகக் கிடைத்தாலே இந்த விருது கிடைப்பதை விட பெரும் மகிழ்ச்சியடைவார்கள். ஆனால், கலை, இலக்கிய விழாக்களில் ஸ்பொன்சர் விளம்பரங்களுக்காக விருது பெறுபவர்களும், சிறப்புப் பிரதி பெற அழைக்கப்படுபவர்களும் இதே ‘நிர்வாகத் தமிழ்மகன்’ தொழிலதிபர்கள் தான் என்ற லட்சணத்தில் தான் எங்கள் சமூகம் இருக்கிறது!)

இன்னமும் வெளியீட்டு விழாக்களில் சிறப்பு பிரதிகள் பெறுவோருக்கு விருது வழங்கும் சம்பிரதாயம் அமுல்படுத்தப்படவில்லையே தவிர, விருது வழங்கப்படாத இலக்கிய, கலை நிகழ்ச்சிகள் எதுவும் இல்லை.

போதாக்குறைக்கு, வீடு விற்பனை முகவர்கள், காப்புறுதி முகவர்கள் மட்டுமன்றி, பத்திரிகைகளில் விளம்பரம் செய்வோர், விழா நிகழ்வுகளைப் படம் பிடிக்கும் ‘ஊடகவியலாளர்கள்’ எல்லோருமே விருது பெற்றவர்கள். சனத்தொகைக்கு தகாத விகிதத்தில் இத்தனை பத்திரிகைகள், முகவர்கள் எனக் கொண்ட சமூகத்தில் விருது கிடைக்காமல் இருப்பது என்பது மட்டுமே செய்தியாகக் கணிக்கக் கூடிய அளவுக்கு நாறிப் போய் கிடக்கிறது.

ஊர்களுக்கு மட்டுமன்றி, ஊரில் செய்த உத்தியோகங்களுக்கும் இங்கே சங்கம் அமைத்து,

சங்கங்களுக்கு எல்லாம் புலி தலைமையில் சங்கம் அமைத்த தமிழன், ஏன் இன்னமும் விருது வழங்குவோருக்கு சங்கம் அமைத்து, மொத்த விற்பனை விலையில் கழிவு விலைக்கு விருது வாங்கும் முயற்சியில் ஈடுபடவில்லை என்பது அந்த விருதுநகர் வியாபாரிகளுக்குத் தான் வெளிச்சம்.

மொத்தத்தில், கனடாவில் நிகழ்ச்சிகளில் எல்லாம் அர்த்தம் இல்லாமல் கடைப்பிடிக்கப்படும் ஒரு நிமிட மௌன அஞ்சலி போல, விருது வழங்கலும் ஒரு வெறும் சம்பிரதாயம் மட்டுமே. ஆனால் இதையறியாமல், கனடாவில் ஏதோ ஒரு அரசாங்கத்து governing body இருந்து இந்த விருது வழங்குவோரின் திறமைகளையும் தகுதிகளையும் கடுமையாகப் பரிசீலித்து அனுமதி வழங்கியது போலத் தான் பலரும் நினைத்து வருகிறார்கள்.

விருது வாங்கிப் பெருமை கொண்ட தமிழன், விருது கொடுத்தே பெருமை பெறும் கனடாவில் யாரும் யாருக்கும் விருது கொடுக்கலாம்.

அந்த விருதுகளும் வெறும் ஏழு டொலர்கள் வரை மலிவாகவும் வாங்கலாம்.

மற்றவர்களின் போலிப் புகழ்ச்சியில் மதி மயங்குவது நமது சமூகமாகத் தான் இருக்க முடியும்... சூரியதேவன் என்று தன்னைப் புகழ்ந்தவர்களை நம்பியவர் மாதிரி!

இணையத்தில் விற்பனையான டாக்டர் பட்டங்களை விலை கொடுத்து வாங்கி, தங்களுக்குத் தாங்களே விழா எடுத்தவர்கள் நிறைந்த இனம் இது. தாங்களே ஆளைப் பிடித்து பணம் செலவிட்டு, தங்களுக்கு மலர் வெளியிட்டு விழா எடுத்தவர்களும் உண்டு.

அந்த விழாக்களில் கலந்து கொள்ளும் மகாஜனங்கள் அங்கே இலவசமாய் கிடைக்கும் சிற்றுண்டிகளுக்கும் டீக்கும் தான் வருகிறார்கள் என்று நினைத்தே உளைகின்ற மனதுக்கு செயற்கையாய் ஆறுதல் சொல்ல முடிகிறது. திறமைக்கும் நேர்மைக்கும் மதிப்பு இல்லாமல், போலிகளுக்கு

“ கனடாவில் நிகழ்ச்சிகளில் எல்லாம் அர்த்தம் இல்லாமல் கடைப்பிடிக்கப்படும் ஒரு நிமிட மௌன அஞ்சலி போல, விருது வழங்கலும் ஒரு வெறும் சம்பிரதாயம் மட்டுமே. ஆனால் இதையறியாமல், கனடாவில் ஏதோ ஒரு அரசாங்கத்து governing body இருந்து இந்த விருது வழங்குவோரின் திறமைகளையும் தகுதிகளையும் கடுமையாகப் பரிசீலித்து அனுமதி வழங்கியது போலத் தான் பலரும் நினைத்து வருகிறார்கள்.

விருது வாங்கிப் பெருமை கொண்ட தமிழன், விருது கொடுத்தே பெருமை பெறும் கனடாவில் யாரும் யாருக்கும் விருது கொடுக்கலாம்.

அந்த விருதுகளும் வெறும் ஏழு டொலர்கள் வரை மலிவாகவும் வாங்கலாம். ”

பொய்யர்களால் வழங்கப்படும் பொய்மையான பெருமைகளைக் கண்டு மனம் புழுங்காமல் என்ன செய்ய முடியும்?

விருது வாங்குபவர்களுக்கே தகுதி இல்லாத இடத்தில், விருது கொடுப்பவர்களுக்கு தகுதி இருக்க வேண்டும் என்று யாராவது நினைப்பார்களா? (வாங்குபவர் உட்பட!)

கொஞ்ச நாளைக்கு முன்னால் ஒருவர் மாவீரர், லெப்டினன்ட் கேர்ணல், மாமனிதர், நாட்டுப் பற்றாளர் என்றெல்லாம் பட்டங்களை அள்ளி வழங்கிக் கொண்டிருந்தார். (அறிவிப்போடு மட்டுமே முடிகின்ற, செலவில்லாத வேலை. விருது என்றால் விலைக்கு வாங்க வேண்டுமே!) அவருக்கு அதற்கான தகுதி அவர் கையில் இருந்த ஆயுதம் என்பது தவிர வேறெதுவுமில்லை என்பது முழு இனத்திற்கே தெரிந்திருந்தாலும், அதைப் பெருமையாகக் கொண்டாடிய இனம் இது. எட்டாம் வகுப்பு தாண்டாதவர் பேராசிரியர்களுக்கு விருது கொடுத்ததை பெருமையாய் இன்றும் பேசும் பாருக்குள்ளே நல்ல நாடும் நம்ம ஈழம் தான்.

‘காலத்தை வென்றவன்’ என்று கொண்டாடிய அவருக்கு இப்போது ‘காலம் சென்றவர்’ பட்டத்தை வழங்கக் கூட ஆளில்லை.

தகுதியானவர்களிடம் விருது பெற்று பெருமை பெறும் எண்ணம் இல்லாமல், எவர் தந்தாலும் போய் வாங்கி, பெருமையாய் புல்லரிக்கும் ‘விருது பெற்ற’ படைப்பாளிகளை விட, தங்களுக்குத் தரவில்லையே என்று பொருமித் திரிபவர்கள் இன்னொரு பக்கத்தில் என்பது அடுத்த வேடிக்கை!

இந்த விருது வியாதி கனடாவில் தான் பன்றிக்காய்ச்சல் கணக்கில் பெருந் தொற்று நோயாகியிருக்கிறது. புலன் பெயர்ந்த மற்ற நாடுகளில் இந்தளவில் இருப்பதாக முகப்புத்தகத்தில் எந்த அசுமாத்தமும் இல்லை. ‘உலகப் பந்தயங்களில் வெற்றிக் கோப்பைகளை வென்று வந்திருக்கிறேன்’ பாணியில் தனக்கு விருது கிடைத்தது என்று வெளியில் மார் தட்டிச் சொல்ல முடியாமல் இருந்தாலும், விபசாரிகளிடம் கிடைக்கும் கணப்பொழுது இன்பத்தில் சுகித்திருப்பவர்கள் போல, அந்த மேடைகளில் கிடைக்கும் சில நிமிட இன்பங்களுக்காய் அலைபவர்கள் இன்னமும் எங்கள் சமூகத்தில் இருக்கிறார்கள் என்பது தான் இந்த இனம் பெருமைப்பட வேண்டிய விடயம்.

இந்த லட்சணத்தில் தான் இந்த வாழ்நாள் விருதும் அரங்கேறி வருகிறது.

தங்கள் அமைப்புக்கு தோட்டம் எனப் பெயர் வைத்தவர்கள் இதை தீர்க்கதரிசனத்துடன் வைத்திருக்கிறார்களோ என்ற சந்தேகம் நீண்ட நாளாக இருந்தது. Walled garden போன்று,

தோட்டத்திற்கு சுவர் எழுப்பி, வாயிற்காப்போர்கள் கர்ப்பக்கிருகத்து லிங்க தரிசனம் செய்வோரை தரம் பிரித்து உள்ளே விடும் பாணியைப் பார்த்தால், இந்த சுவர் கொண்ட தோட்டத்தில் லிங்க ஆராதனை செய்ய, அழைக்கப்பட்ட சிலர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்பது புலனாகும்.

ஆரம்பத்தில் பொது இலக்கிய நிகழ்வாக இருந்தது இன்று Black tie affair ஆக, மேல் தட்டு elite நிகழ்வாக்கப்பட்டு, விருது வாங்க என்ன, கலந்து கொள்ளவே தகுதி வேண்டும் என்ற பிரமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. யாருக்கு கொடுத்து குஷிப்படுத்த வேண்டும் என்பது முதல், யாருக்கு கொடுத்தால் யாருக்கு கடுப்பு ஏறும் என்ற லாப, நட்டக் கணிப்பு வரை திட்டமிடப்பட்டே நுழைவு அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

இதனால், நுழைவுச்சீட்டுக் கிடைப்பதாலேயே இலக்கியப் பிறவிகளாவோரும், இலக்கியப் பிறவிப் பெரும்பயனை எய்துவோரும் உள். இதற்காகவே இந்த பிதாமகர்களைப் பகைக்காமல் இலக்கியம் படைப்போர் நிறைய!

இலக்கியத்திற்கான நோபல் பரிசு ரேஞ்சில் புகழ்ந்தேத்தப்படும் இந்த விருது, இங்கிலாந்தின் புக்கர், அமெரிக்க புலிட்சர், கனடிய கில்லர் பரிசுகள் போல, திறமை வாய்ந்த நடுவர் குழு மூலமாக பரிசீலிக்கப்பட்டு வழங்கப்படுவதான பிரமையை அதன் வழங்குனர்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். மேற்குறித்த பரிசில்கள் எல்லாமே எழுத்தாளர்களால் வழங்கப் படுவதில்லை. நோபல் பரிசு தவிர, மற்றவை கடந்த வருடங்களுக்கான வெளியீடுகளுக்கானவையே அன்றி, வாழ்நாள் விருதுகளும் அல்ல.

தாங்கள் எழுத்தாளர்களாய் உள்ளவர்கள் தங்களுக்கான conflict of interest பற்றிய கவலையின்றி, ஒரு நடுவர் குழு தெரிவு செய்வதான பிரமையை ஏற்படுத்தினாலும், இதொன்றும் ஹொலிவூட்டின் படைப்பாளி வகையறாக்களின் சங்கங்கள் ஒவ்வொன்றும்

> ஆரம்பத்தில் பொது இலக்கிய நிகழ்வாக இருந்தது இன்று Black tie affair ஆக, மேல் தட்டு நடவைந நிகழ்வாக்கப்பட்டு, விருது வாங்க என்ன, கலந்து கொள்ளவே தகுதி வேண்டும் என்ற பிரமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. யாருக்கு கொடுத்து குஷிப்படுத்த வேண்டும் என்பது முதல், யாருக்கு கொடுத்தால் யாருக்கு கடுப்பு ஏறும் என்ற லாப, நட்டக் கணிப்பு வரை திட்டமிடப்பட்டே நுழைவு அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
>
> இதனால், நுழைவுச்சீட்டுக் கிடைப்பதாலேயே இலக்கியப் பிறவிகளாவோரும், இலக்கியப் பிறவிப் பெரும்பயனை எய்துவோரும் உள்.
>
> இதற்காகவே இந்த பிதாமகர்களைப் பகைக்காமல் இலக்கியம் படைப்போர் நிறைய!

வருடாந்தம் வழங்கும் jury of peers ரகத்தினவையானவையும் அல்ல.

நடுநிலைத் தமிழனை வலை போட்டு வீசினாலும் பிடிக்க முடியாத சமூகத்தில், இத்தனூ ண்டு இலங்கைத் தீவிலேயே முகாம் அமைத்து, வேண்டப்பட்டவனை அங்கீகரித்தும், வேண்டப் படாதவனைப் புறக்கணித்தும் இருட்டடிப்புச் செய்தும், மோதிக் கொண்ட இலக்கிய பாரம்பரியத்தில், இவர்களின் தெரிவு காய்தல், உவத்தல் இன்றி திறமையையும், இலக்கியத்திற்கு வழங்கிய பங்களிப்பின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து தான் வழங்கப்படுகிறது என்று நம்புகின்றவன் இன்னொரு இளிச்சவாய் தமிழனாகவே மட்டும் இருக்க முடியும்.

ஒரு அரசோ, சமூக அமைப்போ, இலக்கிய விமர்சகர்களைக் கொண்ட அமைப்போ வழங்குவதாக இருந்தால் அதற்கு குறைந்த பட்ச நடுநிலைத் தன்மை இருக்கும் என தத்துவார்த்த ரீதியில் (theoritical மட்டுமே! அந்த லட்சணத்தில் தான் தமிழர்கள் நடுநிலைமை!) நம்பலாம்.

இந்த விருது வழங்கிக் கௌரவிக்கும் பஞ்ச கௌரவர்களில் பெரும் பான்மையினர் எழுத்தாளர்களே. இவர்கள் எப்படி மற்ற எழுத்தாளர்களின் பங்களிப்பை நடுநிலையுடன் கௌரவிக்க முடியும்? அதை வழங்குவதற்கு தகுதி பெற, இவர்கள் யாராவது (ெ)மகா இலக்கியங்களைப் படைத்திருக்கிறார்களா? முன்பின் விருதுகள் பெற்றிருக்கிறார்களா?

புக்கர், கில்லர் பரிசு மட்டத்தில், அவற்றுக்கான glitz and glamor உடன் தான் இந்த விருது விழா நடப்பதாக விருது மூலவர் சொன்னார் என, முட்டாள்கள் தினமான ஏப்ரல் முதலாம் திகதிக்கு மறுதினம், 2013ல் வெளிவந்த ரொறன்ரோ ஸ்டாரில் வந்த கட்டுரை கூறுகிறது. (Glitz and glamor- the quality of appearing very attractive, exciting and impressive, in a way that is not always genuine என்கிறது ஒக்ஸ்போர்ட் அகராதி. அப்படீன்னா சுப்பர் சிங்கர் மட்டம் தான்!)

இந்த விருதை தனது மூளையில் உதித்த பிள்ளை (Brainchild) என்றும் தானும் தனது நான்கு நண்பர்களும் இந்த விருதுகளுக்கான திட்டத்தை முன்வைத்ததாகவும் இந்த மூலவர் கூறுகிறார்.

அதாவது, தன்னோடு சேர்ந்து இந்த ‘உலகப் புகழ் வாய்ந்த’ விருதை திட்டமிட்ட மற்ற நான்கு நண்பர்களின் பெயரையும் வெளியில் சொல்லி, அவர்களின் திறமைக்கு அங்கீகாரம் வழங்கி, உலகறியச் செய்ய இவருக்கும் மனம் வரவில்லை. (brainchild என்பதால் ஒரு பிள்ளைக்கு பஞ்ச கௌரவர்கள் தந்தைகளாக இருக்க முடியாது என்ற எண்ணமாக இருக்கலாம்!) தான் மட்டுமே இந்த விருதின் ஆதியும் அந்தமும் என்பதாகத் தன் பெருமை பேசுவதிலேயே அந்த ரொறன்ரோ ஸ்டார் தகவல் போகிறது.

இந்த பஞ்ச கௌரவரில் இன்னொருவர் சமீபத்தில் காலம்

சென்ற எழுத்தாளர் நினைவாக நடத்தப்பட்ட நிகழ்வு ஒன்றை இலக்கிய, அரசியல் அமைப்பு ஒன்றுடன் சேர்ந்து நடத்தி விட்டு, தன்னால் ஒழுங்குபடுத்தப்பட்டதாக முகப்புத்தகத்தில் செய்தி வெளியிட்டவர். (சிலநேரம் தேநீர், சிற்றுண்டி சப்ளையை இலக்கியப் பங்களிப்பாக அங்கீகரிக்க மாட்டாரோ என்னவோ!)

மொத்தத்தில் தங்களுடன் சேர்ந்து இந்த இலக்கியப் பணிகளில் செயற்பட்டவர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் பெருந்தன்மை இல்லாத இவர்கள், தமிழ் இலக்கியப் பரப்பில் வாழ்நாள் சாதனை புரிந்தவர்களை அங்கீகரிக்கிறார்கள் என்றால்...

காரணம் இருக்கிறது!

இந்த விருது முதல் முதலாக ரொறன்ரோப் பல்கலைக்கழகத்தில் சுந்தர ராமசாமிக்கு வழங்கப்பட்ட போது, எனக்கும் அழைப்புக் கிடைத்து, ஆஜராகியிருந்தேன். அத்துடன் சகோதரன் குமார் மூர்த்தி வீட்டில், சுந்தர ராமசாமி அவர்களைப் பேட்டி காணவும் அழைத்திருந்தார்கள். அந்தப் பேட்டி வெளிவந்ததாய் ஞாபகமில்லை. (பின்னால் அழைப்பு எதுவும் கிடைப்பதில்லை! நம்மால் எட்ட முடியாத அளவுக்கு அவர்கள் வேறெங்கோயோ போயிருக்கக் கூடும்!)

ரொறன்ரோப் பல்கலைக் கழகத்தின் மண்டபம் ஒன்றில் நிகழ்த்தப்பட்ட போது, இந்த விருது ரொறன்ரோ பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுவதான பிரமை ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதற்குக் காரணம், இந்த பஞ்ச கௌரவர்களில் ஒருவராக இருந்த ஆங்கிலத் துறைப் பேராசிரியரான தமிழர். பிரமையைத் தொடர்வதற்காய், தொடர்பு விலாசம் ரொறன்ரோப் பல்கலைக்கழகமாக இருந்த போதும், இந்த விருது வழங்கலுக்கும் ரொறன்ரோப் பல்கலைக்கழகத்திற்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. ரொறன்ரோ ஸ்டார் பேட்டியிலோ, விருதுவிழா மலர்களிலோ, உத்தியோகபூர்வ இணையத் தளத்திலோ ரொறன்ரோ பல்கலைக்கழகத்துடன் எந்த விதமான தொடர்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்படவில்லை.

தற்போது அந்தப் பேராசிரியர் காலமான காரணத்தினால், ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் பெயருடனான தொடர்பு துண்டிக்கப்படக் கூடும்.

(தான் மாதாந்தம் எழுதி வரும் தொடர்பத்தியில் கூட, அவரின் மறைவு குறித்து எழுதிய இரங்கல் கட்டுரையில் இந்த விருது வழங்கலுக்கு பல்கலைக்கழகப் பெயரை ஒட்ட வசதி செய்த பேராசிரியரின் பங்களிப்புப் பற்றி மூலவர் குறிப்பிடவேயில்லை!)

பேராசிரியரின் மறைவு விருது வழங்குவோருக்கு இழப்போ இல்லையோ, அவரைக் கொண்டு தங்கள் இலக்கியங்களை மொழி பெயர்த்து, இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெறும் பலரின் கனவுகள் தகர்ந்து விட்டன. (கவலை வேண்டாம். அதற்காகவே ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பில் பிரபலமான ஒருவருக்கு வாழ்நாளை சாதனை விருது கொடுத்தாயிற்று!)

“ரொறன்ரோப் பல்கலைக் கழகத்தின் மண்டபம் ஒன்றில் நிகழ்த்தப்பட்ட போது, இந்த விருது ரொறன்ரோ பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுவதான பிரமை ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதற்குக் காரணம், இந்த பஞ்ச கௌரவர்களில் ஒருவராக இருந்த ஆங்கிலத் துறைப் பேராசிரியரான தமிழர். பிரமையைத் தொடர்வதற்காய், தொடர்பு விலாசம் ரொறன்ரோப் பல்கலைக்கழகமாக இருந்த போதும், இந்த விருது வழங்கலுக்கும் ரொறன்ரோப் பல்கலைக்கழகத்திற்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. ரொறன்ரோ ஸ்டார் பேட்டியிலோ, விருதுவிழா மலர்களிலோ, உத்தியோகபூர்வ இணையத் தளத்திலோ ரொறன்ரோ பல்கலைக்கழகத்துடன் எந்த விதமான தொடர்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்படவில்லை.

தற்போது அந்தப் பேராசிரியர் காலமான காரணத்தினால், ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் பெயருடனான தொடர்பு துண்டிக்கப்படக் கூடும்.”

யாழ்ப்பாணத்திற்குள்ளேயே தங்களைக் குறுக்கிக் கொண்ட ஈழத்தமிழர்களுக்குள், அதைக் கடந்து சர்வதேச அளவில் தமிழ் இலக்கியங்களை கண்டறிந்து கௌரவிக்கும் அளவுக்கு வந்திருக்கிறார்களே, ஈழத்தமிழ் இலக்கியம் உலக மட்டத்தில் பேசப் படப் போகிறதே என்று நீங்கள் பேருவகை கொள்ளத் தேவையில்லை. ஈழத்தமிழ் இலக்கியத்திற்கான சாதனையில் நாடகத்திற்காய் தாசீயஸிற்கும், புத்தக வெளியீட்டுக்காய் (?) பத்மநாப ஐயருக்கும் கொடுத்தது தவிர, மற்றவர்களில் பெரும்பாலோர் தமிழ்நாட்டு இலக்கியகாரர்களே.

‘இரத்தம் காய முன் இலக்கிய விழாவா?’ என்று சன்னதம் ஆடியதற்காக எஸ்.பொவுக்கு விருது சாத்தியது, மிஞ்சிய காசில் அவசரமாய் ஜீவாவுக்கும் விருது கொடுத்து துடக்கு கழித்தது என ஈழத்தமிழ் இலக்கியத்திற்கான இவர்களின் அங்கீகாரம் இவ்வளவு தான். (இதில் ஜீவாவுக்கானது முழு அளவிலான வாழ்நாள் சாதனையா? அல்லது also ran ரகமா? தெரியாது. காரணம், இவ்வருட விழா இதழில் முன்பு விருது பெற்றோர் பட்டியலில் ஜீவாவின் பெயர் இல்லை).

இவர்களின் விருது பெறத் தகுதியானவர்களாக இன்னமும் இலங்கை எழுத்தாளர்கள் யாரும் இல்லையா? இருக்கிறார்கள். யார் என்று பட்டியலைப் போட்டால் ஏற்படக் கூடிய கலவரத்தை மனதில் கொண்டு தவிர்த்தாலும், யாராவது ஒருவரின் பெயரைச் சொல்ல வேண்டும் என்றால், நல்லதொரு விமர்சகராக அறியப்பட்ட கே.எஸ். சிவகுமாரன் அவர்களுக்கு கொடுத்திருக்கலாம். (ஐயா, உங்கள்

சந்தர்ப்பத்தைப் பாழாக்கியதற்கு, மன்னித்துக் கொள்ளுங்கள். இனிமேல் கொடுக்கும் எண்ணம் இருந்திருந்தாலும், 'உவன் சொல்லிக் குடுத்தது எண்டு முடிஞ்சு போகும்' என்று உங்களுக்குத் தரவே மாட்டார்கள்!)

இதற்குள் எங்கள் புலன் பெயர்ந்த இலக்கிய உலகுக்குள் உள்ள சில உண்மைகளையும் சொல்லியே ஆக வேண்டும். விருது கொடுக்கப்படும் போதெல்லாம், பெரும் பிரளயம் கிளப்பும் மாற்றுக் கருத்தாளர்கள் தாங்களும் திறமை அறிந்து விருது கொடுக்க எந்தத் தடையும் இல்லை என்பதை உணர்வதில்லை. ஆனால் இவர்கள் ஒன்று திரண்டு, ஒருவரைத் தெரிவு செய்து, முகப்புத்தகத்தில் மூக்குடையும் வரை சண்டை பிடித்து ஒருமித்த கருத்துக்கு வருவதற்குள் வாழ்நாள் (இவர்களின்!) முடிந்து விடும் என்பது தான் கசப்பான உண்மை. இதற்காகவே இவர்களுக்கு வாழ்நாள் சாதனை விருது, ஐ. நா அமைதிப்படைக்கு சமாதான நோபல் பரிசு கொடுத்தது போலக் கூட்டாகக் கொடுக்க வேண்டும்.

இலக்கியத்தைக் கொண்டாடுதல் என்பது ஒவ்வொரு இனமும் நிச்சயமாய் செய்ய வேண்டியது. ஒவ்வொரு தலைமுறையும் அடுத்த தலைமுறைகளுக்கும் வரலாறுக்கும் விட்டுச் செல்வதில் கலை, இலக்கியங்கள் முக்கியமானவை.

Celebrating literature என்பது எந்த வடிவத்தில் இருந்தாலும் அது பாராட்டப்பட வேண்டியது. ஆனால், வரலாற்றை மறைப்பதற்காக, புலன் பெயர்ந்த இலக்கியத்தின் பிதாமகர்கள் தாங்களே என்றும் தங்களுடைய அளவுகோல்களால் மட்டுமே இலக்கியம் அளக்கப்படலாம் என்றும் தங்களால் அங்கீகரிக்கப்பட்டவை மட்டுமே இலக்கியங்கள் என்றும் ஆங்காங்கே ஆளுக்காள் கிளம்பினால், வரலாறு எதை நினைவில் வைத்துக் கொள்ளும்? இவர்களால் பதிவாக்கப்பட்டவற்றை மட்டும்தான்!

“

Celebrating literature என்பது எந்த வடிவத்தில் இருந்தாலும் அது பாராட்டப்பட வேண்டியது. ஆனால், வரலாற்றை மறைப்பதற்காக, புலன் பெயர்ந்த இலக்கியத்தின் பிதாமகர்கள் தாங்களே என்றும் தங்களுடைய அளவுகோல்களால் மட்டுமே இலக்கியம் அளக்கப்படலாம் என்றும் தங்களால் அங்கீகரிக்கப்பட்டவை மட்டுமே இலக்கியங்கள் என்றும் ஆங்காங்கே ஆளுக்காள் கிளம்பினால், வரலாறு எதை நினைவில் வைத்துக் கொள்ளும்? இவர்களால் பதிவாக்கப்பட்டவற்றை மட்டும்தான்!

இவர்கள் செய்வது ஒன்றும் இலக்கியத்தை கொண்டாடுதல் அல்ல. இலக்கியம் மூலமான பிழைப்பு மட்டுமே!

”

இவர்கள் செய்வது ஒன்றும் இலக்கியத்தை கொண்டாடுதல் அல்ல. இலக்கியம் மூலமான பிழைப்பு மட்டுமே!

வாழ்வை பதிவாக்குவதே இலக்கியம் என்றால், எங்கள் ஈழத்தமிழ் வாழ்வு தமிழக வாழ்வு போன்றதன்று. ஆயுத முனையில் திணிக்கப்பட்ட அரசியல், எங்கள் வாழ்வை வாழ்வா? சாவா? என்ற நிலைக்குள் தள்ளியிருக்கிறது. அதிலும், கருத்துச் சுதந்திரம் என்பது எங்களுக்கு உயிரைக் கொடுத்து நிலைநாட்ட வேண்டியதாகவே மண்ணின் மைந்தர்களால் ஆக்கப்பட்டிருந்தது. அந்தச் சூழலில் புறநானூறு பாணியில் தலைவனையும், போரையும், தியாகத்தையும் புகழ்ந்த இலக்கியங்கள் தவிர்க்க முடியாதன. ஆனால் அவை இலக்கியங்களுக்குள் வர முடியாதபடிக்கு பிரசார வாடையுடன், சமூகம் கொண்டிருந்த மாயைக் கருத்தோடு ஒத்தோடுவனவாகவுமே இருந்தன. பயத்தில் வாலைச் சுருட்டி நோகாமல் இலக்கியங்கள் செய்தவர்கள் ஒரு பக்கம். இலக்கியம் மறந்து புறநானூறு பாடியவர்கள் ஒரு புறம் என ஈழத்தமிழ் இலக்கியம் கடந்த முப்பது வருடங்களுக்குள் பல்வேறு பரிமாணங்களைக் கண்டிருக்கிறது.

இலக்கியத்தில் அவற்றுக்கும் இடம் இருந்தாலும், போராட்டத்தின் பெயரால் தமிழர்களுக்கே தமிழர்களால் இழைக்கப்பட்ட அநீதிகளும் அக்கிரமங்களும் பதிவு செய்யப்பட்ட போது, அவற்றை இவர்கள் போன்றவர்கள் இருட்டடிப்புச் செய்யவே முயன்றார்கள்.

இந்தச் சமூகத்தில் இலக்கியம் என்பது வெறும் தமிழ் நாட்டு இலக்கியம் போன்ற luxury அல்ல. உயிர்ப்பிரச்சனை!

ஆனால் இதே போன்று தமிழகத்திலும் மத வெறியின் பெயரால் இலக்கியங்களில் கை வைத்த போது, இந்த இலக்கியம் கொண்டாடுவோர் என்ன செய்தார்கள்?

இவர்கள் போய் தமிழ்நாட்டில் விருந்துண்டு, உறவு கொண்டாடும் முகாம்கள் ஒன்றைச் சேர்ந்த பெருமாள் முருகனின் நாவலுக்கு எதிரான போராட்டம் தொடங்கி, 'பெருமாள் முருகன் இறந்து விட்டான்' என்று எழுத்துலகுக்கே முழுக்குப் போட வேண்டிய நிலை வந்த போது, இந்த இலக்கியப் பிதாமகர்கள் எங்கே குரல் எழுப்பினார்கள்? தமிழக இலக்கியக் கும்பலை வளைத்துப் பிடித்து குறைந்தது ஒரு அறிக்கையாவது விட்டிருக்க வேண்டாமா? ஏற்கனவே 2011 ல் இவர்களிடம் விருது பெற்ற பெருமாள் முருகனுக்கு, எதிர்காலத்தில் இவர்களின் வாழ்நாள் சாதனை விருதுக்கு உரியவராகக் கருதப்பட்டவருக்கு, ஆதரவாக குரல் எழுப்ப இவர்களுக்குத் தடையாக இருந்தது என்ன?

பிழைப்பு!

நோபல் சமாதானப் பரிசுகள் பல, அந்தந்த நாடுகளில் உள்ள அடக்குமுறை அரசுகளுக்கு செய்தி சொல்வனவாகத் தான் வழங்கப்படுகின்றன. அந்த பரிசுகளை வழங்குவதன் மூலம் அந்த

அடக்குமுறைகள் பற்றிய தெரிந்து கொள்ளலை ஏற்படுத்துவதுடன், அவற்றுக்கெதிரான குரல்களுக்கான அங்கீகாரமாகவும், அடக்குமுறை ஆட்சிகளுக்கு எதிராக விடுக்கப்படும் அறிவிப்பாகவும் (Statement) தான் அவை வழங்கப்படுகின்றன.

பெருமாள் முருகனின் மாதொரு பாகனுக்கு இவர்கள் விருது வழங்கியிருந்தால், அதுவே மதவெறியர்களுக்கு எதிரான இலக்கியவாதிகளின் சவாலாக இருந்திருக்கும்.

தங்களிடம் பரிசு வாங்கிய இலக்கியம் படைப்பவர்களுக்கு எழுதவே முடியாத சூழ்நிலை எழும் போது வாய் திறக்காதவர்கள், வேறு இடங்களில் கருத்துச் சுதந்திரத்திற்கான அச்சுறுத்தல்கள் ஏற்படும் போது வாய் திறப்பார்களா? அதில்லாமல் இலக்கியத்தைக் கொண்டாடுகிறோம் என்பதன் அர்த்தம் என்ன?

அதெல்லாம் இருக்கட்டும்!

இந்த விருதுவிழா மூலவர் சமீபத்தில் ஒரு கதை எழுதினார். புலிகள் அல்லாத ஈழ விடுதலை அமைப்புகளில் ஒன்று சம்பந்தப்பட்ட நிகழ்வு ஒன்றைக் கேலியும் கிண்டலுமாய் சித்தரித்த கதை. அது குறித்து சம்பந்தப்பட்ட பலர் கொதித்தெழுந்தார்கள். அவர்களின் கொதிப்பு நியாயமானதாக இருந்தாலும், ஒரு படைப்பாளிக்குரிய கருத்துச் சுதந்திரம் பற்றி இவர்கள் யாருமே வாயே திறக்கவில்லை. பேசாமல் பதிவிலிருந்து நீக்கி விட்டு, ஒன்றுமே நடவாதது போல பாவனை பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

எழுதியவரோ, எழுதியவரை அண்டிப் பிழைப்பவர்களோ தாங்கள் எழுதியதையே நியாயப்படுத்த முடியாவிட்டால், இவர்களின் இலக்கியத்தில், இவர்கள் அடிக்கடி சொல்கின்ற 'அறம்' எங்கே இருக்கிறது?

பெருமாள் முருகனுக்காவது ஒரு நேர்மை இருந்தது... பெருமாள் முருகன் செத்து விட்டான் என்று தன்னுடைய எதிர்ப்பைக் காட்டுவதற்கு!

இலக்கியவாதிக்கு எழுதுவதற்கு உரிமை இல்லாத இடத்தில் எதைக் கொண்டாடுவதாம்?

தாங்கள் இலக்கியவாதிகள், தங்களுக்கு விருது வழங்குவதற்கான தகுதிகள் உள்ளன என்று காட்டும் இவர்களின் இலக்கியங்களின் தரம் என்ன?

வெளிநாட்டு அனுபவங்களை பட்டிக்காட்டானுக்கு பட்டணம் காட்டியது போல எழுதுவது இலக்கியமாகி விடாது. இதை விட இதயம் பேசுகிறது மணியன் சாதித்தது மேல்!

எட்டாம் வகுப்பில் படித்த பாரன் மஞ்சோசனின் புழுகுமூட்டை பாணியில் உயிரில்லாத எழுத்துக்களுக்கு அங்கீகாரம் வேண்டி வெகுகவனமாக திட்டமிடப்பட்ட சந்தைப்படுத்தல் திட்டத்துடன் நடத்தப்படுவது தான் இந்த விருது.

வெறும் கொலை செய்யும் இயந்திரங்களாக புலிகளால் உருவாக்கப்பட்ட போராளி களுக்குள்ளும் மென்மையான இதயம் இருக்கிறது என்பதைக் காட்டும் தமிழினியின் கதை, கவிதைகளில் இருக்கும் உண்மையும், உயிர்த்துடிப்பும் கேள்விச் செவி கிரனேட் கிளிப் விளையாட்டு எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு இருக்குமா?

இவர்களுக்குள்ளே வாழ்நாள் பூராவும் எழுதாமலேயே, எவரோ எழுதியதை எங்கோ கொடுத்து கால் நூற்றாண்டாய் 'இலக்கியம் செய்தவர்கள்' இருக்கிறார்கள். ரமணி சந்திரன், பட்டுக்கோட்டைப் பிரபாகர், நாஞ்சில் பி.டி.சாமி, தமிழ்வாணன் போல எழுதிக் குவித்ததால் இலக்கிய அந்தஸ்து பெற்றவர்கள் இவர்கள். சும்மா முகப்புத்தகத்தில் பொழுதுபோக்காமல், எதையோ எழுதியதால் எங்கேயோ அங்கீகாரம் பெற்றவர்கள். இவர்கள் 'இலக்கியம் செய்து கொண்டிருப்பது' இவர்களது தொடர்ச்சியான எழுத்துக்கள் மூலமாகவே!

இந்த உயிரில்லா எழுத்துகளுக்கு அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்றால், தமிழ்நாட்டுப் பிரபலங்களை வளைத்துப் பிடித்து கைக்குள் போட வேண்டும்.

இவர்கள் ஈழத்தமிழ் இலக்கியத்தை விடுத்து, தமிழக இலக்கியப் பிரபலங்களுக்கு மாலை சாத்துவதன் காரணம் இதுதான்.

ஈழத்து இலக்கியகாரர்களுக்கு வாழ்நாள் சாதனை விருது வழங்கினால் இந்து செய்தி வெளியிடுமா? ஜோல்னாப் பைகள் குடுமிப்பிடிச் சண்டை நடத்துமா? ரஜனிகாந்த் பாராட்டு விழாவுக்கு வருவாரா? தமிழ்நாட்டில் இது பற்றி யாருமே கணக்கெடுக்க மாட்டார்கள்.

தமிழகப் பிரபலங்களுக்கு கொடுத்தால்... அந்தப் பிரபலங்களே விழுந்தடித்து பிரபல வெளியீடுகளில் செய்தியாக்குவார்கள். தங்களுக்குத் தாங்களே விழா வைப்பார்கள்.

விருது வாங்குபவரின் பெருமையில், விருது கொடுத்தோர் குளிர் காய்கின்ற கேலிக் கூத்துத் தான் இது.

தங்கள் மட்டரகமான எழுத்துக்களுக்கு தமிழ்நாட்டுப் பிரபலங்கள் மூலமாக அங்கீகாரம் பெற்று, புலன் பெயர் இலக்கியத்தின் பிதாமகர்களாக தமிழ்நாட்டில் வலம் வருவதற்கான முயற்சி தான் இது. இந்த மூலவப் பிதாமகரை, புலம் பெயர் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்த கனடாவில் முயற்சி செய்து நிகழ்வு நடத்த வேண்டிய அளவில் தான் இவர்களின் இலக்கியப் பங்களிப்பு இருக்கிறது.

தமிழ்நாட்டுப் பிரபலங்கள் தங்களுக்கு கிடைக்கும் விருதுகளுக்கும் விமானச் சீட்டுகளுக்கும் பிரதியுபகாரம் பண்ணாமல் இருக்க முடியுமா?

இந்த பரஸ்பர பிழைப்பின் ஒரு அம்சம் தான்.... கொஞ்ச நாளைக்கு முன்னால், ஒருநாளுமில்லாமல் திடீரென்று விகடன் வழங்கிய 'சிறந்த புலன் பெயர் இதழுக்கான விருது'.

இங்கே அழைத்து விருது கொடுத்ததற்கான நன்றிக் கடனாக பெற்றுக் கொடுக்கப்பட்டதே அந்த விருது. முதல் விருது பெற்ற சுந்தர ராமசாமி போன்றவர்களால் வணிக எழுத்துக்கள் என்று கூறப்படுபவற்றை வெளியிடும் விகடன் வழங்கிய விருது கொஞ்ச நாள் பெருமையாக பேசப்பட்டது. 63ல் வெளிவந்த ஜி.நாகராஜனின் குறத்திமுடுக்கு நாவலை, சஞ்சிகையில் இடம் நிரப்பப் போட்டு, 'கடைசிப் பக்கங்கள் கிழிக்கப்பட்டிருந்தன, யாராவது இருந்தால் அனுப்பி வையுங்கள்' என்று அரைகுறையாய் வந்ததை, அந்த சஞ்சிகையில் அந்த நாவல் வெளிவந்தது என்று விருதுக் குறிப்பில் போடும் அளவுக்கு, விருது வழங்கிய விகடனும், வாங்கிக் கொடுத்தவரும் விவரமானவர்களாக இருந்தார்கள்.

கவனமாகத் திட்டமிட்ட சந்தைப்படுத்தலுடன், கனடிய அரச நிறுவனங்கள், தொண்டர் நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், 'தமிழ்மகன்' தொழிலதிபர்கள் என பல்வேறு வழிகளில் பெரும் நிதி திரட்டி புலம் பெயர்ந்த நாடொன்றில் இருந்து நடத்தப்படும் இந்த நிகழ்வு, இன்று தமிழ்நாட்டில் பேசப்படும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது. அந்த நிதி வசதிகள் காரணமாக gliz and glamor உடன் அரங்கேற்றப்படும் இந்த நிகழ்வுடன் இவர்களின் 'இலக்கியப் பணி' முடிவடைவதில்லை.

அதனுடன் சேர்த்து தமிழ் இலக்கியங்களை மொழி பெயர்த்தல், பிரசுரித்தல் என்று விரிவடைகிறது.

அங்கே இன்னொரு பிரச்சனை உருவாகிறது. இவர்களும் இவர்களை அண்டிப் பிழைப்பவர்களும் மட்டுமே புலன் பெயர் இலக்கியத்தின் பிரம்மாக்களாக அடையாளப் படுத்தப்பட்டு முதன்மைப் படுத்தப்படுகிறார்கள். தமிழகத்தில் இவர்களுக்கு இருக்கும் செல்வாக்கினால் இவர்களைப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்ற எண்ணம் சாதாரண எழுத்தாளர்களுக்கு மட்டுமன்றி, அங்கே பெயர் பெற்றவர்களுக்குக் கூட ஏற்படுகிறது.

இன்று கிட்டத்தட்ட இது ஒரு இலக்கிய மாபியாவாக உருவெடுத்திருக்கிறது. தோட்டத் தில் மட்டுமல்ல, தொகுப்புகளிலும் வேண்டப் பட்டவர்கள் மட்டுமே உள்ளே நுழைய அனுமதிக்கப்படுவதால், இவர்களின் மனம் கோணாமல் இருக்க வேண்டும் என்பதற்காக இவர்களை அண்டிப் பிழைப்பவர்கள் இங்கே அதிகம். பலரின் வாய்கள் அடைக்கப்பட்டு மௌனமாக இருக்கின்றன, சனிக்கிழமை இரவு இலக்கியச் சந்திப்புகளில் விஸ்கிகளால் திறக்கப்படும் வரை!

தமிழ்நாட்டு இலக்கியச் செம்மல்களுக்கு இந்த விருது இலக்கியத்திற்கான நோபல் பரிசு மட்டத்தில் இல்லாவிட்டாலும், சாகித்திய அகடமி விருது, ஞானபீடப் பரிசு மட்டத்தில் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு இருக்கக் கூடும். அட, நம்ம ரஜினிகாந்தே இந்த விருது வழங்கப்பட்டவர், தனக்குத் தானே எடுத்த பெருவிழாவில் கலந்து கொண்டு, கனடா நாட்டில் விருது கொடுக்கப்பட்டது பற்றிச் சிலாகித்திருக்கிறார்.

உலகெங்கும் மின்னோலை புழக்கம் கூடி, தபால் அனுப்பும் பழக்கம் அருகியதால், நட்டத்தில் ஓடும் அரச தபால் நிறுவனங்கள், வருமானத்திற்கான வழியாக வளர்க்கும் நாய்க்குக் கூட முத்திரை வெளியிடக் கூடிய வசதியை ஏற்படுத்தப் போக, பிழைப்பு வாதிகள் தங்களுடைய தலைவர்களுக்கு எல்லாம் முத்திரை வெளியிட, கனடா அரசு தங்கள் தலைவர்களுக்கு முத்திரை வெளியிட்டதாக புல்லரிக்கும் ரஜனி ரசிகர் மட்ட ஈழத்தமிழ்ப் பாமரர்கள் போல, ரஜினிக்கு என்ன, தமிழக இலக்கிய முகாம்களுக்கே இந்த விருது பிரமிப்பானதாக இருப்பதில் என்ன ஆச்சரியம்?

எனவே, இந்த விருதைப் பெறுவதை வாழ்நாள் சாதனையாக நினைப்பவர்கள் நினைத்து விட்டுப் போகட்டும்.

எழுத நினைப்பவர்கள் எழுதுங்கள். விருதுகளுக்காக அல்ல!

திசை தெரியாமல் தவிக்கும் எங்கள் ஈழ மக்கள் சரியான திசையில் பயணிக்க வேண்டும் என்பதற்காக எழுதுங்கள்!

எங்களை அங்கீகரிக்கிறார்கள் இல்லையே, சரியானவர்களுக்கு கொடுக்கிறார்கள் இல்லையே என்று மனம் வெதும்புபவர்கள் அதன் மூலமே இவர்களுக்கு முக்கியத்துவத்தைக் கொடுக்கிறீர்கள்.

எங்களை அங்கீகரிக்க இவர்கள் யார் என்ற வித்துவச் செருக்குடன் எழுதுங்கள்.

சொல்லப்பட வேண்டியவை என்று நினைப்பவற்றை, சொல்லலாமே என்று நினைப்பவற்றை எழுதுங்கள்... உங்கள் இதயத்திலிருந்து எழுதுங்கள்!

மணி முடிகளின் பாதார விந்தங்களை பணிந்து பொற் காசுகளுக்காய் பாடியவர் களும், சங்கம் அமைத்து அரங்கேற்றியவர்களும் இருந்தாலும், தலை வணங்காத் திமிருடன் வாழ்ந்த காளமேகங்களும் சித்தர்களும் பாடிய பாடல்கள் இன்றும் வாழுகின்றன.

உண்மையான இலக்கியம் என்றும் வாழும். அதற்கு போலிகளின் அங்கீகாரம் தேவையில்லை.

எங்காவது எங்களை அடையாளம் காணும்போது, என்றோ எழுதி, எப்போ மறந்து போனதை புன்சிரிப்போடு ஞாபகப்படுத்தி, 'அதை ரசித்தேன்' என்று ஒரு உண்மையான வாசகன் சொல்லும் போது ஏற்படும் பெருமையும் திருப்தியும், இந்த வியாபாரிகளின் சுப்பர் சிங்கர் மட்ட விருதுகளால் ஈடு செய்யப்பட முடியாதவை!

**ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்**